# தமிழரசு

பிப் 16.1973

40 காசு



# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு –வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16






# தமிழரசு

மலர். 3 இதழ். 16


## தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவை - 2-2-1973
## ஆளுநர் அவர்களின் உரை

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே !

சட்ட மன்றத்தின் இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் காலஞ்சென்றது, பொதுவாக இந்தியா முழுவதுக்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்ட பேரிழப்பு என்பதை முதற்கண் குறிப்பிடுவது என் கடமையெனக் கருதுகிறேன். நண்பராய், நல் ஆசிரியராய், தான் கொண்ட கருத்தினைத் துணிந்துரைக்கும் வித்தகராய், சிந்தனை மேதையாய், விடுதலைப் போராட்டத்தின் பெரும் சக்தியாய், இம் மாநில முதலமைச்சராய் விளங்கிய அந்த மூதறிஞரின் மறைவு அளவிடற்கரிய நட்டமாகும். ஆண்டுகள் பல கடந்திடினும், அவரைப் போன்ற ஒருவரை நம்மிடைக் காண்பதரிது. இந்த மாநிலத்தில், அவர் காலத்தில் வாழும் பேறு பெற்றோம் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

கடந்த ஆண்டில் அளவுக்கு அதிகமாகவே இயற்கையின் சீற்றத்துக்கு இம் மாநிலம் ஆட்பட வேண்டி வந்தது. தென் மேற்குப் பருவ மழைக் குறைவால் வறட்சி ஏற்படுமோ என்று நாம் அஞ்ச வேண்டி வந்தது. மாநிலத்தின் பற்பல பகுதிகளிலும் பருவ மழை காலந் தாழ்த்திப் பெய்ததால் ஏராளமான பரப்பளவில் வேர்க்கடலைப் பயிர் பெரிதும் நாசமடைந்தது. பல மாவட்டங்களில் குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. உடனடியாக, ரூ. 1.25 கோடி செலவில் துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்தது. வடகிழக்குப் பருவ மழை பொழிந்ததால், வறட்சியின் வடுக்கள் மறைந்து நிலைமை சீராயிற்று. இத் துன்பத்தின் சுவடு மறைந்தவுடன், பெரும் புயல் அடித்தது. இப்புயல் காரணமாக, தென்ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நீலகிரி, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தருமபுரி, சேலம், சென்னை ஆகிய மாவட்டங்களில் சாலைகள், வீடுகள், பாசன அணைகள், வயல்கள்

குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்தன ; 28,000 ஏக்கர் பரப்பில் விளைந்த பயிர் முழுதும் நாசமாயிற்று ; 1,70,000 ஏக்கர் பரப்பில் பயிர் ஓரளவு நாசமடைந்தது. இக் கொடும் புயலின் காரணமாக ரூ. 40 கோடி அளவுக்கு விரயம் ஏற்பட்டிருப்பதாக நாம் மதிப்பிட்டுள்ளோம். நிவாரணப் பணிக்காக ரூ. 25 கோடி அளவில் கடனாகவும், மானியமாகவும் வழங்குமாறு மத்திய அரசை வேண்டியுள்ளோம். பாசனப் பணிகளைச் செப்பனிடவும், சாலைகளைச் சீரமைக்கவும், மணல் மேடிட்ட நிலங்களை மீண்டும் விளை நிலங்களாக்கவும், பாழான வீடுகளைப் புதுப்பித்துக் கட்டிக் கொள்ளவும், நமது உழவர்களுக்கு உறுபொருள் கொடுக்கவும் இத் தொகையினை நாம் பயன்படுத்திக்கொள்வோம். துயர் தணிப்புப் பணிகளுக்குச் செலவிடுவதற்கென, தமிழ்நாடு அரசினர் மத்திய அரசின் நிதி உதவியை எதிர்பார்த்து ரூ. 5 கோடி அனுமதித்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவி செய்ய அரசு நிர்வாகத்தினர் அனைவரும் அயராது சலியாது ஆற்றிய பணிக்காக நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும். இங்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு என்பதை நேரில் கண்டு மதிப்பிடுவதற்காக, மத்திய அரசு அதிகாரிகள் இங்கு வந்தனர். அவர்கள் நேரில் மதிப்பிட்ட பின்னர் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், மத்திய அரசு தாராளமாக நிதி உதவி செய்யுமென்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

நமது வேளாண்மை நிலைமை மன நிறைவளிப்பதாக இருந்த போதிலும், வெள்ளமும் வறட்சியும் நமது முன்னேற்ற வேகத்தைக் குறைத்துள்ளன. எனவே, நமது தேவை போக உபரியாயுள்ள தானியங்கள் எவ்வளவு இருக்கும் என்பதை நாம் கவனமுடன் மதிப்பிட வேண்டும். விற்பனையாகத்தக்க உபரி தானிய இருப்பில் போதிய அளவு அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதுதான் இதில் நாம் கையாளும் அணுகு முறையாகும். அப்போதுதான், வணிகத்தின் தாறுமாறான போக்கு உணவு தானிய பங்கீட்டைப்பாதிக்காது. அப்படியிருந்தால்தான்

# சமதர்மத் திட்டங்களுக்கு முன்னோடிகளாவோம்!

சமுதாயத்தில் ஏழை எளியவர்களின் பயனுக்கென உணவு தானியங்களைப் பங்கிட்டுக் கொடுக்கவும், இந்த ஆண்டு மத்திய அரசுக்கு அரிசி கொடுப்பதாக நாம் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றவும் போதுமான அரிசி இருப்பு நம்மிடம் இருக்கும். இக் குறிக்கோள் நிறைவேறும் வண்ணம் வணிகரிடமிருந்து 20 சத வீதம் அரிசி கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டு, நிறைவேற்றி வருகிறது.

மாநில அரசின் முயற்சிகளால் மட்டுமல்லாது மத்திய நிதி, வரி விதிப்புக் கொள்கைகளின் உதவியுடன் மட்டுமே விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

நிலையான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு வேளாண்மை உற்பத்தி உயர்வு அடிப்படையாகும். வேளாண்மை உற்பத்தி உயர்வுக்கு உறுதியான பாசன வசதியும், உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் வேண்டும். உரங்கள் கிடைப்பது மிகவும் பற்றாக்குறையாக இருந்து வந்துள்ளது. நமக்கு 1972—73-ல் 2.74 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் தேவையிருக்க, 1.30 இலட்சம் டன் உரம் மட்டுமே கிடைத்துள்ளது. 1971—72-ல் நமக்கு 2.14 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் கிடைத்தது என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். உள்நாட்டில் உர உற்பத்தியைப் பெருக்கவும், கூடுதல் அளவு உர இறக்குமதிக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்பாடு செய்யவும், உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசை நாம் கேட்டுள்ளோம்.

மாநிலத்தின் நீர் வளங்கள், பெரும்பாலும், முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் அண்மையில், ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, நாம் இன்னும் சிறந்த முறையில் நமது பாசன ஏற்பாடுகளைப் பேண வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. நமது பாசன வசதிகளை நாம் சீரமைக்கவும், காலத்திற் கேற்றவாறு மாற்றி யமைக்கவும் வேண்டும். இத் தொடர்பில் காவிரிப் பாசன ஏற்பாட்டைக் காலத்திற் கேற்றவாறு மாற்றியமைக்க இந்திய அரசு மூலம், உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரும் நமது செயற் குறிப்புகள் குறித்து இந்திய அரசு விரைந்து முடிவெடுக்குமென நம்புகிறோம்.

நீர் வளத்தையும், மற்ற இயற்கை வளங்களையும் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் வட்டார அடிப்படையில் அமைந்திருக்க வேண்டுமேயல்லாது ஒரு மாநிலத்தின் எல்லைக்குள் அமைத்துவிட முடியாது. மைசூர் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், ஆகிய மாநிலங்கள் ஒருங்கிணைந்து இந்த வட்டாரத்தில், கிடைக்கும் நீர் வளத்தைப் பயன்படுத்துவதற்காகத் திட்டமிட வேண்டும். இந்த நான்கு மாநிலங்களின் நீர்வளம், மின் சக்தி, மற்றும் இதர வளங்களைப் பயன்படுத்துவதற்காக மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைப்பது குறித்து இம் மாநிலங்கள் சிந்திக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் இம் மாநிலத்தில், மின் சக்தி பற்றாக்குறை ஏற்பட்டதன் விளைவாக, தொழில் துறையும், வேளாண்மைத் துறையும் பாதிக்கப்பட்டன. தென் மேற்குப் பருவ மழை குறிப்பாக நீர்கோள் பகுதிகளில் பெய்யாமற் பொய்த்தது. இதன் விளைவாக, நமது மாநிலத்திலும், அண்டை மாநிலங்களிலும், உள்ள மின் சக்தி உற்பத்தி நீர்த் தேக்கங்களில், நீர் மட்டம் பெரிதும் குறைந்தது. ஏனைய மாநிலங்கள் வழங்கிய மின் சக்தியும் நிறுத்தப்பட்டுவிட்டதால், மின் சக்திப் பற்றாக்குறை நிலை மிகக் கடுமையாகியது. இதே சமயத்தில் பல்வேறு காரணங்களால் நெய்வேலியில் மின் சக்தி உற்பத்தியளவும் பெரிதும் குறைந்திட நேர்ந்ததால், நமது இன்னல்கள் பெருகின. இதன் காரணமாக, நாம் மின் வெட்டு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு, அதனால் நமது பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சக்தி பற்றாக்குறை உலகமெங்கும் காணப்படும் நிலையேயாகும். சமீபத்தில் ஏற்பட்ட மின் வெட்டு மறுமுறையும் ஏற்படா வண்ணம், நாம் முன்கூட்டியே திட்டமிட வேண்டும். உடனடியாக, நெய்வேலி மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசிடம் நாம் செய்துள்ள முறையீடுகள் பயன் தந்துள்ளன.

நொடித்த பஞ்சாலைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதைப் பொறுத்தவரை, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 9,962 தொழிலாளர் பணிபுரியும் பதின்மூன்று ஆலைகளை இதுவரை எடுத்துக் கொண்டுள்ளது. இதில், அண்மையில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆறு ஆலைகளும் அடங்கும். இவை, விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஏழு ஆலைகளில், ஐந்து ஆலைகள் தற்போது ஆதாயத்தில் செயல்படுகின்றன.

வேளாண்மை, தொழில் துறைகளில் எவ்வளவோ செய்திருந்த போதிலும், வேலையில்லாப்பிரச்சினையும், வறுமையும் நம்மை எதிர் நோக்கி இருப்பது அனைத்திந்தியப் பிரச்சினையாகும். எனினும் நம்மால் முடிந்ததை நாம் செய்து வருகிறோம். ரூ. 3 கோடி செலவிலான கிராம வேலை

வாய்ப்பு முனைப்புத் திட்டம், ரூ. 3 கோடி செலவிலான இளைஞர் அணித் திட்டம், ரூ. 1·31 கோடி செலவிலான வறட்சியால் பீடிக்கப்படும் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம், பொறியாளர்கள் தொழிற் பயிற்சித் திட்டம், தொழிலாளர்கள் கடனுதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் உட்பட, மொத்தம் சுமார் ரூ.10 கோடி செலவிலான திட்டங்களை நாம் தொடங்கியுள்ளோம்.

1972–73-ஆம் ஆண்டுத் திட்டம் சுமார் ரூ. 115 கோடி என்ற அளவில் வரையறுக்கப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டிற்கான திட்டம் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சருக்கும் திட்ட ஆணைக் குழுவிற்குமிடையே நடந்த விவாதங்களின் பயனாக, 1973–74-ஆம் ஆண்டிற்கான திட்டத்திற்கு ரூ. 120 கோடி வரையறுக்கப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கம், மத்திய திட்ட ஆணைக்குழு ஏற்கெனவே ஏற்பளித்த தொகையான ரூ. 519 கோடிக்கு மாறாக, ரூ. 534 கோடியாக ஆகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு நிதி வசதிகள் அளிப்பதில், நிதி ஆணைக் குழுவே தலையாய இடம் பெற வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளோம். தேசிய வளர்ச்சி மன்றம் பரிந்துரைத்துள்ள குறைந்தபட்சத் தேவைத் திட்டம் உட்பட, எல்லாத் திட்டச் செலவுகட்கும், திட்டத்தின் பாற்படாத செலவுகளுக்குமான நிதிஉதவி பற்றி நிதி ஆணைக் குழு, திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்பது நமது




கொள்கையாகும். மாநிலங்களின் தேவைகளனைத்தையும் ஒரு சேர நோக்கி, மத்திய வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படும் முறையையும், மத்திய அரசு மானியங்கள் வழங்கும் முறையையும், நிதி ஆணைக் குழுவே பரிந்துரைக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்ட மானியங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்று நிதி ஆணைக் குழு வரையறுத்துச் சொல்ல வேண்டும்; திட்டக் குழு அவ்வரையறைக்குட்பட்டு ஆண்டுக்கு ஆண்டு செயல்பட வேண்டும்.

வறுமை, வேலையின்மை ஆகியவற்றை ஒழித்து, சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதையே முக்கியக் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அடுத்த பத்தாண்டுகளுக்கு மாநிலத்திற்கான நீண்ட காலத் திட்டமொன்றை வகுப்பதற்காக மாநிலத் திட்டக் குழுவொன்றை அமைத்துள்ளோம். மாநிலத் திட்டக் குழுவால் வகுக்கப் பட்டுள்ள வரைவுத் திட்டத்தின் நகல் ஒன்று சட்ட மன்றத்திலும் மக்கள் முன்னிலையிலும் வைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நீண்ட காலத் திட்டம் (ஐந்தாவது, ஆறாவது திட்டங்களைக் கொண்டது) சம்பந்தப்பட்ட விரிவான திட்டங்கள் தயாரிப்பதில், மாநிலத் திட்டக்குழு தற்சமயம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது தேவையான மூலப் பொருட்கள், மின்சாரம் ஆகியவை தங்கு தடையில்லாமல் கிடைக்க வழி செய்யப்படுவதே, திட்டங்களை வெற்றியுடன் செயல்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் என்று மாண்புமிகு முதலமைச்சர் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூறியிருப்பதை இங்குக் குறிப்பிடவிரும்புகிறேன். சேமித்து, முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், வரிவிதிப்பு முறையை மாற்றியமைப்பதை ஆராய்வதற்கு வரி விசாரணைக்குழு ஒன்றைஅமைக்க வேண்டுமென்று அவர் அக்கூட்டத்தில் கூறியதையும் குறிப்பிட விரும்புகின்றேன். எல்லாருமே வேலை வாய்ப்புக்காக அரசாங்கத்தை எதிர்பார்த்திருப்பது நல்லது அல்ல : உடனடிச் சாத்தியமும் அல்ல. எனவே, சேமித்து, தொழிலில் முதலீடு செய்ய மத்தியதர வர்க்கத் தொழில் முனைவர்கள் பலர் உருவாக வேண்டும். அத்தகையோர்கள் அவ்வாறு செயல்பட, தக்க சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே, வருமான வரி



அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்தை ஏற்பதன் மூலம் வரி ஏய்ப்பைத் தவிர்க்கவும், கறுப்புப் பண நடமாட்டத்தைத் தடுக்கவும் வழி வகை காணமுடியும்.

வரும் கூட்டத் தொடரில் ஆலோசிக்கப்பட வேண்டிய முக்கியமான சட்ட வரைவுகளில் ஒன்று, பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது பற்றியதாகும். இம்மாநிலத்திலுள்ள பேருந்துப் போக்குவரத்து முழுவதையும் படிப்படியாக நாட்டுடைமை ஆக்குவதென்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது உங்கள் அனைவருக்கும் தெரியும். இது இம்மாநிலம் சமதர்மப் பாதையில் கண்டு வரும் மற்றொரு முன்னேற்றமாகும். இப்பேரவை இந்த நடவடிக்கையை வரவேற்குமென நான் நம்புகிறேன்.

சமதர்ம ஜனநாயகம் நல்ல வகையில் மலர வேண்டுமானால் நாம் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும். நாட்டிலே நலிந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான பாமர மக்களுக்கு அவர்களது நிலையினை நல்ல வகையில் புரிந்துகொண்டு, அவர்களுக்காக அயராது, சலியாது பணிபுரியும் சக்திகளுக்கு நமது ஒத்துழைப்பை நல்குவதிலும், அந்த நோக்கங்களுக்காக உறுதியுடன் பாடுபடுவதிலும் நாம் முன்னோடிகளாக இருப்போமேயானால், நமது சந்ததியினர் அனைவரும் நம்மைப் போற்றிப் புகழ்வார்கள்.

[2-2-1973-ல் நடைபெற்ற சட்ட மன்றக் கூட்டவையில் ஆளுநர் ஆற்றிய உரையின் சிலபகுதிகள்.]



# கனவு நனவாகியது!

கூவம் சீரமைப்புப் பணிகள் நிறைவுற்று, அதனுடைய எழிலார்ந்த கரைகளைக் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்று, உல்லாசப் படகுகளை ஓடவிடுகின்ற இந்த இனிய நாளில், எனக்கு 1967-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் மாலை நேரம் நினைவுக்கு வராமல் இல்லை.

அந்த நாள் மாலை நேரத்தில்தான், இதே பகுதியில் எங்களை ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்திற்கான தொடக்க விழாவினை நடத்தி வைத்தார்கள். அப்போது அவர்கள் சொன்னார்கள், ''கூவம் சீரமைப்புத் திட்டத்தை இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயே சேர்க்க வேண்டும் என்று பொதுப்பணி அமைச்சர் தம்பி கருணாநிதி துளைத்து எடுத்து விட்டார். ஆகவேதான், இந்தத் திட்டத்தை எவ்வளவோ நிதி நெருக்கடிக்கு இடையிலேயும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேயே இணைத்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

அந்த நாளில் அண்ணா அவர்களுடைய வாழ்த்துக்களோடு— பாராட்டுகளோடு — தொடங்கிய இந்தத் திட்டம், எவ்வளவோ எதிர்ப்புக்கிடையிலேயும் அடுக்கடுக்காக வந்த நிலைமைகளைச் சமாளித்துச் சிறப்புற நிறைவேறி இருக்கிறது.

மேல்நாடுகளில் அந்த நாட்டினுடைய தலைநகரங்களை அழகு படுத்துவதிலே முதலிடத்தைப் பெறுவதும், அந்தத் தலைநகரங்களை அழகு படுத்துவதும் இடையே கிழித்துக்கொண்டு ஓடுகிற ஆறுகள்தான். அந்த ஆறுகளின் வனப்பும், அதிலே ஓடிக் கொண்டிருக்கிற உல்லாசப்படகுகளும், அந்தப் படகு சவாரிக்காக வருகின்ற சுற்றுலாப் பயணிகளும், நகரத்தை எழில் படுத்துவது மட்டுமல்ல. நகரத்தின் பொருளாதாரத்தைச் சுற்றுலாத் துறையின் மூலமாக ஓரளவுக்கு உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னை நகரில் கூவம் நதியைச் சீரமைக்க வேண்டும் என்ற ஆர்வம் பல ஆண்டுக் காலமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், அந்த ஆர்வத்தைச் செயல் படுத்துகின்ற திட்ட முயற்சிகள் 1967-க்குப் பிறகுதான் தொடங்கப் பெற்றன. செங்கற்பட்டு மாவட்டத்திலே உற்பத்தியாகிக் கிட்டத்தட்ட 41 மைல் ஓடுகின்ற கூவம் ஆறு, பல்வேறு அசுத்த வடிகால்கள், வந்து இதிலே கலந்த காரணத்தினாலும் சென்னை மாநகரில் உள்ள அசுத்தப் பொருள்களையெல்லாம் சுமந்து செல்லுகின்ற நதியாக இது ஆக்கப்பட்டதாலும், கூவம் கெட்டு விட்டது என்று சொன்னார்கள்.

கூவம் ஆறு சீரமைப்புப் பணிகள் மூன்று கட்டமாக நடைபெற்று உள்ளன.

முதல் கட்டமாக 35 அடி அகலமுள்ள இரு கண் கொண்ட மதகும், மணல்வாரி இயந்திரத்தைப் பொருத்துவதற்காகச் சுமார் 250 அடி நீளமுள்ள ஜெட்டி ஒன்றைக் கட்டுவதற்கும், மதிப்பீட்டுச் செலவு 66 இலட்சம் ஆகியிருக்கிறது. இது முதல் கட்டம்.

இரண்டாம் கட்டம் சேத்துப்பட்டு இருப்புப் பாதைப் பாலத்திலிருந்து, நேப்பியர் பாலம் வரையிலான ஐந்து மைல் இரண்டு பர்லாங் தொலைவுள்ள பகுதி, வடபிரிவில் ஒரு மைல் ஒரு பர்லாங் தூரப் பகுதி இவற்றை வாய்க்காலாக வகைப்படுத்தி, கரைகளின் சரிவுகளைச் சிமிண்ட் கற்காரைப் பகுதிகளால் பதித்து, ஆற்றின் கரை ஓரத்திலே 10 அடி அகல நடைபாதைகள் அமைத்து ஏழு படகுத்துறைகள், ஒரு படகுக் குழாம் கட்டுவதற்கு 2-ஆம் கட்ட வேலையாகத்தான், 1கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

படகுகளை விடுகிற உல்லாசப் பொழுது போக்கிற்குச்சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி அளிக்கிற காரியம் மாத்திரமல்லாமல் இந்த அரசு படகுகளை மிதக்க விடுகிற அதே நேரத்தில் பாட்டாளி மக்களையும் மறந்து விடுகிற அரசு அல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாகவும், கூவம் நதி ஓரத்திலே வாழ்ந்து கொண்டிருந்த 941 குடிசை வாழ் மக்களுக்கு ஏறத்தாழ 12 இலட்சம் ரூபாய் செலவில் தீப்பற்றாத வீடுகளைக் கூவம் நதியின் கரை ஓரத்திலே அரசின் சார்பில் கட்டிக்கொடுத்திருக்கிறோம். இவ்வளவுக்கும் சேர்த்து 2 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. சுற்றுலாப்

# முதல்வர் கலைஞர்

பயணிகளின் மூலம் இந்தத் தொகை நமக்குக் கிடைக்க வேண்டும்.

கூடுமான வரையில் நம்முடைய நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளை நாம் கவர வேண்டும் என்பது ஒருபுறம். அதே நேரத்தில் நம்முடைய நாட்டில் இருக்கின்ற மக்களே கூட வெளிநாட்டில் அது இருக்கிறது இது இருக்கிறது என்று சொல்லுகின்ற நேரத்தில், அவைகளைப் போய்ப் பார்க்க முடியாதவர்கள் அவைகளை இங்கேயே பார்க்க வேண்டும் என்று எண்ணுகிற போது, வசதி வாய்ப்பற்றவர்களுக்கு, இந்தத் துறையின் மூலமாக ஓரளவு வசதியை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஆனால், மத்திய அரசிலேயே சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மிகக் குறைவாக இருக்கிறது.

அந்தக் காரணத்தினாலேதான் நாம் சுற்றுலாத் துறையை மத்திய அரசுத் துறையோடு இணைத்துக் கொண்டிருப்பதால் நாம் அதிகமாகச் செலவு செய்திட வழி வகை இல்லாமல் இருக்கிறது.

ஆனாலும், மாநில அரசைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலே சுற்றுலாத்துறை எல்லா வகையிலும் வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகின்றோம்.

நண்பர் இராசாராம் அவர்களுடைய பொறுப்பிலும் ஆசைத்தம்பி அவர்களின் தலைமையிலும் இயங்குகின்ற அந்த வாரியம் கடந்த சில மாதங்களில் சுற்றுலாத்துறை மூலமாக நல்ல பல காரியங்களைச் சாதித்திருக்கின்றது. அண்மையில் கொண்டாடப்பட்ட பொங்கல் விழா— எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மிகச் சிறப்பாகவும், வெளிநாட்டுக்காரர்களைக் கவரத் தக்க வகையிலும் அமைந்திருந்ததை நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

கூவம் நதி வேலையைப் பொறுத்த வரையில் அதை நாம் முடித்து விட்டோம் என்றாலும், சென்னை மாநகரத்தை மற்றொரு ஆறு பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது; சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்குப்



பெயர் பக்கிங்காம். அதையும் நாம் சீர்திருத்தவேண்டும் என்கின்ற ஓர் எண்ணம் நீண்டபல நாட்களாகவே இருந்துவருகிறது. அது பற்றியும் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

கூவம் நதியினுடைய இரு கரைகளிலும், இன்னும் அழகான சோலைகளை நாம் உருவாக்க வேண்டும். இந்தச் சீரமைப்புக்குப் பிறகு இருகரைகளிலும் உள்ள நிலங்கள் எல்லாம், அதிக விலைக்குப் போகின்றன. தனியார் நிலங்களானாலும் அங்கே கட்டடங்களைக் கட்டிக் கொள்வதற்கு நிறையப்பேர் முந்துகின்றார்கள். காரணம் வெகு விரைவில் நிறையப் படகுகள் போகத்தக்க இடமாக இது மாறிவிடும் என்ற நம்பிக்கையே யாகும்.

இங்கு நமது அறிஞர்அண்ணா அவர்கள் கண் துயிலும் சதுக்கத்திற்கு அருகாமையில் நீச்சல் குளமொன்றும், ஆழ நீச்சல் குளமொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், மரங்களும் பூங்காக்களும் வளர்ந்து விடுமேயானால் இன்னும் ஐந்தாண்டுக் காலத்தில்—பத்தாண்டுக் காலத்தில் வெளி நாடுகளில் ஓடிக் கொண்டிருக்கிற நதிகளையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு அழகினை நிச்சயமாகப் பெறும்.

நல்ல காரியங்களைச் செய்கின்ற நேரத்தில் சிலபேர் பாராட்டுகிறார்கள். இராசாராம் நொந்த உள்ளத்தோடு சொன்னார், யாரும் பாராட்ட மறுக்கிறார்களே என்று— அதேநேரத்தில் பெண் உள்ளம்—கனிவான உள்ளம்—தாய் உள்ளம் — களங்கமற்ற உள்ளம் என்பதற்கு அடையாளமாக அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ''நல்லவைகளை நான் பாராட்டுவேன், இதையும் நிச்சயமாகப் பாராட்டுவேன்'' என்று சொன்னது, நம்மைப் பார்த்துச் சொன்னது அல்ல. 'ஏன் பாராட்டினீர்கள் என்று கேட்பவர்களைப் பார்த்து, நல்லவைகளை நான் பாராட்டியேதான் தீருவேன் என்று சொல்வதைப் போல, அழுத்தம் திருத்தமான குரலில் அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

நல்ல உள்ளங்களிலே இருந்து வருகின்ற பாராட்டுக்கள் இது போன்ற நல்ல காரியங்களை இந்த அரசு செய்வதற்கு உறுதுணையாக இருக்கும்—ஊக்கமளிக்கும் என்ற நிறைந்த நம்பிக்கை இருக்கிறது.

இந்த அருமையான திட்டத்தை என்னுடைய அருமை நண்பர் பொதுப் பணித்துறை அமைச்சர் சாதிக்பாட்சா அவர்களும், அரசு அதிகாரிகளும் இவைகளை ஒழுங்காகவும் சீராகவும் செம்மையாகவும் செய்வதில் தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்தியிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட மூவாயிரம் தொழிலாளர்கள் — கிராமப்புறத்து மக்கள்—கூவம் நதியிலே வந்து வேலை செய்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர் வர்க்கத்தையும் நான் பாராட்டுகின்றேன். அல்லும் பகலும் பாடுபட்ட அந்தப் பாட்டாளி நண்பர்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்தப் பாட்டாளித் தோழர்களுக்குத் தந்திருக்கின்ற ஊதியம் பெரிது அல்ல. நாம் அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம்—நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தத் திட்டத்தைப்போன்று பல்வேறு திட்டங்கள் நாட்டிலே நடை பெறுவதற்கு, ஏற்ற வகையில் மக்களின் அன்பான ஆதரவு இந்த அரசுக்கு என்றென்றும் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**(கூவம் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள படகு குழாம், உல்லாசப் படகு ஓட்டம் ஆகிய வற்றைத் தொடங்கிவைத்து முதல்வர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஏனைய செய்திகள் வண்ணப் பக்கங்களில்.)**

# இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு மைய வங்கி



இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு மைய வங்கி தமிழ்நாட்டில்தான் உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பெருமையைப் பெற்றிருப்பது கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி.

1970–71-ஆம் ஆண்டில் இந்தியாவில் சிறந்த கூட்டுறவு வங்கியாக முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி. 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இந்தப் பெருமையைப் பெற்றுள்ளது. இவ்வாண்டும் (1972–73) இந்தியாவில் சிறந்த கூட்டுறவு மைய வங்கியாக கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கியே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் வங்கித் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் முதன்முதலாகச் செய்த மாறுதல் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் இணையாமலிருந்த விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் இணைக்கப் பட்டன என்கிறார் இந்த வங்கியின் தலைவர் திரு கோ. சி. மணி, எம்.எல்.சி.



இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு மைய வங்கிக்கான பரிசைத் தமிழக கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் மகாராஷ்டிர மாநிலக் கூட்டுறவு அமைச்சர் திரு மொஹிடே அவர்கள் வங்கித் தலைவர் திரு கோ. சி. மணி, எம். எல். சி., அவர்களுக்கு அளிக்கிறார்.

வங்கியின் சிறப்பான வெற்றிக்கு ஆற்றிய பணிகள் பற்றி அவர் தெரிவித்தவை வருமாறு:

வசூல் பணிகள் தீவிரமாக்கப்பட்டன. புதிய முறையில் அலுவலர்கள் கூட்டம் கூட்டப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டு வசூல் முனைப்பு இயக்கம் தொடங்கப்பட்டது.

எல்லாக் குத்தகை விவசாயிகளுக்கும் எல்லாப் பருவத்திலும், குறிப்பாகப் பணப் பயிர்களுக்கும் கடன் வழங்கும் முறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

நெல் சாகுபடிக்குத்தான் கடன் வழங்கப்படும் என்ற முறையை மாற்றிக் கரும்பு, பருத்தி, காய்கறிகள், வாழை, நிலக்கடலை, புகையிலை ஆகியவற்றைப் பயிரிடக் கடன் வழங்கப் பட்டது.

விவசாயிகளுக்கு வழங்கும் ரொக்கப் பகுதி ரூ. 125 ஆக உயர்த்தப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் உர விற்பனையை அதிகரிக்க, உர மொத்த விற்பனையாளரிடம் கழிவு பெற்று—விற்பனையாளர்களான நாணயச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டது. இதனால் விற்பனையாளர்களான நாணயச் சங்கங்கள் இலாபம் அடைந்தன.

உர விற்பனை அதிகரிப்புக்காக செயலாளர்களுக்கு ஊக்க போனஸ் அளிக்கப்பட்டது.

கூட்டுறவு நாணயச் சங்கங்களைக் கட்டாயமாக காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மாலை 3 மணி முதல் இரவு 7 மணி வரையும் திறந்து வைத்திருக்க வேண்டும் என்ற கொள்கை தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவு பெற ஆய்வாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் இப்பொழுது 70 சதவீதக் கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிறைவு கொள்ளும் வகையில் பணியாற்றி வருகின்றன.

முன்பு ஏறத்தாழ ரூபாய் இரண்டு கோடி அளவில்தான் கடன் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது ரூபாய் ஐந்து கோடிக்கு அதிகமாகக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதிக அளவில் இப்படிக் கடன் வழங்குவதன் மூலம் பசுமைப் புரட்சிக்கு உறுதுணையாகக் கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி பணியாற்றி வருகின்றது.




சிறந்த கூட்டுறவு மைய வங்கி எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறது?

தேசியக் கூட்டுறவு ஒன்றியம் என்ற அமைப்பு புதுடெல்லியில் உள்ளது. எல்லா மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களையும் அழைத்து ஒவ்வொரு கூட்டுறவு மைய வங்கிகளின் தணிக்கைக் கணக்குகளையும் தகுதிகளையும் ஆராய்ந்து முடிவு செய்கிறது.

சிறந்த கூட்டுறவு வங்கியாக இருக்க என்ன தகுதி வேண்டும்?

கடன் பாக்கியில் 99.2 சதவீதம் வசூல் செய்திருக்க வேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தச் சாதனையைச் செய்து இந்தியாவில் சிறந்த கூட்டுறவு மத்திய வங்கியாகக் கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கி திகழ்கிறது.

வேறு எங்கும் இல்லாத வகையிலும் கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி சிட்-பண்ட் சட்டப்படி பல குரூப்களில் ஏலச் சீட்டுகளை நடத்துகிறது.

அலுவலக அலுவலாளர்களுக்கும் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மொத்தத்தில் வங்கி அலுவலாளர்களுக்கு 1 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. பயன் நுகர்வோர் கடன் மூலமும் சீட்டு நடத்தப்படுகிறது.

இந்த இதழுடன் இலவச இணைப்பு உண்டு. விவரம் 60-ஆம் பக்கத்தில்.

தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் மட்டுமே இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன.

கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கியின் கிளைகள் கும்பகோணம், மாயூரம், சீர்காழி, பாபநாசம், நன்னிலம், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி ஆகிய வட்டங்களில் உள்ளன. கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கியின் உறுப்பினராக 264 சங்கங்கள் இயங்கி வருகின்றன. மொத்தத்தில் கும்பகோணம் கூட்டுறவு மைய வங்கி மற்ற வங்கிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது என்று கூறலாம். வைரவிழாக் கொண்டாடும் இந்த வழிகாட்டும் வங்கியை அனைவரும் வாழ்த்திப் பாராட்டுவோம்.

—மா.



16-2—2எ

# இதோ உங்கள் இதயம்



நாகரிகம் வளர்ந்துள்ள தற்காலத்தில் ஒருவருடைய இருதயத்தைப் பற்றியும் அது இறைவை உறுப்பாகச் செயல்படும் சிறப்பையும் அறிந்து கொள்வது கடினமல்ல. உடலிலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் குருதியை அனுப்புவது இருதயத்தினுடைய தலையாய கடமையாகும்.

இருதயத்தின் செயல் திறனை ஒருவர் அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். அதனால் ஒருவர் தன்னுடைய இருதயத்தின் செயல் திறனிற்கு ஒப்ப சீரான வாழ்க்கை வாழலாம். நீண்ட காலத்திற்கு இடையூறோ இன்னலோ இல்லாத அளவிற்கு ஒருவருக்குத் துணை செய்யும் இருதயத்திற்கு உடல் மற்றும் மூளைத் தொல்லைகள் பாரமாக அமைந்து விடும். பிணியால் பாதிக்கப்பட்ட இருதயத்தைக் கொண்டவரால்கூட, அவர் தன்னுடைய இருதயத்தின் உண்மை நிலைமையை அறிந்திருந்தால் சீரான நடைமுறை வாழ்க்கை வாழ முடியும்.

தலைக்கு மேலே ஆபத்தாகத் தொங்கிக் கொண்டிருக்கும் டேமாக்ளீஸின் கத்தியைப்போல் எப்போதும் இருதய நோய் ஆபத்தோடு இணைந்துள்ளது ; ஒருவருடைய வாழ்க்கைக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது என்று நினைப்பது தவறான தாகும். இதுபோன்ற கருத்து, அரைகுறைப் புலமை பெற்றவர்களாலும், தவறான மருத்துவர்களாலும் உருவாக்கப்பட்டு விடுகிறது. செய்தித் தாள்களில் வெளிவருவதைப் போல் இதுபோன்ற தவறான கருத்து பலவித இறப்புகளுக்குக் காரணமாகி விடுகின்றன. இதுபோன்றவைகளை இருதய நோய்த் துறையில் புலமை பெற்றவர்கள் சரியான விளக்கம் கொடுத்துக் களைய வேண்டும்.

இருதய நோய் உள்ளவர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்து கொண்டு சமுதாயத்தில் நடமாட முடியாதவர்கள் என்பது சரியானதல்ல. மூச்சுத் திணறல், கால்கள் வீக்கம், இருமல் போன்றவை இருதய நோய்க்கான அறிகுறிகள். அவைகளே இருதய நோய்களல்ல. இவைகளால் ஒருவன் படுத்த படுக்கையில் இருக்க வேண்டும் என்ற கருத்தும் முறையானதல்ல.

மேலே குறிப்பிடப்பட்ட இருதய நோய் அறிகுறிகள் இருதய நோயின் முற்றிய நிலையில் ஏற்படுபவை. முறையான மருத்துவத்தால் அவை போன்ற சிக்கல்களையும் நீக்க முடியும். தங்களுடைய இருதயத்தின் நிலைமை அதனுடைய செயல் திறன் ஆகியவை குறித்து அறிந்து புரிந்து கொள்வதன் மூலம் முற்றிய இருதய நோயாளிகள் கூட நல்ல சீரான வாழ்க்கையை நல்ல உடல் நலத்தோடு வாழ முடியும்.

வாழ்க்கையின் பலவிதப் பருவத்தில் ஏற்படும் பலவகையான இருதய நோய்கள் உண்டு. உடலின் மற்ற உறுப்புகளைப் பாதிக்கும் நோய்கள் இருதயத்தையும் பாதிப்பதுண்டு. அதனால் இருதய நோய் ஆபத்தானது என்ற பய உணர்ச்சி பொது மக்கள் மனத்தில் எழும்புவது அவசியமற்றது. அத்தகைய உணர்வு பலவித நரம்புத்தொடர்பான நோய்களுக்குக் காரணமாகி விடுகின்றன.

பேராசிரியர்

டாக்டர் கே. ராமச்சந்திரா



சில நேரங்களில் உடலில் ஏற்படும் நோய்களின் சிக்கலால் இருதயம் பாதிக்கப்படுகிறது. அத்தகைய நோய்களால் ஒருவர் இறந்து விடுவதில்லை. ஆனால், அவைகளால் ஏற்படும் இருதய நோய் வாழ்க்கையைப் பாதித்து விடுகிறது.

எளிதில் கண்டு கொள்ளக் கூடிய தொற்று வியாதிகளால் தாயின் கர்ப்பப் பையிலேயே ஒருவருக்கு இருதய நோய் ஏற்படலாம். காலப் போக்கில் அந்நோய் வளர்ச்சி அடையலாம். வாழ்க்கையின் பிற்காலத்தில் ஏற்படும் இருதய நோய்களும் உண்டு. நரம்புத் தொடர்பான இருதய நோய்கள், அதிக உணர்வு சம்பந்தமான இருதய நோய்கள், நீரிழிவால் ஏற்படும் இருதய நோய்கள் போன்றவை அத்தகைய இருதயப் பிணிகளில் சில. குழந்தைப் பருவம், இளமைப் பருவம், வயோதிகப் பருவம் போன்ற வாழ்க்கைப் பருவங்களில் ஏற்படும் இருதய நோய்களைப் பற்றி அறிந்து கொள்ள ஒருவர் தன்னுடைய இருதயத்தைப் பற்றிப் புரிந்து கொள்வது இன்றியமையாதது.

அதிக உள்ளுணர்வால், நீரிழிவால் பாதிக்கப்பட்ட இருதய நோயாளிகள் தங்கள் இருதயம் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு தேர்ச்சி பெற்ற மருத்துவரின் முறையான ஆலோசனையோடு குறைந்த அளவு மருந்தை உட்கொண்டு ஆரோக்கியமான வாழ்வு வாழமுடியும்.

ஒருவர் தனது வயது, சமுதாய நிலைமை ஆகியவைகள் எப்படி இருப்பினும் அடிக்கடி தன்னுடைய உடல் நிலையைப் பரிசோதித்துக் கொள்வதுபோலவே இருதயத்தையும் அப்படிச்செய்து கொள்வது தேவையானது. தற்காலத்தில் ஒருமுறை இருதய நோயாகத் தோன்றியது எப்போதும் அப்படியே இருக்கவேண்டும் என்ற கட்டாய நியதி இல்லை. அறுவைச் சிகிச்சையின் முன்னேற்றம், உடல் நிலைமை, இருதய நிலைமை ஆகியவைகளை அறிந்து கொள்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் போன்றவைகள் மேற்கூறிய கருத்தை மாற்றி விட்டது.

இருதய நோயால் பிணிக்கப்பட்டவர்கள் தொடக்கக்காலத்திலேயே அதைப் பற்றித் தெரிந்து கொண்டு முறைப்படி வாழின் மேலும் சீர்பெற்ற செம்மையான வீரமான வாழ்க்கை வாழ முடியும் என்பதை நான் கூறுவேன்.




டி. என். சுகி சுப்பிரமணியன்

## 1. மடி நிறையப் பணம் - மனம் நிறைய உல்லாசம்

நல்லதை நினைக்கின்ற மனமும், நினைத்ததை முடிக்கின்ற துணிவும் சேர்ந்திருந்தால் வாழ்க்கை என்றும் வெற்றி மயமாகவேதான் இருக்கும்.

நல்லதை நினைக்கின்ற மனம் ராதைக்கு இருந்தது; நினைத்ததை முடிக்கின்ற துணிவு மணிவாசகனுக்கு இருந்தது. இரண்டும் இணைந்திருக்க வேண்டுமென்ற ஆவல் பாண்டித்துரைக்கு இருந்தது.

ராதை, மணிவாசகனின் மாமன் மகள். முறைப் பெண்.

பாண்டித்துரை, மணிவாசகனின் தாய்மாமன்; தாய்வழி உறவு, தந்தைவழி உறவு என்று அவனது உறவுகளிலெல்லாம் எஞ்சி நிற்கும் ஒரே மனிதர் அவர் மட்டும்தான். 'தங்கை மகன்' என்ற உறவிலும், தன் மகளை மணக்கப் போகிறவன் என்ற நம்பிக்கையிலும், மணிவாசகனின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அவரே உத்தரவாதமாக இருந்தார். இருந்தார் என்ன? இப்போதும் அதே எண்ணத்தோடுதான் இருக்கிறார்........!

அறைவாசலில் அழைப்புமணி கிணுகிணுக்கிறது. வந்து நிற்பவள் ராதை. மகளாக இருந்தாலும் மரியாதைக்கு மரியாதை கொடுக்கத் தெரிந்தவள். எனவேதான், மணியை அழுத்தித் தன் வரவைத் தெரிவித்துவிட்டு உள்ளே வருகிறாள்.

'' அப்பா ''

'' ஐநூறு ரூபாய் — இந்தாம்மா '' என்கிறார் பாண்டித்துரை.

'' கண்டேன் சீதையை'ங்கிறதைப் போலக் காவியநயம் இருக்கப்பா உங்க பேச்சிலே? எவ்வளவு ரூபாய் தரப் போறீங்களோன்னு சஸ்பென்ஸ் வைக்காமல், 'ஐநூறு ரூபாய்— இதோன்னு' கொடுக்கிறீங்களே ..........நீங்க பல்லாண்டு வாழணும்! பலநூறு கொடுக்கணும் '' என்று கூறிச் சிரித்தப்படியே வாங்குகிறாள்; வண்ணப் பட்டாம் பூச்சி போல் சிறகடித்துப் பறக்கிறாள்.

சன்னல் திரையை விலக்கிக் கொண்டு கீழே கூடத்தைப் பார்க்கிறார் பாண்டித்துரை.

சென்ட்ரல்—எழும்பூர் ரயில் நிலைய மேடை இடம் மாறித் தம் வீட்டுக் கூடத்திற்குள் வந்துவிட்டதோ என்று பிரமித்துப் போகிறார்.

பெரிய தோல்பெட்டி அதன் மேல் சிப்புக் கண்ணாடி சோப்பு— வைத்துக்கொள்ளும் சிறுபெட்டி- பத்திரிகைகள் புத்தகங்களை எடுத்துச் செல்ல சிறுபை ஒன்று, நான்குகோப்பைபிடிக்கும் பெரிய பிளாஸ்க் ஒன்று ..........இன்னும் மறந்து போன பொருட்கள் ஏதேனும் இருக்குமோ என்னவோ.....

பாண்டித்துரை தமக்குள் சிரித்துக் கொண்டார். இத்தனை பொருட்களிலே ராதைக்குத் தேவையான — அல்லது ராதைக்குச் சொந்தமான— பொருள் என ஏதேனும் உண்டா என்று பார்க்கிறார்.

கண்ணுக்குப் புலப்படும் பொருளாக எதுவும் இல்லை. ஆனால், அங்கிருந்த ஒவ்வொன்றிலும் ராதையின் இதயம் கலந்திருக்கிறது. அவள் பார்வை பட்ட இடத்திலெல்லாம் பரிவும் கனிவும் படர்ந்திருக்கின்றன.

மணிவாசகன் சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டு படிப்பவன். தன் கல்லூரி நண்பர்களுடன் அவன் செல்லவிருக்கும் உல்லாசப் பயணத்திற்கான ஏற்பாடுகளைத்தான் அத்தனை அக்கறையாகப் பார்த்துப் பார்த்துச் செய்து வைத்திருக்கிறாள் ராதை.

நிலைக்கண்ணாடி முன் நின்று கொண்டிருக்கும் மணிவாசகன் கைக்குட்டையில் பவுடரைத் தூவி மடித்து வைத்துக் கொண்டே கடிகாரத்தைப் பார்க்கிறான்.

'' மணி ஏழு! அடேங்கப்பா ........காலந்தான் மனிதனை வெரட்டுதே தவிர, மனிதன் காலத்தை வெரட்டறதாகவும் தெரியலே, வெல்லறதாகவும் தெரியலே !'' என்று முணுமுணுத்துக் கொள்கிறான்.

'' என்ன தெரியலே உங்களுக்கு? எல்லாம் தெரிஞ்சவர் எங்க அத்தான்னு நான் ரொம்பவும் பெருமைப்பட்டுக் கிட்டிருக்கேன். என்னவோ 'தெரியலை'ன்னு நீங்க குறைப்படறமாதிரி தோணுதே....''

என்று படபடப்பாகப் பொரிந் தபடியே மாடியிலிருந்து இறங்கி வருகிருள் ராதை.

''பணப்பை எங்கே வச்சேன்னு தெரியலே..... அதைத்தான் தேடிக்கிட்டிருந்தேன்......''

'' பையும் பணமும் எங் கிட்டே இருக்கு அத்தான்.... என்று கூறிவிட்டு ஒரு விஞடி அவன் பதிலே எதிர்பார்த்து நிறுத்துகிருள்.

மணிவாசகனிடமிருந்து மறு மொழி இல்லே.

'' பணம் வேணும்ஞ— கேளுங்கள், கொடுக்கப்படும் '' என்கிருள் ராதை.

'' கேட்டுத்தான் வாங்கணுங் கிற அவசியமோ கேட்டாத்தான் கிடைக்கும்'ங்கிற நிலேமையோ என் வாழ்க்கையிலே என்னேக் குமே இருக்கக் கூடாது...... இதுதான் என் கொள்கை.... நான் நினேச்சா, உடனே அது —மறுவிஞடி— என் கைக்கு வந்தாகணும் — வரலே 'ன்ஞ கேட்கமாட்டேன், கெஞ்சமாட் டேன்—ஆஞ வரவழைப் பேன் !''

மணிவாசகத்தின் குரல் துடிப் பும் கொள்கைப் பிடிப்பும் பற்றி ராதை நன்ருகவே அறி வாள். தன்னுடைய அடுத்த வார்த்தை சற்று மாற்றுக் குறைவாக ஒலித்தாலும்— அல்லது ஒலிப்பதாக அவன் நினேத்து விட்டாலும்— தாட் பூட்டென்று பெட்டி படுக்கை களேத் தூக்கி எறிந்து விடுவான். பயணத்தை ரத்துச் செய்து விடுவான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

பணப் பையை அவன்கையில் கொடுத்துப் பெரிய கும்பிடாகப் போடுகிருள்.

பணம் கையில் வந்து விழுந் ததும் மணிவாசகனின் கோபம் —கொஞ்சம் தணிகிறது. குரல் கொஞ்சம் குளுமை கொள்ளு கிறது.

'' எவ்வளவு இருக்கு ?''

'' எவ்வளவோ இருக்கு.... நமக்குள்ளே எதுக்கு அத்தான் அந்தக் கணக்கெல்லாம் ?''

'' நமக்குள்ளே எவ்வளவோ இருக்கட்டும். இந்தப் பையிலே எவ்வளவு பணம் இருக்கு....? அது எனக்குத் தெரிஞ்சாக ணும். ''

'' அறுநூறு.''

'' மாமாகிட்டே நானூறு தானே நான் கேட்டேன்.''

'' அப்பா ஐநூறு கொடுத் தாங்க. ஏதோ என்ஞல் முடிஞ்சதையும் போட்டுக் கொடுத்திருக்கிறேன்.''

மணிவாசகன் முகம் மேலும் மலர்கிறது.

'' அட ஊட்டிக்கு போறீங்க ....ஊர் ஊராப் போறீங்க.. ஒரு பூ.... ஒரு புடவை.... ஒரு ஜோடி புதுதினுசு வளே யல்'னு எங்கேயாவது எதை யாவது பார்த்தா, எனக்காக வாங்கிட்டு வரணும்னு உங் களுக்கு ஆசை வராதா ?

'' வராது.''

ஏறிட்டுப் பார்த்தாள் ராதை.

'' நிச்சயமாக வராது.''. என்ருன் மணிவாசகன்.

—ரோஜா இதழை முள்ளால் கீறுகிற விளேயாட்டு ; இது மணி வாசகனுக்கு மிகவும் பிடித்த மான பொழுதுபோக்கு....

ராதைக்கும் போலியாகக் கோபம் கொள்ளத் தெரிந் திருக்கிறதே.

'' அதைச் சொல்லுங்க ! வீட்டை விட்டு வெளியிலே இறங் கின உடனே என்னே மறந்திட றதுதானே உங்களுக்குப் பழக் கம்........! நான் ஒரு பைத்தியக்காரி. சதா உங்களே நெனேச்சுகிட்ருக்கிற மாதிரி, நீங்களும் என்னேயே நெனேச்சுக் கிட்டிருப்பீங்க'ன்னு நான் நம் பறேன் பாருங்க...... சரி சரி, நேரமாச்சு புறப்படுங்க...... எங்கே உங்க நண்பர் ரோமியோ வரலேயா இன்னும் ?''

'' மணி ஏழுதானே ஆகுது ?''

'' அட அநியாயமே...... மணி எட்டு...... என்று ராதை கூறியதும் அவசர அவசரமாக மணிக்கட்டைத் திருப்பி நேரத் தைக் கவனிக்கிருன் மணிவாச கன்.

'' மணி ஏழுதான் ராதா !''

'' இனிமே ஏழுமணி நாளேக் குத்தான் வரும்....உங்க கடி காரம் ஓட்டைக் கடிகாரம். இதோ பாருங்க.... மணி எட்டு '' என்று தன்னுடைய கடிகாரத்தைக் கழற்றித் தரு கிருள் ராதை.

'' சை....ஊருக்குப் புறப் படற நேரத்தில் கடிகாரம்

தற்போது நாட்டிலுள்ள மொத்த மருத்துவ மனேகளில் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமாக படுக்கைகள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கை 1974-ஆம் ஆண்டுக்குள் 2 லட்சத்து 80 ஆயிரமாக உயர வேண்டும் என்பது குறியெல்லே யாகும்.

தற்போது 96 மருத்துவ மனேகள் ஒவ்வொன்றிலும் 500 அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் படுக்கைகள் உள்ளன.

இத்தகைய மருத்துவ மனேகள் மேற்கு வங்காளம், மராட்டியம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

தமிழ்நாடு, மைசூர், கேரளா ஆகிய ஒவ்வொரு மாநிலத்திலும் இதுபோன்று 8 மருத்துவ மனேகளும், மத்திய நிருவாகப் பகுதியான புதுதில்லியில் 7 மருத்துவ மனேகளும் உள்ளன.

ரிப்பேர் பண்ண ஏது நேரம்.. சனியன் '' என்று சபித்துக் கொண்டே தன் கடிகாரத்தைக் கழற்றி மேசையில் வீசி எறிகிறான் மணிவாசகன்.

'' கடிகாரம் நின்னுபோனா பிரயாணமே நின்னுபோகுமா என்ன....? என்று செல்லமாகக் கடிந்து கொள்கிறாள் ராதை.

' நின்று போனதைத் தொடர வைக்கத்தான் நீ இருக்கியேம்மா !' என்று நெஞ்சுக்குள் தம் மகளை வாழ்த்திக் கொள்கிறார் பாண்டித்துரை.

தாய்—தகப்பனை இழந்து பாதியில் படிப்பை நிறுத்தக் கூடிய சூழ்நிலையில், மணிவாசகன் பரிதவித்த போது ராதையின் பிடிவாதமும், தியாகமும் தான் அவனுடைய மேல் படிப்புக்குக் காரணமாக இருந்தவை. இந்த உண்மை மாமன் நெஞ்சுக்கும் தெரியும், மருமகன் நெஞ்சுக்கும் தெரியும்......! தன் கடிகாரத்தைச் சரிபார்த்து அவனிடம் கொடுக்கிறாள் ராதை..... விழிகளில் நீர் திரையிட அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் பாண்டித்துரை.

'' பெரிய டயல் கடிகாரம் கட்டற நாகரிகம் பெண்களிடம் வந்ததுக்கு இன்னைக்குத்தான் உண்மையான பலன் ஏற்பட்டிருக்கு......!'' என்று அவசரம் அவசரமாகக் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டு புறப்படுகிறான் மணிவாசகம்.

வாசலில் காரின் ஹாரன் ஒலி.

'' உங்க நண்பர் ரோமியோ வந்திட்டார் !''.

'' ஹாய்.. ஹாய்.. ஹாய்!'' என்று ஒருவகை ஓலத்தோடு வந்து நிற்கிறான் ரோமியோ. மணிவாசகத்தின் வகுப்புத் தோழன். அவனுடைய நாகரிக மொழிக்கும், நடையுடைகளுக்கும் தெரிந்த வரையில் 'ஹாய்' 'ஹாய்தான் ' பணிவும், மரியாதையும் கலந்த ஒருவகை வணக்கம்.

வந்து நின்றவன், மணிவாசகனின் பயணப் பொருட்களை ஒருமுறை கண்ணால் வட்டம் சுற்றுகிறான்.

'' அப்பனே மணிவாசகம் ! நீ ஒருவாரம் சுற்றுலா போறியா, இல்லே ஒரேயடியா தனிக்குடித்தனம் போறியா......ஏன்டா ......உன் ஒருத்தனுக்கு எத்தனை பெட்டிகள்....எத்தனை பொடிப்பொடி உருப்படிகள் !''

'' அடேய் ரோமியோ.... எல்லாம் அவசியமான சாமான்கள்'னு ராதைதான் எடுத்து வச்சிருக்கா........ ''



"மணி....நீ ஒரு வாலிபன், தானே......அதுவும் கல்லூரி மாணவன் தானே....? வெளியூர் பிரயாணம்னு எப்படி இருக்கணும் தெரியுமா......? தெரிஞ்சுக்கோ...... அந்த நாள்ளில் 'அல்லாடி' ஹைகோர்ட்டுக்கு வந்த மாதிரி இருக்கணும் — — எல்லாம் பாயின்ட்ஸ்சும் தலைக்குள்ளே கொண்டு வந்தமாதிரி இருக்கணும். லா புக்ஸூம், ரெபரன்ஸூம் லாரியிலே வருதுன்னு சொல்ற மாதிரி இருக்கக் கூடாது, தெரியுமா? பிரயாணத்துக்குத் தேவை....''

"லா பாயின்ட்ஸ் உள்ள மூளை மாதிரி, பணம் நிறைஞ்ச பை ஒண்ணே ஒண்ணுதான் பயணத்துக்குத் தேவை.'' என்று இடைமறிக்கிறாள் ராதை.

"யெஸ், யுவர் ஆனர்'' என அதை ஆமோதிக்கிறான் ரோமியோ.

மணிவாசகன் சீப்பை எடுத்துச் சிறிய பையின் ஜிப்பைப் பிரித்துத் திணித்துவிட்டுப் புறப்படுகிறான். இவ்வளவு நேரம் ரோமியோ பேசினதெல்லாம் யாருக்காகவோ என்ற அலட்சியம் அவனுக்கு...அது அவனுக்குப் பிறவிக்குணம்.

பெட்டியைப் பூட்டிவிட்டு, சாவியை மணிவாசகனின் கையில் கொடுக்கிறாள் ராதை.

"புறப்படலாம்'' என்பது பொருள்.

"நாங்க போகப் போற ஊர்களின் விவரம். தங்கப் போற விலாசம் எல்லாம்—'' என மணிவாசகன் பேச ஆரம்பிப்பதற்குள், ராதை குறுக்கிட்டாள். எல்லாம் அப்பா டயரியிலே சரிவரக் குறிச்சு வச்சுகிட்டேன். நிகழ்ச்சியிலே ஏதாவது மாற்றம் இருக்குமானா உடனுக்குடனே தெரிவிச்சுடுங்க.

"மாற்றம் இருந்தா தெரிவிக்கலாம். ஏமாற்றம் இருந்தாலும் தெரிவிக்கணுமோ ?'' இது ரோமியோ.

"எங்க அத்தான் இது வரைக்கும் என்னைக்குமே எந்த விஷயத்திலேயும் ஏமாந்தது கிடையாது ரோமியோ அவர்களே!' என்கிறாள் ராதை.

"இனிமேலேயும் ஏமாறப் போறதில்லே'ன்னு அடிச்சு சொல்லு ராதா !'' என்கிறான் மணிவாசகம்.

"அடடா, மகிழ்ச்சியா பொறப்படுற நேரத்தில் ஏன் இப்படிரெண்டுபேரும் கடுமையா எங்கிட்ட சண்டைக்கு வர் நீங்க..'' என்று பயந்த—பயந்தவன்போல் நடித்த—ரோமியோ நிலைமையைச் சமாளிப்பதற்காக, "நாங்கள்ளாம் மகிழ்ச்சியாப் போப்போறோமே.. செல்வி ராதா, எங்க கூட வரணும்னு உங்களுக்கு ஒரு ஆசை ஏற்படவில்லையே ?'' என்று கேட்டு வைத்தான். ஏதாவது பேசித் தொலைக்க வேண்டுமே.. இல்லாவிட்டால் முந்தையக் கேள்வியின் கனம் அவன் முதுகில் வழிநெடுக இறங்கிய வண்ணம் இருக்கும். மணிவாசகனின் கைவண்ணம் அப்படிப் பட்டதாயிற்றே......!

"திருவாளர் ரோமியோ.... என்ன அசட்டுத்தனமான கேள்வி ஐயா உங்களுக்கு'ன்னு......! நீங்கள்ளாம் சட்டக் கல்லூரி நண்பர்களோட போறீங்க. நானும் உங்களோட படிச்சிருந்தா நீங்க கேக்கறதுக்கு முன்னாலேயே பொறப்பட்டு நிப்பேன்......!'' என்கிறாள் ராதை.

"நீங்களே எங்களோட படிச்சிருக்கலாம், இந்த முரடனுக்குப் பதிலா !'' என்று முணு முணுக்கிறான் ரோமியோ.

'இந்த முரடனுக்குப் பதிலாக !' என்ற அவனது கருத்தை ஆதரித்தோ மறுத்தோ அவள் என்ன பேசினாலும் ஆபத்து வரும்.

அவள் சட்டப்படிப்பு படிக்கப் போயிருந்தால், மணிவாசகனுக்கு அந்த வாய்ப்பு நழுவிப் போயிருந்திருக்குமே....!

குடும்பம் அன்றிருந்த சூழ்நிலை அப்படி......

நடுத்தரவர்க்கம்; தொழில் பழைய பேப்பர் விற்பனை. பாண்டித்துரை தம் சக்திக்கு மிஞ்சியே ராதையையும், மணிவாசகத்தையும் பட்டப்படிப்பு வரை படிக்க வைத்துவிட்டார். மேற்கொண்டு சட்டப்படிப்புப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை இருவர் மனத்துள்ளும் துளிர் விட்டபோது! பாண்டித்துரை சற்றே தளர்ந்துதான் போனார்.

மணிவாசகனின் ஆவல், திறமை இரண்டையும் மதித்தவள் ராதை. அவள் சட்டக் கல்லூரிப் படிப்பிலிருந்து விலகி நின்றாள். மணிவாசகன் இதோ இன்று சட்டக் கல்லூரி மாணவன். நாளை முதல் அவன் வழக்கறிஞன்.

நினைக்க நினைக்க அவர் நெஞ்சம் இனித்தது. அவரைவிட அவள் மனமோ! அவன் உயர்விலே—அவன் திறமையிலே, பெருமையும், பெருமிதமும் கொள்ளும் வகையிலே உயர்ந்து கோபுரமாய் நின்றது.

"பட்டமும் சட்டமும் அவனுக்குச் சொந்தம், அவனே தனக்குச் சொந்தம்' என்ற உறவும், உரிமையும் கற்பித்த அமைதி காரணமாகத் தன் படிப்பைத் தியாகம் செய்து மணிவாசகனின் வளமான வாழ்வுக்கு வழி செய்து கொடுத்திருக்கிறாள் ராதை.......

## வெண்பாப் போட்டி-53.

ஈற்றடி : வாய்மை வழுவாமை மாண்பு

**முடிவு நாள் : 1—3—1973.**

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

சட்டக் கல்லூரி மாணவனுக உல்லாசப் பயணம் புறப்படும் நேரத்தில், மணிவாசகனுக்கு அவளுடைய தியாகம் நினைவுக்கு வந்து உறுத்தக் கூடாதே என்று பரிதவித்தாள் ராதை. இந்த அத்தான் வேதாளம் முருங்கை மரத்தைத் தேட ஆரம்பித்தால் விடிய விடியச் சமாதானம் செய்தாலும் பலனில்லாமலேயே போய்விடும்.

பயணத்திற்கு நேரமாகி விட்டதே என்று பரபரப்புக் காட்டி நிலைமையைச் சமாளிக்கிருள் ராதை.

மணிவாசகனும் ரோமியோவும் வண்டியில் ஏறப் போகும் சமயம்.

தொலைபேசி மணி கிணுகிணுக்கின்றது.

ராதைதான் எடுக்கிருள்.

'' ஹலோ..யெஸ்.. இப்பத்தான் புறப்பட்டுப் போருங்க ....கூப்பிடணுமா.... ஒரு நிமிஷம் இருங்க.... பார்க்கறேன்....'' என்றவள் வாசலுக்கு விரைந்து வந்து அத்தான் உங்களுக்கு போன் !'' என அழைக்கிருள்.

'' நீயே கேளேன் ராதா.. வாசல் வரைக்கும் வந்தாச்சே....'' என அலுத்துக் கொள்கிருன் மணிவாசகன்.

ஓட்டமாக ஓடிவந்து மீண்டும் தொலைபேசியில் பேசுகிருள் ராதை.

'' ஹலோ.... அவர் வண்டியிலே ஏறி உட்கார்ந்திட்டார். நீங்க எங்கிட்ட சொல்லலாம்னு சொல்லுங்க...... விஷயத்தை மட்டும் அவர்கிட்ட நானே ஓடிப்போய்ச் சொல்லிடறேன் ....நானு......நான் அவரோட கசின்......''

தொலைபேசியின் மறு முனையிலிருந்து வரும் குரலை முகத்தில் புன்சிரிப்புடன் செவிமடுக்கிருள் ராதை.

'' சரி.. இவ்வளவுதானே.. நானே சொல்லிடறேன்...... ஸ்டேஷனுக்குத்தான் வந்துகிட்டிருக்கார்..நன்றி....''

தொலைபேசியை வைத்துவிட்டு ஒரே மூச்சில் வாசலுக்கு ஓடி வருகிருள் ராதை.

'' சென்ட்ரல் நிலையத்திலேர்ந்து உங்க நண்பர் பூபதி பேசினர்......நீங்க போற அதே வண்டியிலே.... அதே பெட்டியிலே மருத்துவக் கல்லூரி மாணவிகளும் உதகைக்கு வராங்களாம் ............... இந்த நல்ல சேதியை உடனே உங்ககிட்டே சொல்லச் சொன்ஞர். உங்களைச் சீக்கிரமாப் பொறப்பட்டு வரவும் சொன்ஞர். ம்....இன்னும் என்ன தாமதம்....? போய்ட்டு வாங்க சீக்கிரம் '' என்கிருள் ராதை.

ரோமியோ ஆடிப்போய் வாடகை வண்டியில் உட்கார்ந்திருக்கிருன்.

ராதையின் முகத்தில் முன்னைப் போலவே பூரிப்பு...... முன்னைப் போலவே பொலிவு.. புன்சிரிப்பு....தன்னை மணக்கவிருக்கும் வாலிபனை எப்படி இவ்வளவு உற்சாகத்தோடு, 'கல்லூரி மாணவிகளோடு மகிழ்ச்சிகரமாகப் போய்வா !' என வழியனுப்ப முடிகிறது அவளால் ?

வண்டி புறப்படுகிறது.

மணிவாசகத்தின் மடிநிறையப் பணம். மனம் நிறைய உல்லாசம்.

## 2. இங்கிருந்த குழந்தை எங்கே ?

'காடு வரை பிள்ளை' என்று பிள்ளைகளின் பாசத்திற்கு இலக்கணம் வகுத்துப் போஞர்கள். ஆனால், காணமல் போன பிள்ளையைத் தேடிப் பெற்றவர்களின் பாசம் காவல் நிலையம் வரை கூட வரவில்லையே என்ற அதிசயத்தில் அதிர்ச்சியடைந்து நிற்கிருர் காவலர் 505.

ஒரு வயதுக் குழந்தை ஓயாமல் அழுது கொண்டிருக்கிறது. இடம், உதகை ஊரெல்லையை அடுத்த காவல் நிலையம்: நேரமோ நள்ளிரவு. அழுகிற குழந்தையைச் சமாதானம் செய்ய முடியாமல் திண்டாடுகிறவர்கள் கடமையும் பொறுப்பும் மிக்க காவலர்கள் இருவர். இத்தனைக்கும் இருவர் வீட்டிலும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என்பதாக நிறையப்பேர் உண்டு!

பனியின் கொடுமையும், இரவின் தனிமையும் அவர்கள் உடலுக்குப் பழகிப் போயிருந்தது. ஆனால், பச்சிளம் குழந்தையின் பசியும் அழுகையும் அவர்கள் நெஞ்சுக்குப் பாரமாக இருந்தது..

காவலர் 505, முரட்டுக் குரலில் தாலாட்டுப் பாடிப் பார்க்கிருர். 606, தம்மிடமிருந்த ஊதலைக் குழந்தையிடம் கொடுத்து ஊதச் சொல்லிப் பார்க்கிருர். பனிக் கொடுமையோடு ஊதலின் 'சில்'லென்னும் குளுமையும் படவே குழந்தை இன்னும் வீல் வீலென்று அழத் தொடங்குகிறது.

''அழுவக் கூடாதுடா பயலே ..அழுதா திருடன் வந்து புடிச்சிட்டு போய்டுவான்!'' என்று மிரட்டுகிருர் 505.

''தெளிவு இருக்கா உமக்கு? காவல் நிலையத்திலே மெரட்டற பேச்சா இது..திருடன் வருவாஞமில்லே?'' என்று சிடுசிடுக்கிருர் 606.

துப்பாக்கியை விளையாட்டுப் பொருளாக நினைக்கட்டும் என்று குழந்தையின் கையில் கொடுக்கிருர் 505.

''நீ துப்பாக்கியைக் காட்டினு அது பீரங்கி மாதிரி அழுகை பிடிக்கும்; வெளையாடக் கொடுக்க வேறே எதுவுமே அகப்படலையா..?'' என்று மேலும் கடுகடுத்தபடியே குழந்தையை வாங்கித் தம் தோளில் சார்த்திக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடைபோடுகிருர் 606.

505, அவர் பின்னுலேயே நடை நடந்து தமக்குத் தெரிந்த ஒரே தாலாட்டை மீண்டும் பாடத் தொடங்குகிருர்.

'' நீ பாடாதேய்யா.. உன் பாட்டைக் கேட்டா, எனக்கே அழலாம் போல வருது..பாடாதே..''

''பாடுவேன்!''

''பாடு, ஆனு பயமுறுத்தாதே!

சேச், சேச், சே, இப்படியா பொறுப்பில்லாம நடந்துக்குவாங்க பிள்ளையைப் பெத்தவங்க.. பச்சைப்புள்ளே.. ஒரு வயசு ஒண்ணரை வயசு கூட இருக்காது.. காணமப் போச்சே'ன்னு கவலை இருக்காதா? இவ்வளவு நேரம் புகார் குடுக்க பதறிக்கிட்டு ஓடி வந்திருக்க வேணும்? என்னதான் புள்ளை வளர்க்கிருங்களோ.. கொஞ்சங் கூடப் பாசம் பச்சாதாபம் இல்லாம..சே..!''

''இது அவசர யுகம்; பிரசவ அறையோடே பெத்த பாசம்

அறுந்து போயிடற அவசர யுகம் தம்பீ இது '' புள்ளேயும் அதை நெனேச்சுத்தான் அழுது பொலம்புதோ என்னவோ..'' என அலுத்துக் கொள்கிருர் 606.

ஊதலும் தாலாட்டும் தவிர வேறு விளேயாட்டுப் பொருள்கள் ஏதும் கிடைக்காத இடம்; கிடைக்க முடியாத நேரம்.

மலர்க் கண்காட்சி நடைபெறும் இடத்திற்குச் சற்றுத் தள்ளி மலேப்பாதையில் விசும்பலும் கண்ணீருமாக உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை மிகவும் பொறுப்போடு எடுத்து வந்தவர் காவலர் 505. இது வரை அதன் பெற்ருேர் வராமல் இருப்பது குறித்து வேதனேப்படுகிருர். வேலே நேரத்து வேதனே மட்டுமல்ல. பாசம்—தாய்ப்பாசம் — இப்படியும் வற்றிப் பாழ்பட்டுப் போய் விடுமா என்ற பரிதாபமும் சேர்ந்ததாலேயே அவருக்கு இவ்வளவு வேதனே...

இருளே, இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு குழந்தையின் அழுகை வீறிடுகிறது. அவர்களின் சமாதானம்— செல்லக் கொஞ்சல்கள்— தாலாட்டு விளேயாட்டு அனேத்திற்குமாகப் 'பெப்பே' காட்டி விட்டு மேலும் அழுகிறது குழந்தை.....

ஏட்டய்யா வருகிருர்.

கூடவே இரைச்சலும் வருகிறது.

வந்து நிற்பவள்—கற்பகம்.

''அட வுடுங்கய்யா வழியை. என் அறைக்கு எனக்கு வழி தெரியும்....தள்ளி நில்லுங்க' என்றபடியே நேரே ''லாக்-அப்'' அறையினுள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொள்கிருள் கற்பகம்.

நள்ளிரவில் கைதாகி விடியற்காலே விடுதலே பெற்றுப் போகும் வாடிக்கை நபர் அவள்!

''ஏன்யா ........குழந்தை அழுகை ஓயலேயா இன்னும். பெத்தவங்க வந்தாங்களா வரலேயா இன்னும்?''

''வரலே ஏட்டய்யா..''

''எங்கிட்ட கொண்டாங்கய்யா இப்படி'' என்கிருர் தலேமைக் காவலர்.

''ஆமா.... எங்களாலேயே அழுகையை நிறுத்த முடியலேயாம்....'' என்று முணுமுணுத்துக் கொள்கிருர் 606. ''ஏட்டய்யா''வுக்குப் பிள்ளே இல்லே என்பதுபற்றிச் சிலநேரம் இரக்கம்; சிலநேரம் இளக்காரம்.

505 ரிஜிஸ்டரைப் பிரித்து வைத்துக் கொண்டு ''ரைட்டர் இன்னேக்கு லீவு.... ஏட்டய்யா அந்தப் பொம்பளேக் கேசு..?'' என்று விசாரிக்கிருர்.

''வழக்கம் போலத்தான்!'' என்று கூறிவிட்டுப் பரிதாபமாகச் சிரிக்கிருர் ஏட்டய்யா.

''ஏம்மா கற்பகம்........ காரணத்தை மாத்தி எழுத என்னேக்காவது ஒரு சான்ஸ் குடேன். இதையே எழுதி எழுதி எங்களுக்கே கை கூசுது....'' என்று பரிவிரக்கத்துடன் கூறுகிருர் 505.

''எனக்கு ஒடம்போ மனசோ எதுவும் கூசலே.... அப்புறம்?... என்று எதிர் வெட்டு வெட்டுகிருள் கற்பகம்.

வீல் வீலென்று அலறித் தீர்க்கிறது குழந்தை.

''நீங்களும் எவ்வளவு நேரமாத்தான் போராடறீங்க.... உங்களாலே ஒரு நிமிஷம் சிரிக்க வைக்க முடியலேயே? ம்.... புள்ளேயைக் கொண்டாங்கய்யா இப்படி'' என்று கை நீட்டுகிருள் கற்பகம்.

''கொடுக்கலாமுங்களா ஏட்டய்யா?''

''கொடு....கொடு....... இந்தாம்மா வெளியில வந்து புள்ளேயை வாங்கு.... இல்லேன்னு புள்ளேயை லாக்-அப்புலே வச்சிருக்கிறதா எங்க மேலேயே கேசு வரும்''

''கதவைத் தொறந்து விடலாமுங்களா?'' எனச் சந்தேகத்தோடு கேட்கிருர் 606.

அழுகிற குழந்தை அவள் கைக்கு வருகிறது.

அந்த அணேப்பில், அவள் காட்டும் அன்பில் பெண்மை இருக்கிறது........தாலாட்டுப் பாடும் அவள் குரலில் தாய்மையின் பரிவும் இருக்கிறது....

''அட.... இவ கை பட்டவுடனே 'கப்புன்னு' அடங்கிப் போயிடுச்சே புள்ளே....'' என அதிசயப்படுகிருர் 606.

''பின்னே....நீ மெரட்டின உடனே அடங்கிப் போய்டுமா..? பொம்பளேக்கும், போலீசுக்கும் வித்தியாசமில்லேயா?'' என்று பூரிப்புடன் குழந்தையை அணேத்துக் கொள்கிருள்.

அழுத குழந்தையும் அவளோடு சேர்ந்து சிரிக்கிறது.

''ஏன்டா கண்ணு அழுதே, இவ்வளவு நேரம்? பசிக்குதாடா ராஜா....எங்கண்ணுல்லே....வாடா எங்கண்ணு'' என்று கொஞ்சுகிருள்.....

''பசி நேரம்னு நாம என்ன பண்ணமுடியும் கற்பகம்...... பெத்தவ வந்துதான் சமாளிக்கணும்....'' என்கிருர் 505.

''இதைப் பெத்தவ வந்துதான் குழந்தைப் பசியைத் தீக்கணும்....நானும் பெத்தவ தான்'' என்றவளின் கண்கள் பனிக்கின்றன. விழிகளே மறைத்த நீர்த்திரைக்கு அப்பால் வீட்டுக்குள் பசியால் துடிதுடிக்க வீறிடும் தன் குழந்தையின் நினேவு படருகின்றது....

விம்மித் தணிகிறது மார்பு.

விசும்பலே நிறுத்துகிறது குழந்தை.

அவள் மடிநிறையச் சுமந்திருக்கும் இந்தக் குழந்தையின் பசி அடங்கிவிட்டது; ஆனுல், மனம் நிறையச் சுமந்திருக்கும் சொந்தக் குழந்தையின் பசி, பாலுக்காக அழும் பரிதாபம் எப்போது, எப்படி அடங்க முடியும்?

கற்பகமும் அந்தப் புதிய குழந்தையும் தாயும் மகனுமாகக் காவல் நிலேயத்தில் அன்றிரவுப் பொழுதைக் கழிக்கிருர்கள்.

விடிகின்ற நேரத்தில்—

இருவரில் ஒருவர் அந்த இடத்தில் இல்லே!

''ஏம்மா.........புள்ளே எங்கே?'' என்கிருர் ஏட்டய்யா....

கற்பகம் பதறுகிருள்.

''அதைத்தான் நானும் கேக்கறேன்....எங்கேய்யா புள்ளே?''

காவல் நிலேயத்தில் களவு போன குழந்தை எங்கே போயிருக்கும்? யார் எடுத்துப் போயிருப்பார்கள்?

(வளரும்)

# தமிழியல் ஆராய்ச்சி நிலையம்

“தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்’’

என்ருர் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார். ‘தமிழோசை’ என்று அவர் குறிப்பிட்டது தமிழ் மொழியின் வெறும் ஒலி வடிவை மட்டுமல்ல—தமிழ் இலக்கியம், தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் யாவற்றையும் உள்ளடக்கிய ‘தமிழோசை’ யையும் இணைத்தே கூறியதாகக் கொள்வதுதான் மிகப் பொருத்தமானது. இவ்வகையில் பெரிதும் அக்கறையும் ஆர்வமும்கொண்டு, ஒல்லும் வகையெல்லாம் செயல்பட்டு வருகிற நமது தமிழ்நாடு அரசின் உறுதுணையோடும், ஆதரவோடும் அண்மையில் *(18-1-73)* சென்னை மாநிலக் கல்லூரியில் ‘உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலையம்’ துவக்கப்பட்டது போற்றத்தக்க செய்தியாகும்.

நோக்கங்கள்

பொதுவாக, பழந்தமிழ் இலக்கியங்களையும், பழந்தமிழ் நாகரிகத்தையும் மறுமலர்ச்சி பெறச் செய்தல்.

தற்கால இலக்கியங்களின் வரிசையில் வெளிவந்துள்ள மறுமலர்ச்சி இலக்கியங்களை ஆய்தல்.

சமுதாய விழிப்பு, தமிழ் மொழிப் பாதுகாப்பு இயக்கம் போன்ற விட்டுப்போன துறைகளில் ஆய்வு நடத்தல்.

மொழியியலில் (Dialectologies) கிளை மொழிகளை முதன்மையாக எடுத்து, அவற்றை அறிவியல் அடிப்படையில் ஆய்தல்.

தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத பிற மொழியாளர்களுக்குக் கடிதப் போக்குவரத்து மூலமும், நேரடியாகவும் தமிழ் மொழியைக் கற்பித்தல் (இதில் வெளிநாட்டினரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்).

என்கிற பல்வேறு நோக்கங்களையும் உள்ளடக்கியே, தமிழக அரசின் பேராதரவோடு இந்த உயர் தமிழியல் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டுள்ளது.

பள்ளியிறுதி வகுப்புப்(S.S.L.C.) படித்து முடித்தவர்களுக்கு இங்கு மூன்று மாதப் படிப்புச் சான்றிதழ் வகுப்பு ஒன்றும் நடத்தப்பட இருக்கிறது. இதில் தமிழரல்லாத பிற மொழியினர்க்குத் தமிழில் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுக்கப் படும்.

அடுத்து, இளங்கலை (B.A.) முதுகலை (M.A.) படித்த தமிழரல்லாத மற்றவர்களுக்கு ஓராண்டுக் காலத்திற்கு ‘டிப்ளமா கோர்ஸ்’ நடத்தப்படும். இதில் அவர்களுக்குத் தமிழ் இலக்கியப் பயிற்சியும், தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதும் பயிற்சியும் அளிக்கப்படும்.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சித் திறனாய்வு முறைப்படி, பல்வேறு பல்கலைக் கழகத் தமிழறிஞர்களை அழைத்து ஆய்வுரைகளை நிகழ்த்தவும், அவற்றையெல்லாம் தொகுத்து எழுத்து வடிவில் தரவும் இதற்கெனத் ‘தமிழியல்’ என்னும் பெயரில் ஆராய்ச்சி இதழ் ஒன்று வெளியிடவும், இதுகாறும் வெளி வராமல் இருக்கிற சுவடிகள்—கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்துத் தகுதியுடையவைகளை வெளியிட வகை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர்களைக் கொண்ட குழுக்கள் அமைத்துக் ‘குழு ஆராய்ச்சி’ (Institutional Research) நடத்தவும், வகை செய்யப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து ஆராய்ச்சி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுவர்; பிஎச்.டி., எம்.லிட். முதலிய ஆய்வுப் படிப்பை இவர்கள் முடிக்கும் வரை (மூன்றாண்டுகள்) இவர்களுக்குத் தமிழக அரசு அனுமதித்துள்ள உதவித் தொகை வழங்கப்படும். இங்கு, பிஎச்.டி., ஆய்வுக்குச் சேர விரும்புவோர் 40 வயதுக்கு மிகாதவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் தமிழ் முதுகலைத் தேர்வில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவர்களில், ஆய்வுத் துறையில் முன் அனுபவம் உடையோருக்கு முதன்மை தரப்படும்.

ஆராய்ச்சி நிலையத்திற்கெனத் தனி நூலகம் ஒன்று, மாநிலக் கல்லூரியில் நிறுவப்பட இருக்கிறது. இந்த நூல் நிலையத்தை நிறுவத் தமிழக அரசு முதல் ஆண்டுக்கு ரூ. 5 ஆயிரம் அனுமதித்துள்ளது. தொடர்ந்து ஆண்டு தோறும் ஆயிரம் ரூபாய்க்கு, ஆராய்ச்சிக்குதவும் நூல்கள் வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திராவிட மொழியியலுக்குத் திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு நிலையமும், மொழியியலுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு நிலையமும் ஏற்கெனவே உள்ளன. இவை இரண்டும் பல்கலைக் கழகத் துணைக் குழுவின் ஆதரவில் இயங்குபவை. ஆனல், தமிழியல் ஆராய்ச்சிக்கென இப்போதுதான் தென்னகத்தில் முதன்முதலாக ஓர் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மேலும், அரசின் ஆதரவில் தொடங்கப்பட்டுள்ள முதல் ஆராய்ச்சி நிலையம் இதுதான். இந்த நிலையத்தைமதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனர் தலைமையில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தொடங்கி வைத்தார். நிலையத்தின் நோக்கத்தையும், செயல் முறைத் திட்டங்களையும் நிலைய இயக்குநர் டாக்டர் மெ. சுந்தரம் விளக்கினர். டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, இந்த ஆராய்ச்சி நிலையம் எப்படிச் செயல்பட வேண்டும்? எத்தகைய நெறி முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று விளக்கும் வகையில் ‘ஆராய்ச்சி ஆற்றுப்படை’யுரை (Key Note Address) நிகழ்த்தினர்.

திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத் துணைவேந்தர், திரு பி. ஜெகநாத ரெட்டி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு ஆதிநாராயண, தமிழ்ப் பேராசிரியர்கள் டாக்டர் வ. சுப. மாணிக்கனர், டாக்டர் என். சுப்பு ரெட்டியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடக்கத்தில் மாநிலக் கல்லூரி முதல்வர் திரு ஜே. இராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்ருர். மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் திரு மா. நன்னன் நன்றிகூற விழா நிறைவெய்தியது.

—சாமிபழ.

## GOVERNMENT OF TAMIL NADU PUBLICATIONS

The following publications are available for sale at Government Publications Depot, 166, Annasalai, Madras-2.

| *Serial number and Name of the Publications.* | *Price.* RS. | P. |
|---|---|---|
| 1 Biennial Civil Medical List of Gazetted Officers of Tamil Nadu. Corrected up to 1st January 1968. | 8 | 75 |
| 2 தாய்மையும் குழந்தை நலமும் .. | 1 | 65 |
| 3 Revised Syllabuses on Commercial Subjects Lower and Higher Grade Examinations. | 0 | 65 |
| 4 Reply to Memoranda presented to the President of India. | 3 | 00 |
| 5 இந்தியக் குடியரசுத் தலைவரிடம் அளிக்கப் பட்ட மகஜர்களுக்கு பதில். | 3 | 00 |
| 6 State Rules to Regulate the grant of Advances to Government Servants for Buildings, etc., Houses. | 0 | 40 |
| 7 அண்ணா மலர்—பிப்ரவரி 69. .. | 1 | 00 |
| 8 ANNA MALAR February 1969 (English) | 1 | 00 |
| 9 கிராமங்களின் அகரவரிசைப் பட்டி .. | 11 | 10 |
| 10 Portrait of Present Chief Minister .. | 1 | 00 |
| 11 List of Recognised High and other Special Schools. Corrected up to 31st March 1970. | 5 | 30 |
| 12 Law Lexicon A to Z .. .. .. | 9 | 00 |
| 13 Quarterly List of Gazetted Officers corrected up to 1st April 1970. | 2 | 00 |
| 14 Tamil Nadu An Economic Appraisal Part I and II, 1972. | 15 | 00 |
| 15 Tamil Nadu Co-operative Manual .. | 17 | 50 |
| 16 Tamil Nadu Loans (Takkavi) Manual .. | 9 | 10 |
| 17 Tamil Nadu Market Committee's Accounts Manual —Volume I. | 25 | 90 |
| 18 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம், 1952. | 2 | 90 |
| 19 Hand Book of Economic Entomology for South India. | 13 | 75 |
| 20 Classified Catalogue of Tamil Printed Books with Introductory Notices—Complied by John Murdoch. | 11 | 50 |
| 21 Silver Jubilee Commemoratoin Seminar Papers—Tamil Nadu Statistics. | 9 | 70 |
| 22 A Handbook of Some South Indian Weeds. | 7 | 00 |
| 23 Noi Illa Neri—Siddha Text Boox Series (Tamil). | 6 | 62 |
| 24 Glossary of Administrative Terms (English —Tamil). | 5 | 10 |
| 25 Season and Crop Report of Tamil Nadu (1968–69). | 3 | 35 |
| 26 Statistical Hand Book of Tamil Nadu, 1970. | 2 | 00 |
| 27 Hygiene and Preventive Medicine—Tamil | 0 | 87 |
| 28 Midwifery for Village Vaidya—Tamil .. | 0 | 87 |
| 29 Centre—State Relations Inquiry Committee by P. V. Rajamannar—English. | 5 | 00 |
| 30 மைய மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கை —தமிழ். | 5 | 00 |
| 31 Teachers Service Register for Aided Secondary Schools. | 1 | 90 |
| 32 Grant-in-Aid Code .. .. .. | 1 | 45 |
| 33 Irrigation Manual—by Ellis .. .. | 5 | 60 |

### REDUCED PRICE PUBLICATIONS

| | RS. | P. |
|---|---|---|
| 1 A Monograph on Madras Bananas .. | 2 | 46 |
| 2 A Monograph on South Indian Mangoes. | 1 | 96 |
| 3 Techno-Economic Survey of Madras .. | 2 | 50 |
| 4 Food and Agricultural in Madras State.. | 0 | 50 |
| 5 Practical Botany .. .. .. .. | 0 | 50 |

Bonafide Booksellers of standing may apply for Agency for selling Government Books in Municipal Towns. 25 per cent Discount is allowed for agents. Packing and Postage extra.

*Director of Stationery and Printing, Madras.*

# அகதிகள் மறு வாழ்வுக்கு ஆற்றிடும் பணிகள்

உழைத்துப் பிழைப்பவர் இந்தியர்! அவர்களில் குறிப்பாகத் தமிழர்கள் பிறர் உடல் உழைப்பில், பிறர் பொருளில் உண்டு வாழ விரும்பாதவர்கள் என்பது உலகறிந்த உண்மை! உழைக்காமல் உண்டு வாழ்வதை இழுக்காக நினைப்பவர் தமிழர்! 'உழைத்துப் பிழைப்பதே உயர்வுக்கு வழி!' என்பதைப் பழந்தமிழ் நூல்கள் அவர்களுக்குப் பறை சாற்றிக் கொண்டிருந்தன! அதையொட்டியே ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு!'' என்ற பழமொழி ஏற்பட்டது!

ஆனால் அந்தோ! அந்த நிலை மாறியது! அடுக்கடுக்காக அந்நியர் ஆட்சி என்னும் தொல்லைகளால் அல்லல்பட்ட தமிழர்கள், ஆங்கிலேயர் ஆட்சியில் பிழைக்க வழி தேடிக் கள்ளத் தோணி ஏறியும், கட்டு மரம் கட்டிக் கொண்டும் கடல் கடந்து கடாரத்திற்கும், இலங்கைக்கும் சென்றனர். அங்கே, தங்கள் நெற்றி வியர்வையை நிலத்திலே பாய்ச்சி, எலும்பை வளைத்துக் குருதியைக் கொட்டிக் காட்டைத் திருத்திப் பொன் விளையும் பூமியாக்கித் தாமும் பிழைத்ததுடன், தமக்குப் புகலிடம் அளித்த நாட்டையும் செழிப்பாக்கி வளம் கொழிக்கச் செய்தனர். உழைப்பிற்குக் கிடைத்த கூலியைக் கொண்டு தங்கள் வயிற்றை ஓரளவுக்கு நிரப்பிக் கொண்டு வாழ்ந்ததுடன், கூலியில் ஒரு பகுதியை மீதப்படுத்தி, அதில் ஒரு பகுதியைத் தம்மை நம்பித் தமிழகத்திலே காத்திருக்கும் தமது குடும்பத்தினருக்கும் அனுப்பி வைத்தார்கள். நாளடைவில் புகுந்த இடம்—பிழைக்க இடம் தந்த நாடு—என்பதை மறந்து, தாம் பிறந்த நாடாகவே கடாரத்தையும், இலங்கையையும் கருதித் தங்கள் குடும்பத்தையும் அழைத்துச் சென்று, அவர்களையும் உழைக்கச் செய்து அந்த நாடுகளின் வளர்ச்சிக்கு உதவினார்கள் அவர்கள் குடும்பமும் செழித்தது! அந்த நாடுகளும் செழித்தன!

பர்மா நாட்டுப் பொருளாதார அமைப்புகளின் பல்வேறு பிரிவுகள் நாட்டுடைமையாக்கப்பட்டதனாலும், இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவும், பர்மாவிலும் இலங்கையிலும் நெடுங்காலமாக வாழ்ந்து வந்த இலட்சக் கணக்கான இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்குத் திரும்ப வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளானார்கள்.

தன் நிதி நிலைக்கு ஏற்பத் தன்னால் முடிந்த அளவில் உடனுக்குடன் அகதிகள் மறு வாழ்விற்கான பணிகளைச் செய்து, அகதிகளின் தாயாக விளங்கி வருகிறது, தமிழ்நாடு அரசு! அகதிகள் மறு வாழ்விற்காக ஆற்றிடும் பணிகளில் ஒரு சிலவற்றை ஈண்டு விளக்கியுள்ளோம்!

பர்மாவிலிருந்து மட்டும் முன்பே 1,20,612 பேர்கள் அகதிகளாகத் திரும்பியுள்ளார்கள். இன்னும் பலர் அங்கிருந்து அகதிகளாகத் திரும்பியுள்ளார்கள்! இன்னும் பலர் அங்கிருந்து அகதிகளாகத் திரும்பி வரவிருக்கிறார்கள்! ஆக மொத்தம் பர்மாவிலிருந்து மட்டும் ஏறத்தாழ 2,00,000 அகதிகள் இந்தியா திரும்புவார்கள் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 15 ஆண்டுகளில் ஏறத்தாழ 5,25,000 இந்திய மக்கள், இந்தியாவிற்கு அகதிகளாகத் திரும்புவார்கள். இவர்களில் ஏறத்தாழ 2 இலட்சம் பேர்கள், 1971-ஆம் ஆண்டு முதல் 2 ஆண்டுக் காலத்திற்குள்

கும்முடிப்பூண்டியில் தமிழக அரசின் உதவியுடன் பர்மா அகதிகள் நடத்தும் ஐஸ் (பனிக்கட்டி) தயாரிப்பு நிலையம்



இந்தியாவிற்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வரை இலங்கையிலிருந்து 65,859 அகதிகள் திரும்பியுள்ளனர்.

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வரும் அகதிகளின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க 'வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம் (Employment Liaison Office) சென்னையில் அமைக்கப்பட்டது. இந்த,வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம்' தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும், உதவி இயக்குநர் ஒருவரின் பொறுப்பின் கீழும் 22—8—1966 முதல் செயலாற்றி வருகிறது. இவ்வலுவலகத்தின் முக்கியப் பணி தமிழ்நாட்டிற்குத் திரும்பி வரும் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்து மறுவாழ்வு அளிக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதேயாகும். மாநிலத்தில் உள்ள முக்கிய வேலை கொடுக்கும் நிறுவனத்தினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு,வேலை பார்க்க ஆளின்றி, காலியாக உள்ள பொறுப்புக்களுக்கு அகதிகளை அமர்த்துமாறு வேண்டுவதுடன், வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்தி ஒருங்கிணைத்து, விரைவாகத் தகுந்த வேலைகளில் அகதிகளை அமர்த்துவதும் 'வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகம்' ஆற்றும் பணிகளாகும்.

பர்மா அகதிகளில் 18,490 பேர்களும், இலங்கை அகதிகளில் 5,604 பேர்களும் வேலை வேண்டி, வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் உதவியை நாடினர். அவர்களில்—1966-ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 1972-வரையான காலத்தில்—1,823 பர்மா அகதிகளும்,496 இலங்கை அகதிகளும் வேலை வாய்ப்புப் பெற்றனர். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு ஏடுகளில் கண்டுள்ளபடி 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறுதியில், 1,826 பர்மா அகதிகளும், 3,192 இலங்கை அகதிகளும் வேலை பெறுமல் இருந்துள்ளனர். மைய, மாநில அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளை வரவேற்றுத் தற்காலிக உதவிகளைச் செய்வதற்காக, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கக்கூடிய 2 உதவி வேலைவாய்ப்பு அலுவலகங்களை (Sub Employment Office) மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது. மண்டபத்தில் உள்ள உதவி வேலை வாய்ப்பு அலுவலகம், இராமேச்வரம் துறைமுகத்தில் வந்திறங்கும் இலங்கை அகதிகளை வரவேற்பதற்காக 5—1—1971 முதல் செயலாற்றி வருகிறது. இதுவரை 1,607 அகதிகள் இவ்வலுவலகத்தின் உதவியை நாடியுள்ளனர்.

அகதிகளுக்கு வெகு விரைவில் மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக, பல்வேறு துறைகளில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதிகளைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சி பெறுபவரின் இடங்களில் 5 சத அளவை அகதிகளுக்காகத் தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது. பயிற்சிக் காலத்தில், விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் அகதிகளுக்குத் திங்களுக்கு ரூபாய் 55 வீதமும், விடுதியில் தங்காமல் பெற்ரேருடன் தங்கியிருந்து கொண்டு பயிற்சி பெறும் அகதிகளுக்குத் திங்கள் தோறும் ரூபாய் 15 வீதமும் உதவித் தொகை ( Stipend ) வழங்கப்படுகிறது. 1966 முதல் 1972 வரையான ஆண்டுகளில் இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து வந்த 308 அகதிகள் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

இலங்கை, பர்மா அகதிகளுக்கும், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கும் ( Migrants ), பல்வேறு தொழிலில் பயிற்சி அளிப்பதற்கெனத் தனியே ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை, மத்திய மாநிலத்தில் உள்ள 'மாஞ' என்ற இடத்தில் இந்திய அரசு நடத்தி வருகிறது. இதன் மூலம் அகதிகள் வேலை பெறுவதற்கான வாய்ப்புகள் பெருகுவதுடன், அவர்களே சொந்தமாகவே தொழில் நிலையங்களை (Self Employment) ஏற்படுத்திக் கொள்ளவும் வழி பிறக்கின்றது. இப்பயிற்சி நிலயத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்து அகதிகள் 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்நிலையத்தில், இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 359 அகதிகள்

கும்முடிப்பூண்டி அருகில் உள்ள முண்டியம்மன் நகர் தையல் பயிற்சிக் கூடத்தில் அகதிப் பெண்கள் பயிற்சி பெறுகிறுர்கள்





பயிற்சி பெற்றுள்ளனர். தற்பொழுது 180 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மண்ணை நகர்த்தும் பெரும் இயந்திரங்களை (Heavy Earth Moving Equipments) இயக்குவதில் அகதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மைய நீர், விசை ஆய்வுக்குழு (Central Water and Power Commission) இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 'கோட்டா' (Kota) என்ற இடத்திலும், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 'நங்கல்' என்ற இடத்திலும் தொழிற் பயிற்சி நிலையங்களை நடத்தி வருகிறது. இதுவரை 'நங்கல்' பயிற்சி நிலையத்தில் 12 அகதிகளும், 'கோட்டா' பயிற்சி நிலையத்தில் 17 அகதிகளும் ஓராண்டுப் பயிற்சி பெற்றுள்ளனர். இப் பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு, அந்த அகதிகளுக்கு நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலையில் மூன்று மாத 'முன் பயிற்சி' அளிக்கப்பட்டது. தற்பொழுது 'கோட்டா' தொழிற் பயிற்சிக் கூடத்தில் 10 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மத்திய மாநிலத்தில் உள்ள புத்னி (Budni) என்ற இடத்திலும், 'கிசார்' என்ற இடத்திலும் உள்ள டிராக்டர் பயிற்சி மற்றும் சோதனைக் கூடங்களில் (Tractor Training and Testing Station) பண்ணை இயந்திரங்களைப் பயன்படுத்துதல், டிராக்டர் பழுது பார்த்தல் ஆகிய பயிற்சி 3 திங்கள் காலத்திற்கு அளிக்கப்படுகிறது. இப் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு பயிற்சிக் காலத்திலும் 5 இடங்கள் தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கென ஒதுக்கப்படுகின்றன. இவ்விரு பயிற்சி நிலையங்களிலும் 1970–71-ஆம் ஆண்டில் 10 அகதிகள் பயிற்சி பெற்றுள்ளனர். தற்சமயம் 4 அகதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.





அகதிப் பயிற்சியாளர்கள் திருச்செந்தூர்கூட்டுறவு நூற்பாலையில் வேலை செய்கின்றனர்

தமிழக அரசின் உதவியுடன் பர்மா அகதிகள் பாடியநல்லூரில் நடத்தும் நேதாஜி மர அறுவைத் தொழிற்கூடம்



கஸ்தினுபூர் என்ற இடத்தில் உள்ள 'மதன் தொழிற்சாலை நூற்பு ஆலை', இலங்கை, பர்மா அகதிகளுக்குப் பல்வேறு வேலை வாய்ப்புகளை அளிக்க முன் வந்துள்ளது. இதுவரை தமிழ்நாட்டிலிருந்து 166 அகதிகள் மதன் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கறிம் நகர் (நாசரேத்), திருவில்லிபுத்தூர், நெல்லூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகளும்—நூற்பதிலும் நெய்வதிலும் அனுபவம் உள்ள அகதிகளுக்கு—வேலை வாய்ப்புஅளிக்க முன்வந்துள்ளன. 1970-ஆம் ஆண்டில் 60 அகதிகள் 'ராம கூடம்' என்ற இடத்தில் உள்ள 'அன்தர்கோன்' நூற்பு ஆலைகளுக்கு — தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் 3 திங்கள் முன் பயிற்சி அளித்த பிறகு—அனுப்பப்பட்டனர்.

'நாசரேத்' என்னும் இடத்தில் உள்ள திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும் இந்திய அரசுக்கும் அண்மையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 50 அகதிகளைத் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் வேலைக்கு அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நூற்பாலைக்கு அகதிகளை அனுப்ப ஆவன செய்யப்பட்டு வருகிறது. அண்மையில் கொதிகலன்களைப் பார்வையிடும் பயிற்சி, சமையற்கலை தொழில் நுட்பக் கல்லூரியில் சமையற்கலைப் பயிற்சி, உணவுப்பொருள்களைப் பதப்படுத்திப் பாதுகாத்து வைத்திருத்தல் பற்றிய பயிற்சி, சென்னை 18-ல் உள்ள சிமெண்ட் பணிக் கழகத்தில் 'கான்கிரீட்' தொழில் நுட்பம் பற்றிய குறுகிய காலப் பயிற்சி போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 50 அகதிகளுக்குப் பயிற்சி அளிக்க இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் அனுமதி அளித்துள்ளன.

இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து அகதிகளாகத்திரும்பி வந்துள்ளவர்களுக்கு இத்தகைய பயிற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் நோக்கம், தொழில் திறமை தேவையற்ற வேலைகளுக்கு (Unskilled Jobs) மட்டுமே தகுதியுள்ள அகதிகளைத் தொழில் நுட்பப் பயிற்சிபெற்ற தொழிற் கலைஞர்களாக (Craftsmen) மாற்றி அமைப்பதே யாகும்.

அகதிகள் மறுவாழ்வுப் பிரச்சினை 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆக' வளர்ந்து வருகிறது! மறுவாழ்வு அளிப்பதை விரைவாகவும், செம்மையாகவும் செய்ய வேண்டியுள்ளது. எனவே, நமது உடன் பிறப்புகளான அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் ஆர்வம் கொண்டோர் அனைவரும், மனிதாபிமானத்தோடு அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

# எண்ணிலடங்கா வண்ண வண்ணப் பாம்புகள்

கொடிய நஞ்சுடைய பாம்புகளைப் பலர் பார்த்திருக்கலாம் அல்லது அவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் எவ்வகையிலும், எவருக்கும் தீங்கிழைக்காத வண்ணப் பாம்புகளைப் பலர் பார்த்திருக்க முடியாது அல்லது அவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க முடியாது. பொதுவாக, பாம்புகள் யாரும் நடமாட்டமில்லாத இடங்களில் உள்ள கற்கள் அல்லது மரக் கட்டைகளின் கீழே மறைந்து வாழ்கின்றன என்று நம்பப் படுகிறது.

ஒரு பெரிய கல்லை நகர்த்தினாலோ அல்லது புரட்டினாலோ உயிருக்குத் தீங்கிழைக்க வல்ல நாகப்பாம்பு படம் எடுத்துக்கொண்டு எழும் அல்லது விரியன் பாம்பு ''உஷ்'' என்று சீறி எழும் என்பதைப்பலர் அறிய மாட்டார்கள். நம்மில் சிலருக்கு மட்டுமே, தமிழ்நாடு, கேரளா, மைசூர் ஆகிய மாநில மலைகளில் உள்ள கற்களின் கீழும், மரங்களடர்ந்த காடுகளிலும் யாருக்கும் தீங்கிழைக்காத வண்ணப் பாம்புகள் வாழ்கின்றன என்பது தெரியும்.

இவ்வண்ணப் பாம்புகள் சொரசொரப்பான வால் உடையவை ( Rough Tails ) என்று கூறப்படுகிறது. ஏனெனில், இவைகளின் வால் முள்போன்ற கவசத்துடன் முடிவடைந்து தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. புழுப் போன்ற இப் பாம்புகள் எப்பொழுதும் சிறியவையாகவே காணப்படுகின்றன. இப்பாம்புகள் வெளிச்சத்திற்கு வருவதற்கு விரும்பாமல், முனை கூராகவும், அடி பருமனாகவும் உள்ள மூக்கினால் மண்ணில் வளை தோண்டிக்கொண்டு மறைந்து வாழ்கின்றன. இவ்வகைப் பாம்புகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரங்களில் எண்ணற்று வாழ்கின்றன.

இவ்வகைப் பாம்புகளைக் காண விரும்பினால், மலை அடிவாரத்தில் ஈரக் கசிவாய் உள்ள பகுதியில் உள்ள ஒரு கல்லைப் புரட்டினால் போதும் அங்கே அமைதியாகவும், தீங்கிழைக்க முயலாமலும் உள்ள வண்ணப் பாம்புகளைப் காணலாம்! தொட்டுத் தூக்கினாலும் அல்லது அவைகளைத் துன்புறுத்தினாலும் கூட, அப்பாம்புகள் கடிக்க முயல்வதில்லை! அவைகளைக் கையினால் எடுத்தால், நம்முடைய விரல்களைச் சுற்றிக் கொள்கின்றன! அதே நிலையில், நெடுந்தூரத்திற்கு எடுத்துச் செல்வதை அப்பாம்புகள் விரும்புகின்றன!



வளை தோண்டி வாழும் இவ்வகைப் பாம்புகள் மிகவும் பளப்பளப்பான வண்ணங்களில் உள்ளன. இவ்வண்ண அமைப்பு, மறைந்து வாழும் அப்பாம்புகளில் வாழ்க்கைக்குத் தேவையில்லாத ஓர் அமைப்பாகும். அவைகள் பொதுவாகச் சிவப்பு, ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறங்களில் காணப்படுகின்றன; சில கருப்பான வடிவங்களினால், வானவில் போன்ற வண்ணங்காட்டுகின்றன.

அவ்வண்ணப் பாம்புகள் பூச்சிகள், புழுக்கள், 'லார்வா' எனப்படும் புழுக்கள் ஆகியவைகளை உண்டு வாழ்கின்றன. அப்பாம்புகள் ஒரே நேரத்தில் 3 முதல் 8 வரையான குட்டிகளை உற்பத்தி செய்கின்றன.

கடல் மட்டத்தை விட மிகவும் உயரமான இடங்களில் மரக் கட்டை அல்லது கற்களின் கீழே மறைந்து வாழ்வதால் இவ்வகைப் பாம்புகள் அரும் பிறவிகளாகக் கருதப்படுகின்றன. பெரும் மழையின் போது இப்பாம்புகள் மலைத் தோட்டங்களுக்கு வந்துவிடுகின்றன; மலைச் சாலைகளிலும் காணப்படுகின்றன.

இத்தகைய வண்ணப் பாம்புகள் தென் இந்தியாவிலும், இலங்கையிலும் மட்டுமே காணப்படுவதால், இவைகளை நமது விலைமதிப்புள்ள செல்வமாகக் கருதலாம்! விரைவில் இவை வெளிநாட்டினரின் கவனத்தைக் கவர்ந்து, அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தரக் கூடும்!

தகவல்: **4. எஸ். என். மூர்த்தி**

கட்டுரையாக்கம்: **ஆர். எம்.**



# பெரும் மகசூலுக்கு இறைவைச் சோளம்!

வறட்சியினாலும், வெள்ளத்தினாலும் இந்த ஆண்டில் தமிழ் நாட்டின் உணவு தானிய உற்பத்தி குறைந்துவிடுமாதலின், அக்குறைவை ஈடுகட்ட, தமிழ் நாட்டில் 'கடும் விரைவுப் பின் பருவத்திட்டம்' ( Emergency Rabi Programme ) செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், தை, மாசி திங்கள்களில் 2,14,250 ஏக்கரில் இறைவைச் சோளம் பயிரிடத் தமிழ்நாடு வேளாண்மைத்துறை விரைந்து பணியாற்றி வருகிறது.

கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய 6 மாவட்டங்களிலும் கீழ்க் கண்டுள்ளவாறு இறைவைச் சோளம் பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம்

| | ஏக்கர். |
|---|---|
| கோ. 18 சோளம் | 67,300 |
| சி. எஸ். எச். 1 சோளம். | 200 |
| மொத்தம் | 67,500 |

சேலம் மாவட்டம்

| | |
|---|---|
| கோ. 18. சோளம் | 20,380 |
| சி. எஸ். எச். 1 சோளம். | 870 |
| மொத்தம் | 21,250 |

தருமபுரி மாவட்டம்

| | |
|---|---|
| கோ. 18 சோளம் | 3,550 |
| சி. எஸ். எச். 3 சோளம். | 450 |
| மொத்தம் | 4,000 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | ஏக்கர். |
|---|---|
| கோ. 18. சோளம் | 16,500 |
| கோ. 4. சோளம் | 10,500 |
| 'சொர்ணா' சோளம் | 5,500 |
| மொத்தம் | 32,500 |

மதுரை மாவட்டம்

| | |
|---|---|
| கே. 4. சோளம் | 17,500 |
| கோ. 12. சோளம் | 17,500 |
| சி. எஸ். எச். 1 சோளம் | 6,874 |
| சி. எஸ்.எச். 3 சோளம் | 2,500 |
| 'சொர்ணா' சோளம் | 5,626 |
| மொத்தம் | 50,000 |

திருநெல்வேலி மாவட்டம்

| | |
|---|---|
| கே. 4. சோளம் | 33,825 |
| சி. எஸ்.எச். 1 சோளம் | 4,450 |
| சி. எஸ்.எச். 3. சோளம் | 725 |
| மொத்தம் | 39,000 |

ரகங்களின் வாரியாகப் பார்க்கப் போனால், மேற்கூறிய 6 மாவட்டங்களிலும் பின் கண்டவாறு பயிர்செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| ரகம். | ஏக்கர். |
|---|---|
| கோ. 18 சோளம் | 1,07,730 |
| கே. 4. சோளம் | 51,325 |
| கோ. 12. சோளம் | 17,500 |
| சி.எஸ்.எச். 1 சோளம் | 11,324 |
| சொர்ணா சோளம் | 11,126 |
| கோ. 4. சோளம் | 10,500 |
| சி.எஸ். எச். 3. சோளம் | 4,745 |
| மொத்தம் | 2,14,250 |

மேற்கண்டுள்ள பரப்பளவில் சோள ரகங்களை இறைவையாகப் பயிரிடவிருக்கும் உழவர் பெருமக்களுக்குத் தேவையான விதைகளையும், இரசாயன உரங்களையும், பூச்சிப் பூஞ்சாள மருந்துகளையும், கடன் உதவிகளையும் வழங்க வேளாண்மைத் துறை, கூட்டுறவுத்துறை, மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் ஆவன செய்து வருகின்றன.

அரசு அளிக்கும் உதவிகளைப் பயன்படுத்தி, உழவர் பெருமக்கள் பெரும் மகசூல் பெற்று அதிக இலாபம் அடைந்து வளமாகவாழவேண்டுமென்பதற்காக, உழவர் பெருமக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட தமிழரசு இதழ் கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளை வழங்கியுள்ளது.

சாகுபடிக் குறிப்புகள்

பருவம்:—இறைவைச் சோளம் பயிரிடத் தை முதல் வைகாசித் திங்கள் வரையான (சனவரி முதல் மே வரை) பருவம் மிகவும் ஏற்றது.

ரகங்கள் : — இறைவையாகப் பயிரிட சி.எஸ்.எச். 3, சொர்ணா, கோ. 18, கோ. 12, கோ. 4, கே. 4 ஆகிய ரகங்கள் ஏற்றவை. ஆனால், அவைகளின் வயதும், மகசூல் அளிக்கும் திறனும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டுள்ளன. எனவே, வயதிற்கேற்பவும், மகசூல் அளிக்கும் திறனுக்கு ஏற்பவும், மேலே மாவட்ட வாரியாகப்

# ஓடுகிற ஆறு எப்போதும் ஓடிக்கொண்டே இருக்குமா?



ஓடும் நதியின் திசை திரும்பலாம். வெள்ளப் பெருக்கால் கரை உடையலாம். தண்ணீரே வற்றிப் போனாலும் போகலாம். வாழ்க்கையும் அப்படித்தான். ஆற்றில் அணைகள் கட்டுவதைப் போல, வாழ்வில் ஏற்படக்கூடிய திருப்பங்களைச் சமாளிக்க, உங்கள் குடும்பத்திற்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க ஒரு முழு ஆயுள் என்டோமென்ட் பாலிசி (Whole Life Endowment Policy) எடுங்கள். மிகச்சிறிய பிரீமியங்கள் கட்டி மிகப்பெரிய காப்புத் தொகையை அடைவதற்கு இப்பாலிசிதான் சிறந்தது. மூன்றுவித முழு ஆயுள் அஷ்யூரன்ஸ் பாலிசிகள் உள்ளன. விவரங்கள் அறிய அருகிலுள்ள ஆயுள் இன்சூரன்சு அலுவலகம் அல்லது ஆயுள் இன்சூரன்சு முகவரிடம் விசாரியுங்கள்.

**ஆயுள் இன்சூரன்சு போல**
**ஆதரவு தருவது எதுவுமே இல்லை**

EP.LIC.28 72

பரிந்துரைக்கப் பட்டுள்ளதற்கு ஏற்பவும் உங்களுக்கு ஏற்ற ரகத்தைக் கீழ்க்கண்டவைகளிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

| | வயது |
|---|---|
| ரகம். | நாட்கள். |
| சி.எஸ்.எச். 1 | 90 |
| சி.எஸ்.எச். 3 | 105 முதல் 115. |
| சொர்ணு | 90 முதல் 95. |
| கோ. 18 (ரசகேசரி) | 95 முதல் 100. |
| கோ. 12 (மொட்டை வெள்ளை). | 85 முதல் 90. |
| கோ. 4 (செஞ்சோளம்). | 85 முதல் 90. |
| கே. 4 (ரச வெள்ளை). | 85 |

மகசூல் அளிக்கும் திறன்

| ரகம். | 1 ஏக்கரில் விளையும் தானியம் (கிலோ). |
|---|---|
| சி.எஸ்.எச். 1 | 2,500 |
| சி.எஸ்.எச். 3 | 2,500 |
| சொர்ணு | 2,500 |
| கோ. 18 | 1,500 |
| கோ. 12 | 1,300 |
| கோ. 4 | 1,000 |
| கே. 4 | 2,000 |

விதை அளவு

ஒவ்வொரு ஏக்கரிலும் கீழே பரிந்துரைக்கப்பட்ட அளவில் விதைகளை விதைக்க வேண்டும்.

| | கிலோ. |
|---|---|
| சி.எஸ்.எச். 1 | 4 |
| சி.எஸ்.எச். 3 | 6 |
| சொர்ணு | 6 |
| கோ. 18 | 7 |
| கோ. 12 | 7 |
| கோ. 4 | 7 |
| கே. 4 | 4 |

வேளாண்மைத் துறையினரால் வழங்கப்படும் விதைகளை வாங்கிப் பயன்படுத்துவதே பெரும் மகசூலுக்கு வழிகோலும். குறிப்பாக சி.எஸ்.எச்.1, சி.எஸ்.எச். 3ஆகியவைகளைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு முறையும் சான்றிதழ் பெற்ற புது விதைகளையே விதைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். மற்ற ரகச் சோள விதைகள் உங்களிடம் இருப்பின் அவைகளை மருந்துகளுடன் கலந்த பிறகு விதைப்பதே சிறந்தது.

விதைகளை மருந்துடன் கலக்குதல்:—'அக்ரசான்', 'டீ.எம்.டீ.டி', 'கேப்டான்' போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் விதையுடன் கலக்க வேண்டும். மருந்து கலப்பதற்கு, விதை கலக்கும் கருவியை உபயோகிப்பது சிறந்தது.

நிலம் தயாரித்தல்:— இரும்புக் கலப்பையால் நிலத்தை 4 தடவை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 15 முதல் 20 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு போட்டு மேலும் ஒரு தடவை உழுதுவிட வேண்டும். பிறகு நிலத்தில் சி.எஸ். எச். 1., சி.எஸ். எச். 3, கே. 4 ரகங்களுக்கு 1½ அடி இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். மற்ற ரகங்களுக்கு 1 அடி இடைவெளியில் பார்கள் அமைப்பது போதுமானது.

அடி உரம் இடுதல்:—சி.எஸ். எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு, கே. 4 ஆகிய ரகங்களுக்கு அடியுரமாக ஏக்கருக்குப் பின் கண்டுள்ள அளவு சத்துக்களை அளிக்க வேண்டும்.

| | கிலோ. |
|---|---|
| தழைச்சத்து | 18 |
| மணிச் சத்து | 18 |
| சாம்பல் சத்து | 18 |

இந்த அளவு சத்துக் கிடைக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 112 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 125 கிலோ 14 : 14 : 14 காம்ப்ளெக்ஸ் அல்லது 120 கிலோ 15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் அல்லது 110 கிலோ 17 : 17:17 காம்ப்ளெக்ஸ் அல்லது 200 கிலோ 9 : 9 : 9 கலப்பு உரத்தை அடியுரமாக இடவேண்டும். அல்லது 38 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் உரத்தையும், 25 கிலோ யூரியாவையும், 30 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இடவேண்டும்.

கோ. 18, கோ. 12, கோ. 4 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்து கிடைக்க ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். அல்லது 10 : 10 : 0 கலப்பு உரத்தில் 140 கிலோவை அடியுரமாகப் போட வேண்டும்.

மேற்கூறிய உரங்களைப் பார்களின் ஒரு பக்கச் சரிவின் கீழ்ப் பாகத்தில் வரிசையாகப் போட்டு இலேசாக மண்ணால் மூடவேண்டும்.

விதைத்தல்:—சி.எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களை விதைப்பதற்கு முன்னால் பார் வரிசைகளுக்கு இடையே 1 மீட்டர் நீளத்திற்கு 1.5 கிராம் 'திமெட்' 10 சதம் அல்லது போரேட் 10 சத குருணைகளைத் தூவ வேண்டும். இவ்வாறு தூவ ஏக்கருக்கு 15 கிலோ தேவைப்படும். மற்ற ரகங்களுக்கு இவ்வாறு தூவுதல் அவசியமல்ல.

பிறகு பார்களின் சரிவில் உரமிட்ட வரிசைக்கு 3 அங்குலத்திற்கு மேல், 6 அங்குல இடை



வெளியில் இரண்டிரண்டு விதைகளாக 1 அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். விதைத்த உடன் பார்களின் இடையே தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்த 3-ஆம் நாள்:—முளை நீர் பாய்ச்சவும் பிறகு மண்ணின் தன்மைக் கேற்ப 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்த 7-ஆம் நாள்:—சி. எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களில் தண்டு ஈ தாக்குவதைத் தடுக்க ஏக்கருக்கு 150 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' மருந்தையும், 100 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' மருந்தையும், 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்கவும். மற்ற ரகங்களுக்கு இது தேவை இல்லை.

விதைத்த 15-ஆம் நாள்:—எல்லா ரகங்களுக்கும் மேற்கூறியவாறு தெளிப்பது நல்லது.

விதைத்த 21-ஆம் நாள்.—களை எடுக்கவும். வரிசையில் 6 அங்குலத்திற்கு 1 பயிர் வீதம் விட்டுவிட்டு, மற்றப் பயிர்களை நீக்கிவிட வேண்டும். வீரியமாக வளர்ந்துள்ள பயிர்களை மட்டும் விட்டுவிட்டு, மற்றவைகளை அகற்றுதல் சிறந்தது.

சி.எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களில் குருத்துப் பூச்சிகளின் தாக்குதலைத் தடுக்க ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 'என்ட்ரின்' 2 சதக் குருணைகளைச் சோளப் பயிரின் குருத்துகளில் போடவேண்டும்.

விதைத்த 30-ஆம் நாள்:—சி. எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு, கே. 4 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து அளிக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா உரத்தை மேல் உரமாக இட வேண்டும்.

மற்ற ரகங்களுக்கு மேலுரமாக ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவைப் போட வேண்டும்.

மேல் உரம் இட பயிர் வரிசைகளுக்கு நடுவில், இரசாயன உரங்களைப் போட்டு மண்ணைக் கிளறி விட வேண்டும். மேல் உரமிட்ட உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

விதைத்த 36-ஆம் நாள்:—சி. எஸ்.எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு ரகங்களுக்கு மட்டும் 'என்ட்ரின்' 2 சதக் குருணைகளை ஏக்கருக்கு 4 கிலோ வீதம் பயிரின் குருத்துக்களில் இட வேண்டும். இதனுல் குருத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

விதைத்த 45-ஆம் நாள்:—எல்லா ரகங்களுக்கும் ஏக்கருக்கு ஒரு கிலோ நனையும் கந்தகத்தை 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால், உண்ணிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும்.

விதைத்த 55 முதல் 60 நாட்கள்:—இப்பருவத்தில் பூக்கள் தோன்றும். பூக்கள் தோன்றிய வுடன் 'கால்மிட்ஜ்' தாக்குதலைத் தடுக்க, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் கார்பரில் 10 சதத் தூளைத் தூவி விட வேண்டும். இவ்வாறு மருந்து தூவுவதால் கதிர்ப் புழுக்களும், வண்டுகளும் கட்டுப்படுத்தப்படும்.

விதைத்த 65 முதல் 70 நாட்கள்:—இப்பருவத்தில் கதிரில் பால் பிடித்து, மணிகள் உருவாகும். இச்சமயத்தில் கதிர் நாவாய்ப் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும், 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும் கலந்து தூவிவிட வேண்டும்.

அறுவடை:— விதைத்த 85 முதல் 90 நாட்களில் கே. 4, கோ. 4, கோ. 12, சி.எஸ்.எச். 1, ஆகிய ரகங்கள் அறுவடைக்கு வந்து விடும். சொர்ணு விதைத்த 90 முதல் 95 நாட்களில் அறுவடைக்கு வரும். சி.எஸ்.எச். 3 ரகம் விதைத்த 105 முதல் 115 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடும். நன்கு முற்றிய கதிர்களை அறுக்கவும்.

மறுதாம்புப் பயிர்:—சி.எஸ். எச். 1, சொர்ணு ஆகிய இரண்டு ரகங்களையும் மறுதாம்புப் பயிராகச் (கட்டைப் பயிர்) சாகுபடி செய்யலாம். சில தேசீய நிருபணப் பாத்திகளில், இவ்விரு ரகங்களும் முதல் பயிரைவிட மறுதாம்புப் பயிரில் அதிக மகசூல் கொடுத்துள்ளன. மேலும் மறுதாம்புப் பயிர் 75 முதல் 80 நாட்களிலேயே அறுவடைக்கு வந்துவிடுவதாலும், அடியுரம் இடாமல், 2 முறை மேலுரம் இட்டு நல்ல மகசூல் எடுக்க முடிவதாலும் சாகுபடிச் செலவு குறைகிறது. எனவே, இவ்விரு ரகங்களையும் பயிரிடும் உழவர் பெருமக்கள், சோளத் தட்டைகளைத் தரை மட்டத்திற்கு வெட்டிவிட்டு, உடன் தண்ணீர் பாய்ச்சி மறுதாம்புப் பயிர்கள் தோன்றச் செய்யலாம்.

சோளத் தட்டையை வெட்டிய 5-ஆம் நாள், நிலத்தை நன்ருகக் கொத்திவிட்டு, 8-ஆம் நாள் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டுத் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு மண் வகைக்கேற்ப 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினுல் போதுமானது. தட்டை வெட்டிய 15-ஆம் நாள் ஒவ்வொரு பயிர்க் குத்திலும் 3 வீரியமான பயிர்களை மட்டும் விட்டுவிட்டு மற்றவைகளைக் கிள்ளி எறிந்துவிட்டு, ஏக்கருக்கு 6 கிலோ 'என்ட்ரின்' 2 சதக் குருணைகளைப் பயிரின் குருத்தில் போடவும். 25-ஆம் நாள் மறுமுறை களை எடுக்கவும். 28-ஆம் நாள் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை, பயிர்க் குத்துகளைச் சுற்றிலும் போட்டுத் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு முதல் பயிருக்குக் கூறியது போல், பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் மேற் கொள்ளவும். இவ்வாறு செய்வதால் ஏக்கருக்கு 2,500 கிலோ மகசூல் குறைந்த செலவில் பெற முடியும்.

மூன்று போகம்:—சி.எஸ்.எச். 1, சொர்ணு ஆகிய ரகங்களை சனவரி 15 முதல் பயிர் செய்யத் துவங்கி இருந்தால், ஒரே ஆண்டில் பின்கண்டவாறு மூன்று போகம் சாகுபடி செய்யலாம்.

முதல் போகம்—ஜனவரி 15 முதல் ஏப்ரல் 15 வரை (தை முதல் பங்குனி வரை) —சோளம் முதல் பயிர்.

இரண்டாம் போகம்-ஏப்ரல் 15 முதல் சூலை 15 வரை (சித்திரை முதல் ஆனிவரை) —சோளம் மறுதாம்புப் பயிர்.

மூன்ரும் போகம்—ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 31 வரை (ஆவணி முதல் மார்கழி வரை) —ஐ.ஆர். 8 நெல்.

எனவே மேற்கூறிய சாகுபடிக் குறிப்புகளைப் பயன்படுத்தி இறைவைச் சோளம் பயிரிட்டு பெரும் மகசூல் பெறுமாறும், பெரும் இலாபம் அடையுமாறும் உழவர் பெருமக்களை கேட்டுக் கொள்கின்ரும்.

—ஆர். எம்.



# தங்கப் பதக்கம் தந்தது கரும்பு

தமிழ்நாடு அரசு, 'பயிர் மகசூல் போட்டி'த் திட்டத்தின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் உழவர் பெருமக்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள உயரிய சாகுபடி முறைகளை உழவர் பெருமக்கள் மேற்கொள்ளச் செய்து வருகிறது. தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை உணவு தானியப் பயிர்களுக்கும், கரும்புக்கும் மகசூல் போட்டியைத் தனித் தனியே நடத்தி வருகிறது.

1969-70—ஆம் ஆண்டில் நடைபெற்ற கரும்பு மகசூல் போட்டியில் மாநிலப் பரிசு பெற்ற திரு என். மதார்கான் சாயபு அவர்களுக்கும், மற்றும் 1969—70, 1970—71-ஆம் ஆண்டுகளில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப்பகுதியில் நடைபெற்ற கரும்பு மகசூல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், அன்று 20—12—1972 அன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள நந்திவரத்தில் நடைபெற்ற கடும்விரைவு பின்பருவத் திட்ட துவக்க விழாவின்போது மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு மன்னை ப. நாராயணசாமி அவர்கள் பரிசு வழங்கினார்.

அந்த விழாவில் மாநில முதற் பரிசாகத் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், துலுக்கா நத்தம் கிராமத்தைச் சார்ந்த திரு என். மதார்கான் அவர்களைத் 'தமிழரசு' இதழின் சார்பில் பேட்டி காணப்பட்டது. பேட்டியின்போது அவர் அளித்த பதில்கள் கரும்புச் சாகுபடியில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குப் பயன்தருவதாக இருப்பதால், அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

''கரும்பு மகசூல் போட்டியில் மாநிலப் பரிசு பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றுள்ளீர்களே! ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் எடுத்தீர்கள்? என்ன ரகம் பயிரிட்டீர்கள்?''

''ஒரு ஏக்கரில் 97 டன் 465 கிலோ கரும்பு விளைவித்தேன். கோ. 658 என்ற கரும்பு ரகம் பயிரிட்டிருந்தேன்.''

''இப்பதான் முதன் முதலாக பரிசு வாங்கியுள்ளீர்களா? அல்லது முன்பே ஏதேனும் பரிசு பெற்றுள்ளீர்களா?''

''கரும்பு மகசூல் போட்டியில் 1965—66-ஆம் ஆண்டிலேயே நான் ஏக்கருக்கு 83 டன் 210 கிலோ கரும்பு விளைவித்து நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப்பகுதிப் பரிசு, 1969—70-ஆம் ஆண்டிலும் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதிப் பரிசு ஆக இரண்டு பரிசு முன்பே பெற்றுள்ளேன்''.

''கரும்புச் சாகுபடியில் நீண்ட நாள் பழக்கம் தங்களுக்கு உண்டா?''

''ஆமாங்க! தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், துலுக்கா நத்தம் கிராமத்தில் சுமார் 30 ஆண்டுக் காலமாக 10 ஏக்கருக்குக் குறையாமல் ஆண்டு தோறும் நான் கரும்புச் சாகுபடி செய்து வருகின்றேன். ஆண்டுதோறும் ஏக்கருக்கு 50 முதல் 55 டன் வரை சராசரியாகக் கரும்பு மகசூல் எடுத்து வந்துள்ளேன்''

''மாநிலக் கரும்பு மகசூல் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தங்களுக்கு எப்படி ஏற்பட்டது?''

''முன்பே 2 தடவை பரிசு வாங்கியுள்ளதால், மாநிலப் போட்டியிலும் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. அந்த ஆர்வம் ஏற்பட மூலக் காரணம் வேளாண்மைத் துறையினரே! 1969—70-ஆம் ஆண்டுப் போட்டியில் என்னைக் கலந்துக் கொள்ளும்படி வளவனூர் துணை வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அவருடைய அறிவுரையின்படி நான், கரும்பு மகசூல் போட்டியில் கலந்துகொள்ள என் பெயரை அவரிடம் பதிவு செய்து கொண்டு, என் நிலம் சர்வே எண். 225-1ல் உள்ள 1.74 ஏக்கரில் 50 சென்ட் நிலத்தில் தனிக்கவனம் செலுத்திக் கரும்புச் சாகுபடி செய்தேன். அதில் தான் எனக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.''

''விதைக் கரும்பு எங்கு வாங்கினீர்கள்?''

''நெல்லிக் குப்பம் சர்க்கரை ஆலையினர் எனக்கு வெந்நீரில் பதப்படுத்திய கோ. 658 விதைக் கரணைகளைக் கொடுத்தனர். அவைகளை என் வயலில் நட்டு நாற்றுக் கரும்புச் சாகுபடி செய்தேன். நாற்றங்காலில் இருந்த 7 மாத வயதுள்ள வீரியமான நோய் தாக்காத விதைக் கரும்பிலிருந்து விதைக் கரணைகளைத் தயாரித்தேன். ஏக்கருக்கு 25,000 விதைக் கரணைகள் வீதம் நடவு செய்தேன்''.

''நிலம் தயாரித்து நட்டது பற்றியும் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்''

# கதர் கைத்தொழில் அங்காடி



## குறளகம்
சென்னை-1







**கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்**

**வெளிநாட்டார் போற்றும்**
**பயன் பொருள்**
**கலைக்கூடம்**

20461
20462 20463
20464 20465




''என்னுடைய நிலம் இலேசான களியும் மணலும் கலந்தது. கரும்புச் சாகுபடிக்கு முன்பு கேழ்வரகு நடவு செய்திருந்தேன். கேழ்வரகு அறுவடைக்கு முன்பே அந்த நிலத்தில் அவுரி விதைத்திருந்தேன். கேழ்வரகு அறுவடையான பிறகு, அந்த நிலத்தில் இருந்த அவுரியை அப்படியே என் டிராக்டரைக் கொண்டு 5 முறை உழவு செய்தேன். பிறகு 10 அங்குல ஆழமுள்ள பார்களை 3 அடி இடைவெளியில் அமைத்தேன். கரையான்கள் வெட்டுவதைத் தடுக்க, பார்களில் ஏக்கருக்கு 15 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளை தூவி விட்டேன். அதன்பின் ஏக்கருக்கு 100 கிலோ, 'பாமாபாஸ்' உரத்தைப் பார்களின் அடியில் இட்டு, மண்ணைக் கிளறி விட்டேன். 7—1—1969 அன்று விதைக் கரணைகளை 'அகலால்' மருந்துக் கலவையில் நனைத்து எடுத்துக் கொண்டு, பார்களின் அடியில் (படைச்சால்) விதைக் கரணைகளை வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக ஏற்றி வைத்து ஒரு அங்குல மண் மேலே மூடும்படி நட்டு அன்றே தண்ணீர் பாய்ச்சினேன். பிறகு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினேன். நடவு செய்த 25-ஆம் நாள் பார்களை மண் வெட்டியால் கொத்திவிட்டுப் பயிரின் ஓரமாக உள்ள களைகளையும் களைக் கொட்டால் அகற்றினேன்''.

''மேல் உரம் போட்டீர்களா? எவ்வளவு போட்டீர்கள்?''

''களையெடுத்த 35-ம் நாள் கழித்து அதாவது நடவு செய்த 60-ஆம் நாள் ஏக்கருக்கு 400 கிலோ 10-ஆம் நெம்பர் கலப்பு உரம் வைத்துச் சிறிதளவு மண்ணால் மூடித் தண்ணீர் பாய்ச்சினேன். அதன்பின் 45 நாள் கழித்து அதாவது கரும்பு நடவு செய்த 105-வது நாளில் இரண்டாவது முறையாக மண் வெட்டியால் கொத்திவிட்டுக் களையெடுத்தேன். பிறகு 5 நாள் கழித்து அதாவது கரும்பு நடவு செய்த 110-ஆம் நாள் ஏக்கருக்கு 400 கிலோ வீதம் 10-ஆம் நெம்பர் கலப்பு உரம் இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்சினேன். பிறகு 10 நாள் கழித்துக் கரும்பின் அடியில் உள்ள காய்ந்த தோகைகளையும், பூச்சி-பூஞ்சாளம் தாக்கியுள்ள பயிர்களையும் அகற்றினேன். மேலும் ஒரு வாரம் கழித்து ஏக்கருக்கு 15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் உரம் 100 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 100 கிலோ, 10-ஆம் நெம்பர் கலப்பு உரம் 100 கிலோ ஆகிய மூன்றையும் கலந்து கரும்புக் குத்துக்களைச் சுற்றிலும் இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட்டேன். ஆக மொத்தம் 3 முறை மேலுரம் இட்டேன்''.

''அப்புறம் கரும்புக்கு என்ன செய்தீர்கள்? மருந்து தெளிக்கவில்லையா?''

''கரும்பு நடவு செய்த 6-ஆவது மாதத்தில், 2-ஆம் தடவையாகக் காய்ந்த தோகைகளைக் கரும்பிலிருந்து நீக்கி எடுத்துவிட்டு, கரும்பு சாயாமல் இருக்க தோகைகளைப் பின்னி விட்டம் கட்டினேன். 6 மாதத்திற்குப் பிறகு மழைக்காலம் தவிர மற்றக் காலங்களில் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினேன். என் கரும்புக்கு நான் மருந்து தெளிக்கவில்லைங்க''.

''ஏன்?''

> குடிசைவாழ் ஏழை மக்களுக்காகவே குடிசைப் பகுதி மாற்று வாரியம் வீடுகளைக் கட்டி வருகிறது. இதுவரை 4,590 குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு விட்டன. பாதி கட்டிய நிலையில் இருப்பவை 11,296 குடியிருப்புகள் ஆகும். திட்டமிடப்பட்டிருப்பது 85 பகுதிகளில் 28,000 குடியிருப்புகள் ஆகும்.
>
> (சட்டமன்றத்தில் முதல்வர் டாக்டர் கலைஞர்.)

''என் கரும்பில் எந்த விதமான பூச்சிகளோ, நோய்களோ தோன்றவில்லை. அதனால், மருந்து தெளிக்காமலே விட்டு விட்டேன்.''

''உங்கள் கரும்புக்கு இப்படியெல்லாம் செய்யணும் என்று யார் கூறியது. ?''

''வளவனூர் துணைவேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்களும், அவருடைய அலுவலகத்தைச் சேர்ந்த வேளாண்மை உதவியாளரும், செயல் விளக்கக் கண்காணியும் (மேஸ்திரி) அடிக்கடி என் கரும்பைப் பார்வையிட்டு, அதிக மகசூல் பெறுவதற்கான ஆலோசனைகளைக் கூறி ஊக்கப்படுத்தினார்கள். கடலூரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்களும், நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த கரும்பு கண்காணிப்பாளர் அவர்களும் அடிக்கடி என் கரும்பைப் பார்வையிட்டு என்னை ஊக்கப்படுத்தினார்கள். இவர்களெல்லாம் என்னை ஊக்கப்படுத்தியதனாலேயே, நான் மாநிலப் பரிசு பெற முடிந்தது.''

''அறுவடை எப்போது நடந்தது?''

''1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் வேளாண்மைத்துறை அலுவலர்கள் முன்னிலையில் கரும்பை வெட்டி கணக்கிடப்பெற்றது. ஏக்கருக்கு 97 டன் 465 கிலோ மகசூல் விளைந்துள்ளதாக அறிவித்தார்கள். அந்த அளவு மகசூல் எடுத்ததனாலேயே எனக்கு முதலில் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதியின் மண்டலப் (பிராந்திய) பரிசு கிடைத்தது. அதற்குச்சான்றிதழும், வெள்ளிக் கோப்பையும் கொடுத்தனர். பிறகு இப்பொழுது அந்த மகசூலுக்கே மாநிலப்பரிசும் கிடைத்துள்ளது. எனக்குத் தங்கப் பதக்கமும், சான்றிதழும் கொடுத்துள்ளனர்''.

''வேறு ஏதேனும் சொல்கின்றீர்களா?''

''பல உழவர் பெருமக்கள் ஏக்கருக்கு 30 டன் கரும்பு கூட விளைவிக்க முடிவதில்லை! நான் அவர்களை விட 3 மடங்கிற்கும் மேல் மகசூல் எடுத்துள்ளதாலும், அதனால்மாநிலப் பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றுள்ளதாலும், நாட்டிற்கு என் கடமையைச் செய்துள்ளதாக எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன், என்னைப் போல் மற்ற உழவர்களும் ஊக்கத்துடன் கரும்பு பயிரிட்டால் அவர்களும் பரிசு பெற முடியும்; அத்துடன் அவர்களுக்கும் அதிக வருவாய் கிடைக்கும்; அதனால் நிகர இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும் எனவே உழவர்கள் வாழ்வு உயரவும், நாடு செழிக்கவும், வேளாண்மைத் துறையினரின் சொல் கேட்டு, அவர்கள் கூறும் முறையில் சாகுபடி செய்ய உழவர் பெருமக்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்வதுடன், என்னை ஊக்குவித்த வேளாண்மைத் துறையினருக்கும், ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

(கரும்பு மகசூல் போட்டியில் மாநிலப் பரிசு பெற்ற உழவர் பெருமகன் அளித்த பேட்டி.)

ஆர். எம்.





# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்: கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனை வெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத் தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்--





"கூவம் நதியின் மிசை நிலவினிலே
கொஞ்சு தமிழ் இளைஞர் கூட்டத்துடனே
பாவலர் தமிழினில் பாட்டி சைத்தே
படகுகள் ஓட்டிவிளை யாடி வருவோம்!"



# நனவாகிய காட்சி



சென்னை நகர் கூவம் ஆறு சீரமைப்புத்
திட்டத்தின் கீழ் படகுக் குழாம், உல்லாசப்
படகு ஓட்டம் ஆகியவற்றைத் தமிழக
முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிப்ர
வரித் திங்கள் 4-ஆம் நாள் துவக்கி வைத்
தார்கள்.

விழாவிற்குப் பொதுப் பணித்துறை
அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள்
தலைமை வகித்தார்கள் கல்வியமைச்சர்
நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பிற்
பட்டோர் நலத்துறை அமைச்சர்
க. இராசாராம் அவர்கள், சட்டமன்ற
மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச்
செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள்,
சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி ஜோதி
வெங்கடாசலம் அவர்கள், சென்னை நகர
மேயர் திரு. ஆறுமுகம் அவர்கள்
ஆகியோர் விழாவில் உரையாற்றி
னார்கள்.



## 1878 முதல் கூவம் சீரமைப்புப் பற்றிப் பேசப்பட்டு வந்தாலும் 1967 செப்டம்பரில் திட்டம் தொடங்கப்பட்டுக் கனவை நனவாக்கியது நமது அரசு



# பாராட்டினார்கள்!

சென்னை நகரின் அழகை மேம்படுத்தும் நோக்குடன் கூவம் சீரமைப்புச் செய்யப்பட்டிருப்பது கண்டு உள்ளாட்சித்துறை அமைச்சர் என்ற முறையில் பெருமையடைகிறேன்.

கூவத்தைப் பழித்துக் கூறி வந்தோம்—அது கூவத்தின் குற்றமல்ல!

ஏனென்றால் காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த போதும் கூவத்தில் தான் குளித்து—தனது வேட்டியைத் துவைத்துக் கொண்டு செல்வாராம்.

குளிக்கிற அளவுக்கு, சிறந்த முறையில் இருந்த கூவத்தைக் கெடுத்தவர்கள் அதற்குப் பிறகு வந்தவர்கள் தான்! 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று சொல்வார்கள். உலக நாகரிகமே ஆற்றங்கரையில்தான் ஆரம்பமாகியிருக்கின்றது. மக்களும் ஆற்றங்கரைகளில்தான் குடியேறி இருக்கிறார்கள்.

சென்னையில் இருக்கிற மண்ணடிப் பகுதியிலேயும் முன்பு ஆறு ஓடிக் கடலில் கலந்திருக்கிறது. அந்த ஆற்றைப் பின்னர் மண்ணை அடித்து அடித்து அடைத்தால் தான் அந்தப் பகுதிக்கு மண்ணடி என்று பெயரிடப்பட்டது.

கடலழகு - ஆற்றின் அழகு போன்ற இயற்கை அழகுகளோடும் சென்னை மாநகரம் அமைந்திருக்கிறது.

அழகான - அகன்ற மணற்பரப்புக் கொண்ட நீண்ட கடற்கரை சென்னையில்தான் இருக்கிறது.

உலகத்திலேயே அழகான முதல் கடற்கரை ரியோடி ஜெனிரோ. அதற்கு அடுத்த இடத்தில் சென்னை கடற்கரைதான் இருக்கிறது.

**மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**டாக்டர் நாவலர்**

சென்னையில் கூவம் சீரமைக்கப்பட்டு விட்ட பிறகு இனிமேல் மேலை நாடுகளிலே இருக்கின்ற ரைன், தேம்ஸ் நதிகளில் கண்ட காட்சிகளை இங்கேயும் காண முடியும்.

சில நாட்களுக்கு முன்பு கூவத்தில் படகிலேறி--நானும் அமைச்சர் சாதிக்பாட்சாவும் சென்றோம். சேத்துப்பட்டில் ஓரிடத்திலிருந்து பார்த்தபோது ஒரு பக்கம் மின்சார ரயில்களும் இன்னொரு பக்கம் கார்களும், ஆற்றில் படகுகளுமாகச் செல்கின்ற காட்சி—ரைன் நதியைப் போல ரைன் நதியை மிஞ்சக் கூடிய விதத்தில் இருந்தது.

இந்தக் காட்சிகளை இப்படிப்பட்ட சாதனையை வெளி நாட்டுக்காரன் யாராவது வந்து பாராட்டினால் உடனே நம்முடைய நாட்டுக்காரர்கள் பாராட்டுவார்கள். அந்த அளவுக்கு நம்மவர்களிடம் பெருந்தன்மை இருக்கிறது.

தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பேறுகத் தான் கலைஞர் நமக்கு முதலமைச்சராகக் கிடைத்திருக்கிறார். அவர் கலைஞராக இருப்பதால்தான் எல்லாவற்றிலும் கலை வண்ணம் இருக்கிறது.

கிழக்கு ஜெர்மன் நாட்டில் 1278 படகுத்துறைகள் இருக்கின்றன. இதனால் ஏராளமான அன்னியச் செலாவணி அந்த நாட்டுக்குக் கிடைக்கிறது.

காஷ்மீரில் ஜீலம் நதியிலும் படகுகளினாலேயே நிறைய அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

கூவம் நதிச் சீரமைப்பினால் படகுகள் விடுவதால் அன்னியச் செலாவணி மத்திய அரசுக்கும் கிடைக்க வாய்ப்பேற்படுகிறது.

**மாண்புமிகு**
**பிற்பட்டோர் நல அமைச்சர்**
**திரு. இராசாராம்**

நாற்றம் எடுத்த கூவத்தை மணம் கொழிக்கும் ஆறாக மாற்றிய பெருமை முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும்.

ஒரு நூற்றாண்டுக் காலமாகத் திட்டமிடப்பட்டு, நிறைவேற்றப்படாமல் இருந்த கூவம் சீரமைப்புத் திட்டத்தைக் கலைஞர் அவர்கள் அண்ணாவின் அனுமதி பெற்று நிறைவேற்றினார். பார்ப்பதற்கு எழிலோடு விளங்கும் கூவம் ஆற்றின் நீளம் 41 மைல் ஆகும். காஞ்சீபுரம் வட்டத்திலிருந்து கடற்கரை வரை இது நீண்டு இருக்கிறது. அமைந்தகரையில் இருந்து பாம்பு போல வளைந்து நெளிந்திருக்கிறது.

ஒரு நாடகத்தில் எம தர்பார் காட்சியில் கள்ள மார்க்கட்காரனுக்கு எமதர்மன் தரும் தண்டனை என்ன தெரியுமா? 'அவனைக் கூவம் ஆற்றில் கொண்டுபோய்த் தள்ளு' என்று எமன் கட்டளை இடுகிறான்.

கூவம் ஆற்றின் பெருமை அந்த அளவுக்கு அன்று இருந்தது என்பது எல்லாருக்கும் தெரியும்.

கூவம் சீரமைப்புப் பணி சாதாரணக் காரியமல்ல. உச்ச கட்டத்தில் மூவாயிரம் தொழிலாளர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். பொதுப் பணித்துறை நிறைவேற்றிய இந்தத் திட்டத்தைச் சுற்றுலாத்துறை நிர்வகிக்க இருக்கிறது.

**மாண்புமிகு**
**பொதுப்பணித் துறை**
**அமைச்சர்**
**திரு. சாதிக்பாட்சா**



# படைப்பே! ஒரு வேண்டுகோள்



வானத்தைத் துளைக்கின்ற கட்ட டங்கள்
வளர்ந்திருக்கும் 'நியூயார்க்'கைக் காண்ப தெந்நாள்?
மோனத்துக் கற்பனையை இன்ப ஊற்றில்
மூழ்கடிக்கும் 'ஆலந்'தைக் காண்ப தெந்நாள்?
போனபல வரலாற்றுச் சுவட்டை ஏந்தும்
புகழ்மிக்க 'ரோம்'நகரைக் காண்ப தெந்நாள்?
'சீன'த்தை, 'சப்பா'னை, 'சுவீடன்' நாட்டைச்
'சேர்மனி'யை, 'எகிப்'தையெலாம் காண்ப தெந்நாள்?

நான்குசுவர் வீட்டுக்குள் அடைந்தி ருப்போன்
'நாங்கூழின் புழு'வைப்போல் இருந்தே சாவான்!
தான்பிறந்த ஊரைமட்டும் தெரிந்து கொண்டோன்
'தவளை'யைப்போல் வாழ்ந்திருந்து மறைந்தே போவான்!
நான்கெல்லை கூடுகின்ற தனது நாட்டை
நன்கறிந்தோன் 'மான்'போலே இருந்தே மாள்வான்!
வான்போர்த்த உலகமெலாம் சென்றே கண்டோன்
வையகத்தில் அறிவாலே நிறைந்து நிற்பான்!

'ஏட'னிலே, 'சைபிரிய' மண்ணி லெங்கோ
இருந்துவரும் பறவையெலாம் கூட, எங்கள்
'வேடந்தாங் கல்ஏரி' வந்து தங்கி
விவாதிக்கும் ஐ. நா. போல் கூடக் கண்டோம்!
நாடுவிட்டு நாடுவந்து காணு தற்கு
நானூறு 'விசாக்கள்' ஏன் வாங்க வேண்டும்?
கூடுவிட்டுப் பாய்கின்ற வித்தை தன்னைக்
கூறிவைக்கக் கூடாதா எங்க ளுக்கே!

மாமியாரின் ஊரைமட்டும் தெரிந்து வைத்தோன்
மாமேதை யாவானு? வட்டி சேர்த்துச்
சேமித்து வைத்திருப்போன் போகும் போது
செல்வமெலாம் உடனெடுத்துச் செல்வ துண்டா?
பூமியெனும் கோளத்தின் வேலைப் பாட்டைப்
பொலிவுகளை எழில்குலுங்கும் காட்சி யெல்லாம்
யாம்காணப் படைப்பே! நீ எங்க ளுக்கே
'இறக்கை'களைத் தவறாமல் படைக்க வேண்டும்!





அண்டமென்ற பேரமைப்பில் கோள மெல்லாம்
ஆடிவரும் 'பந்துக'ளே யன்றோ? 'ஆறு
கண்ட'முள்ள இவ்வுலகம் சிற்று ருண்டை!
காட்சியெலாம் படைத்திட்ட படைப்பே! நீ ஏன்
உண்டான வையகத்தைக் கடல்க ளாலே
உடைத்திங்கே தனித்தனியாய்ப் பிரித்து விட்டாய்?
'அண்டார்ட்டிக் கடும்பனி'யோ ஓர்பக் கத்தில்!
'ஆப்பிரிக்கக் கொடும்பாலை' மறுபக் கத்தில்!

இவ்வளவும் படைத்திட்ட படைப்பே! நெஞ்சில்
ஈ விரக்கம் உனக்குண்டா? மண்ண கத்தின்
அவ்வளவு மனிதர்களும் பேசு தற்கே
அழகியஓர் பொதுமொழிஏன் படைக்க வில்லை?
எவ்வளவு தொலைநாட்டில் இருந்த போதும்
இருக்கின்ற பசுவுக்கும், பறவை கட்கும்
செவ்வையுடன் ஓர்மொழியைப் படைத்தாய்! ஆனால்
சீர்மனிதன் பேசபல மொழிஏனீ கண்டாய்?

குடைபோன்ற வானத்தைப் படைத்தாய்; அங்கே
குண்டலங்கள் தொங்குதல்போல் மீன்ப டைத்தாய்;
வடைபோன்ற நிலவையங்கே நீந்த விட்டாய்;
வண்ணவண்ண முகிலாடை நெய்து தந்தாய்;
இடையினிலே இவ்வளவேன் தூரம் வைத்தாய்?
என்றைக்கோ நாங்களங்கே உலவப் போவோம்?
மடப்படைப்பே! எங்களுக்கேன் நூறே ஆண்டை
வாழ்வயதாய்ப் படைத்திட்டாய்? நீதி தானு?

பறவைகளாய் எமையெல்லாம் படைத்தி ருந்தால்
பார்முழுதும் சுற்றிவர வேலி உண்டா?
சிறகற்ற மீனுகப் பிறந்தால் கூட,
சீர்க்கடல்கள் சுற்றிவரச் சிக்கல் ஏது?
திறமையிலாப் பாழ்படைப்பே! மனிதன் செல்லத்
தேயமெலாம் 'தடைகள்' ஏன்? 'சீன' நாட்டில்
பிறப்பதிகம்; 'ஆஸ்திரேலிய' நாட்டில் மட்டும்
பேசுகின்ற மனிதரினம் குறைவாம்; ஏன், ஏன்?




கவிஞர் -
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.

# அம்மாப்பேட்டையில் டெலிவிஷன் படப்பிடிப்பு



குடும்பநல முனைப்பு இயக்கத்தைக் குறிக்கும் வரவேற்பு வளைவுகள்; தெருவெங்கும் வண்ணச் சுவரொட்டிகள்; வட்டாரத்திற்கு ஒரு நல்வாழ்வு நிலையம்; அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன் வருவோருக்குக் கோலாகலமான வரவேற்பு; உரிய வசதிகள், தங்கும் விடுதி; நல்ல சத்துள்ள உணவு; மருத்துவர்களின் தனிக் கவனிப்பு.

திருமணம் நடைபெறுகிறதோ என்று எண்ணும் வகையில் ஒவ்வொரு நல்வாழ்வு நிலையத்திலும் விழாக் கோலம் பூண்டு, மக்கள் கூடுகிறார்கள். வண்டிகளிலும் ஊர்திகளிலும் பெரியவர்கள் நல்வாழ்வு நிலையத்தை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர்.

இந்தக் கோலமிகு காட்சி தஞ்சை மாவட்டத்தில் மூன்றாவது குடும்பநல முனைப்பு இயக்கத்தையொட்டி ஊர்தோறும் நடைபெற்ற காட்சியாகும். 1972 நவம்பர் 21ல் தொடங்கி, 1973 சனவரி 15ல் முடிவு பெற்ற இயக்கம், '56 நாட்களில் 40,000க்கு மேற்பட்டோர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயனடைந்துள்ளனர்' என்ற நற்செய்தியை நாட்டிற்குத் தந்து, தனிப்புகழ் பெற்றுள்ளது.

இந்த முனைப்பு இயக்க நடவடிக்கைகளைப் படம்பிடிக்க வேண்டும் என்ற ஆசையோடு டாக்டர் பின்னெல்லி என்னும் இத்தாலி நாட்டுக்காரர் தம் டெலிவிஷன் குழுவினருடன் டிசம்பர் 22ஆம் நாள் தஞ்சை வந்தது குறிப்பிடத் தக்க செய்தியாகும். அவர்கள் தஞ்சைக்கு அருகில் உள்ள அம்மாப்பேட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு திருமண மண்டபம் நல்வாழ்வு நிலையமாக மாற்றப்பட்டிருந்தது. வரவேற்பு வளைவையும், தோரணங்களையும் பார்த்து, இத்தாலி நாட்டுக்காரர்கள் குடும்பநலத் திட்டப் பணி மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் நடைபெறுகிறது என்று பாராட்டினர்.

தாரை தப்பட்டை ஒலிக்க, கொம்புகள் முழங்க, ஒரு மாட்டு வண்டியில் சிலர் நல்வாழ்வு நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அதைப் பின் தொடர்ந்து சாரை சாரையாக வண்டிகள், அரசாங்க வாகனங்கள் வந்து நின்று கொண்டிருந்தன. அறுவைச் சிகிச்சைக்காகச் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து ஆடவர்கள் வந்துகொண்டிருந்த அந்தக் காட்சியைக் கண்டு வியந்தனர்.



நல்வாழ்வு நிலைய வாயிலில் அறுவைச் சிகிச்சைக்குப் பெயரைப் பதிவு செய்வதற்காக ஒரு பெரிய அணி நின்று கொண்டிருந்தது. டாக்டர் பின்னெல்லி அவர்கள், காலை 9 மணியிலிருந்து 1 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகளைப் படம் பிடித்தார்கள். மக்கள் வண்டிகளில் வருவது, வரிசையாக நின்று பெயர்களைப் பதிவு செய்வது, டாக்டர்கள் வரவேற்பது, மருத்துவப் பரிசோதனை, அறுவைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை செய்துகொண்டோருக்காக நடைபெற்ற பரிசுக் குலுக்கல், பரிசுப் பொருள்களான சைக்கிள், ரேடியோ, எவர்சில்வர் பாத்திரங்கள், அறுவைச் சிகிச்சை செய்துகொண்டோரை மகிழ்விக்க நடைபெற்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சி அனைத்தையும் அந்தக் குழுவினர் படம் பிடித்தனர்.



" முத்துக் கூத்தன் பாட்டைக் கேட்கவந்த இத்தாலி நாட்டுக் காரருக்கு வணக்கம் ",

என்று முத்துக் கூத்தன் பாட, அந்த வில்லோசையையும், அதை ஒட்டி அந்தக் குழுவினரின் தலை யாட்டத்தையும் கண்டு, படப்பிடிப் புக் குழுவினர் மகிழ்ச்சியால் கூத்தாடினர்.

இத்தாலி நாட்டு டெலிவிஷன் குழுத் தலைவர் டாக்டர் பின்னெல்லி பார்வையாளர் குறிப்பேட்டில் எழுதிச் சென்ற வரிகள் :



" Family Planning is one of the most urgent and important needs for the contemporary Society. The population bomb is a dramatic danger for all the humanity what you are doing here in India, must be an example for all the countries of the World.

Thanking you what you have shown to us today. "

இத்தாலி நாட்டு டெலிவிஷன் குழுவினரின் இந்தப் பாராட்டு, நாம் ஆற்றும் அரும்பணிக்கு எடுத் துக்காட்டாக—அடையாளமாக விளங்குகிறது.

—வ. இராசமனோகரன்

# கூவம் மணக்கிறது!



**சிலம்புச் செல்வர்**

## முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம்

கூவம் நதி நல்ல முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற நல்ல பணிகள் நடைபெறுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இப் பணியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறேன்.

நல்லது செய்வதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

கலைஞர் கருணாநிதியின் தயவால் கூவம்நதியில் நாற்றமும் மாறியிருக்கிறது. இதிலே எனக்குக் கொஞ்சம் பொறாமைதான். ஏனென்றால் பூர்வீகமாகச் சென்னையிலிருக்கும் என்னைப் போன்றவர்களால் முடியாததைச் சோழ நாட்டுக்காரரான கலைஞர் வந்து முடித்திருக்கிறார்.

பாரதி பாடினான்—சிந்து நதியின் மிசை நிலவினிலே, சேரநன் னாட்டிளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே, தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்' என்று பாடினார். இன்று ''கூவம் நதியின் மிசை பொழுதினிலே சோழ நன்னாட்டிளம் தலைவருடனே'' என்று பாடிச் செல்ல இருக்கிறோம்.

பாரதி கங்கையைத்தான் பாடினான்; அந்தக் கவி உள்ளம் கொண்டவரால் இபபோது கூவம் மாற்றப்பட்டிருக்கிறது.

கலைஞர் — பொதுப்பணித்துறை அமைச்சராகச் சொற்ப காலம் தான் இருந்தார். ஆனால் அப்போதே கூவம் சீரமைப்புக்காகத் திட்டமிட்டார். அண்ணாவின் ஆதரவைப் பெற்று நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

மாஸ்கோ நதியையும் பாரிஸ் நதியையும் வளப்படுத்துவது பெரிய காரியமல்ல; ஏனென்றால் அவற்றில் போதிய ஆழம்—போதிய அகலம் இருந்தன. இந்தக் கூவத்தில் ஆழத்தையும் அகலத்தையும் உண்டாக்கி நாற்றத்தைப் போக்கி அற்புதத்தைச் செய்திருக்கிறார் கலைஞர்.

கடற்கரையில் இப்போதுதான் அறிஞர்கள் ஆன்ம ஞானிகள் ஆகியோரின் சிலைகள் இருக்கின்றன. கடற்கரைப் பகுதி என்றால் மீனவர்களும் குடிசைகளும் ஆரோக்கியக் குறைவும்தான் இருக்கும். ஆனால் கலைஞர் ஆட்சியில் குடிசைகளையெல்லாம் மாடிகளாக்கிச் சென்னைக் கடற்கரையையே சிறப்பிக்கச் செய்திருக்கிறார்.



# ஒரே சமயத்தில் இரட்டை நன்மை !

எங்கள் வங்கியில்

**தவணை வைப்புத் தொகை (FIXED DEPOSIT)**

போட்டு வைப்பதால்

எப்படியா ?

முதலில்....போடுபவருக்கு இலாபம்

**ஓர் ஆண்டுக்கு வட்டி 7·/.**

**ஓர் ஆண்டுக்கு மேல்—**

**இரண்டு ஆண்டுவரை வட்டி $7\frac{1}{2}$·/.**

இந்த உச்ச விகிதம் இங்குக் கிடைக்கும்

தனிச் சலுகை

அடுத்து, நாட்டுக்கும் நன்மை.....ஏனெனில் இந்தத்

**தவணை வைப்புத் தொகை (FIXED DEPOSIT)**

பசுமைப் புரட்சிப் பணிகளுக்குப் பற்றுக்கோடு.

தனக்கும் நன்மை,

நாட்டுக்கும் நன்மை.

ஆகவே....

மாநில நிலவள வங்கியிலும்

அதன் மாவட்டக் கிளைகளிலும்

**தவணை வைப்புத் தொகை (FIXED DEPOSIT)**

போடுங்கள்.........

வளத்துக்கு வழிகோலுங்கள்.

மற்ற விவரங்களுக்கு :

**தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி**

32, லஸ் சர்ச் சாலை, மயிலாப்பூர், சென்னை-4.

பி. எஸ். முத்துச்செல்வன், M.L.A.
துணைத் தலைவர்.

மு. சண்முகம், M.L.A.
தலைவர்.




# கேளுங்கள் கொடுக்கப்படும்

இ.சி. 39821 என்ற ரக சோயா மொச்சை தமிழ்நாட்டில் நன்ருக விளையும் என்று கூறி இருக்கின்றீர்கள். தஞ்சை மாவட்டத்தில் நன்ருக விளையுமா? இவ்விதையும் சாகுபடிக் குறிப்பும் எங்குக்கிடைக்கும்? ஒரு கிலோ விலை என்ன? என்று குறிப்பிடவும். சோயா மொச்சையின் பயன்களையும் அறிந்தேன். இந்த நல்ல விஷயங்களை வெளியிடும் தமிழரசுக்கு என் நன்றி.

—ஆர். கிருஷ்ணன்,
எஸ். கோட்டைக்காடு,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சை மாவட்டம்.

பொதுவாகத் தமிழ்நாட்டிற்கு இ.சி. 39821 என்ற தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த சோயா மொச்சை ரகம் ஏற்றதாக அமைந்துள்ளது. ஆனல், இந்த ரகம் கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்றதாக விளங்குகிறது. குடுமியான் மலைக்கு அருகில் உள்ள 'அண்ணுபண்ணை' யில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளிலிருந்து திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களுக்கும் இ.சி. 39821 ரகம் ஏற்றதாக இருக்கும் என்பது



புலனாகியுள்ளது. 23–1–1972 அன்று அண்ணு பண்ணையில் 18 சோயா மொச்சை ரகங்கள் விதைத்துச் சோதனை செய்யப் பட்டதில், இ.சி. 39821 ரகமே மற்ற ரகங்களைவிட ஏற்றது என்பது தெளிவாகியுள்ளது. இது பற்றிய சோதனைகள் மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனினும், தங்களுக்கு ஆர்வம் இருப்பின், உங்கள் நிலத்தில், ஒரு சென்ட் (54 அடி நீளம், 8 அடி அகலம்) பரப்பில் மட்டும் பிப்ரவரி—மார்ச்சுத் திங்களில் இ.சி. 39821 ரக சோயா மொச்சையை இறைவையாகப் பயிரிட்டுப் பார்க்கலாம். இந்த ரக விதையும், நுண்ணுயிர் ராசியும் (பாக்டீரியல் கல்ச்சர்) பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் அவர்களின் உதவியை நாடவும். அல்லது தஞ்சாவூர் கீழ இராஜ வீதியில், இளைய ராணி அரண்மனையில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலகத்தில் விசாரிக்கவும். இ.சி. 39821 ரக சோயா மொச்சையின் சாகுபடிக் குறிப்பு மிகவும் விளக்கமாக 1–10–1972 தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 43-ல் வெளியிடப்பட்டுள்ளது. தயவு செய்து அதைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த ரக சோயா மொச்சை, தங்களுக்கு மேற்கூறிய அலுவலகங்களின் மூலம் கிடைக்கவில்லை எனில், கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் எழுதி, விலைவிவரம் கேட்டு முன் பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தகவல் தொடர்பு நிலைய விற்பனை நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.

அண்ணு பண்ணையில் இருந்தும் அநேகமாக இந்த ரக விதைகள் விற்பனைக்குக் கிடைக்கக் கூடும். முயற்சி செய்து பாருங்கள். முதலில் சோதனையாகப் பயிரிட்டுப் பார்த்துவிட்டு நல்ல மகசூல் கிடைத்தால், பிறகு பெருமளவில் பயிர் செய்வதே நல்லது.

மாசிப் பட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற சிறந்த கொத்து நிலக்கடலை ரகம் எது? அதன் சாகுபடி விவரங்களைத் தயவு செய்து விளக்கவும்.

—ஆர். இராமசாமி,
கள்ளக்குறிச்சி.
தென்னுர்க்காடு மாவட்டம்.

'டி. எம். வி. 7' (திண்டிவனம்—7) என்னும் கொத்து நிலக்கடலை ரகம் மாசிப் பட்டத்தில் இறைவையாகப் பயிரிடுவதற்கு மிகவும் சிறந்ததாகும். இதன் வயது 105 நாட்கள். இந்த ரகம் வண்டல் மண், செம்மண், கரும் வண்டல் மண் போன்ற மென்மையான மண்வகைகளுக்கு மிகவும் ஏற்றது. இந்த ரகத்தைப் பயிரிட நிலத்தை இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை நன்கு உழவேண்டும்.

அடியுரமாக ஏக்கருக்குப் 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இட்டு மண்ணுடன் கலக்குமாறு உழுதுவிட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 9 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 27 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க 45 கிலோ அமோனியம் சல்பேட், 112.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 46 கிலோ மூயூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். அல்லது 4 : 8 : 12 என்ற கலப்பு உரத்தில் 225 கிலோவை இடவேண்டும்.




விதைப்பதற்கு முன்பு அல்லது பின்பு ஏக்கருக்கு 3 குடுவை நுண் உயிர் கலவையை மணல் அல்லது மரத் தூளுடன் கலந்து நிலத்தில் தூவி விடவும்.

ஏக்கருக்கு 50 கிலோ கடலைப் பயறு விதைகளை 125 கிராம் 'கேப்டான்' மருந்துடன் கலந்து 9 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைத்த உடன் தண்ணீர் விடவும். மூன்ருவது நாளில் முளை நீர் விடவும். பிறகு 12 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சவும்.

விதைத்த 15 நாட்களுக்குப் பிறகு ஏக்கருக்கு 7 கிலோ வெண்காரம் (Borax) 80 கிலோ ஜிப்சம் ஆகியவைகளை இடவேண்டும்.

விதைத்து 20 முதல் 25 நாட்களுக்குள் முதல்முறை களை எடுத்து, ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் 'பாரத்தியான்' அல்லது 400 மில்லி லிட்டர் 'எண்ட்ரின்' மருந்துடன் அரை கிலோ 'தாமிரப் பூசனக் கொல்லி' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

விதைத்த 35 முதல் 45 நாட்களுக்குள் இரண்டாம் முறை களை எடுத்து மண் அணைக்க வேண்டும். விதைத்த 45-வது நாட்களுக்குப் பிறகு நிலத்தைக் கொத்திவிடக்கூடாது. விதைத்த 50 முதல் 55 நாட்களுக்குள் இரண்டாம் முறை மேற்கூறியவாறு சாகுபடி முறைகளை மேற்கொண்டால். ஏக்கருக்கு 20 மூட்டைக்குக் குறையாமல் (800 கிலோ) மகசூல் எடுக்க முடியும்.

நெல் அறுவடைக்குப் பின், அந்தத் தரிசு நிலத்தில் என்ன பருத்தி பயிரிடலாம்? அதற்கு அடியுரம் எவ்வளவு இடவேண்டும்? விதைப்பதற்கு ஏக்கருக்கு எவ்வளவு விதை வேண்டும்? எப்படி விதைப்பது என்று விவரம் கூறவும்.

—எஸ். முத்துவேல்,
லால்குடி,
திருச்சி மாவட்டம்.

நெல் அறுவடைக்குப் பின் பருத்தி பயிரிட விரும்பினால், 'பி.ஆர்.எஸ். 72' என்ற பருத்தியைப் பயிரிடுதல் சிறந்தது! இதன் வயது 120 முதல் 130 நாட்களாகும். ஏக்கருக்கு 700 கிலோவுக்குக் குறையாமல் பருத்தி மகசூல் அளிக்க வல்ல ரகம் இது.

நெல் அறுவடைக்குப் பிறகு வயலில் உள்ள ஈரத்தைப் பயன்படுத்தி இந்த ரகம் விதைக்கப் படுவதால், அடியுரம் இடவேண்டியதில்லை. நிலம் மெழுகுப் பதமாக இருக்கும் நிலையில், வரிசைக்கு வரிசை ஒன்றரை அடியும் வரிசையில் குழிக்குக் குழி 9 அங்குலமும் இடைவெளிவிட்டு விதைகளை ஊன்ற ஏக்கருக்கு 9 கிலோ விதை தேவைப்படும். கூர்மையான குச்சியைக் கொண்டு மண்ணில் அரைஅங்குல ஆழத்தில் குழி ஏற்படுத்தி அதில் 2 அல்லது 3 விதைகள் வீதம் போட்டு ஈர மணல் கொண்டு குழியை நிரப்பி மூடுதல் நல்லது. இவ்வாறு செய்வதால் விதைகள் நன்கு முளைக்கும்.



பருத்தி விதை ஊன்றிய 21-வது நாள் களை எடுத்து, ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 14 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவு உரமிட ஏக்கருக்கு 30 கிலோ டை அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 24 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை இடவேண்டும். இரசாயன உரங்களைப் பருத்திச் செடியிலிருந்து 2 அங்குலம் தள்ளிவரிசையாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும். பிறகு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 40-வது நாள் இரண்டாம் முறை களை எடுத்து ஏக்கருக்கு 31 கிலோ யூரியாவை பருத்திச் செடியிலிருந்து 2 அங்குலம் தள்ளி ஒரு பக்கத்தில் வரிசையாக இட்டு மண்அணைத்துத்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வேளாண்மைத் துறையினர் கூறும் முறையில் விதைத்த 15, 25, 40, 55, 70, 85, 100-வது நாட்களில் மருந்து தெளிக்க வேண்டும்.

என்னுடைய தகப்பனார் கடந்த 25 ஆண்டுகளாக இராணுவத்தில் பணிபுரிந்தார். அவர் தற்பொழுது ரிட்டையர் ஆகிவிட்டார். அவர் ரிட்டையர் ஆகிச் சுமார் 7 ஆண்டுகளாகின்றன. எங்களுக்கு நிலம் தருவதாகக் கூறினார்கள். ஆனால், இதுவரை கிடைக்கவில்லை. நாங்கள் நிலம் பெறுவது எவ்வாறு என்ற விவரங்களைக் கூறினால் நன்றியுள்ளவனாக இருப்பேன். நாங்கள் துன்பத்தால் மிகவும் கஷ்டப்படுகிறோம்.

—கே. செல்வராஜ்,
15, வியாபாரச் செட்டித் தெரு,
கூறைநாடு, மாயூரம்.

தமிழ் நாடு அரசின் ஆணை எண்: 2417, நிலவரித் துறை, நாள் 30—7—1970-ன்படி, நிலப்பட்டா கேட்டு மனுச் செய்பவர்களுக்குக் கீழே வரிசையில் கண்டுள்ளபடி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவருகிறது.

(1) இராணுவத்தில் பணியாற்றி உயிரிழந்த அல்லது ஊனமடைந்தவர்களின் குடும்பம்.

(2) நிலமற்ற ஏழை அரிசனங்கள்.

(3) தீவிர இராணுவப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்.

(4) முன்னாள் படை வீரர்கள்.

(5) பர்மா, இலங்கை அகதிகள்.

(6) தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி வேலை இழந்த பொற்கொல்லர்கள்.

(7) நிலமில்லாத இதர ஏழை மக்கள்.

எனவே, முன்னாள் படை வீரரான தங்கள் தந்தைக்கும் நிலம் கிடைக்கும். தங்கள் தந்தை இதுவரை நிலப்பட்டா கேட்டு மனுச் செய்தாரா? இல்லையா என்பதைக் குறிப்பிடவில்லை. இதுவரை நிலப்பட்டாக் கேட்டு மனு அனுப்பவில்லையானால், தங்கள் தந்தை இராணுவத்தில் பணியாற்றியுள்ளது பற்றிய விவரங்களை எல்லாம் குறிப்பிட்டு, நிலப்பட்டா கோரி, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உடன் மனு அனுப்புங்கள். முன்பே மனு அனுப்பியும் இதுவரை நிலப்பட்டா கிடைக்காதிருக்குமானால், தங்கள் மாவட்ட



முன்னாள் முப்படை வீரர் வாரியத்தின் (District Soldier's Sailor's and Airman's Board) தலைவராகப் பணியாற்றும் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து, மனுக் கொடுப்பது நல்லது. தங்கள் மாவட்ட முப்படை வீரர் வாரியத்தின் செயலாளர் அவர்களையும் நேரில் சந்தித்து விவரம் கூறி, அல்லது மனு அனுப்பி உதவி கோரலாம். செயலாளர் அவர்களைக் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

முன்னாள் படைவீரர் நிலையம்,
முத்துக் குமார மூப்பனார் சாலை'
(தலைமை அஞ்சலகத்திற்கு
எதிரில்), தஞ்சாவூர்—1.

# வளம் நிறைந்த வருங்காலம்!



அவனுக்காக
சேமித்து வைக்க
*இன்றே வாங்குங்கள்*
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

**முதல் பரிசு: ரூ. 1,00,000**
(ஒவ்வொரு வரிசைககும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**குலுக்கல் நாள் 12-3-1973**
**பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்**

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.





# நிலத்தில் கண்கூடாகக் கண்ட பயன்கள் நிரூபித்துள்ளன

## ஆம்பிதியான் 500-ஈ

தண்டு துளைப்பான்கள், இலைத்தாவிகள், புகையான்கள் மற்றும் உங்கள் நெற்பயிருக்குப் பாதகமான இதர பூச்சிகளை ஆம்பிதியான் ப்ராட் ஸ்பெக்ட்ரம் பூச்சிக் கொல்லியினால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும் என்பதை.

பல நாடுகளில் சோதிக்கப்பட்டுள்ள **ஆம்பிதியான்** செழுமை-யான, லாபகரமான நெற்பயிர் விளைச்சலுக்கு வழி செய்யும் தலைசிறந்த பூச்சிக்கொல்லி.

மிகத்திறன் வாய்ந்த, ப்ராட் ஸ்பெக்ட்ரம் (அகண்டு பரவிச்செயல் புரியும்) பூச்சிக்கொல்லியான **ஆம்பிதியான்,** ஒழிப்பதற்கு மிகக் கடினமான பூச்சிகளையும் திறமையாகக் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்த பூச்சிக்கொல்லிச் செயல் கொண்டது.

பெரும்பாலான ஆர்கானோ:பாஸ்:பேட் பூச்சிக் கொல்லிகளை விட அதிக நேரம் பயிர்களில் தங்கிச் செயல் புரியும் தன்மை கொண்ட **ஆம்பிதியான்** சிக்கனத்துடன் இணைந்த பத்திரத் தன்மையை உறுதி செய்கிறது.




**விவசாயப் பிரிவு,**
**ஸயனமைட் இந்தியா லிமிடெட்**
த.பெ எண் 9109, பம்பாய்-25.

CYANAMID

***உலகெங்கும் விவசாயத்திற்கு சேவை செய்கிறது***

SISTA'S-CI-461 Tam



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## • சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை,

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

-சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

தமிழரசு

# அழகு சிரிக்கும் மெழுகுப் பதுமைகள்





எழிலன்

லண்டன் மாநகருக்கு வரும் எவரும் மெல்போர்ன் வீதியிலுள்ள அந்தப் பெரிய கட்டடத்திற்குள் நுழைந்து பார்க்கத்தவறுவதேயில்லை. உள்ளே சென்று வந்தவர்கள் அங்குக் கண்டவற்றை வாழ்நாள் முழுவதும் மறப்பதுமில்லை. மற்றவர்களிடம் சொல்லத் தவறுவதுமில்லை. அந்தக் கட்டடத்தில்தான் புகழ் பெற்ற மேடம் டூஸட்டின் (Madam Tossaud's) மெழுகுப் பதுமைகள் காட்சியளிக்கின்றன. நிற்பவை மெழுகுப் பதுமைகள்தான். உண்மை உருவங்கள் இல்லையென்பதை அதன் அருகில் எழுதி வைத்திருப்பதைக் கொண்டுதான் உணர முடிகிறது. அவ்வளவு இயற்கையான வடிவம்.

முதலில் நுழைந்தவுடன் காண்பது கிராண்ட் ஹால் (Grand Hall) என்றழைக்கப்படும் புகழ் பெற்றவர்களின் அறை. உலகப் புகழ் பெற்ற உருவங்கள் உள்ள இங்கு முதலிடத்தைப் பெற்றிருப்பது இன்றைய இங்கிலாந்தின் அமைச்சரவை. இதன் சிறப்புப் பகுதி என்னவென்றால் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களது உருவங்கள் உடனடியாக இடம் பெற்றுவிடும். அதை யடுத்து இன்றைய அரசக் குடும்பம். இராணியின் அந்தச் சிரித்த முகம்—அரசிக்கான உடைகள்—அரசியை நேரில் சந்தித்த நிறைவு உண்டாகிறது. அருகில் புதிதாக அமைக்கப்பட்ட இளவரசர் சார்லசின் உருவம். அதைத் தொடர்ந்து வரலாற்றுப் புகழ் பெற்ற இங்கிலாந்து அமைச்சர்களான அட்லி, மாக்மில்லன், சர்ச்சில் ஆகியோர் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார்கள். சர்ச்சில்—அவரது கையிலுள்ள சுருட்டு நுனியில் நெருப்புக் கனன்று கொண்டிருப்பதைக் கூடப் பார்க்க முடிகிறது. இதே வரிசையில், நேரு, கென்னடி ஆகியவர்களோடு, ஜாக்குலின் கருப்பு முகத்திரையிட்டுக் கணவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளும் காட்சி இடம் பெற்றிருக்கிறது. முதன் முதலில் விண்வெளியில் நடந்த ருஷ்யர் காகரின், அமெரிக்கர் கிளன் ஆகியோர் இடம் பெற்றிருக்கும் இப் பகுதியில் விரைவில் வர விருப்பவர்கள் 'அப்போலோ 17' வீரர்கள். அந்த அறையில் இறுதியில் ஒரு பெஞ்சில் வயதான கிழவி தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள கைடு புத்தகத்தை நழுவ விட்டுவிட்டு அசதியில் உறங்கிக் கொண்டிருக்கிறார். அவள் புத்தகத்தை எடுத்துத் தட்டி எழுப்ப முயலுகிறோம். அருகிலுள்ள காவலாளி சிரிக்கிறான். அப்பொழுதுதான் உணருகிறோம் அதுவும் பதுமைதான் என்பதை.

அடுத்த அறையில் மார்க்ட்வைன், டிக்கன்ஸ், டூபாய் போன்ற ஆசிரியர்கள் படைத்த அழியாக் காவியங்களின் முக்கியக் காட்சிகள் (Tableaux) இடம் பெற்றுள்ளன. இங்கு எல்லாவற்றையும் விட அனைவரையும் கவரக் கூடியது '' தூங்கும் அழகியும் குள்ளர்களும் '' தான். அங்கு அந்த அழகி மூச்சு விடுவதைக் கூட நாம் பார்க்க முடிகிறது.

அடுத்த கூடம் ' வாழும் கதாநாயகர்கள் ' என்றழைக்கப்படுகிறது. இங்குச் செய்தித் தாள்களில் பிரபலமாக அடிபடுபவர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சோபியா லாரன், எலிஸபெத் டெய்லர், அவரது கணவர் ரிச்சர்ட் பாட்டன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இப்பொழுது காட்சியளிப்பவர்கள் பீட்டில்ஸ் இசை மேதைகள். அவர்கள் வாயசைவுடன், இசையையும்கேட்கிறோம். தினசரி பாடும் பாடல்களும் மாறுமாம். அதே அறையில் கடந்த ஆறு தலைமுறை அரச குடும்பத்தினர் வீற்றிருக்கின்றனர். அடேயப்பா அவர்கள் ஆடை ஆபரணங்களில்தான் எவ்வளவு ஆடம்பரம் !

தொடர்ந்து டிரிபால்கர் யுத்தம் நடந்த இடத்திற்குச் செல்கிறோம். ஆம் ! இரண்டடுக்குக் கொண்ட நெல்சனின் கொடிக் கப்பலான (H. M. S. Victory) வெற்றியை அப்படியே நிர்மாணித்திருக்கிறார்கள். இதற்கான செலவு 50,000 பவுன்கள். (நெல்சன் உபயோகித்த உண்மையான கப்பலின் மதிப்பைப் போல இரு மடங்கு !) கப்பலின் உள்ளே நுழைகிறோம். வாத்தியங்கள் போர் ஒலி எழுப்புகின்றன. பீரங்கிகள் வெடிக்கின்றன. ஏதேதோ ஓசைகள், வீரர்கள் இங்குமங்கும் ஓடுகின்றனர். கப்பலோடு கப்பல் மோதும் ஓசை. நெருப்புப்பற்றி எரிகிறது. மாலுமிகளின் மரண ஓலம். —ஒரே புகை ; சற்று நேரத்திற்குப் பின்னர் கப்பலின் இரண்டாம் தளத்தில் அடிபட்டுக் கிடக்கும் நெரிசலைக் காண்கிறோம்.

பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவற்றின் படபடக்கும் கொடிகள் பறக்கின்றன. இறுதியாக, சர்ச் மணியின் ஒலியும் (இறந்த அரசருக்கான) வெற்றி ஊதலின் இசையும் இணைந்து கேட்கிறது. '' காட்சி முடிந்தது. அடுத்த பகுதிக்குப் போகலாம் '' என அறிவிக்கிறார்கள். மெய் சிலிர்த்து நின்ற நாம் நினைவிற்கு வருகிறோம். ஒலி, ஒளி நிகழ்த்திய அற்புதத்தை எண்ணி வியந்தபடி அடுத்துள்ள கொடுமைகளின் கூடத்திற்குள் (Chamber of Horror) நுழைகிறோம். நுழைந்தவுடன் ஒரு காவலாளியைப் பார்க்கிறோம். '' இவர் இங்கு 50 ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினார் ; தனது மறைவிற்குப் பின்னர் தனது உருவம் இங்கு இடம் பெற வேண்டும் என்று விரும்பினார். அதனால் நிறுத்தப்பட்டிருக்கிறது '' என்று சொல்லுகிறார்கள். வியக்கிறோம். இருந்தாலும் அந்தக் கண்கள் நம்மையே பார்த்துக்கொண்டிருப்பதுபோல ஒரு பிரமை உண்டாகிறது. உள்ளே உலகின் பல்வேறு கொடுமைகளை அப்படியே சித்திரித்திருக்கிறார்கள். அவற்றில் பயங்கரமாகக் காட்சியளிப்பது புரட்சியின் பிறப்பான—' கில்லட்டின் ' இயந்திரம்தான். வெட்டப்பட்ட தலைகளுடன் வெட்டும் பகுதியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ரத்தக் கறை நமக்கு அருவருப்பைத் தருகிறது. உலகின் பயங்கரங்களை நிகழ்த்தியவர்கள் என்ற வரிசையில் பலர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

கோட்சேயைக் காணோம். ஆஸ்வால்ட் உருவமிருக்கிறது.

இந்தச் சிலைகளை எப்படி அப்படியே இயற்கையாக இவர்களால் செய்ய முடிகிறது? 1835-ல் சாதாரணமாகத் துவக்கப்பட்டுப் பெருமளவில் வளர்ந்திருக்கும் இந்த நிறுவனத்தின் அனுபவமே காரணம். ஒவ்வொரு சிலையையும் செய்ய 700 முதல் 1,000 பவுன் வரை செலவழிக்கப்படுகிறது. மூன்று மாதம்—ஓவியர், புகைப்படக் கலைஞர், சிற்பி, பொம்மை செய்பவர் இவர்களின் கடும் உழைப்பு ஒவ்வொரு சிலைக்குப் பின்னும் நிற்கிறது. பெரும் பாலும் உருவமாகச் செய்யப்படுபவர்கள் ஸ்டுடியோவிற்கு வந்து விடுவார்கள். வர முடியாதவர்களாயிருந்தால், பல்வேறு கோணங்களில் அவரது படம் எடுக்கப்படுகிறது. அவரது கை, கால் அங்கங்களைக் கவனித்து வர நிறுவனத்திலிருந்து கலைஞர் ஒருவர் அனுப்பப்படுகிறார். அளவுகள் எடுக்கப்படுகின்றன. முதலில் களிமண்ணில் அச்சுக்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் கெட்டிப்படுத்தப்பட்ட பின்னர் மெழுகு ஊற்றப்படுகிறது. மெழுகு இறுகிய பின் அச்சு பிரிக்கப்பட்டுச் சிலை தயாராகிறது. புருவங்களுக்கு அணிலின் வால் பயன்படுத்தப்படுகிறது. தலை மயிர்—மனிதத் தலை மயிரே—ஒவ்வொன்றாகத் தைக்கப்படுகிறது. இதற்கான விசேடத் தேர்ச்சி பெற்ற பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கண்கள் கண்ணாடியை உருக்கி அந்தந்த உருவத்திற்கேற்ப விசேடமாகத் தயாரிக்கப்படுகின்றன. உடை விஷயத்தில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒவ்வோர் உருவத்திற்கும் உண்மையில் யார் அவர்களுடைய உடையைத் தைக்கிறார்களோ அவர்களின் மூலமே ஏற்பாடு செய்கிறார்கள். உதாரணமாக, டிகால் அவர்களின் உருவம் அமைக்கிறார்கள் என்றால் அவருடைய தையற்காரர் அழைக்கப்படுகிறார்.

இப்படி, காலம் மாற மாறக் காட்சிகளில் புதுமை நிறைந்து கொண்டேயிருக்கும் இந்த அரிய காட்சியை, தனது வெளி நாட்டுப் பயணத்தின் போது கண்ட மாண்புமிகு அமைச்சர் ராசாராம் அவர்கள், இது போன்று தமிழ் நாட்டிலும் ஒன்று அமைத்து அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரலாம் என்று கருதினார். அவரது ஆர்வத்தின் பயனாக விளைந்த முயற்சிகளின் பயன் விரைவில் இத்தகைய கண்காட்சி ஒன்று தமிழகத்தில் அமையவிருக்கிறது. இதன் தொடர்பாக இலண்டனிலிருந்து வந்து தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து திரும்பியிருக்கும் திரு எம். ஹெர்பட் (Mr. M. Herbert) என்ற நிபுணர் அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க விருக்கிறார். திரு ஹெர்பட் இலண்டன் கண்காட்சியில் இயக்குநர்களில் ஒருவர். திருச்சி, மதுரை, சிதம்பரம் போன்ற இடங்களில் பல கலைஞர்களைச் சந்தித்த இவர் சொல்வது ''மெழுகுப் பதுமைகள் வார்ப்பதில் ஒப்பற்ற கலைத் திறன் கொண்ட கலைஞர்கள் பலரைச் சந்தித்தேன்; இவர்கள் உதவியுடன் நிச்சயமாக இத்தகைய கண்காட்சி ஒன்றை வெற்றிகரமாக நிறுவ முடியும்.''

நமக்கு இலக்கியம் வழங்கிய ஈடில்லாக் காட்சிகளையும், வரலாற்றின் மூலம் காலம் கற்பித்தவற்றையும், அழகிய மெழுகுப் பதுமைகளாகக் காணும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை.

## அண்ணா கண்ட எழில் தோற்றம்



கூவம் ஆற்றைச் சீரமைக்கின்ற திட்டம் சென்னையை எழில் நகராக்கும். மற்ற நகரங்களிலெல்லாம் இத்தகைய இயற்கை வசதியை-அதாவது நகருக்கு மத்தியில் ஆறு ஓடுவதை-பெரும் வாய்ப்பாகக் கருதுகிறார்கள்.

தேம்ஸ் நதிக்கு லண்டன் மாநகர மக்கள் அளித்துள்ள முக்கியத்தும் பற்றி-அங்குப் போய் வந்தவர்கள் சொல்லவும், படித்தும் அறிந்திருக்கிறேன். உல்லாசமாக உலாவரத்தக்கப் பூங்காற்று வீசுகின்ற பூங்காக்கள் நிரம்பிய கரைகளை அந்த ஆறு பெற்றிருக்கின்றது. அப்படிப் பட்ட இயற்கை அழகைக்கொண்ட இந்த நதி சென்னை நகரினுள் ஊடுருவிப் பாய்கிறது.

பார்க்கிற வெளிநாட்டாரெல்லாம் இப்படி ஓர் ஆறு இந்த ஊரில் இருந்ததா? என்று கேட்கும்படியாக இந்தத் திட்டம் அமைய வேண்டும். பாங்காக் நகரில் கடை வீதிக்கு நடுவே ஒரு வாய்க்கால் வாயைப்பிளந்து கொண்டிருக்கிறது. அதில் வேண்டும்போது மட்டும் கடல் நீரை விட்டு, அலங்காரப் படகுகளில் வியாபாரம் நடத்துகிறார்கள். வியாபார நேரம் முடிந்ததும் தண்ணீரை வடியச் செய்கிறார்கள், இப்படி அங்கெல்லாம் இயற்கை வளத்தை அழகுபடுத்தவும், பயன்படுத்தவும் செய்கிறார்கள்.

அதைப் போல எழிலும் பயனும் ஒருசேர அமைந்த சீரிய திட்டம் கூவம் சீரமைப்புத் திட்டம். இத்திட்டத்தை நிறைவேற்றி சென்னையைச் சிங்காரத் திருநகராக்குவது நமது கடமை.

(19—9—1967 அன்று கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் துவக்கிவைத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.)

# வெண்பாப் போட்டி

## 50. வாயார என்றுமே வாழ்த்து

‘முன்னறி தெய்வ’த்தை ‘மூட’வெள்ளம் கொண்டுசெல்ல
கண்மணிகள் தேம்பிக் கதறியழ—அன்னவர்க்குத்
தாயாகி அன்புடன் ‘தத்தெடுத்த’ நல்லரசை
வாயார என்றுமே வாழ்த்து.

**—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.**

‘நான்’ அகந்தை மாய்த்தொழித்து, ‘நாம்’ பொதுமை யோங்கிடத்
தேன்சுவைத் தொண்டாற்றும் செம்மல்கள்—வான்மழைத்
தாய்போல்வர் தாரணிக்கு; தாம்பெறுவர் மக்களிடம்
வாயார என்றுமே வாழ்த்து.

**—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.**

நோய்நொடிகள் தொற்ருது நோன்பு பலவிருந்தே
ஆய்கலைகள் தோற்றுவித்தும் அன்பூட்டித்—தோயுநலச்
சேய்வாழச் செந்நீரைச் சேர்த்தீயும் தாய்மாரை
வாயார என்றுமே வாழ்த்து.

**—புலவர் பூங்குழலி, பொருளூர்.**

‘வெள்ளக் கொடுமையினுல் வீடிழந்தோம்’ என்றழுத
வள்ளி மயிலே! கவலையில்லை—அள்ளியள்ளித்
தாயாகித் தந்து துயர்தணித்த நம்மரசை
வாயார என்றுமே வாழ்த்து.

**—புலவர் ஆ. திருஞானசம்பந்தன், திருச்சி-4.**

சேயாகப் பெற்றெடுத்துச் சீராட்டி ஆளாக்க
ஓயாத துன்பம் உவந்தேற்கும்—தூயமனத்
தாயாராம் தெய்வத்தின் தாள்பணிந்து நெஞ்சிருத்தி
வாயார என்றுமே வாழ்த்து.

**—நெற்குப்பை கதி. கணேசன், காரைக்குடி-1.**

பஞ்சம் அறுப்போம்! பசியொழிப்போம்! பார்மிசை
வெஞ்சமர் போக்கிநாம் வெற்றிகொள்வோம்—துஞ்சவரும்
நோயோ துயரோ நுழையாத பொன்னுளை
வாயார என்றுமே வாழ்த்து!

**—சிவ. கிருட்டிணன், கணியூர்.**

ஓராண்டு கூட உடல்தழுவி வாழாமல்
சீராண்ட நற்கணவன் சென்றிட்டான்—நார்ஆனுள்
தேயாத ஓவியத்தைத் தேர்ந்தொருவன் கைப்பிடித்தான்
வாயார என்றுமே வாழ்த்து!

**— புலவர் ந. கருணுநிதி, வங்கனூர்.**

தாய்மொழியைத் தாயகத்தைத் தம்முயிர்போல் பேணியவர்
காய்மலராய் ஆகாமல் காவியமாய்—ஆய்குழலே!
மாயா வரலாற்றில் வாழ்கின்ற அண்ணுவை
வாயார என்றுமே வாழ்த்து.

**—எழில்வேந்தன், சென்னை-28.**

நாட்டில் உழைத்துழைது நைந்திடும் மக்களின்
வாட்டமதை நீக்கிடவே மாண்பாகக்—கூட்டோடு
தூயநற் றெண்டையே சோர்வின்றிச் செய்பவரை
வாயார என்றுமே வாழ்த்து.

**—சீனிவாசம்மாள், சேலம்-9.**

---

**பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:**

**திரு வி. ஆர். துரை,**
**கசிநாயக்கன்பட்டி (அஞ்சல்),**
**(வழி) திருப்பத்தூர்,**
**வ. ஆ. மாவட்டம்.**

அற்றோர்க்கும் வாழ்வுதரும் அண்ணாவின் நற்கொள்கை
பெற்றிருக்கும் ஆட்சிதனைப் பெற்றோமே—பொற்றொடியே !
தாய்போலக் காக்கும் தமிழரசை நெஞ்சார
வாயார என்றுமே வாழ்த்து.

—அமராவதியான், அரக்கோணம்.

மூலை முடுக்கெல்லாம் முன்னோர் இலக்கியத்தின்
ஓலை திரட்டி உயர்பதிப்பு—வேலையினை
ஓயாது செய்த உவேசா பெரியாரை
வாயார என்றுமே வாழ்த்து.

—விசாலாட்சி, மதுரை-11.

தாயாகத் தோன்றித் தரணியே போற்றுகின்ற
சேயாக மாற்றச் செயல்புரிந்தும்—சேயிழைபூண்
நாயகியாய் வந்து நலம்பொழியும் பெண்குலத்தை
வாயார என்றுமே வாழ்த்து.

—வித்துவான் சா. மு. இராசமாணிக்கம், பெங்களூர்-5.

தாயைத் தமிழைத் தகைசான்ற தாய்நாட்டைத்
தூய உளங்கொண்ட தொண்டரை—நேயமுடன்
நாய்போலும் நன்றி மறவாத நல்லோரை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் ந. புவியரசு, களக்காடு.

நாட்டின் நலம்பேணும் நல்லோரை ; வள்ளுவன்சீர்
ஏட்டின் வழிநடக்கும் ஏந்தலை ;—வீட்டின்கண்
வீயா விருந்தோம்பும் இல்லறத்தோர் தம்மையே
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் அ. சுந்தரேசன், சுந்தரம்பள்ளி.

வன்முறையைத் தூண்டிடும் வஞ்சகர் கூட்டத்தைப்
பன்முறைகள் வேண்டியதும் பண்பாகும்—அன்னையவள்
சேயாகப் பெற்றெடுத்த செந்தமிழ்க் காவலனை
வாயார என்றுமே வாழ்த்து.

—இரா. பெரியசாமி, அருப்புக்கோட்டை.

ஓங்கி வளர்ந்த உயர்தனிச் செம்மொழிகாண்
பாங்கி னுயர்ந்தநம் பைந்தமிழே !—தேங்குசுவை
தேயாச் செழுந்தமிழைத் தேமதுரத் தாய்மொழியை
வாயார என்றுமே வாழ்த்து.

—கா. பி. தங்கவேலன், ஆமூர்.

மக்கள் உணவுபெற மல்கிடும் நோயகல
சிக்கலைப் போக்கிச் செழுமையுற—எக்கணமும்
ஓயாது நாட்டிற் குழைத்திடும் உத்தமரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பழ. கந்தசாமி, சத்திரப்பட்டி.

உன்னால் முடியாத ஒன்றை உலகுய்யப்
பன்னாளும் செய்வாரைப் பார்த்திட்டால்—அன்னாரைத்
தாயாக எண்ணித் தலைதாழ நீவணங்கி
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

பாடுபடும் நல்லுழவர் பாட்டாளி பல்கலைஞர்
நாடுதனைப் பேணிடும் நல்வீரர்—பீடுடைய
தாயார் தமிழ்ப்புலவர் தக்கார் இவர்களை நீ
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் முத்து. சண்முகன், சிறுகுடி.

பட்டா வழங்குகின்ற பண்புள்ள ஆட்சியைக்
கட்டாயம் கண்போலக் காப்பதுடன்—கெட்டழியும்
தீயா ருடன்சேர்ந்து செய்ந்நன்றி கொல்லாமல்
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

தன்னலமே நோக்காது தாரணியில் வாழுயிர்கள்
நன்மை பெறவெண்ணி நாளும்வாழ்—பொன்மனமார்
தூய அறிஞரை தோழ!நீ பின்பற்றி
வாயார என்றுமே வாழ்த்து.

—முருகவேள் நம்பி, உலகம்பட்டி.

கல்வி புகட்டும் கனிவான ஆசிரியர்
பல்தொழில் செய்கின்ற பாட்டாளி—நல்லுணவுக்
கோயாது உழைக்கும் உழவர்இம் மூவரையும்
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் இ. சூசைமாணிக்கம், சிறுகுடி.

நோயாளி மக்களுக்கும், நொந்துகெட்ட ஏழைகட்கும்,
தூயவராம் தொல்குடி மக்களுக்கும்—நேயமுடன்
தாயாகி என்றென்றும் தொண்டாற்றும் தக்காரை
வாயார என்றுமே வாழ்த்து.

—ஆ. செல்லபாண்டியன், அருகாவூர்.

மானுக்கு நீருண்டு மேலோர்கள் போற்றுகின்ற
வானுக்கு மதியுண்டு வையத்தில்,—ஊனுருகும்
ஓயாத் தொழுநோயர்க் குற்ற அரசுண்டு
வாயார என்றுமே வாழ்த்து.

—எஸ். திருநாவுக்கரசு, தூத்துக்குடி-2.

தன்னுயிர்க்கும் மேலாகத் தாய்த்தமிழை எண்ணித்தம்
இன்னுயிரைச் செந்தீக் கிரைகொடுத்தார்—மன்னுலகில்
மாயாப் புகழ்பெற்ற மாத்தமிழ் ஏறுகளை
வாயார என்றுமே வாழ்த்து.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

நல்லரசு நாடுகின்ற நன்மைமிகு திட்டமுடன்
பல்வளமும் பாங்குற ஏருழவும்—சொல்லவந்தே
ஆய்ந்தறிய நற்பணிகள் ஆற்றும் தமிழரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—பொ. வெற்றிவேலன், புள்ளாக்கவுண்டன்புதூர்.

சூழும் வறுமையும் சுற்றிவரும் பொய்ம்மையும்
பாழும் மடமையும் பண்பிலாரும்—வீழவே
ஓயாது மக்கட் குழைக்கின்ற உத்தமரை
வாயார என்றுமே வாழ்த்து.

—சரஸ்வதி மணாளன், மயிலாப்பூர்.

கள்ளமில்லா நெஞ்சம் கடமைவழு வாப்பண்பு
தெள்ளுதமிழ் ஆற்றலொடு தீரமிகும்—உள்ளத்தால்
ஓயா(து) உழைக்கும் உயர்குணம் கொண்டவரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பா. பா. சோமநாதன், பட்டினப்பாக்கம்.

வான்புகழ் நாட்டிய வள்ளுவனார் பாப்படி
ஈன்ற பொழுதினும்தாய் இன்புறச்—சான்றோனாய்
மாயிரு ஞாலத்தில் வாழ்பவனை வான்மதியே
வாயார என்றுமே வாழ்த்து.

—த. வான்மதி, முதலிப்பட்டி.

நாளுக் கொருவேளை நல்ல உணவின்றிக்
காலைமுதல் மாலைவரை காய்வெயிலில்—நாளெல்லாம்
ஓயா துழைக்கும் உழவர்கள் வாழ்கவென்று
வாயார என்றுமே வாழ்த்து.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி.

தத்தை மொழியாய்த் தரணியில் மாந்தர்தம்
சொத்தைப் பெருக்கமனச் சுத்தமின்றி—நித்தமும்
பேயாய் அலைதல் பெரும்பிழை என்றவரை
வாயார என்றுமே வாழ்த்து.

—சு. தருமன், மேலாண்மறைநாடு.

இன்பம் அடைதற்கே ஏங்கும் மனமே! உன்
துன்பம் ஒழிதற்குச் சொல்லுகின்றேன்—அன்பார்ந்த
தூயார்கள் போற்றுகின்ற தொன்மைத் தமிழ்த்தாயை
வாயார என்றுமே வாழ்த்து.

—நா. திருநாவுக்கரசு, மேலைச்சிவபுரி.

வெள்ளக் கொடுமையால் வீடிழந்த மக்கட்கே
அள்ளிக் கொடுத்தன்பால் ஆதரித்துக்—கிள்ளையே!
ஓயாமல் தொண்டாற்றும் ஒப்பிலா நம்மரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

நாடும் மொழியும் நலமுற, ஏழைதன்
கேடும் வறுமையும் கெட்டொழியப்—பாடுபட்டு
ஓயா துழைக்கின்ற உத்தமரைப் பாராட்டி
வாயார என்றுமே வாழ்த்து.

—இரா. நாகலிங்கம், வயலோகம்.

நெஞ்சொடியப் பாடுபட்டும் நீங்கா வறுமையினால்
பஞ்சையராய் வாழ்வதுவோ பாருலகில்?—வஞ்சமிலாத்
தாயாம் சமதருமத் தத்துவத்தை யென்தோழா
வாயார என்றுமே வாழ்த்து.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

சொன்னசொல் மாறாதார் சூதறிய மாட்டாதார்
அன்னமிட்டுக் காக்கும் அருங்குணத்தார்—தன்னுயிரைத்
தாய்நாட்டிற் கொப்படைக்கும் தக்கார்கள் யாவரையும்
வாயார என்றுமே வாழ்த்து.

—ச. வைத்திலிங்கம், சித்தாய்மூர்.

நெடுநேரம் ஆனதனால் நேரிழையுன் நெஞ்சம்
கடுங்கோபம் கொள்ளுவதோ? கண்ணே!—நடுநின்றே
ஓயாது மாணவர்க்கே உழைக்குமிவ் வாசானை
வாயார என்றுமே வாழ்த்து.

—சி. திருநாவுக்கரசு, மணக்குடி.

நாட்டாலே காவியத்தை ஆக்கிடும் பாவலர்க்கும்
பாட்டுக்குச் சேவைசெயும் நல்லார்க்கும்—நாட்டமுடன்
ஓயா(து) உழைத்திடுவிஞ் ஞானிக்குஞ் செப்புக
வாயார என்றுமே வாழ்த்து.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

பசியென்று வந்தார்க்குப் பாலமுதம் தந்தே
கசிந்துருகும் நன்மனத்தால் கண்ணே—புசியென்று
வையாது வாய்நிறைய வார்ப்பாரை இவ்வுலகில்
வாயார என்றுமே வாழ்த்து.

—அருணை பூவன. தீனதயாள், திருவண்ணாமலை.

நாட்டின் நலம்நாடி நாட்டமுடன் தம்முயிரை
வீட்டி விடுதலையை வெற்றியுடன்—ஈட்டியநல்
தாய்போலும் சான்றோரைத் தாரணியே நீநினைந்து
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

ஓயா துழைக்கின்ற உத்தமரை, நாளெல்லாம்
தேயா மனம்படைத்த தெள்ளியரை—வையாதே !
சேயாக நாமிருக்கச் செய்கின்ற அன்னாரை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

ஏழைசொல் அம்பலம் ஏறிற்றே, இந்நாளில் !
வாழ இடம்கேட்டு வாழ்கின்றார்—ஏழைக்கே
தூயதோர் தொண்டாற்றும் சொந்தத் தமிழரசை
வாயார என்றுமே வாழ்த்து.

—மலை. மா. ஆறுமுகம், படப்பை.

நாட்டின் விடுதலைக்கு நாளும் உழைத்தவர்கள்
கேட்டைக் களையக் கிளர்ந்தெழுந்தோர்—வாட்டமுடன்
சாயும் மனிதகுலம் தானுயரச் செய்தோரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பெ. தியாகராசன், குன்னம்.

பட்டங்கள் தேறிப் பலர்போற்ற வாழ்கின்றோம் !
குட்டும் பிரம்படியும் கொஞ்சமா—பட்டிருப்போம் ?
ஓயா தரிச்சுவடி ஓதியஅவ் வாசானை
வாயார என்றுமே வாழ்த்து.

—என். சுந்தரம், வெண்பாவூர்.

முக்கழகம் கண்டுவந்து முத்தமிழைப் பாடிநின்ற
முக்கடலை ஆண்டுவந்த மூவேந்தை—முக்கனியை,
வாயூறும் முப்பாலை, வான்புகழ்சேர் தாயகத்தை,
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் பூங்குன்றன், பொருளூர்.

ஈன்றாளை மற்றும் இடுக்கண் களைந்தோரைச்
சான்றோனாய் ஆக்கிய தந்தையை,—ஆன்றமைந்த
தூயபேர் ஆசானைத் தொண்டாற்றும் மாந்தரை
வாயார என்றுமே வாழ்த்து.

—ப. குப்புசாமி, திருச்சி-4.

தன்னுயிரைத் தந்தேனும் தான்பெற்ற செல்வத்தை
இன்பமுற வைக்கும் இதயமுள்ள—அன்புநிறைத்
தாயாரைப் பேணித் தணியாத பாசமுடன்
வாயார என்றுமே வாழ்த்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

இன்பத்தைத் தந்திடுவாள் இன்னமுதும் ஊட்டிடுவாள்
துன்பத்தில் ஆறுதலைச் சொல்லிடுவாள்—அன்பினால்
ஓயா துழைத்திடுவாள் நன்மனைவி அன்னவளை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

ஆல்போல் தழைத்தே அறுகுபோல் வேரோடிப்
பால்போல் மனத்தைப் படைத்தார் !செங்—கோல்கொண்டார்
தேயாத வானிலவு ! செந்தமிழர் நல்வாழ்வை
வாயார என்றுமே வாழ்த்து.

—புலவர் செ. பெ. கோவிந்தசாமி, குன்றைவலம்.

சிங்கத் தமிழா ! சிறப்புணர்த்தும் நூல்பலவும்
தங்க மொழியாலே தாமளித்துப்—பங்கமின்றித்
ஓயாத நற்றொண்டால் ஓங்குபுகழ் கொண்டாரை
வாயார என்றுமே வாழ்த்து.

—பசுமலை வீர. முருகேசன், தருமபுரி.

என்னை அடிக்க எலும்பொடியும் ; என்மகன்கை
இன்னும் இருக்கும் இரும்பாக ;—என்னென்பேன் !
‘ ஓயா துழைப் ’பென் றுளமுருகும் தந்தைக்கு
வாயார என்றுமே வாழ்த்து.

—சி. பி. அரங்கநாதன், நுங்கம்பாக்கம்.



# தமிழகம் முழுதும் நிலநீர் ஆய்வுப் பணிகள்

நிலத்தினடியில் உள்ள நீர் வளங்களைப் பயன்படுத்துவதற்கு முறையான, அடிப்படையான, விரிவான, அறிவியல் ரீதியான ஆய்வுகளை மேற் கோள்வதில் தமிழ்நாடு, இந்தியாவிலேயே சிறப்பிடம் வகிக்கின்றது. ஐ.நா. சபையில் வளர்ச்சித் திட்டங்களின் கீழ் இப்பணியை மேற்கொண்ட மாநிலங்களில் தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது.

ஐ.நா. வல்லுநர்களின் மேற்பார்வையில் இப்பணிகளில் நவீன முறைகளையும், உத்திகளையும் கையாள்வதில் மாநிலம் அடைந்துள்ள முன்னேற்றம், உலகின் மிக முன்னேற்றமடைந்த நாடுகளின் பணிகளுக்கு நிகரானது ஆகும்.

மாநிலத்தில் 1966-லிருந்து 1972 வரையில் நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ( Sedimentary areas ) விஞ்ஞானப் பூர்வமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நிலத்தினடி நீர் வளங்கள் இருப்பதைக் காட்டும் கூறுகள் கண்டு பிடிக்கப்பட்டு, அவற்றின் பரப்பு, ஆழம் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

தமிழக நிலநீர் இயக்கம் தனது நிருவாகத்தில் ஒன்பது பொறியியல் பகுதிகளைக் கொண்டுள்ளது. மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் ஆய்வுப் பணிகளை இது மேற்கொண்டுள்ளது.

மாநிலத்தின் நிலத்தடி நீர்வளத்தை விஞ்ஞான பூர்வ முறையில் கண்டுபிடித்துக் கணக்கிடுவதற்கென ரூ. 11 கோடி செலவாகும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, நிதி உதவிக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழகம் நீர் வளத்தில் பற்றாக் குறையான மாநிலம். ஆற்று நீர் வளங்கள் அநேகமாக அனைத்தையும் இங்குப்பயன்படுத்தியாகி விட்டது. மாநிலத்தில் சராசரி ஒரு நபருக்குக் கிடைக்கும் நீர் வசதியின் அளவு 0·02 மில்லியன் கன அடி. அனைத்திந்தியாவில் இந்தச் சராசரி 0·14 மில்லியன் கன அடியாக உள்ளது.

மாநிலத்தில் சாகுபடி செய்யப்படும் மொத்த நிலப்பரப்பு 73·81 இலட்சம் ஹெக்டேர். சாகுபடி நிலம் நிகரப்பரப்பு 61·65 இலட்சம் ஹெக்டேர். இதில் பாசன வசதி உள்ள நிலம் 25·9 இலட்சம் ஹெக்டேர்தான். அதாவது பயிராகும் நிகர நிலப்பரப்பில் 42 சத விகிதம் தான் பாசன வசதி பெற்றுள்ளது. பாசன வசதி பெற்றுள்ள 25·9 இலட்சம் ஹெக்டேரில் 69 சத விகித நிலங்கள் கால்வாய்ப் பாசனமும், 31 சதவிகித நிலங்கள் பாசனக் கிணறு, குழாய்க் கிணறு முதலியன மூலமும் இவ் வசதி பெற்றுள்ளன. பயிராகும் நிலங்களில் கணிசமான அளவு நிலங்கள் பாசன வசதியை எதிர் நோக்கி நிற்கின்றன. சரியான மழை இல்லாவிட்டால் ஏரிப் பாசனப் பகுதிகள் வறண்டு விடும். பருவ மழை தவறி விடுகின்ற நிலையும், உரிய காலத்தில் மழை பெய்யாத நிலையும் இருந்து வருகின்றது. இவை அனைத்துக்கும் ஈடு கொடுக்கக் கூடிய ஒரு வழி, நிலத்தினடியில் உள்ள நீரைப் பயன்படுத்துவதேயாகும்.

நீர் வளத்தில் பற்றாக்குறையான நிலைமை இருந்தும் பசுமைப் புரட்சியில் மாநிலம் எடுத்துக் காட்டான வெற்றி கண்டிருக்கிறது என்றால், வேறு திருந்திய முறைகளுடன், குறைந்த நீர் வளத்தை மதிநுட்பத்துடன் பயன்படுத்தியதும் அதற்கு முக்கியக் காரணம் ஆகும். பசுமைப் புரட்சியில் அடுத்த கட்டமாக மிகு பசுமைப் புரட்சி, பசுமைமயப் புரட்சி ஆகியவைகளைக் காண வேண்டியவர்களாக இருக்கின்றோம். தொழில் தேவைகளுக்கும், மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் அதிகமான அளவில் நீர் வேண்டியிருக்கிறது.

### நீர் கிடைக்கும் வழிகள்

பொதுவாக நீர் வளம் கிடைப்பதற்குரிய வழிகள் நான்கு. அவை : ஆறுகள், ஏரிகள், ஓடைகள் முதலியவற்றில் உள்ள நீர், இதனை மேற்பரப்பு நீர் எனலாம். இரண்டாவது நிலத்தடி நீர்; மூன்றாவது கடல் நீர். நான்காவது நீர்த் துளிகள் கொண்ட மேகம்.

கடல் நீரைப் பயன்படுத்துவது என்றால் அதன் உப்பை அகற்றியாக வேண்டும். மேகம் வேண்டும் போது மழையாகப் பொழிய வேண்டுமென்றால் செயற்கை முறையில் மழை பெய்விக்கச் செய்ய வேண்டும். இவை பொருளாதார ரீதியில் கட்டுபடியாகக் கூடிய செயல் முறைகள் ஆவதற்கு இன்னும் எவ்வளவோ காலமும், தொழில் நுட்ப முன்னேற்றமும் ஏற்பட்டாக வேண்டும். எனவே, இப்போதைக்கு மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் இவை இரண்டும்தான் நமக்கு உள்ள வழிகள். இவற்றுள் மேற்பரப்பு நீர் வளங்களில் 94 சத விகிதம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, நீர் வளத்தைப் பெருக்க எஞ்சி உள்ள ஒரே வழி நிலத்தடி

நீரைப் பயன் படுத்துவதுதான். தூய நீர் வளத்தில் 97 சத விகிதம் நிலத்தின் அடியில் தான் உள்ளது. ஓடைகள், ஏரிகள் போன்றவைகளில் உள்ள நீர் வளம் 3 சதவிகிதம்தான். ஆனால், நிலத்தடி நீர்வளம் முழுவதையும் பயன்படுத்துவது என்பது இயலாது. நிலவியல் கூறுபாடுகள் காரணமாக, ஒரு குறிப்பிட்ட சதவிகித நீரைத்தான் விசையேற்றங்கள் மூலம் கொண்டு வர முடியும்.

### 11 இலட்சம் கிணறுகள்

நில நீரைப் பயன்படுத்துவதில் தமிழகத்தில் ஏற்கெனவே 11 இலட்சம் கிணறுகள் இருக்கின்றன. விவசாயத்துக்கும் மற்றும் பல்வேறு தேவைகளுக்கும் இவை பயன்பட்டு வருகின்றன. மிகுந்த அளவில் நீரை எடுத்துக் கொண்டே இருப்பதால் பல பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் ஆண்டுக்கு ஆண்டு கீழே போய்க் கொண்டிருக்கிறது. எனவே, மாநிலத்தில் கிடைக்கக் கூடிய நில நீர் வளத்தை மிகுந்த அளவு செழுமை காணும் வண்ணம் பயன்படுத்திக் கொள்வதற்கு முறையான ஆய்வு அவசிய மாகின்றது.

நிலத்தடி நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழக அரசு, 1970 நவம்பரிலேயே நிலநீர் இயக்கத்தை ஏற்படுத்தியது. மேற்கொண்டு பொருளாதார மேம்பாட்டுக்காக, மாநிலத்தின் நீர் வளம் முழு



வதையும் முறையாக ஆய்வு செய்ய வேண்டும் என்பதே இந்த அமைப்பை ஏற்படுத்தியதன் நோக்கமாகும்.

ஒன்பது பொறியியல் கோட்டங்களைக் கொண்டு இந்த இயக்கம், ஒன்பது மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. மாநிலத்தில் கடந்த 50 ஆண்டுகளில் பெய்த மழை அளவு பற்றிய குறிப்புகள் தயாரிக்கப் பட்டுள்ளன. இதனைக் கொண்டு, நிலத்தடி நீர் வளத்தைக் கணக்கிட இயலும். தட்ப வெப்ப நிலை, புழுக்க நிலை, காற்றுவேகம், வெய்யில் காயும் நேரம் ஆகிய குறிப்புகளும் தயாரிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நீராழிகள் (Water Sheds) தெரிந்தெடுக்கப்பட்டு. ஓடிவிடும் நீர், ஆவியாகப் போய் விடும் நீர் அளவு, இதர இழப்புகள் ஆகியவைகளைக் கணிக்கக் கருவிகள் பொருத்தப் பட்டுள்ளன.



### ஆய்வுக் கிணறுகள்

ஆய்வுக்காக மாநிலம் முழுதிலுமாக 1,620 கிணறுகள் தெரிந்தெடுக்கப்பட்டு, நீர் மட்ட ஏற்ற இறக்க நிலைகள் குறித்து மாதந்தோறும் கணக்கெடுக்கப்படுகிறது. நீரின் தன்மை குறித்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஆய்வு செய்யப்படுகிறது. நிலத்தடி நீர் சுரவை வரைபடங்களைத் தயாரிப்பதற்கு, இந்த அளவீடுகள் இன்றியமையாதவை ஆகும். நில இயல், மண்-பாதைப் படிவ அமைப்புகள் ஆகியனவும் ஆராயப் படுகின்றன. இதுவரை 250 ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு, அதன் முடிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

நிலநீர் இயக்கத்தின் மற்ற சாதனைகளும் குறிப்பிடத் தக்கவை. விவசாய மறு நிதிக் கழகம், அனைத்து நாடுகள் வளர்ச்சிச் சங்கத் திட்டம் ஆகியவற்றின் பணிகளில், நிலநீர் இயக்கம் தரும் தொழில் நுட்பக் கருத்துக்கள் அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப் படுகின்றன. மாநில நில வள வங்கி தான் மேற்கொள்ளும் திட்டங்களின் சாத்தியக் கூறுகள் குறித்து இந்த இயக்கத்தின் கருத்துக்களைக் கோரி வருகின்றது.

### இயந்திரக் குடைவுத் திட்டம்

நிலத்தடி நீர் வளங்களை ஆராய்ந்தறிவதற்காக, மாநிலம் முழுதுக்குமாக இயந்திரக் குடைவுத் திட்டம் (Drilling Programme) தயாரிக்கப் பட்டுள்ளது. ஆய்வு முறையில் 360 இடங்களில் இயந்திரக் குடைவுத் துளைகள் போடப் படும். இதுவரை 69 இடங்களில் இயந்திரக் குடைவுத் துளையிடும் வேலை நிறைவு பெற்றுள்ளது. சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையப் பகுதியில் நீர் ஆய்வுக்காக 250 துளைகள் போடப்பட்டன. நில நீர் ஆய்வு பற்றிய முக்கியமான பணியோடு, அரசு நிறுவனங்கள் அரசுச் சார்பு நிறுவனங்கள் பலவும், தங்கள் நீர் வசதித் திட்டங்களில் சிக்கல்களைத் தீர்க்க, இந்த இயக்கத்தின் உதவியை நாடுகின்றன. முடிந்த அளவு அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, உதவி அளிக்கப்பட்டது.

நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில், அணைகள், தேக்கங்கள் கட்டுவது போன்ற பெரிய செலவிலான திட்டங்கள் தேவைப்படுவது இல்லை. நிலத்தடிநீர் ஆவியாகப் போய், சேதம் ஏற்படுவது குறைவு என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

### நிலவியல் அமைப்பு

நில நீர் ஆய்வக் கண்ணோட்டத்தில் தமிழகத்தின் நில இயல் அமைப்பை இரண்டு பெரும் பகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளலாம். 1. கரையோரச் சமவெளிகள், 2. மேற்கு மலையோரப் பகுதிகள். மேற்குப் பகுதியில் உள்ள பெரும்பான்மையான நிலம், அடியில் பாறைகளைக் கொண்டது.

மாநிலத்தின் தட்ப வெப்ப நிலையைப் பொறுத்த வரை பொதுவாக உயர்ந்த அளவு வெப்பம் 43 சென்டிகிரேடுக்கு மேல் போவதில்லை. குறைந்த அளவு தட்ப நிலை 180 சென்டிகிரேடுக்குக் கீழே இறங்குவதில்லை. ஜூனிலிருந்து செப்டம்பர் வரை தென் மேற்குப் பருவக் காற்று மூலமும் அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை வட கிழக்குப் பருவக் காற்று மூலமும் மாநிலம் மழைபெறுகின்றது. மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் வடகிழக்குப் பருவக் காற்று மூலம் மழை பெறுகின்றன. மாநிலம் முழுவதிலுமாக சராசரி மழை அளவு 945 மில்லி மீட்டர். இதில் கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் 500 லிருந்து 1,000 மில்லி மீட்டர் வரை குறைந்த அளவு மழையே பெறுகின்றன. நீலகிரி மாவட்டம் 1,750 மில்லி மீட்டர் வரை மழை பெறுகின்றது. ஒரு ஆண்டில் மழை பெய்யும் மொத்த நாட்கள் சுமார் 50.

### அடி நீர் வளத்தின் அளவு

இந்திய நாடு முழுவதிலும், தமிழகப் பகுதியிலும் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர் வளங்கள் குறித்துச் சில குறிப்புகள் தயாரிக்கப் பெற்றுள்ளன. மண் கூறுபாடுகளுக்கு ஏற்ப, மழை நீர் ஈரம் ஊடுருவி உள்ளே செல்லக் கூடிய அளவுகளை அனுமானித்து இது மதிப்பிடப்பட்டது. இந்திய நாடு முழுதிலுமாக மேலே எடுத்துக் கொண்டு வரப்படக்கூடிய நிலத்தடி நீரின் அளவு ஆண்டுக்கு சுமார் 3,000 இலட்சம் ஏக்கர் அடி என்று டாக்டர் கே.எல். ராவ், கணக்கிட்டிருக்கிறார். டாக்டர் கே.வி. ராகவராவ், டி.எஸ். ராஜு மற்றும் வி. ரமேசன் ஆகியோர் இதனை ஆண்டுக்கு 2,130 இலட்சம் ஏக்கர் அடி என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் தற்சமயம் 11 இலட்சத்துக்கு மேற்பட்ட கிணறுகளும் சில ஆயிரம் குழாய்க் கிணறுகளும் ஆண்டுக்கு 70 இலட்சம் ஏக்கர் அடி நீரைத் தந்து வருகின்றன. மாநிலத்

தில் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீர் வளம் 120 இலட்சம் ஏக்கர் அடி என்பது மிகைப்படுத்தப் படாத சாதாரண மதிப்பீடு ஆகும். மாவட்ட வாரியாக பாசனக் கிணறுகள், மின்சார பம்பு செட்டு வசதி உள்ள கிணறுகள் விவரம் தனி அட்டவணையிலும் படத்திலும் தரப் பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் பாசனக் கிணறுகள் பற்றிய விவரம்**

| மாவட்டம். | மொத்தம் உள்ள கிணறுகள். | மின்சார பம்புசெட்டு வசதி பெற்றவை. | மின்சார பம்பு செட்டு வசதி இல்லாதவை. |
|---|---|---|---|
| செங்கற்பட்டு .. | 67,363 | 50,973 | 16,390 |
| கோயம்புத்தூர் .. | 146,831 | 107,461 | 39,370 |
| தருமபுரி .. | 40,689 | 19,433 | 21,256 |
| கன்னியாகுமரி .. | 700 | 655 | 5 |
| மதுரை .. .. | 135,473 | 58,807 | 76,666 |
| வட ஆர்க்காடு .. | 246,052 | 108,275 | 137,777 |
| இராமநாதபுரம் .. | 39,975 | 26,545 | 13,430 |
| நீலகிரி .. .. | 182 | 163 | 19 |
| சேலம் .. .. | 159,897 | 70,244 | 89,653 |
| தென் ஆர்க்காடு | 130,657 | 59,512 | 71,145 |
| தஞ்சாவூர் .. .. | 35,676 | 8,087 | 27,589 |
| திருச்சிராப்பள்ளி .. | 134,302 | 47,741 | 86,561 |
| திருநெல்வேலி .. | 58,844 | 36,617 | 22,128 |
| மொத்தம் .. | 1,196,641 | 594,612 | 6,02,029 |

### நிலநீர் விதிகள்

விவசாயத்துக்காகவும், மற்றத் தொழில் தேவைகளுக்காகவும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இந்த நீர் வளத்தைச் சரியான முறையிலும் வகையாகவும் பயன்படுத்த நில நீர் குறித்துச் சட்டம் இயற்றுவதும் அவசியமாகிறது. அப்படிச் சட்டமியற்றும் போது கீழ்க்கண்ட அம்சங்கள் கவனிக்கப்பெறும்.

கிணறுகளின் நீர் ஒன்றிலிருந்து மற்றொன்றில் சுரந்து வடிந்துவிடா வண்ணம், கிணறுகளுக்கிடையே போதிய இடைவெளி விடுதல்.

மிகுந்த அளவில் நீரைப் பயன்படுத்திவிடாமல், விசையேற்றத்தின் மூலம் நீர் இறைக்கும் நேரம், நீர் அளவு ஆகியவைகளுக்கு நேர வரையறைகள் விதித்தல்.

தூய நீர், தூய்மையற்ற நீர் கலப்படம் ஏற்பட்டு விடா வண்ணம், கிணற்றுக் கட்டுமானங்கள் ஒழுங்கான முறையில் அமைத்தல்.

கழிவு நீர் கலப்படத்தைத் தடுக்கக் கழிவு நீர்ப் போக்கினைக் கட்டுப்படுத்தல் ;

இவ்வகையில் சட்டம் இயற்றுமுன், மக்கள் இதன் முக்கியத்துவத்தை உணரும்படி செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் மற்றொன்றையும் மனத்தில் கொள்ள வேண்டும். பெய்யும் மழை, நிலத்தின் ஈர ஈர்ப்புச் சக்தி மண்-கல், படிவங்களின் அமைப்பு, படுகைப் பகுதிகள் ஆகியவைகளுக்கு ஏற்பத்தான் பெரும்பாலும் நிலத்தின் அடி நீர் வளமும் நீர் சுரவையும் நீர்க்கால்களும் அமையும். மற்றப்படி பாதாள கங்கையோ அள்ள அள்ளக் குறையாத கடலோ நிலத்தின் அடியில் இருப்பதாகக் கருதலாகாது. நிலத்தினடியில் நீர் நிறையத் தான் உள்ளது. ஆனால் வரம்புக்கு உட்பட்டதே. நில நீர்ப் பணியில் விஞ்ஞானப் பூர்வ அணுகு முறைகள் முக்கியமானவை. ஆய்வுப் பணிகள் மிக இன்றியமையாதவை .

சி. க. ரா.

### மின்னொளி பெறும் கிராமங்கள்

மத்திய கிராம மின்வசதிக் கழகத்தின் 17-வது திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படத் துவங்கும். இதன் மூலம் அனிகரன் சத்திரத் தொகுதி, சீர்காழி வட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த 41 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும். இத்திட்டம் 5 ஆண்டுகளில் அமல் நடத்தப்படும். இதன் மூலம் நீர்ப்பாசனத்துக்குத் தேவையான 550 பம்பு செட்டுகளை இயக்குவதற்கான மின்சக்தி, 64 சிறு தொழில்கள் நடைபெறுவதற்கான மின்சாரம், 1,770 வீதி விளக்குகள் எரிவதற்குத் தேவையான மின்சக்தி ஆகியவை கிடைப்பதுடன் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் உபயோகத்திற்காக 4,500 மின்சார இணைப்புகளும் வழங்கப்படும்.

கிராம மின் வசதிக் கழகம், தஞ்சாவூர் மின்வசதித் திட்டத்திற்குச் சுமார் 24 இலட்சம் ரூபாய் கடனுதவி அளிக்கும்.

இக்கழகம் இதுவரை 9·2 கோடி ரூபாய் கடனுதவி வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டங்கள் யாவும் முடிவுற்றால் 200-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின்வசதியுடன், 33,000 விவசாயப் பம்புகள் இயங்கும். 435 சிறு தொழிலுக்கான மின்சாரம் கிடைக்கும். மேலும், 11,000 வீதி விளக்குகள் எரியத் தொடங்குவதுடன், வீடுகள் வணிக நிலையங்கள் ஆகியவற்றின் உபயோகத்திற்காக 66,000 மின்சார இணைப்புகளும் வழங்கப்படும்.

# சென்னைப் பல்கலைக் கழக நூலகம்

கணித மேதை இராமானுசத்தின் கையெழுத்துப் பிரதியைக் காண வேண்டுமா ?

ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களின் நாட்குறிப்பைப் படிக்க வேண்டுமா ?

1671-இல் எழுதப்பட்ட மார்க்கோ போலோவின் 'கீழ்த் திசை வரலாறு' என்னும் நூலைப் படித்து மகிழ வேண்டுமா ?

எல்லாவற்றுக்கும் சென்னைப் பல்கலைக் கழக நூலகம் நம்மை அன்புடன் அழைக்கிறது !

அலைகடலோரத்தில்—அறிஞர் அண்ணா சதுக்கத்தின் எதிரில்—அழகுற அமைந்து ஓர் அறிவாலயமாகத் திகழ்கிறது இந்த நூலகம்.

1907-ஆம் ஆண்டில் துவக்கப் பெற்ற இந்த நூலகம் வளர்ந்ததே ஒரு சுவையான கதை போல் இருக்கிறது.

திரு வில்லியம் கிரிஃபித் அவர்கள், 1897 செப்டம்பர் 9-ஆம் நாள் தன் உயில் மூலம் ரூ. 25,619-ஐ நன்கொடையாக இந்தப் பல்கலைக் கழகத்துக்கு அளித்தார். இது நூலகம் உருப் பெறக் கருவாக அமைந்தது.

சென்னைப் பல்கலைக் கழகம் 1903-இல் அரசின் அனுமதி பெற்று, அந்தத் தொகையைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த நூலகத்தை அமைப்பதற்குச் செலவிடத் தீர்மானித்தது. 1907-இல் இந்திய அரசு பல்கலைப் படிப்பிற்காக, சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சிறப்புப் பொருளுதவி அளித்தது. இத் தொகையிலிருந்து பல்கலைக் கழக ஆட்சிக்குழு, இலட்சம் ரூபாயை நூலகத்தை வளப்படுத்துவதற்கு மாநில அரசின் அனுமதி பெற்று ஒதுக்கியது. அதே ஆண்டில் பல்கலைக் கழகம் தன் கட்டண நிதியிலிருந்து நூலகத்தைப் பேணிக் காப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 6,000 கொடுக்கத் தீர்மானித்தது. இவ்வாறு பல நிதிகளின் உதவியால் சென்னைப் பல்கலைக் கழக நூலகம் உருவானது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நூலகம் அமைப்பதற்கு இடமில்லாததால், முதலில் கன்னிமாரா நூலகத்தில் இதனை அமைத்தனர். நூலகம் படிப்படியாக வளர்ந்தது ; படிப்போரின் எண்ணிக்கையும் உயர்ந்தது. இதனால், நூலகம் தனிக் கட்டடத்தில் அமைக்கப்பட




வேண்டிய அவசியம் ஏற்பட்டது. குறிப்பாக உயர் கல்வியிலும், ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருக்கும் மிகுதியான மாணவர்களுக்குத் தக்க வசதி செய்து தர வேண்டும் என்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

ஆகவே, அங்குள்ள நூலகத்தைப் பல்கலைக் கழகச் செனட் மண்டபத்தில் தற்காலிகமாக அமைக்க ஆட்சிக்குழு தீர்மானித்தது. இது 1928-இல் நிறைவேறியது. 1912-இல் நூலகத்திற்கெனக் கட்டடம் கட்டச் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு முயற்சி எடுத்த நேரத்தில், முதல் உலகப் போர் தொடங்கியது. இதனால் கட்டடப் பொருள்கள் கிடைப்பது கடினமாக இருந்ததால் முயற்சி பலனளிக்கவில்லை. பிறகு 1930-ஆம் ஆண்டில் மீண்டும் திட்டங்கள் தீட்டப்பட்டு அதன் பலனாகப் பல்கலைக் கழக நூலகத்திற்கெனத் தனிக் கட்டடம் எழுந்தது. 1936-ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ஆம் நாள் நூலகம் புதிய கட்டடத்தில் அமைந்து, இன்றளவும் அறிவு விருந்து படைத்து வருகிறது.

## அறிவாலயம்

இறைக்க இறைக்க வற்றாத ஊற்றாகத் திகழ்ந்து கற்றாரைக் காமுற வைக்கும் நூல்கள் உள்ள இடமெல்லாம் அறிவாலயம்தான். சிந்தனைக்கு விருந்தூட்டி, சீரிய வாழ்க்கைக்கு ஒளிகாட்டி, ஒரு 'வழிகாட்டி'யாய் விளங்கும் நூலகமெல்லாம் அறிவாலயம்தான்.

அறிவாலயம் - இந்த வரிசையில் சென்னையிலுள்ள பல்வேறு நூலகங்களைப் பற்றிய விளக்கக் கட்டுரைகள் அவ்வப்போது வெளிவரவிருக்கின்றன.

இந்த இதழில் சென்னைப் பல்கலைக் கழக நூலகம் அறிமுகம் ஆகிறது.

கல்லூரி மாணவர்கள், பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கெல்லாம் தக்க விதத்தில் பயன்பட்டு வரும் இந்நூலகத்தில், பல்வேறு துறைகள் பற்றிய நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. முதலில், இந்நூலகத்தில் நூல்கள் எப்படிச் சேகரிக்கப்பட்டு வந்தன தெரியுமா ?

தொடக்கத்தில் அரசு இலவசமாகத் தந்த அரசினர் வெளியீடுகள், அறிக்கைகள், கைப் புத்தகங்களைத் தவிர, பிரிட்டனில் உள்ள அபர்டீன் பல்கலைக் கழகம் போன்ற அயலக நிறுவனங்கள் வழங்கிய நூல்களும் இருந்தன. இதற்குப் பிறகு பல்கலைக் கழகத்திற்கு மூன்று முக்கியப் புத்தகத் தொகுதிகள் சேர்ந்தன. அவை : 1. பதினெட்டம் நூற்றுண்டின் இறுதியும், பத்தாம் நூற்றுண்டின் தொடக்கமுமான குழப்பக் காலத்தில், தொல்பொருள் ஆய்வாளரான கர்னல் மெக்கன்சி சேகரித்த பல ஏட்டுச் சுவடிகள் ; 2. கிழக்கு இந்தியக் கம்பெனியில் பணி புரிந்த சி. பி. பிரௌவுன் என்ற புகழ் பெற்ற தெலுங்கு மொழி அறிஞரின் தொகுப்பு ; 3. கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்ட பிறகு கம்பெனி இல்லத்திலிருந்து வந்த நூல்கள்.

இப்படிப் படிப்படியாக வளர்ந்து, இன்று 3,07,000 நூல்கள் உள்ள மிகச் சிறந்த நூலகமாக இது திகழ்கிறது. தொடக்கக் காலத்தில் ஓராண்டிற்கு 1,000-க்குக் குறைவான நூல்களைச் சேகரித்து வந்த இந் நூலகம், கடந்த மூன்று ஆண்டுகளாக 12,000-க்கும் மேற்பட்ட நூல்களைச் சேர்த்துக் கொண்டு வருகின்றது.

பரந்த இடத்தில் அமைதி நிறைந்த சூழலில் அழகாய்க் காட்சியளிக்கும் இந்த நூலகத்தில் நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும், உட்கார்ந்து படிக்க, எழுத நல்ல வசதிகள் இருக்கின்றன. படிக்கும் அறையின் ஆரம்பத்தில் சுமார் 3,000 குறிப்புதவி நூல்கள் (கலைக் களஞ்சியம் முதலியன) வைக்கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் சுமார் 120 வாசகர்கள் அமர்ந்து படிக்கப் போதுமான இருக்கைகள் இங்கே போடப்பட்டுள்ளன.

நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்தும் பொருள் வரிசையாகவும், அகர வரிசையாகவும் நூற்பட்டி தயாரிக்கப்பட்டு


நூலகத்தின் ஒரு தோற்றம்


நூற்பட்டி — நூல்களை எடுக்கத் துணை புரிகின்றது


தேவையான நூல்களைத் தேர்வு செய்கின்றனர்

வைக்கப்பட்டுள்ளது. இது வன்றித் தமிழ் நூல்களுக்கென ஒரு தனி நூற்பட்டியும் தமிழிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவுக் களஞ்சியமாக விளங்கும் இங்கே, இலக்கண, இலக்கியக் கலைப் பகுதி நூல்களும், அறிவியல் நூல்களும் அழகுற அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமா ? பழைய ஏடுகள் அனைத்தும் பொருள் வாரியாக, ஆண்டு வாரியாகப் பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. புத்தக அறையின் ஒரு பகுதி, அரசினர் கீழைக்கலைக்




கையெழுத்து நூலகத்தின் ஓலைச் சுவடிகள் நூலகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும் இந்த நூலகத்திற்கு விடுமுறையே கிடையாது. ஆம், எந்த நாள் வந்தாலும் இது திறந்தே இருக்கும். அறிவுக் கண்களை—மனக் கதவுகளைத் திறக்கும் திறவு கோலாகத் திகழும் இது, திறந்தே இருப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்?

புத்தக அறைக்கு நாள்தோறும் 350-க்கும் மேற்பட்ட வாசகர்கள் ஆர்வமுடன் வருகை தருகின்றனர். அவர்களுக்குக் குறிப்புதவி செய்வதற்கென்று பயிற்சி பெற்ற அலுவலர்களும், ஆராய்ச்சி மாணவர்களுக்கு நூற்றொகை முதலியவைகளைத் தொகுத்துத் தந்திடப் பயிற்சி பெற்ற இரு நூலடைவாளர்களும் ( Bibliographers ) இங்கே தக்க உதவிகள் செய்து வருகின்றனர்.

நூல்களைத் தவிர, பல்வேறு நாள், வார, திங்கள், திங்களிரு முறை, காலாண்டு, அரையாண்டு இதழ்களும் இங்கு வரவழைக்கப்படுகின்றன. இதற்கென ஒரு தனி அறையே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரே நேரத்தில் 60 வாசகர்கள் அமர்ந்து படிக்க வசதியுள்ள இந்த அறையில் 1,660 இதழ்கள் பொருள் வாரியாகப் பிரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பெருந்துணை புரிவனவாக விளங்குகின்றன.

இப்பிரிவில் 1910-ஆம் ஆண்டிலிருந்து ‘இந்து’, ‘மெயில்’, நாளேடுகளும், 1940-ஆம் ஆண்டிலிருந்து ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடும், 1832-ஆம் ஆண்டிலிருந்து ‘போர்ட் செயிண்ட் ஜார்ஜ்’ பதிவேடுகளும் நன்கு ‘கட்டடம்’ செய்யப்பெற்று வைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் புத்தகத்திற்கு ஒதுக்கப்படும் தொகையில் எழுபது சதவிகிதம் பல்வேறு இதழ்களுக்காகச் செலவிடப்படுகிறது. இரசாயனப் பிரிவில் குறிப்பாக ‘கெமிகல் அப்ட்ஸ்ராக்ட்ஸ்’ என்ற ஒரு தலைப்பிற்கு மட்டும் ஆண்டுக்கு ரூ. 14,452·50 சந்தா செலுத்தப்படுகிறது என்றால், இந்நூலகம், படிப்போரின் தேவையை எத்தனை அக்கறையோடு கவனிக்கிறது என்பது தெரிகிறதல்லவா?

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழும் இந்நூலகத்தில், நூல்களை இப்படித்தான் தேர்வு செய்கிறார்கள்.

ஆண்டுதோறும் ஆட்சிக்குழு, மத்திய நூலகத்திற்கும், துறை நூலகத்திற்கும் தேவையான நிதியை ஒதுக்குகிறது. பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைத் தலைவர்களும், ஆட்சிக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கல்லூரிப் பேராசிரியர்களும், நூலகர் அவ்வப்போது தயாரிக்கும் பட்டியலின் துணைகொண்டு, நூல்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும்,

மத்திய நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்கள் பரிந்துரை செய்யும் நூல்களையும், நூலகரே வாங்குவதற்கென ஆட்சிக்குழு ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் ஒதுக்குகிறது.

ஆகவே, மத்திய நூலகத்திற்கும், துறை நூலகத்திற்கும் நூல்களைப் பரிந்துரை செய்வது அத்துறைத் தலைவர்களின் சிறப்புப் பொறுப்பென்றால், நூல்களைத் தக்க இடத்தில், தக்க நேரத்தில் வாங்குவதும், பகுப்பு முறை செய்து பட்டி தயாரிப்பதும், முடிவில் துறை நூலகங்களுக்கு அனுப்புவதும் நூலகரின் பெரும் பொறுப்பாகும்.

இவ்வாண்டு 'ஆட்சிக் குழு, மத்திய, துறை நூலகங்களுக்கு நூல்களும், இதழ்களும், வாங்குவதற்கென ரூ. 4,59,000 வழங்கியுள்ளது. இத் தொகையில் ரூ. 1,97,045 நூல்களுக்காகவும், ரூ. 2,61,955 இதழ்களுக்காகவும்ஒதுக்கப்பட்டுள்ளது.

கிடைத்தற் கரிய பழைய நூலோ அல்லது அந்த நூலின் ஒரு பகுதியோ ஒருவருக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது. அதற்கு என்ன செய்வது ?

உள்ளூர்வாசி என்றால் நூலகத்திற்கே வந்து குறிப்பெடுத்துக் கொள்ளலாம் ; வெளிநாட்டினர் என்றால், இதற்கெனச் செலவு செய்து கொண்டு வர முடியுமா ? அவர் அங்கிருந்தே அந்நூலைப் பெறுவதற்கான ஒரு வழி இருக்கிறது. 'மைக்ரோ பிலிம்' இதற்குப் பெருந்துணை புரிகிறது. இந்த வசதி இங்கே இருப்பதால் ஆராய்ச்சியாளர்கள் நூல்தேடி அலையும் தொல்லையிலிருந்து விடுபட முடிகிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, இலங்கை, மலேசியா முதலிய மேலை நாடுகளிலுள்ள கல்விக் கழகங்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இங்குள்ள 'மைக்ரோ பிலிம்' பிரிவு, குறைந்த கட்டணத்தில் படமெடுத்து அனுப்புகிறது. கிழிந்த நிலையிலுள்ள நூல்களை மட்டுமின்றி, ஒரு நூலகத்தையே கூட இந்த மைக்ரோ பிலிமில் அடக்கிவிடும் அளவுக்கு விஞ்ஞானம் இன்று வளர்ந்திருக்கிறது.

இத்தனை வசதியும், வாய்ப்புமுள்ள இந்நூலகத்தில் சேரக் கட்டணமுண்டா ? படிக்கும் ஆர்வமுள்ளவர் எவரும் இங்கே வந்து படிக்க முடியுமா ?

இந்த வினாக்களுக்கு விடை : முதலில் இதில் உறுப்பினராகச் சேரக் கட்டணமில்லை ; இரண்டாவது இந்நூலகத்தைப் பயன்படுத்த விரும்புவோர் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

பல்கலைக் கழக ஆணையுரிமை உறுப்பினர்களும், பல்கலைக் கழகக் கல்லூரி, மற்றும் பல்கலைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களின் ஆசிரியர்களும், புலவர்களும், பல்கலைக் கழக நுழைவு உரிமை பெற்றவர்களும் இந்நூலகத்திலுள்ள புத்தகங்களைப் படிக்கலாம்.

இப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்லூரி மாணவர்களும், பட்டதாரிகளும் இந்நூலகத்தில் உறுப்பினராகச் சேரலாம். இந்தச் சலுகை, மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப்பிடிப்பிற்குப் பயிலும் மாணவர்களுக்கும் இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பினால் ரூ. 30, ரூ. 50 என்று வைப்புத் தொகை கட்டவேண்டும். மற்றும் வெளியூர்களில் இருப்பவர்கள் கூட இந்நூலகத்தில் சில விதிகளுக்குட்பட்டு உறுப்பினர்களாகி அஞ்சல் மூலம் நூற்களைப் பெற வசதி இருக்கிறது.

> காலத்துக்கு ஒத்த கருத்துக்களையே நூல்களில் பொறிக்க வேண்டும். பழைய ஏடுகளை, பழைய கருவிகளை மியூசியத்திலே பார்வையிடுகிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அக்கருத்தை அப்படியே மனத்தில் பதிய விடுவதில்லையே ! அதைப் போலவே பழைய கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் அவற்றை நாம் கைக்கொள்ளுதல் கூடாது.
>
> எதிர்கால உலகம் விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்தி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தக சாலையை அமைக்க வேண்டும்.
>
> **— பேரறிஞர் அண்ணா**

அறிவாலயமாகத் திகழும் இந்நூலகத்தில் எம்.லிட்., பி.எச்டி. போன்ற ஆராய்ச்சிப் பட்டங்களுக்கான ஆராய்ச்சிநூல்களும் பெருமளவு இங்கே சேமிக்கப்பட்டு வருகின்றன. தற்போது சுமார் 3,424 ஆராய்ச்சி நூல்கள் இங்கே இருக்கின்றன.

இந்நூலகத்தில் அவ்வப்போது சேர்க்கப்படும் நூல்கள் என்னென்ன என்பதை எப்படி அறிந்து கொள்வது ? அதற்காகத் திங்களிதழ் ஒன்று 1971-லிருந்து வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழில் மத்திய, துறை நூலகங்களில் சேர்க்கப்படும் நூல்களின் விவரங்கள் குறிக்கப்படுகின்றன. இந்த வெளியீடு பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும், சென்னையிலுள்ள கல்லூரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

கவின்மிகுந்த கருத்தரங்குகளுக்கும் இங்குக் குறைவில்லை. கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பிரிதிநிதிகளுக்கு 'நூற்றொகை' ஒன்றும் வழங்கப்படுகிறது. இது நூலகத்திலுள்ள நூல்களின் தொகுப்பாகும். அண்மையில் ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்தரத் தக்க வகையில் 'ஷேக்ஸ்பியர் நூற்றொகுப்பு' ஒன்று வெளியிடப்பட்டுள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

இந்த நூலகத்தில் 'நூலக நற்சான்றிதழ்ப் பயிற்சி' ஒன்றும் மிகச் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருகிறது. 1929-ஆம் ஆண்டு முதல் நடந்து வரும் இந்தப் பயிற்சியில் ஆண்டொன்றிற்கு 40 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இன்று கல்லூரி, பள்ளி மற்றும் பொது நூலகங்களில் பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரியில் படித்துக் கொண்டே பயிற்சி பெற்றுப் பொருளீட்டும் வகையில், இன்னொரு அரிய திட்டத்தையும் இந்நூலகம் வகுத்திருக்கிறது. சென்னைக் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்கள், அரசு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் துணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு, நூலகத்தில் பணிபுரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதனால் அவர்களின் படிப்புக்குச் சிறிதும் இடையூறு ஏற்படுவதில்லை. காலையில் கல்லூரிக்குச் செல்லும் முன்னும், மாலையில் கல்லூரி முடிந்த பின்னும், விடுமுறை நாட்களில்

கூடுதலாகச் சில மணி நேரமும் அவர்கள் பணிபுரிகின்றனர். மாதந்தோறும் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கேற்ப ரூ. 40 முதல் ரூ. 50 வரை ஊதியம் அளிக்கப்படுகிறது. இந்த நல்ல திட்டத்தினுல் ஒவ்வொரு மாதமும் 20 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனுல், இதுவரை 216 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காகப் பல்கலைக் கழகம் ஆண்டு தோறும் ஏழாயிரம் ரூபாய் ஒதுக்கி ஏழை மாணவர்களை ஊக்குவிக்கின்றது.

ஆண்டுதோறும் தேசிய நூலக வாரத்தையொட்டி நவம்பர்த் திங்களில் நூலக விழா இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாவின் போது, கருத்தரங்கு, சொற்பொழிவு, புத்தகக் கண்காட்சி ஆகியவை பயன் தரத்தக்க வகையில் நடத்தப்படுகின்றன.

இந்தப் புத்தகக் கண்காட்சியில் சென்னையிலுள்ள பதிப்பகங்களும், அரசினர் கீழ்க்கலைக் கையெழுத்து நூலகங்களும் பங்கு கொண்டு சிறப்பிக்கின்றன.

நல்ல பல திட்டங்களைத் தன்னகத்தே கொண்டு, செயற்கரிய செயல்களைச் செய்துவரும் பல்கலைக் கழகம் இன்னெரு மகிழ்ச்சியான செய்தியையும் வெளியிடுகின்றது. பல்கலைக் கழக எல்லைக் குள்ளிருக்கும் முக்கிய நகரங்களிலுள்ள கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் திருச்சி, கோவை ஆகிய இடங்களில் சென்னைப் பல்கலைக் கழக விரிவு நூலகங்கள் துவக்கப்படவிருக்கின்றன. இதற்குப் பல்கலைக் கழக மானியக்குழு உதவி செய்கிறது.

1849-ஆம் ஆண்டில் வெளியிட்ட 'பால கணிதம்' 1885-இல் வெளியிட்ட இந்தியாவிலுள்ள கால்நடைகளில் நோய்களைப் பற்றிய குறிப்புகள், எல். டி. சாமிக்கண்ணு எழுதிய 'இந்திய நாள்நடை முறைக் குறிப்பு', எஸ். எப். க்ரீன் எழுதிய 'கெமிஸ்தம்', போன்ற மிகப் பழைய நூல்களுடன், பழம்பெரும் நூலகமாகத் திகழும் சென்னைப் பல்கலைக் கழக நூலகம், கருத்துக் கருவூலமாக—கலைக் கோயிலாகக் காட்சியளிக்கிறது என்றுல் அதில் எள்ளளவும் ஐயமில்லை!

—பி.வி.ஜி.

# மாவட்டங்களிலிருந்து....

## மதுரை மாவட்டத்தில்

இம்மாவட்டத்தில் தரிசு நிலங்களை ஏழை மக்களுக்கு அளிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 21 ஆயிரம் ஏக்கர் நிலம் அளிக்கக் குறியீடு செய்யப்பட்டுள்ளதை வரும் மூன்று மாதங்களில் நிறைவேற்றப்படும். இதில் நிலப் பட்டா 10 ஆயிரத்து 853 ஏக்கரும், வீட்டு மனைப்பட்டா 11 ஆயிரம் ஏக்கரும் ஆகும்.

சிறு விவசாயிகள் மேம்பாடு அடைய 158 சிறுவிவசாயிகளுக்கு 8 ஆயிரம் உயர் வீரிய வகைக் கோழிகள் அளிக்கப்பட்டன. மதுரைக் கடுத்த கப்பலூரில் அமைந்த கோழி பொரிக்கும் நிலையத்தில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ 5 இலட்சம் செலவில் தீவன உற்பத்தி நிறுவனம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆண்டிப்பட்டிப் பகுதியில் கண்டமனூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு நிலமல்லாதாருக்கு வழங்கவிருக்கும் 18 ஆயிரம் ஏக்கரில் இதுவரை 12 ஆயிரம் ஏக்கர் ஏழைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்குத் தயாராக உள்ளது. எனவே, நிலமற்ற ஏழைகள் கோரிக்கை விடுத்தால் அந்நிலம் அவர்களுக்கு அளிக்கப்படும்.

இம்மாவட்டத்தில் 4 கோட்டங்களில் 66 கூட்டுறவு இறைவைச் சங்கங்களுக்கு வழங்க 60 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூறு ஏக்கர் பயன்பெறும் அளவில் 554 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும், எல்லாக் கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 5 ஆயிரம் 'பம்ப்செட்டு' களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் வட்டார வளர்ச்சிப் பணிகள் பற்றிய விவரம் வருமாறு :

மதுரை கிழக்கு: தீவிர விவசாயத் திட்டத்தின்கீழ் 'காவேரி' 100 கிலோ விதை விவசாயத்திற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. ஐ. ஆர். 20-ல் 2-ஆம் தர விதைகள் 13 டன்னும், 'கருணு' 10 டன்னும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை மேற்கு: இவ்வட்டாரத்தில் பொதும்பு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுத்தரப் பள்ளிக்குக் கூடுதலாக ரூ. 22,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்று பொதுமக்கள் நன்கொடையால் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

மேலூர்: ஆய்வுத் திங்களில் ரூ. 1,466.60 பெறுமானமுள்ள தளவாடச் சாமான்கள் இவ்வட்டாரத்திலுள்ள தச்சுக் கொல்லுக் கூடத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வட்டாரத்தில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 23 நபர்கள் அறுவைச் சிகிச்சை செய்துள்ளார்கள்.

வாடிப்பட்டி: கண்ணெளி வழங்கும் திட்டத்தின் கீழ் இவ்வட்டாரத்தில் 156 பேர்கள் அறுவைச் சிகிச்சை பெற்றுக் கண்ணெளி பெற்றுள்ளார்கள். கள்ளிக்குடியில் 174 பேரும், நிலக் கோட்டையில் 166 பேரும் கண்ணெளி பெற்றுள்ளனர்.

சாணர்பட்டி: இந்த வட்டாரத்தில் கொசுவபட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் நோயாளிகளின் இருப்பிடம் ஒன்று, சீரணித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது.

உத்தமபாளையம்: தமிழ்நாடு பரிசுத் திட்டத்தின் கீழ் ஓர் உயர் ஆரம்பப் பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிநீர்க் கிணறு ஆழப்படுத்தும் வேலையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அரசு அலுவலகங்களுக்கும் சார்புடைய நிறுவனங்களுக்கும் வாங்கும் மரச் சாமான்களை கதர் கிராமத் தொழில் நிறுவனங்களிலிருந்தும் தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் தொழிற்கூடங்களிலிருந்தும் ஒப்பந்தப் புள்ளியில்லாமல் வாங்கலாம் என்று தமிழ்நாடு அரசு நிதித்துறைக் குறிப்பாணை ஒன்றில் விளக்கியுள்ளது. அந்தத் தொழிற்கூடங்களில் ஒன்றுதான் இது....

அது ஒரே ஒரு மரத்தொழிற்சாலைதான். ஆனால், அமைந்துள்ள இடமோ ஒரு தொழிற்பேட்டை போன்று உள்ளது. ஆமாம், ஏறத்தாழ பத்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையைப் பார்ப்பதும் தொழிற்பேட்டை ஒன்றைப் பார்ப்பது போலத்தான். அவ்வளவு பெரிதாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்தத் தொழிற்சாலை.

சென்னை நகரின் வடக்குப் பகுதியில் தொழிற்சாலைகள் அதிகமாகவுள்ள திருவொற்றியூரில் அமைந்து உள்ளது ரீட் கூட்டுறவு மரவேலைத் தொழிற்சாலை.

ஏறத்தாழ இருபத்தேழு ஆண்டுகளாக இயங்கிவரும் இந்தக் கூட்டுறவு மரத் தொழிற்சாலையில் கிடைக்காத பொருள்களே இல்லை—நவீன வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவிதமான மரச் சாமான்களையும் இங்கே செய்கிறார்கள்.

இந்தக் கூட்டுறவு நிறுவனம் முன்னாள் இராணுவ அதிகாரியான கர்னல் டி. எம். ரீட், என்பவரின் பெரும் முயற்சியால் 30–5–1946-ல் பதிவு செய்யப்பட்டு 3–6–1946 அன்று முதல் தனது பணியைத் தொடங்கியது. தற்சமயம் இச் சங்கத்தின் பங்கு மூலதனம் ரூ. 5,224 ஆகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 59.

முன்னாள் இராணுவ வீரர்களுக்காகவே ரீட் கூட்டுறவு மரவேலைத் தொழிற்சாலை தொடங்கப்பெற்றது. நாளடைவில் தச்சு வேலை தெரிந்த பொது மக்களுக்கும் இது வேலைவாய்ப்புக் கொடுக்கின்றது.

# நாகரிக மரச் சாமான்களுக்கு

நடுவில் பொந்து உள்ள செங்கல், மற்றும் மரப்பெட்டிகளும் ஆரம்ப காலத்தில் செய்யப்பட்டுப் படிப்படியாக மரச் சாமான்கள் செய்வதில் தனது பணியைத் தொடர்ந்து, அரசினர் அலுவலகங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்து வந்தது. மேலும், தனது வியாபாரத்தைப் பெருக்கும் பொருட்டு 1969-ஆம் ஆண்டு முதற்கொண்டு வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் தேவையான நவீன மரச்சாமான்களும் செய்ய ஆரம்பித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக நகரத்தின் பல்வேறு பகுதிகளுக்கும்சென்று, ஆங்காங்குத் தேவையான நவீன வேலைப்பாடுகள் கொண்ட மரச் சாமான்கள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

கோட்டையிலுள்ள தலைமைச் செயலகம், மைய மின் ஆய்வுக் கூடம் காக்கலூர், காவேரி கூட்டுறவு சிறப்பங்காடி, பாண்டிச்சேரி ஜிப்மர், சென்னை காதி கிராமக் கைத்தொழில் வாரியம் ஆகிய நிறுவனங்களில் உள்ள அலுவலகங்களுக்கும் தேவையான தடுப்பு வேலைகளையும், காட்சிப் பெட்டி வேலைகளையும் பிளைவுட் மற்றும் சன்மைக்கா முதலிய பொருள்களைக் கொண்டு புதிய முறையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கும் மரச் சாமான்கள் வழங்கியுள்ளது.

மேலும் வருவாய்த்துறை, கிராம வளர்ச்சித்துறை, சென்னைத் துறைமுகம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், குறளகம் ஆகிய நிறுவனங்களுக்குத் தேவையான தடுப்புச் சாதனங்கள், காட்சிப் பெட்டிகள் மற்றும் அந்த அலுவலக மரச் சாமான்கள் தொடர்ந்து தயார் செய்து கொடுக்கப்பட்டு



அரசினர் கலைக் கல்லூரிகள் (வட சென்னை மகளிர் கலைக் கல்லூரி, அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரிகள், நந்தனம், அண்ணாசாலை) இராணி மேரி கல்லூரி ஆகியவற்றிற்குப் பரிசோதனைக் கூடத்திற்குத் தேவையான மேசைகள், பிளைவுட் மற்றும் சன்மைக்கா முதலியவற்றைக் கொண்டு புதுமையான முறையில் தயார் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. அந்த நிறுவனங்களுக்கு அலுவலக மரச் சாமான்களும் தொடர்ந்து தயார் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. காக்கலூர் மைய மின் ஆய்வுக் கூடத்திற்கும் பரிசோதனைக்கூடத்திற்குத் தேவையான மேசைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டு சங்கம் அடைந்த இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 26 சத வீதமும், உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு 10 சதவீதமும், அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளர் அவர்களுக்கும் 16 சத வீதமும், 1969–70-ஆம் ஆண்டுக்கான இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 14 சதவீதமும் உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு $7\frac{1}{2}$ சதவீதமும், அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளருக்கும் $8\frac{1}{3}$ சதவீதமும், 1968-69-ஆம் ஆண்டு சங்கம் அடைந்த இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு 13 சதவீதமும் உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு $6\frac{1}{2}$ சதவீதமும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளருக்கும் 8.1/3 சதவீதமும் பூரிப்பூதியம் வழங்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டு சங்கம் அடைந்த இலாபத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களுக்கு $15\frac{1}{2}$ சதவீதமும், உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களுக்கு 11 சதவீதமும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் மேலாளருக்கும் $12\frac{1}{2}$ சதவீதமும் வழங்கப்பட்டது. மற்றும் ஆண்டுதோறும் சங்கத்தின் தொழிலாளர்களுக்கும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் சீருடையும் வழங்கப்படுகின்றது.

சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அலுவலகச் சிப்பந்திகளுக்கும் பொதுநல நிதியில் இருந்து மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கும் அவர்களின் குழந்தைகளின் பள்ளிப் படிப்பிற்காக ஆண்டுதோறும் புத்தகங்கள் வாங்குவதற்கும் பணம் வழங்கப்படுகின்றது. வைப்பு நிதி மற்றும் இ.எஸ்.ஐ. முதலிய வசதிகளும் வழங்கப்படுகின்றது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 10.86 ஏக்கர் நிலம் சொந்தமாகப் பெற்றிருக்கின்றது. இச்சங்கம் 10 அலுவலகப் பணியாளர்களுக்கும், 33 தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களிடம் பணிபுரியும் உதவித் தொழிலாளர்கள் 15 பேர்களுக்கும், ஆக 58 பேர்களுக்குத் தற்சமயம் வேலை வழங்கி வருகின்றது. இச்சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலைக்குத் தேவையான மரப்பலகைகளையும் மரத் துண்டுகளையும் சங்கத்தில் உள்ள இயந்திரம் மூலமாகவே இழைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள தச்சு வேலைக் கூட்டுறவுச் சங்கங்களில், இச்சங்கமே முதன்மையானதாகவும் பெரிய அளவிலும் சிறப்பான முறையிலும் நடைபெற்று வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட ரூபாய் மதிப்புள்ள பொருட்களை ரீட் கூட்டுறவு மரத் தொழிற்சாலை விற்பனை செய்துள்ளது.

நல்ல இலாபத்துடன் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலையைத் தொழில் வணிகத்துறை மிகவிரைவில் மேலும் நன்கு விரிவுப்படுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. அப்படி விரிவுபடுத்தினால் மேலும் ரீட் கூட்டுறவு மரவேலைத் தொழிற்சாலையின் மூலம் பல நன்மைகளை நாம் பெறமுடியும்.

—மான்

கேட்டு வாங்குங்கள்
இந்த இதழுடன்
இலவச இணைப்பு
நிலை விளக்கம்

# பார்த்தோம் படித்தோம்






**முத்தான உரை**

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதல்வர் ஆற்றிய முத்தான உரை படித்தேன். உரிமைக் குரல் கொடுத்த முதல் முதல்வர் நம் கலைஞர் அவர்களே! அவர் கூறிய திட்டங்களை அனைத்து மாநிலங்களும் ஏற்றும் கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

—க. பாண்டியன், நாகை.

**நயத்தக்க நாகரிகம் !**

கடல் மீன் வேண்டும் என்று அடம் பிடித்த உத்தரப் பிரதேச மாணவியின் மனம் கோணாமல் நிறைவேற்றிய ஆசிரியைகள் பாராட்டுக்குரியவர்கள். அந்த விருந்தோம்பற் பண்பு இந்தத் தமிழ் மண்ணுக்கே உரியதென்பதில் ஐயமில்லை. அது என்றும் நின்று நிலவும்! இதுவே தமிழர்களின் நயத்தக்க நாகரிகம்.

—அ. சகுந்தலை, திருச்சி-10.

**கிராமியத்திற்குப் பாராட்டு !**

திரு சோம மகாதேவன் அவர்கள் கிராமிய சூழ்நிலைகளைக் கொண்டே 'உண்மையின் சந்நிதி' தொடர்கதையினை முடித்துள்ளார். படித்த வாசகர்கள் எல்லாரையும் 'உண்மையின் சந்நிதிக்கு' அழைத்துச்சென்று விட்டார்.

—வே. விஜயலட்சுமி, மதுரை-1.

**அப்பலோ வேகம் !**

'உண்மையின் சந்நிதி' தொடர்கதை திடீரென்று முடிந்து விட்டதே! உண்மையை இவ்வளவு சீக்கிரம் சந்நிதிக்குக் கொண்டு வந்து விட்டீர்களே! எதிர்பார்த்த முடிவுதான்! ஆனால், வேகம் தான் அப்பலோவையும் தாண்டிவிட்டது.

—கு. லீலா, மணியக்காரன்பட்டி.

**பட உலா !**

தமிழ்நாட்டில் நேரில் சென்று காணவேண்டிய முக்கியமான இடங்களைத் ''தமிழகம் அழைக்கிறது'' என்ற தலைப்பில் தந்துள்ளீர்கள். தொடர்ந்து முக்கியமான இடங்களின் படங்களைத் 'தமிழரசு' இதழில் வெளியிட்டு எங்கள் ஆவலைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தா. சீனிவாசன், செங்கை.

**மினி ! மினி !**

மின்மினி கவிதையில் வரலாறு, புராணம், விஞ்ஞானம், பகுத்தறிவு, அத்தனையும் இழைத்துக் கொடுத்திருக்கிறார் புலவர் பொன்னிவளவன். ''புதுத்திரி, எண்ணெய், மின்சாரம் இல்லாத் தன் சார விளக்கு'' என்று மின்மினியைக் கூறிடும் வரிகள் பரவசத்தில் ஆழ்த்துகின்றன.

—அறவாழி, சென்னை-7.









1970-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முப்பதாம் நாள் !

ஷில்லாங்கில் உள்ள ஓர் இராணுவ அதிகாரியின் வீடு. வீட்டுக்குப் பின்புறம் ஓர் அழகான தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் மரம், செடி கொடிகளும், அழகான பல வண்ண மலர்களும் நிறைந்திருந்தன. அந்தத் தோட்டம் அனைவரையும் கவரும் வண்ணம் காட்சியளித்தது.

ஒரு நாள் ஒரு சிறுமி, அந்தத் தோட்டத்தின் அழகில் மயங்கி, அங்கே சென்றாள். அவளுக்கு ஒன்பது வயது இருக்கும். பச்சைப் பசேலென்ற மரஞ்செடி கொடிகளும், மணம் வீசும் அழகிய மலர்களும் அவளைப் பரவசத்தில் ஆழ்த்தின.

தோட்டத்திலே சென்ற அவள் தனக்கு விருப்பமான மலர்களையெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். சில மலர்களைப் பறித்துத் தன் கூந்தலில் செருகிக் கொண்டு துள்ளிக் குதித்தாள்.

இந்தக் காட்சியைப் பார்த்து விட்டாள், இராணுவ அதிகாரியின் மனைவி. தாம் சிரமப்பட்டு வளர்த்த செடி கொடிகளை, வண்ணப் பூக்களைக் கண்ணுக்கெதிரிலேயே ஒருத்தி வந்து பறித்துச் சேதப்படுத்துகிறாளே என்று கொதிப்படைந்தாளோ என்னவோ, அவசர அவசரமாக வீட்டுக்குள்ளே ஓடினாள். தன் கணவரின் கைத் துப்பாக்கியைத் தேடி எடுத்து வந்தாள். தோட்டத்தில் மலர்களின் மத்தியில் மனத்தைப் பறிகொடுத்து நின்ற அந்தச் சிறுமியைப் பார்த்துச் சுட்டாள். துப்பாக்கியிலிருந்து ரவைகள் விரைந்து சென்று அந்தச் சிறுமியின் உடலைத் துளைத்தன. சிறுமி அதே இடத்தில் கீழே விழுந்து இறந்தாள் !

பாவம் ! ஒரு சிறியமலரைப் பறித்ததற்காக, அந்தச்சிறுமிக்கு இவ்வளவு பெரியதண்டனை !

இந்தக் கொடுமையான செய்தியைக் கேட்ட, சிறுமியின் பெற்றோர்கள் கதறித்துடித்தனர்.

சட்டம் சும்மா விடுமா ? உடனே போலீசார், அந்த அதிகாரியின் மனைவியைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர். இது பத்திரிகையில் வந்த செய்தி.

தம்பி, தங்கைகளே !

இந்தச் சம்பவத்திலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் ?

எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் அதை நன்றாக ஆராய்ந்து பொறுமையாகச் செய்ய வேண்டும் ; அவசரப்பட்டு, ஆராயாமல் செய்யப்படும் காரியங்கள் எல்லாம் கெட்ட பெயரையே உண்டாக்கும்.

இதே போலப் பண்டைக்காலத்திலும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அந்த விந்தையான சம்பவம் என்ன தெரியுமா ?

பண்டைக் காலத்தில் நன்னன் என்ற மன்னன் ஒருவன் இருந்தான். அவன் அரண்மனைக்குப் பக்கத்தில் ஓர் அழகிய பூஞ்சோலை இருந்தது. கண்ணைக் கவரும் அழகான மலர்களும், மரங்களும் அங்கே இருந்தன.



நாள்தோறும் பழங்களைத் தின்பதற்காகப் பல வகைப் பறவைகள் அங்கே வந்த வண்ணமிருக்கும். வெய்யிற் காலத்தில் அந்தச் சோலைக்குள் சென்றுவிட்டால் போதும், ஒரே குளிர்ச்சியாக இருக்கும், கண்ணுக்குக் கவர்ச்சியாகவும் இருக்கும்.

அந்தப் பூஞ்சோலையில் ஒரு பெரிய மா மரம் இருந்தது. அந்தமரத்தில் நிறைய மாங்காய்களும், மாம்பழங்களும் இருந்தன. அந்தப் பக்கமாக வந்த ஒரு சிறுமி இதைப் பார்த்தாள். எப்படியாவது அந்தப்பழத்தைத் தின்ன வேண்டும் என்று ஆசைப் பட்டாள். ஆனால், அவள் ஆசை நிறைவேறுமா ? அரண்மனைக்கு உள்ளே இருக்கிற மரத்தில் பழம் பறித்தால் காவலர்கள் சும்மா இருப்பார்களா ?

மரத்தை ஒட்டி ஒரு நீரோடை இருந்தது. கோடை வெய்யில் கொளுத்தியதால், அந்தச் சிறுமி அந்த நீரோடையில் குளிக்க விரும்பினாள். அவள் குளித்துக் கொண்டிருக்கும் போது மரத்திலிருந்து ஒரு பழம் தண்ணீரில் விழுந்தது. உடனே சிறுமி, பாய்ந்து அந்தப் பழத்தை எடுத்துக் கடித்துத் தின்றாள். பழம் மிகவும் இனிப்பாக இருந்தது.

சிறுமி பழம் தின்பதை அரண்மனைக் காவலாளி ஒருவன் பார்த்துவிட்டான். உடனே அவன் சிறுமியிடம் ஓடி வந்தான். 'எப்படி இந்தப் பழத்தைச் சாப்பிடலாம்?'' என்று மிரட்டிக் கேட்டான்.

அதற்குச் சிறுமி, "நீரோடையில் தானே பழம் மிதந்து வந்தது? நான் மரத்திலிருந்து இதைப் பறிக்கவில்லையே!'' என்றாள்.

உடனே காவலாளி ''எங்கள் மரத்திலிருந்துதானே பழம் விழுந்தது? அதை நீ எப்படிச் சாப்பிடலாம்?'' என்று கூறிக் கொண்டே சிறுமியைப் பிடித்து இழுத்து அரசனிடம் கொண்டு சென்றான்.

அந்த அரசனோ நடந்தவைகளை அறிந்து, 'சிறுமிதானே விட்டுவிடு பாவம்!' என்று சொல்லவில்லை. அதற்கு மாறாக, "இந்தச் சிறுமியைக் கொன்று விடுங்கள்!'' என்று அவசரப்பட்டுக் கட்டளையிட்டான்.

•

'மரத்தில் இருந்து விழுந்த பழத்தைத்தானே இந்தச் சிறுமி தின்றாள்? அவளுக்கா இக்கதி வரவேண்டும்?' என்று பலர் பேசிக் கொண்டார்கள். பாவம் ஒன்றுமறியாத இந்தச் சிறுமி மரண தண்டனை அடைந்த செய்தி பெற்றோர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் அலறிப் புடைத்துக் கொண்டு அரண்மனைக்கு ஓடி வந்தார்கள். தன் பெண்ணுக்கு அளித்த நியாய மற்ற தண்டனையைக் கேட்டு அழுதார்கள்; துடித்தார்கள். அவளை விடுதலை செய்யும்படிக் கெஞ்சினார்கள்.

''அரசே! எங்களுடைய பெண் மிகவும் சிறியவள். ஒன்பது வயதுதான் ஆகிறது. அவள் தவறு செய்திருந்தால் இந்தத் தடவை மட்டும் தயவு செய்து மன்னித்துவிடுங்கள். வேண்டுமானால் அவள் செய்த தவற்றுக்காக ஒன்பதுக்கு ஒன்பது எண்பத்தோரு யானைகளும், அவள் எடை அளவு பொன்னும் தருகிறோம். அவளைமட்டும் விட்டு விடுங்கள்!'' என்று மனம் உருகும்படிக் கெஞ்சிக் கேட்டு அழுதார்கள். ஆனால் அந்தக் கல் மனம் படைத்த மன்னவனோ அதற்குச் செவி சாய்க்கவே இல்லை!

பிறகு அந்தச் சிறுமியை மாம்பழம் தின்றதற்காகக் கொன்று விட்டார்கள்!

ஒரு சமயம் ஔவையார் இவனது அரண்மனைக்கு வந்தார். அவரது பெருமையை அறியாத இந்த மன்னன் அவரை வரவேற்காமல் ஆணவமாக இருந்தான். அதைக் கண்ட ஔவையார் மிகவும் மனம் கொதித்தார். சில நாளில் வேற்று நாட்டு அரசன் ஒருவன் படையெடுத்து வந்து நன்னனைக் கொன்று, அவன் நாட்டைக் கைப்பற்றினான்.

பிள்ளைகளே! நாம் எப்போதும் ஆணவம் கொள்ளக் கூடாது. 'ஆணவம் கொள்ளின் அழிவு தொடரும்' என்பதை மறந்து விடாதீர்கள்!

**சிறுவர் பகுதியில் புதிய படக்கதை**

**விவரம் அடுத்த இதழில்**






அளவாய் உண்டு வளமாய் வாழ்வாய்
ஆள்வினை ஒன்றே வாழ்வினை உயர்த்தும்
இன்னிலை வேண்டின் நன்னெறி நடப்பாய்
ஈப்போல் சேர்த்துப் பூப்போல் வாழ்க
உண்மை சொல்லும் திண்மை பெறுவாய்
ஊனம் இல்லா மானம் வேண்டும்
எத்தொழி லேனும் கைத்தொழில் செய்வாய்
ஏற்றம் மிக்க தோற்றங் கொள்வாய்
ஐய மின்றி மெய்யே புகழ்தரும்
ஒத்தது புரிதல் மெத்தவும் நலமாம்
ஓயா உழைப்பே தேயாச் செல்வம்
ஔவை நல்வழி செவ்வை யாகும்
கண்ணியம் தன்னை எண்ணியே செல்க
காலம் தாழ்த்தாச் சீலம் போற்று
கிழங்கைக் குறைத்துப் பழங்கள் மிகத்தின்
கீழா நெல்லி காமா லைக்குண்
குடலின் தூய்மை உடலின் மேன்மை
கூவிளம் உண்டால் மேவிடும் நலமே
கெட்டவர் நட்பை விட்டிடல் வேண்டும்
கேள்வி ஞானம் வாழ்வின் துணையாம்
கைகளை நம்பிச் செய்தொழில் தொடங்கு
கொன்றை வேந்தன் என்றும் கற்பாய்
கோடியே வரினும் கோடுதல் வேண்டா
சளிக்குத் தூதுளை அளிக்கு மருந்தாம்
சாலை விதியை நாளும் கடைப்பிடி
சிந்தையை மணக்கும் சந்தன மாக்கு
சீர்திருந் திப்பின் ஊர்தி ருத்துவாய்
சுக்கு வயிற்றுச் சிக்கலைத் தீர்க்கும்
சூது விரும்பின் தீது நெருங்கும்
செந்நெல் குவிந்தால் இன்னல் தீரும்
சேர்ந்து வாழ்தல் தேர்ந்த முறைமை
சொல்லைக் காத்தால் தொல்லை இல்லை
சோம்பும் போதே கூம்பும் வாழ்வு
தலைபோ னாலும் நிலைதா ழாதே
தாயகம் காக்க மாயவும் துணிவாய்
திடமாய் நின்று கடமை ஆற்று
தீவினை புரிந்தால் சாவது நெருங்கும்
துடிப்பை என்றும் படிப்பில் காட்டு
தூய தமிழைத் தாயாய்ப் போற்று
தென்னை போலுயர் தன்மையாய் நன்றிசெய்
தேடிநல் லாரைக் கூடிப் பழகு
தைத்திரு நாளே மெய்த்திரு நாளாம்
தொண்டு செய்தால் உண்டு நன்மை
தோட்டம் வளர்க்க நாட்டங் கொள்வாய்
நகைமுகம் கொண்டால் பகைமுகம் இல்லை
நாடு சிறந்தால் வீடு சிறக்கும்
நிந்தனை இன்றிச் சந்ததம் வாழ்க
நீணில மெல்லாம் வாணிகம் செய்க
நுனிப்புல் மேயும் மனத்தை மாற்று
நூற்பொருள் எண்ணிப் பார்ப்பது நன்று
நெய்மிக உண்டால் உய்வ தருமை
நைதல் நீங்கச் செய்தல் வேண்டும்
நொச்சியால் தடிமன் நிச்சயம் நீங்கும்
நோதலை வெல்லும் சாதனை புரிவாய்
பசித்த பின்பே புசித்தல் நன்றாம்
பாங்குடன் சுற்றம் தாங்குதல் முறையாம்
பில்லி சூனியம் எல்லாம் பொய்யே
பீடு பெறவே பாடு படுவாய்
புகையிலை வகையைப் பகையென வெறுப்பாய்
பூசனை வேண்டா மாசினை அகற்று
பெரியார் கூறும் அறிவே துணையாம்
பேதைமை இல்லா மேதையாய் வாழ்வாய்
பைய உண்ணுதல் மெய்யாய் நலமாம்
பொதுமை மலரப் புதுமை புரிவாய்
போர்வெறி தன்னைப் பார்தனில் போக்கு
மண்ணை உழுதால் பொன்னைப் பெறலாம்
மாலையில் நடப்பது சாலவும் நன்று
மிளகாய் குறைத்து மிளகைச் சேர்த்துண்
மீட்டும் வீணைப் பாட்டுப் பழகு
முருங்கைக் கீரை நிரம்பத் தின்பாய்
மூடப் பழக்கம் ஓடச் செய்வாய்
மென்மை மிகுந்த தன்மை வேண்டும்
மேன்மை யான ஆண்மை அழகு
மைந்துடன் வாழ்வில் நைந்தவர் துயர்களை
மொழிநூல் பயின்று வழிநூல் செய்க
மோதும் இடரை மோதி வெல்க
வள்ளுவன் சொல்லைத் தள்ளி விடாதே
வாக்குண் டாமதை நோக்கெந் நாளும்
விருந்தினர் பேணும் பெருங்குணம் கொள்வாய்
வீர நெஞ்சில் ஈரமும் வேண்டும்
வெற்றிலைப் பழக்கம் குற்றமே ஆகும்
வேளாண் மைசெய்த் தாளாண் மைகொள்.




ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.

கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா
டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம்
பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

# கோ-ஆப்டெக்ஸ்

குறளகம், தி. நகர், லஸ், மற்றும்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.



CriterionCO2753TM A


நாடும் நாமும்......
நம் நல்வாழ்வை நாடும் திட்டங்களுக்கே
நமது அரசு முதலிடம் தருகிறது !
பசுமைப்புரட்சி மூலம்
உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று
இந்தியாவில் முதலிடம் வகிக்கிறோம்.
சமதர்மத் திட்டங்களைச் செயல்படுத்துவதில்
நமது அரசு முன்னணியில் திகழ்கிறது!
பன்னிரண்டு ஆண்டுத் தொலை நோக்குத் திட்டத்தின் கீழ்
புதுவாழ்வு மலர அரும் பெரும் முயற்சிகள் !
இந்தப் பணிகளுக்கு
வலுமிக்க அடித்தளம் அமைய
நாம் செய்யும் கைம்மாறுதான்
அளவான குடும்பம்!
நாட்டின் முன்னேற்றத்தின் அடையாளம்
திட்டமிட்ட குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !!
குடும்ப நலத்துறை
தமிழ் நாடு அரசு
தமிழரசு



# நிலை விளக்கம்

# நிலை விளக்கம்

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து
சட்டப்பேரவை - சட்டமன்றம்
ஆகிய அவைகளில்

முதல்வர்
டாக்டர்
**கலைஞர்** ஆற்றிய உரை

# பதிப்புரை

தமிழகச் சட்டப் பேரவையில் 2—2—1973-ல் மேதகு தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், தமிழகத்தின் இன்றைய நிலை குறித்து ஆற்றிய உரையின் மீது, பல்வேறு உறுப்பினர்களும் நடத்திய விவாதங்கட்கு, 12—2—1973-ல் தமிழகச் சட்டப் பேரவையிலும், 13—2—1973-ல்சட்டமன்ற மேலவையிலும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பதிலளித்துச் சிறப்பான முறையில் விளக்கப் பேருரை நிகழ்த்திஞர்கள். அவற்றைத் தொகுத்து 'நிலை விளக்கம்' எனுந் தலைப்பில் நூல் வடிவாக்கித் 'தமிழரசு' 16—2—1973 இதழுடன் இலவச இணைப்பாக வழங்குகிறோம். தமிழக மக்கள், 'நிலையும் விளக்கமும்' அறிந்து பயன்பெற இந்த 'நிலை விளக்கம்' பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

சென்னை,
16—2—73.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

## சட்டப் பேரவையில்

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும் நானும் கலந்து கொள்கின்றது உள்ளிட்ட இந்த எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் 53 பேர் இந்த விவாதத்திலே கலந்து கொண்டிருக்கிறோம்.

இந்த 53 பேரில் என்னையும் சேர்த்து ஆளும் கட்சியின் சார்பில் 21 உறுப்பினர்களும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் சார்பில் 9 உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 6 உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சியின் சார்பில் 4 உறுப்பினர்களும், பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் 3 உறுப்பினர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 4 உறுப்பினர்களும், முஸ்லிம்லீக் கட்சியின் சார்பில் 4 உறுப்பினர்களும், தமிழரசுக் கழகத்தின் சார்பில் 1 உறுப்பினரும், சுயேச்சை ஒருவரும் ஆக 53 பேர்கள் ஆளுநர் உரையின்மீது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கொண்டுவந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஒட்டியும், எதிர்த்தும் விவாதங்களிலே ஈடுபட்டிருக்கிறோம். புராணிகர்கள் எந்த ஒரு காரியத்தையும் கணபதியை வைத்துத்தான் ஆரம்பிப்பார்கள் என்பதைப் போலவோ என்னவோ இயற்கையாக இந்த ஆண்டு ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தைக் கணபதி கொண்டு வந்து அதிலே விவாதமும் நடைபெற்றிருக்கிறது.

இதை நான் சொன்னால்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் கணபதியைப் பற்றி இங்கே பேசலாமா? முருகனைப் பற்றி அவர் பேசினார்; இவர் கணபதியைப் பற்றிப் பேசலாமா? என்று கேட்கக் கூடும். இந்த விவாதத்தில் நம்முடைய கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் மாண்புமிகு கே.டி.கே. தங்கமணி அவர்கள் கொஞ்சம் வேகமாகவே தன்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

திரு. ஹண்டே அவர்கள் வழக்கம் போல் அவருடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலும், ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.



ஆளுநர் அவர்களது உரையில் முதலிடத்தைப் பெறுவது மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய மறைவு குறித்த வரிகள் ஆகும். அவர்களுடைய இழப்பு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், இந்திய நாட்டைப் பொறுத்த வரையிலும், எவ்வளவு பெரிய இழப்பு என்பதனை ராஜாஜி அவர்களுக்காக இரங்கல் தீர்மானத்தை இந்த அவையிலே நாம் நிறைவேற்றிய நேரத்தில் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கின்றோம். நான் அன்றைக்கே எடுத்துச் சொன்

னேன்; ராஜாஜி அவர்களுக்கான நினைவுமண்டபம் ஒன்றினைக் காந்தியடிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தின் அருகே அமைக்க இருக்கிறோம் என்பதனையும், இந்தியக் குடியரசுத் தலைவர் அதற்கான அடிக்கல் நாட்டு விழாவினை நடத்தி வைக்க இங்கே வருகை தரவிருக்கிறார்கள் என்றும் சொன்னேன். அப்போதே இன்னொன்றும் குறிப்பிட்டேன். ராஜாஜி அவர்கள் பிறந்த இல்லமான, ஒசூரையடுத்த தொரப்பள்ளி கிராமத்திலேயுள்ள அவர்களது இல்லத்தையும் அரசாங்கம் விலைக்கு வாங்கி ராஜாஜி அவர்களுடைய நினைவுச் சின்னமாக ஆக்கிடும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருப்பதாகவும் சொன்னேன். அதற்கு உரியவர்கள், அந்த வீட்டை விலைக்குப் பெற்றிருப்பவர்கள், கொஞ்சம் அதிகத் தொகை அதற்குச் சொல்லிவருகிற காரணத்தால், இன்னும் அதிலே ஒரு முடிவெடுக்கப்படவில்லை என்றும் சொன்னேன். நான் அதை அறிவித்தபிறகு, அவர்களே முதலில் குறிப்பிட்ட விலையில் இப்போது பாதி விலைக்கே தருவதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். அவர்களுடன் பேசி முடிவுசெய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. விரைவிலே அந்த இடமும் பெறப்பட்டு முதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு நினைவுச் சின்னமாக அமைக்கப்பட இருக்கிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்வேன்.

## நிரந்தர நினைவுச் சின்னம்

ராஜாஜி அவர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் அமைக்கப்பட வேண்டுமானால் அது இப்படிப்பட்ட கட்டடங்கள் அல்ல; அவருடைய உள்ளத்திலே பதிந்திருந்த மதுவிலக்குக் கொள்கையை நாம் கடைப்பிடித்தால்தான் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கினோம் என்ற பெயரைப் பெற முடியுமென்று, முன்னாள் அமைச்சரும் ஸ்தாபனக்காங்கிரஸ் உறுப்பினருமான மாண்புமிகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். மதுவிலக்கினைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கிற கருத்து ஆனாலும், அல்லது சுதந்திரக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஹண்டே அவர்கள் கொண்டிருக்கிற கருத்தானாலும், அல்லது முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் கொண்டிருக்கிற கருத்தானாலும் அந்தக் கருத்திற்கு முரண்பாடான கருத்து அல்ல இன்றைய அரசின் கருத்து. அதை நான் பலமுறை திட்டவட்டமாக இங்கேயும் அறிவித்திருக்கிறேன். ஆனால், மதுவிலக்கை அமுலாக்குகிற நேரத்தில் ஏற்படுகிற சங்கடங்கள், அதிலே வெற்றி கிடைக்காமல் நாம் தலை குனிகின்ற நிலைமைகள், அரசுக்கு வரவேண்டிய வருமானமும் போய், வேறு மாநிலங்களுக்கு நமது அரசுக்கு வரவேண்டிய வருமானம் போய்ச் சேருகிற நிலைமை



இராஜாஜி நினைவாலய வரைவு.

யும் ஏற்பட்டு, இங்கேயும் கள்ளச் சாராயம் போன்ற சட்டத்திற்குப் புறம்பான நிலைமைகள் ஏற்படுவதும் நாம் பல ஆண்டுக் காலமாக அனுபவத்தில் கண்டு இருக்கிறோம். ஆகவேதான், மதுவிலக்கைப் பொறுத்தவரையில் ஒரு மாநிலம் மாத்திரம் ஒரு முடிவினை மேற்கொள்வது என்பது இயலாத காரியமாயிருக்கிறது, இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே அது தளர்த்தப்பட்டுவிட்ட காரணத்தினால்.

ராஜாஜி அவர்கள் தமிழகத்திற்கு மாத்திரம் சொந்தமானவர் அல்ல. அவர் ஒரு தேசியச் சின்னம். அத்தகைய சின்னத்தை நாம் நினைவுபடுத்தி அமைக்க வேண்டுமானால், இந்தியா முழுமைக்கும் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வருகிற அந்த முயற்சியிலே இந்தியப் பேரரசு வெற்றி பெறுமேயானால், நான் அன்றைக்குக் கூறியதைப்போல, அதை முதலில் இருகையேந்தி வரவேற்று அமுல்படுத்தக்கூடிய முதல் மாநிலமாக நம்முடைய தமிழ் நாடுதான் இருக்குமென்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்வேன். ஆகவே, ராஜாஜி அவர்களுக்கான மது விலக்குத் தொடர்பான நினைவுச் சின்னம் தமிழ் நாட்டிலே மாத்திரம் அமைந்தால் போதாது. இந்தியா முழுமைக்கும் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்திற்கு என்னுடைய கருத்துப் பின்னடைந்தது அல்ல, ஒட்டியதுதான் என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் அவர்களின் உரை எப்படிப்பட்டது என்ற விமரிசனத்தை எல்லாம் மாற்றுக் கட்சியிலிருந்து பலரும் அறிவித்திருக்கிருர்கள். கவர்னர் உரை அரசாங்கத்தினுடைய பிரதிபலிப்புத்தான் என்ற காரணத்தால் அதை ஏன் வானிலே அறிக்கை என்று சொல்லக்கூடாது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வாதிட்டார்கள். காலேயில் பேசிய முஸ்லீம் லீக் கட்சியின் தலேவர்திருப்பூர் மொய்தீன் அவர்கள் கூட நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னபோது நான் எண்ணிக் கொண்டிருப்பதைத்தான் சொல்லப்போகிருர் என்று கருதினேன். ஆனுல், அந்தப்பேச்சின் போக்கு அவையிலே எழுந்த பல்வேறு சூழலிலே வேறு வகையிலே திரும்பி விட்டது என்பதை நான் உணர்ந்தேன்.

வானிலே அறிவிப்பு என்பது சாதாரணமானது அல்ல. அது நாட்டுக்கு வரப்போகிற புயலே, மழையை, வானிலேச் சூழ்நிலேயை அறிவித்து, அனேவரையும் எச்சரிக்கை செய்யும் ஒரு அறிவிப்புத்தான் வானிலே அறிவிப்பாகும்.

### எச்சரிக்கை உரை

இதை அந்தக் கட்சியிலிருந்துகொண்டு எப்படி எதிர்ப்பது? அதை எதிர்த்ததாகவும் தெரியக் கூடாது. ஆதரிப்பதாகவும் தெரியக்கூடாது என்று எண்ணியோ என்னவோ நம்முடைய அம்மையார் டி.என். அனந்தநாயகி அவர்கள் சூசகமாக அதை வானிலே அறிவிப்பு என்று சொன்னதன் மூலம் இந்த உரை எச்சரிக்கையான உரை, மக்களே எச்சரிக்கைப்படுத்துகின்ற உரை, யாருக்கும் எந்தப் பாதகமும் ஏற்படாமல் முன்கூட்டியே அறிவிப்புச் செய்கின்ற உரை என்கின்ற வகையிலே, அவர்கள் பெருமைப்படுத்திஞர்கள் என்றுதான் நான் எடுத்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த வானிலே அறிவிப்பு சரியான நேரத்திலே வந்த காரணத்திஞலேதான், தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல்-வெள்ளச் சேதத்தால் நாம் மிகப்பலமான அபாயத்திற்கு ஆளாகாமல் ஓரளவு தப்பித்துக் கொண்டோம். அந்த வெள்ளச் சேதம் ஏற்பட்ட போது தமிழ்நாட்டு அரசு எந்தெந்த வகையிலே தன்னுடைய பணிகளேச் செய்தது என்பதற்கான விவரங்களே இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

• தமிழ்நாட்டிலே சென்ற ஆண்டு டிசம்பர்த் திங்களிலே அடித்த புயலாலும், ஏற்பட்ட வெள்ளத்தாலும், தென்ஞர்க்காடு, கோவை, திருச்சி, தஞ்சை, நீலகிரி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, சென்னே ஆகிய மாவட்டங்களில் சாலேகள், வீடுகள், பாசன அணேகள். வயல்கள் ஆகியவைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.

இந்தப் புயலாலும், பெரு மழையினுலும் 40 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டது என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளுக்காக 25 கோடி ரூபாய் அளவில் கடனுகவும், மானியமாகவும் வழங்குமாறு மத்திய அரசை நாம் கேட்டிருக்கிருேம்.

தமிழ்நாடு அரசு துயர் தணிப்புப் பணிகளுக்காக, உடனடியாக 5 கோடி ரூபாயைச் செலவிட அனுமதி வழங்கியதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறந்து இருக்க இயலாது.

தஞ்சாவூர், தென்னுர்க்காடு மற்றும் 8 மாவட்டங்களிலும் மொத்தம் இதுவரை வழங்கப்பட்டுள்ளதொகை 4·31 கோடி ரூபாய் ஆகும். இதிலே 31—1—1973 வரையிலும் செலவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 204·15 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.




பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2 இலட்சம். இந்த 2 இலட்சம் வீடுகளுக்கு 80 ரூபாய் வீதம் நாம் அவர்களுக்கு நிதியுதவி வழங்கியிருக்கிருேம். ஏற்கெனவே 40 ரூபாயாக இருந்ததை 80 ரூபாயாக ஆக்கி அப்படி பாதிக்கப்பட்ட 2இலட்சம்வீட்டுக்காரர்களுக்கு அளித்த்வகையில் 158 இலட்சம் ரூபாயை இந்த அரசு தந்திருக்கிறது.




அரிசனக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள ரூ. 250 வரை வட்டியில்லாமல் கடன் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதுவும் அமுல்படுத்தப்படுகிறது.

மணல் மேடிட்ட, மண் அடித்துச் செல்லப்பட்ட நிலங்கள் 10 ஆயிரம் ஏக்கர்கள். அந்த நிலங்களைச் செப்பனிட இதுவரையிலே எந்த அரசும் ஏற்றுக்கொள்ளாத ஒரு பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அந்த நிலங்களை அரசே செப்பனிடுகின்ற வேலையை ஏற்றுக்கொள்கிறது என்று அறிவித்த வகையிலே அதற்குச் செலவு மட்டும் ஒரு கோடி ரூபாய் என்பதை நான் மிகுந்த பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள முடியும்.

செப்பனிடும் பணியில் 75 புல்டோசர்கள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

உயிரிழந்த குடும்பங்கள் 81. இதுவரையிலே புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உயிர் இழந்த குடும்பங்களுக்குப் பெரும் தொகை உதவியாக அளிக்கப்பட்டவரலாறு கிடையாது. இந்த அரசு 81 குடும்பங்களுக்கும்; அதிலே 39 பேர் அந்த குடும்பங்களுடைய தலைவர்களாக இருந்த காரணத்தால் அந்தக் குடும்பத்தாருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம் 78 ஆயிரம் ரூபாயும், குடும்பத் தலைவர் இல்லாமல் மற்றவர்கள் இறந்துபோய் இருந்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரை இழப்பு ஈடாக அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் நாம் மத்திய அரசிடம் உதவியைக் கேட்டோம். 25 கோடி ரூபாய் நாம் கேட்டோம்.

நேற்று வரையிலே அவர்கள் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் அனுமதித்தார்கள். இன்றைக்கு இந்த அவைக்கு நான் மகிழ்ச்சியான ஒரு செய்தியைச் சொல்லிக்கொள்ள முடியும். இப்போது எனக்குக் கிடைத்த தகவலின்படி 14 கோடியே 25 இலட்சம் ரூபாயை மத்திய அரசு இந்த வெள்ள நிவாரண உதவிக்காக வழங்கியிருக்கிறது என்பதை நன்றி உணர்வோடு தான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிலே நடப்பு ஆண்டுக்காக 7 கோடி ரூபாயும், அடுத்த ஆண்டுச் செலவுக்காக $7\frac{1}{4}$ கோடியும் கணக்கிலே வைக்கப்படும். இந்த $14\frac{1}{4}$ கோடி ரூபாய், ஏற்கெனவே நமக்குக் கொடுத்து இருக்கிற $3\frac{1}{2}$ கோடிரூபாயையும் உள்ளிட்டு வழங்கப்பட்டிருக்கிற உதவித்தொகை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுவேன்.

ஏரிகள், குளங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதம் குறித்தும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1,524 பெரிய ஏரிகளும், 1,387 சிறிய ஏரிகளும் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதிலே நாம் இதுவரையிலே ஏற்றுக்கொண்டிருக்கிற வேலைகள் 5,921. அதிலே 1,191 வேலைகள் முழுவதும் முடிவு பெற்று, மீதியுள்ள 4,100 வேலைகள் விரைவிலே முடிவுறத்தக்க வகையிலே பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த மன்றத்தில் ஏற்கெனவே அறிவித்த சலுகைகள் அன்னியில், ஆங்காங்கு வெள்ளச்சேதங்களைப் பார்ப்பதற்குப் போனபோது அறிவித்த சிலவற்றையும் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக—பவானி ஆற்றில், அங்கே முதல் கட்டமாகக் கரையைக் கட்டி உயர்த்துவதற்காக 17 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தைத் துவக்கிவைப்பதற்கு நான் சென்றிருந்தேன். அங்கே இடிந்து கிடந்த ஒரு பள்ளிக்கூடத்தைக் காட்டி இதற்குப் பதிலாக வேறு புதிய இடத்திலே பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இடிந்துவிட்ட அந்தப் பள்ளிக்கூடத்தைப் பெண்கள் பள்ளிக்கூடமாக மாற்ற வேண்டும் என்றும் பவானியிலே உள்ள பொது மக்கள் என்னிடத்திலே முறையீடு தந்தார்கள். நான் உடனே அதை ஏற்றுக்கொண்டு பவானியில் புதிய பள்ளிக்கூடம் கட்ட 5 இலட்சம் ரூபாய்க்கு அங்கேயே அனுமதி வழங்கிவிட்டுத் திரும்பினேன்.




கோவையிலும், சேலத்திலும் என்னைச் சந்தித்த நெசவாளர் பெருமக்கள் தங்களுடைய நெசவுத் தொழிலுக்கான கருவிகள் எல்லாம் வெள்ளத்தால் அழிந்து போய்




விட்டன-பாழாகிவிட்டன என்று கூறியபோது, அவர்களுக்கு; வெள்ளத்திலே தங்களுடைய கருவிகளை இழந்துவிட்ட நெசவாளத் தோழர்கள் அந்த இழந்துவிட்ட நெசவுக் கருவிகளை வாங்குவதற்காக நெசவாளத் தொழிலாளர்களுக்கு; 100 ரூபாய் அரசின் சார்பிலே மானியமாக அளிக்கப்படும் என்று உறுதி கூறினேன். அந்த வகையிலே, கோவை மாவட்டத்திலே இதுவரையில் இந்த 100 ரூபாயைப் பெற்ற நெசவாளர்களின் எண்ணிக்கை—1,405 என்பதையும், சேலம் மாவட்டத்திலே பயனடைந்த நெசவாளர்களின் எண்ணிக்கை 300 என்பதையும், இதற்காக ரூபாய் ஒரு இலட்சத்து எழுபது ஆயிரத்து ஐந்நூறு (1,70,500) வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி மாணவர்கள் பலரும் அரசாங்கத்தினுடைய வேண்டுகோளை ஏற்று இந்த அரும்பணியிலே ஈடுபட்டார்கள்—வெள்ள நிவாரணப்பணியிலே! அதிலே பவானிப் பகுதியிலே பணியாற்றிக்கொண்டு இருந்த மாணவர் ஆற்றுச் சுழலில் அடித்துக் கொண்டு போகப்பட்டார்—ஜேம்ஸ் டேனியல் என்கிற தாம்பரம் கிறித்துவக் கல்லூரி மாணவர் அங்கே அடித்துச் செல்லப்பட்டார் என்று கேள்விப்பட்டதும் அவருடைய குடும்பத்தாருக்கு 5 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பிலே வழங்கப்பட்டதென்பதை நான் இங்கே நினைவு படுத்துகிறேன்.

கோவையிலே வீடிழந்த 3,216 பேருக்கு வீடு கட்டுவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் 8 இலட்சம் ரூபாய் வரையிலே கடன் வ்ழங்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புயலால் அனாதைக் குழந்தைகளானவர்கள் 4 பேர்கள். துரைராஜ் என்ற 10 வயதுப் பையனும், கற்பகம் என்ற 7 வயதுச்சிறுமியும், நடராஜன் ஆகிய மூன்று குழந்தை

களும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நெல்லை மாவட்டத்திலே நெல்லையப்பன் காந்திமதியம்பாள் தேவஸ்தான அனாதை




விடுதியில் 8—2—1973 அன்று சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். உதகமண்டலத்திலே வீடிழந்து, தாய் தந்தையரை இழந்த சித்திக் என்ற 4 வயதுப் பையனை தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் எடுத்து வளர்ப்பதாகச் சொன்னார்கள். ஆனால் முஸ்லீம் சமுதாயத்தினுடைய முறைப்படி அவர்கள் சுவீகாரம் போவது அவர்களுடைய மத சம்பிரதாயப்படி தடுக்கப்படுகின்றது என்று சொன்ன காரணத்தால் அந்தப் பையனுடைய எதிர்காலத்திற்காக நீண்டகாலச் சேமிப்பு டெபாசிட்டாக ரூ. 2 ஆயிரம் அரசின் சார்பில் வங்கியிலே வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதைத் தவிர அரசு ஊழியர் ஒருவர் பதவியில் இருக்கும்போது இறந்து போனால் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் எல்லாக் கல்விச் சலுகைகளும் இந்தச் சிறுவனுக்கு அளிக்கப்படும் என்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தில் வீடு இழந்து உதவி பெற்றவர்கள் 49,381 பேர். இதற்கான மொத்தப் பணச் செலவு 23,10,690 ரூபாய் ஆகும். இதிலே சைதாப்பேட்டை, தியாகராய நகர் ஆகிய பகுதிகளில் 11,272 பேரும், மைலாப்

பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் 10,395 பேரும் இந்த உதவியைப் பெற்றிருக்கிருர்கள். இதிலே முழுமையாக வீடு இழந்தவர்களுக்கு 80 ரூபாயும், ஓரளவு பாதிக்கப் பட்டவர்களுக்கு 60 ரூபாய், 40 ரூபாய் என்கின்ற வகை யிலும் பண உதவி செய்யப்பட்டிருக்கிறது.




ஆகவே, இந்த வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்டிருக் கின்ற மக்களுக்கு அரசின் சார்பில் உடனடியாக நடவடிக் கைகள் பல எடுக்கப்பட்டன என்பதற்கும், அதைச் சுற்றிப் பார்த்து விவரம் அறிய வந்த மத்திய அரசு அனுப்பிய குழுவினர் சரியான தகவல்கள் அறிந்து மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிருர்கள் என்பதற்கும் இதை விட வேறு சான்றுகளை நான் சொல்ல முடியாது.

ஆனல் எதிலும் ஒரு தவறு கற்பிக்க வேண்டுமென்று கருதுகின்ற சில பேர் நாட்டிலே இருக்கிருர்கள். வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக அமைச்சர் பெருமக்களும், அரசாங்க அதிகாரிகளும், பொது மக்களின் பிரதிநிதிகளும் பறந்தோடிச் செல்லுகிற நேரத்திலும், மத்திய சர்க்கார் பணம் அனுப்பினல் அது ஊழலாகிவிடும்; அது தவருகச் செலவிடப்படும் என்கிற முறையிலே இங்கே பல பேர் பிரச்சாரம் செய்தார்கள். நான் இங்கேயுள்ள சில எதிர்க்கட்சியினர் சொல்வது பற்றிக் கூடக் கவலைப்படவில்லை. டில்லியிலே இருந்து வந்த

காங்கிரஸ் கட்சியினுடைய பொறுப்பிலே இருக்கிற திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார் கூட, ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கிற பணம் அவர்களுடைய கையில் போய்ச் சேருவதில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற ஆளுங்காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. இராமையா அவர்கள் கூட இதே குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஆனால், வந்து ஆராய்ந்து பார்த்த குழுவினர். நல்ல முறையிலே நடைபெற்றிருக்கிறது என்பதனையும், அந்தக் குழுவினரே நம்முடைய அதிகாரிகளை விட்டு விட்டுத் தனியாகச் சென்று, பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற ஏழை மக்களைப் பார்த்து—வீடு இழந்தவர்களைப் பார்த்து—உங்களுக்கு




எவ்வளவு பணம் கிடைத்தது? என்கின்ற கணக்குகளையெல்லாம் கேட்டு—அவர்கள் சரியான முறையிலேதான் இங்கே இந்த உதவிகள் செய்யப்படுகின்றன; பணவினியோகம் நடைபெறுகிறது; பொருள் வினியோகம் நடைபெறுகிறது என்கின்ற அந்தப் புள்ளி விவரத்தை மத்திய அரசுக்குத் தந்திருக்கின்றார்கள். அதன் விளைவாகத்தான் இன்றைக்கு 14 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கான அனுமதியை மத்திய அரசு நமக்கு வழங்கியிருக்கிறது என்பதனையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசின் உதவி எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு மேல் கூட் வற்புறுத்தத் தயார்தான். ஆனால், மகாராட்டிரத்தில் இம்மாதிரி மத்திய அரசு பண உதவி செய்யும் போது, மத்திய அரசின் அதிகாரிகளும் கூட இருந்து வினியோகத்தைக் கண்காணித்தார்களே, அம்மாதிரி முறையைத் தமிழ் நாட்டிலும் அனுமதிப்பீர்களா!

மாண்புமிகு முதல்வர் : இங்குக் கண்காணிக்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவது உண்மையிலே மனத்திற்குள் சந்தேகம் இருக்கிறதோ, இல்லையோ—அப்படி ஒரு புழுதியை வாரி இறைப்பது. இதையே எதிர்க்கட்சிக்காரர்கள் வேலையாக வைத்துக் கொண்டிருந்தால் நல்ல காரியங்களை நடத்த முடியாது. மராட்டியத்தில் என்ன நடைபெறுகிறது என்பது எனக்குத் தெரியாது. எந்த வகையிலே நடைபெறுகிறதோ எனக்குத் தெரியாது. அப்படி மராட்டியத்தைக் கண் காணிக்க அங்கே தவறு நடைபெறுகிறதென்பதும் எனக்குப் புரியாது.

திருமதி டி. என். அனந்தநாயகி: நாங்கள் சொல்வதையெல்லாம் ஏதோ புழுதி வாரி இறைப்பதற்காகவே சொல்கிறோம் என்று நீங்கள் எடுத்துக்கொள்வது தவறு. என்னுடைய தொகுதியில் பல குடிசைகளில் நான்கு சுவர்களும் இடிந்து கிடந்தும் கூட, அவர்களுக்கு கூட உதவி போய்ச் சேரவில்லை. நானும் தாசில்தாரிடம் இரண்டு முறை பார்த்துச் சொன்னேன். இப்படிச் சரியான முறையில் நீங்கள் கணக்கு எடுக்காமல் இருக்கின்றீர்களே என்று சொல்கிறோம். ஏதோ எங்கோ சில குறைகள் இருக்கின்றனவென்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறோம். ஏதோ நாங்கள் புழுதியை வாரி இறைப்பதாக அவரே சொல்லுவது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் ; குறைகள் ஏற்படலாம், திரு. ஹண்டே அவர்கள் கூட அந்த வெள்ளச் சேதத்திற்காக நிவாரணங்கள் அளிக்கப்பட்ட போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்னை மாநகரத்தில் நிவாரணம் அளிக்கப்பட்டபோது, அவர்களுடைய தொகுதியில் ஒருஐந்து ஆறு இடங்களில், நிவாரணம் அளிக்கப்பட்ட வில்லை என்று குறிப்பிட்டு, என்னிடம் கடிதம் மூலம் எழுதித் தந்தார்கள். இந்த அவை நடந்த போது தான் கொடுத்தார். அதை உடனடியாக கவனித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றவிவரங்களை ஹண்டே அவர்களுக்கு நானே அனுப்பிவைத்தேன். அதைப் போல அம்மையார் அவர்கள் இந்த அவையில்—ஓகோ ; வரவில்லை அப்போது—கொடுத்திருக்கலாம் அப்படிக் கொடுக்காத காரணத்திஞல் அது கவனிக்கப்படாமல் போயிருக்கலாம். இப்பொழுது கூட எந்த எந்த இடத்தில் இந்தத் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டுக் காட்டிஞல், அவைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நிச்சயமாகத் தயாராக இருக்கிறது.

# விவசாயிகளின் பிரச்சினை

அடுத்து, இந்த உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் விவசாயிகளுடைய கோரிக்கைகளை அரசு சரியானபடி கவனிக்கவில்லை. அல்லது உடன்பாட்டிலே ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்ற விவாதம் முக்கியமாக இருந்தது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சியினுடைய மதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள். விவசாயிகள் கிளர்ந்து எழுவார்கள் என்கிற வகையில் கூட வெளியிடங்களில் பேசிவருகிறார்கள். பத்திரிகைகளிலே அவைகள் பெரிய எழுத்துச் செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், விவசாயிகளின் கோரிக்கைகள் எந்த உடன்பாட்டிற்கு வந்தன, அந்த உடன்பாட்டை இந்த அரசு நடை முறைப்படுத்தியதா, இல்லையா என்பதை இந்த அவைக்கு நான் விளக்குவதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் விளக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### கோரிக்கை 1

அவர்களுடைய முதல் கோரிக்கை, விவசாயத்திற்கான மின்கட்டண உயர்வை ரத்துச் செய்ய வேண்டும். மின் துண்டிப்பு செய்தல் கூடாது. வறண்ட கிணறுகளுக்கு வருடாந்திர குறைந்த பட்சக் கட்டணம் வசூலித்தலை நிறுத்த வேண்டும். இது கோரிக்கை.

உடன்பாடு என்ன, விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணம் ஒரு மாதத்தில் உபயோகப் படுத்தப்படும் மின்சாரத்திற்கு முதல் 100 யூனிட்டுகளுக்கு, யூனிட் ஒன்றுக்கு 12 பைசாவாகவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 பைசாவாகவும் நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கை—இதன்படி மாற்றியமைத்து, 1—8—1972 அன்று அரசு ஆணை பிறப்பித்தது. அவ்வாறு அதை அரசு நிறைவேற்றியிருக்கிறது.

### கோரிக்கை 2

இரண்டாவது கோரிக்கை அரசாங்கக் கடன், கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் உட்படச் சகல கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டும். மோட்டார் பம்பு செட்டுகள், கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்.—இது கோரிக்கை.

உடன்பாடு என்ன? மாநிலத்தில் வறட்சியுள்ள இடங்களில் கடன் வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அது தொடர்ந்து அமுல் படுத்தப்படும். மேலும், வறட்சிப் பகுதிகளை வருவாய் வாரிய உறுப்பினர்கள் மாவட்ட வாரியாகப் பார்வையிட்ட பின்னர், எந்தெந்தப் பகுதிகள், விளைச்சல் அற்ற பகுதிகள் என்று தீர்மானிக்கப்படுகிறதோ அந்தப் பகுதிகளில், கடன் பாக்கிகளுக்குத் தவணை அளிப்பது போன்ற சலுகைகள் அளிக்கப்படும். இதற்கிடையில் ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது. இது உடன்பாடு! எடுக்கப்பட்ட நடவடிக்கை. அரசு ஆணையின்படி மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் எல்லாக் கூட்டுறவு வங்கிகளுக்கும், துறையின் அதிகாரிகளுக்கும் கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் கெடுபிடி நடவடிக்கை இல்லாமல் பார்த்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். பின்னர் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக, மேற்சொன்ன உத்தரவு 30–6–1973 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு உதவும் வகையில் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற, மாநில அரசு கோரிக்கை செய்து, ரிசர்வ் வங்கி ரூ. 4·54 கோடி கடனுதவி அளித்திருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், இதே விதமான குறுகிய காலக் கடன்களை மத்தியகாலக் கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் சேதமான கிணறுகளைச் செப்பனிடவும், மண் அடிக்கப்பட்ட நிலங்களைச் சீர் செய்யவும் மத்திய வங்கிகள், மத்திய காலக் கடன்கள்வழங்கு வதற்கான உத்தரவைக் கூட்டுறவுப் பதிவாளர் பிறப்பித்துள்ளார். மூன்ருவது கோரிக்கை;

### கோரிக்கை 3

விவசாயப் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து, விவசாயப் பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று விற்பனை செய்ய வேண்டும்—இது மூன்ருவது கோரிக்கை. இதில் என்ன உடன்பாடு ஏற்பட்டுள்ளது:—விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு 'ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன்' நிறுவுவதைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுப் பரிசீலிக்கும். விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயம் செய்வதற்கு, விவசாயப் பிரதிநிதி உள்ளிட்ட குழு ஒன்றை அமைப்பது பற்றிப் பரிசீலிப்பதோடு, தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றைக் கொள்முதல் செய்வது பற்றியும் மத்திய

அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும். இதுதான் உடன்பாடு.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

தேங்கியுள்ள பருத்தி இருப்பினை விற்பதில் விவசாயி களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைப் பற்றி மத்திய அரசுக்குத் தமிழக அரசு எடுத்துச் சொல்லியுள்ளது. பருத்திக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கும் கொள்கை பற்றி மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியப் பருத்திக் கழகம் எந்த அளவுக்குப் பருத்தியைக் கொள்முதல் செய்கிறது என்பதையும், கொள்முதல் விலையையும் முன் கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு வற்புறுத்தி வந்துள்ளது. விலை நிர்ணயம் செய்யும் குழு அமைப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது ஒன்றுதான் இன்னும் பரிசீலனையில் இருக்கின்ற விஷயம்.

### கோரிக்கை 4

அடுத்த கோ.ரிக்கை ; நான்கு. பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும் என்பதுகோரிக்கை. கம்யூனிஸ்டுக் கட்சிஉள்ளிட்ட அத்தனை பேரும் விடுத்த கோரிக்கை—பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்டுள்ள நில வரி, செஸ் வரிகளைக் கைவிட வேண்டும். விவசாயப் பம்புசெட்டு களுக்கும், இரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்துச் செய்ய வேண்டும்—இது கோரிக்கை. உடன்பாடு என்ன? பயிர் அடிப்படையில் விவசாய வருரியில் கணக்கு வைப்பது கட்டாயமில்லை என்றும், ஏக்கரா வரைஇல்லாமல் கம்பவுண்டிங் முறையில் வரி செலுத்தலாமென்றும் முன்பு அறிவிக்கப்பட்டுள்ள சலு கைகளை யொட்டி, மேலும் சிறிய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியில் சலுகை அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். அந்தச் சலுகை, உதாரணமாக, 7.5 ஸ்டாண்டர்டு ஏக்கரா வரையில் வருமான வரி இல்லை என் பதை 10 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்குவது பற்றியும், ஸ்டாண்டர்டு ஏக்கரா கணக்கிடுவதில் மாற்றம் செய்வதாக வும் இருக்கும். இது உடன்பாடு.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமானத் திருத்தச் சட்டத்தின்படி கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப் பட்டன. 7·5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி விலக்கு அளித்து இருந்த நிலையை மாற்றித் தற்பொழுது 10 ஸ்டாண்

டார்டு ஏக்கருக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. தற்போது 10 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளின் வருமான அடிப் படையில் வரி விதிக்கும் போது, 4 ஆயிரம் ரூபாய் வரி விலக்கு அளிக்கப்பட்டது. இதில் தற்போது 5000 ரூபாய் வரை வரி விலக்களிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பிளாண்டேஷன் அல்லாத பயிர்களுக்கு முன்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை கம்பவுண்ட் செய்துகொள்ள லாம். தற்போது எவ்வித ஏக்கர் எல்லையளவும் இல்லா மல் வரியைக் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம். பிளாண்டேஷன் பயிர்களுக்கு முன்பு உயர்ந்த பட்சம் 30 ஸ்டாண்டார்ட் ஏக்கருக்கு மட்டும் கம்பவுண்டிங் செய்ய விதியில் இடம் இருந்தது. தற்போது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்பது 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக உயர்த்தப் பட்டது. கம்பவுண்டிங் கட்டண விகிதங்கள் தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. பாக்கு, திராட்சை, கரும்பு, நிலக்கடலே, பயிர், பருத்தி, தென்னை ஆகிய பயிர்கள் விளையும் நிலங்களை ஸ்டாண்டர்டு ஏக்கராவாக மாற்றுவதில் மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டன. உதாரண மாக முன்பு ஒரு ஏக்கரில் 6-ல் ஒருபங்கு பாக்கு பயிரிட்டால், அதை ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று எடுத்துக்கொள்ளப் பட்டது. தற்போது —ஒரு ஏக்கரில் 3-ல் ஒரு பங்கு பாக்கு பயிரிட்டால், அதை ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று எடுத்துக்கொள்ளலாம். இந்தவகையிலே அந்த உடன்பாடு இந்த அவையிலே நிறைவேற்றிவைக்கப்பட்டிருக்கிறது.

### கோரிக்கை 5

அடுத்து, 5-வது கோரிக்கை பாசனக் கட்டுப்பாட்டை நீக்கித் தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். —இது கோரிக்கை. உடன்பாடு என்னவென்ருல், ஏற் கெனவே இதற்கான தற்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இது பற்றி இந்தப் பகுதிகளில் விவசாயிகளின் மாநாட்டைக் கூட்டிப் பரிசீலித்துத் தக்க முடிவு எடுக்கப்படும். ஏற்பட்ட உடன்பாடுஇது.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 22–1–1973-ல் கோவை உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தி அம்மாநாட்டில் பயிர் செய்வது சம்பந்தமான கட்டுப்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. முடிவுகள் விரைவில் அறிவிக்கப் பட இருக்கின்றன.

### கோரிக்கை 6

ஆருவது கோரிக்கை. பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடி யாக நீர்ப்பாசனம் செய்ய உத்திரவிடச் செய்ய வேண்டும். அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிர கடனப் படுத்த வேண்டும். இது ஆருவது கோரிக்கை.

உடன்பாடு என்ன? இது பற்றி மத்தியத் திட்டக் குழுவுடனும், கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும். தொடர்பு கொண்டிருக்கிறோம். அது எடுக்கப்பட்ட நடவடிக்கை. பல முறை பேச்சு வார்த்தைகளை அந்த அரசுகளோடு இந்த அரசு நடத்திக் கொண்டு இருக்கின்றது.

### கோரிக்கை 7

7-வது கோரிக்கை, விவசாயக் கால்நடைகள், பயிர்கள் பாதுகாப்பு; (இன்சூரன்ஸ்) செய்யப்பட வேண்டும். உடன்பாடு என்ன? மாநில அரசுக்கு இந்தக் கொள்கை உடன்பாடுடையது. மத்திய அரசிடம் இது பற்றிவலியுறுத்தப்படும்; வலியுறுத்தி வருகிறோம். ஆனால், மத்திய அரசிடமிருந்து பதில் வரவில்லை. பல கடிதங்கள் எழுதியிருக்கிறோம். இதற்கான அறிக்கையைத் தமிழ் நாடு விவசாயப் பல்கலைக் கழகத்திலிருந்து தானியக் காப்பீடு சாத்தியக் கூறுகளைப் பற்றி அரசிற்கு இப்போது அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதையும் பெற்று மத்திய அரசிற்கு மீண்டும் நினைவுட்டுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

இனம் ஒழிப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்து, இனம் நிலங்களை உழுது கொண்டிருக்கின்ற உழவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். இதற்கு என்ன உடன்பாடு? இந்தப் பிரச்சினை பரிசீலனை செய்யப்படும். அதற்கு ஏற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை :—63-ஆம் ஆண்டு இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவுகளில், இந்து, முஸ்லீம், கிறித்துவ மத ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்ட இனம்தார்களுக்கும் எந்த அளவு பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை நிலவரித் திட்ட ஆணையாளரை மாநிலம் முழுமைக்கும் சேகரித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. செட்டில்மென்ட் அலுவலர்கள் மூலம் ஒருவித விசாரணையும், தாசில்தார்கள் மூலம் மற்றொரு விசாரணையும் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இவைகளின் மூலம் கிடைக்கப் பெறும் புள்ளி விவரங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க மிகவும் தேவைப்படும்.

வருவாய் வாரியத்தின் இறுதி அறிக்கை வரப்பெற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. டி. கே. தங்கமணி: இனம் நிலங்களைப் பற்றித் தனியார் மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டபோது அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் : வருவாய் வாரியத்தின் இறுதி அறிக்கை வரப்பெற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

### கோரிக்கை 9

9-வது கோரிக்கை, அதை அவர்களே வலியுறுத்தவில்லை.

### கோரிக்கை 10

*10*-வது கோரிக்கை; விவசாய வேலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மரணம் அடைந்தவர்களுடைய குடும்பங்களுக்கும், அரசு நிவாரணம் அளிக்க வேண்டும். இது கோரிக்கை;

இதில் ஏற்பட்ட உடன்பாடு என்ன?

விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், இரு தரப்பினரும், மாவட்ட வாரியாக விவசாயத் தொழிலாளர்களுடைய பொதுநல நிதி உருவாக்கவும், அதற்கு அரசு சார்பில் ஈட்டுநிதி அளிக்கவும் பரிசீலிக்கப்படும். இன்னும் அவர்கள் ஏற்றுக் கொண்டவாறு அந்தச் சங்கத்தார் விவசாயிகளுடைய பொதுநல நிதியைத் திரட்டவில்லை. அவர்கள் திரட்டியதும் அதற்கு ஈடாக அரசு நிதியை அளிக்கத் தயாராக இருக்கிறது.

### கோரிக்கை 11

*11*-வது கோரிக்கை; விவசாயத் தொழிலாளர்களுக்கும், கிராமப் புற ஏழை மக்களுக்கும், அரசுச் செலவிலேயே குடியிருப்பு மனை நிலம் வழங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் பூராவும் கூலி நிர்ணயச் சட்டம் வேண்டும் என்பதாகும். இது கோரிக்கை.

ஏற்பட்ட உடன்பாடு என்ன ?

குடியிருப்பு மனை நிலம் ஏழை மக்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்குவது பற்றி மாநிலம் முழுமையும் சட்டத்தை விரிவாக்க முதல்வர் ஏற்கெனவே கலெக்டர்கள் மாநாட்டில் அறிவித்திருப்பதை யொட்டி, அந்த முயற்சி விரைவுபடுத்தப்படும். விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவரவும், அதுபற்றி ஆராயவும் ஒரு கமிஷன் நியமிக்கப்படும். இந்த இரண்டு காரியங்களும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

### கோரிக்கை 12

12-வது கோரிக்கை; வனத் தரிசு புறம்போக்கு நிலங்களை அந்தந்தப் பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும்

என்பது. ஏற்பட்ட உடன்பாடு. வனத்துறையில் இப்போதே காடுகள் அல்லாத நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படு கின்றன. இந்த ஆண்டு 52 ஆயிரம் ஏக்கர் பகிர்ந்தளிக்கத் திட்டம் உள்ளது. புறம்போக்கு நிலங்களும் இலட்சக் கணக்கானவர்களுக்குத் தொடர்ந்து பகிர்ந்து அளிக்கப்படுகிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத்தான் இதுபோன்ற நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. அது தீவிரமாக அமுல்படுத்தப்படும். இதுதான் உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், 1972–73-ஆம் ஆண்டில் அரசு 75,000 ஏக்கர் நிலத்தை அடமானம் என நிர்ணயம் செய்தது. அதில் நவம்பர் 1972 முடிய, 51 ஆயிரம் ஏக்கர் நிலம் அடமானம் செய்யப்பட்டுவிட்டது. 1972–73 நிதியாண்டு முடிவதற்குள் நிர்ணயிக்கப்பட்ட இந்த இலக்கை அடைந்துவிடலாம். இந்த அளவிலே விவசாயிகளுடைய கோரிக்கை மிகப்பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களை நான் இங்கே எடுத்துச் சொன்ன குறிப்புகளின் மூலமாக இந்த அவைக்கு வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

## மின்சார வெட்டு

அடுத்து இந்த அவையிலே மிக முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்சினை, இன்று மக்களுடைய கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிற பெரிய பிரச்சினை, மின்சார வெட்டு.

மிக நெருக்கடியான நிலைமையிலே நாம் இருக்கிறோம் என்பதை யாரும் மறுத்திடத் தயாராக இல்லை. ஆனால், அனைவருடைய ஒத்துழைப்போடு இந்தப் பிரச்சினையை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மின்சார வெட்டைப் பற்றிப் பேசிய நேரத்தில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களானாலும் சரி, அல்லது மற்ற எதிர்க் கட்சி உறுப்பினர்களானாலும், தலைவர்களானாலும் சரி, இந்த அரசு மின் உற்பத்தி செய்யவேயில்லை என்ற ஒரு பெரிய குற்றச்சாட்டினை எடுத்துக் கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் 1966–67-ல் 857 மெகாவாட் உச்சமின் தேவை (Demand) இருந்தது. இப்போது 1971–72-ல் அது 1,326 மெகாவாட்டாக மாறியிருக்கிறது. 1966–67-ல் நீர்மின் நிலையங்கள் நமக்கு வழங்கிய உற்பத்தி 21,000 இலட்சம் யூனிட். ஆனால், 1971–72-ல் அது 37,490 இலட்சம் யூனிட்டாக நீர்மின் நிலையங்கள் மூலம் கிடைக்கிறது. அனல் மின் நிலையங்கள் 66–67-ல் 4,050 இலட்சம் யூனிட் உற்பத்தி செய்தது. இன்றைக்கு 71–72-ல் அது 4,050 இலட்சத்திற்கு மாறாக 6,180 இலட்சம் யூனிட் இன்றைக்குக் கிடைக்கிறது.

நெய்வேலி, கேரளா, மைசூர் மாநிலத்திலிருந்து66—67-ல் வாங்கப்பட்ட மின்சாரம் 15,980இலட்சம் யூனிட். 71—72-ல் அது 24,490 இலட்சம் யூனிட்டாக உயர்ந்தது. நெய்வேலி, கேரளா, மைசூர் ஆகிய இடங்களில் பெற்றவை 24,490 இலட்சம் யூனிட்டாகும். இதிலே மின்வெட்டு இப்பொழுது தான் தமிழ் நாட்டிலே, முன்னேற்றக் கழக அரசிலே வந்து விட்டதாகக் கற்பனை செய்து கொண்டு சில பேர் பேசினார்கள். அவர்களுக்கு 1961—ஆம் ஆண்டிலிருந்து இந்த மின்சாரத் துறையிலே ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## சங்கடங்கள்

1961-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்ட மின்சாரவெட்டு 40 சதவீதம்—12 நாட்களுக்கு, வெட்டப்பெற்றது. பின்னால் 15 சதவீதம் சுமார் 6 நாட்களுக்கு வெட்டப்பெற்றது.

1962-ஆம் ஆண்டு 40 சதவீதம்—15 நாட்களுக்கு.

1963-ஆம் ஆண்டு 80 சதவீதம்—16 நாட்களுக்கு.

1964-ஆம் ஆண்டு 40 சதவீதம்—3 நாட்களுக்கு, பின்னால் அது 80 சதவீதமாக்கப்பட்டது 18 நாட்களுக்கு.

1965-ஆம்ஆண்டு 25சதவீதம்-இரண்டு மாதங்களுக்கு.

1966-ஆம் ஆண்டு 25 சதவீதம்—ஏழு மாதங்களுக்கு.

பின்னர் 1967 முதல் 69 வரை மின் வெட்டு இல்லை.

1970-ல் 40 சதவீதம் வெட்டப்பட்டது, 6 நாட்களுக்கு. (நெய்வேலி அப்பொழுது மூடப்பட்ட காரணத்தால்.)

1971-ல் மின் வெட்டு இல்லை.

1972-ல் 25 சதவீதம் மின்வெட்டு—23 நாட்களுக்கு.

## இங்கு மாத்திரமா?

பிறகு 1—10—1972-க்கு பிறகு இதுவரையில் 25 சதவீத மின்வெட்டு. 4 மாதங்களுக்கு வெட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாகத் தொழிற்சாலைகளுக்கு வெட்டு உயர்த்தப்பட்டு 40 சதவீதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிலைமைகள் நெருக்கடியாகக் கூடும். அதை மறுக்க விரும்பவில்லை. மறைக்கத் தேவையுமில்லை. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில், அங்கே இல்லையா என்று கேட்டு நாம் ஆறுதல் பெறமுடியாது என்பதை நிச்சயமாக ஒத்துக் கொள்கிறேன். ஆனாலும், இது வெறும் தமிழ்நாட்டிலே மாத்திரம் உள்ள பிரச்சினை மட்டுமல்ல. அனைத்திந்தியா விலும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.


இந்தியாவில்
பல்வேறு மாநிலங்களில்
மின்வெட்டு.
75%
40%
உத்தரப் பிரதேசம்
குஜராத்
25%
மராட்டியம்
25%
ஆந்திரம்
25%
30%
மைசூர்
தமிழ்நாடு
40%

மற்ற மாநிலங்களில் தற்போதுள்ள மின்சார வெட்டின் அளவு :—அரியாஞ 80 சதவீதம், பஞ்சாப் 75 சதவீதம், உத்தரப்பிரதேசம் 40 சதவீதம், ஆந்திரப்பிரதேசம் 30 சதவீதம், மைசூர், குஜராத், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் 25 சதவீதம், மேற்கு வங்கம் 17 சதவீதம் இன்றைக்கு மின்வெட்டு மூலம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிருர்கள். இங்கே இன்றையத்தினம் எடுத்துச் சொல்லப்பட்ட மிகப் பெரிய குறையாகச் சொல்லப்பட்டது. பார்ப்பவர்களுக்குப் பாமரர்களுக்கு—ஒகோ ; இதனுல் தானே இவ்வளவு பெரிய ஆபத்து என்று எண்ணிடத்தக்க அளவுக்கு பெரிய குறையாக ஒன்று சொல்லப்பட்டது; சினிமாக்கள் மூன்று காட்சிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இது ஒரு குற்றச் சாட்டு. 2-வது ; நீங்கள் ரூரல் எலக்டிரிபிகேஷன்—கிராமங்களுக்கு மின் வசதி கொடுப்பதற்கான ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பித்தீர்கள், அதன் காரணமாக இந்தச் சங்கடமான நிலைமை வந்துவிட்டது என்று சொன்ஞர்கள். முதலில், சினிமாவுக்கு மூன்று காட்சிகளுக்கான மின்சாரம் நாம் வழங்கவில்லை. நாம் ஒரு காட்சியைக் குறைத்து விடுங்கள் என்று உத்தரவிட்ட போது நாங்கள் 2 காட்சிக்குரிய மின்சாரத்தில் விசிறி முதலானவைகளைக் குறைத்துக்கொண்டு 3 காட்சிகள் நடத்திக் கொள்கிறோம் என்று கேட்டுக் கொண்டதால், 2 காட்சிக்குரிய மின்சாரம் தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சினிமாவிற்கும் அல்லது தெரு விளக்குகளுக்கும் கிராமப்புறத்து விளக்குகளுக்கும் ஆகின்ற மின்சாரச் செலவு எவ்வளவு என்பதைத் தயவு செய்து நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

பார்ப்பதற்குப் பிரகாசமாக இருப்பதைச் சொல்லி, பார் பார் பட்டணத்தில், எவ்வளவு விளக்குகள் எரிகின்றன. பார் பார் சினிமாக்கள் நடக்கின்றன—பார் பார் கிராமத்திற்கு எல்லாம் இவர்கள் விளக்குகள் போட ஆரம்பித்து இருக்கிருர்கள் என்று கூறுகின்றனர்.

### அரிசனக் காலனிகள்

அரிசனக் காலனிகளுக்கு 1967 வரையில் 4 ஆயிரம் காலனிகளுக்குத்தான் போடப்பட்டிருக்கிறது. இன்று இந்த ஆட்சியிலே 20 ஆயிரம் காலனிகளுக்கு மின் விளக்குகள் போடப்பட்டு முடிந்துவிட்டது. இவைகளை எல்லாம் செய்தது தவறு, என்பதைப் போல—ஆராயாமல் செய்த வேலை என்பதைப் போல—இன்றைக்குப் பேசுகிருர்கள். நான் அதற்காகத்தான் இந்தக் கணக்கை அளிக்க விரும்புகிறேன்.

ஒரு நாளைக்கு நம்முடைய மாநிலத்திற்குப் பல்வேறு துறைகளுக்கும் தேவையான மின்சாரம் 225 இலட்சம் யூனிட்டுகள்.

இதிலே, இந்த 225 இலட்சம் யூனிட்டுகளிலே, தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மின்சாரம் 115 இலட்சம் யூனிட்டுகள். கிட்டத்தட்ட 50 சதவீதம் தருகிறோம்.

விவசாயத்திற்கு இந்த 225 இலட்சம் யூனிட்டுகளிலே தருவது 45 இலட்சம் யூனிட்டுகள். 20 சதவீதம் தருகிறோம்.

வீட்டு உபயோகத்திற்கு 9,50,000 யூனிட்டுகள் இந்த 225 இலட்சம் யூனிட்டில் இருந்து தருகிறோம். அதாவது 4·2 சதவீதம்.

தெரு விளக்குகளுக்குப் பயன்படுத்தப்படுவது இந்த 225 இலட்சம் யூனிட்டுகளிலே—கிராமத்திலே எல்லாம் லைட் போட்டுக் கெடுத்து விட்டார்கள்; அதனால்தான் பற்றாக் குறை என்று சொன்னார்களே; அதற்கு நான் சொல்லுகிற பதில் இந்த 225 யூனிட்டுகளிலே 2 இலட்சத்து 50 ஆயிரம் யூனிட்டுகள் தான். அதாவது 1 பெர்சென்ட்தான் தெரு விளக்குகளுக்கு உபயோகப்படுத்தப் படுகிற மின்சாரம்.

சினிமாக்களுக்கு 225 இலட்சம் யூனிட்டுகளிலே உயோகப் படுத்துகின்ற மின்சாரம் ஒரு நாளைக்கு 1 இலட்சத்து 30 ஆயிர யூனிட். ½ சதவீதம். அதாவது 0·5 சதவீதம்.

கடைகளுக்கு 6 இலட்சத்து 60 ஆயிரம் யூனிட்டுகள். அதாவது 3 சதவீதம்.

அத்தியாவசிய சர்வீஸ்களுக்கு 7 இலட்சம் யூனிட்டுகள். அதாவது 4·3 சதவீதம்.

குறைக்கப்பட்டது.

இதிலே எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றால்,

தொழில் நிறுவனங்களுக்கு 115 இலட்சம் யூனிட்டாக இருந்ததை, 80 இலட்சத்து 60 ஆயிரம் யூனிட்டுகளாக இப்பொழுது, இந்த 40 சதவீதம் வெட்டின் மூலம் குறைத்து இருக்கிறோம். அவர்களுக்கு, மொத்தம் மின் வழங்குவதில் 36 சதவீதம் தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது.

விவசாயத்திற்கு 45 இலட்சம் யூனிட் அப்படியே கொடுக்கிறோம். வெட்டு இல்லை. அவர்களுக்கு மொத்த மின் வழங்குவதில் 20 சதவீதம் வழங்குகிறோம்.

வீட்டு உபயோகத்திற்காக 9 இலட்சத்து 50 ஆயிரம் யூனிட்டை 8 இலட்சத்து 70 ஆயிரம் யூனிட்டுகளாகக் குறைத்து இருக்கிறோம். 25 சதவீதம்—100 யூனிட்டுக்கு மேற்பட்டால் வெட்டு என்கிற வகையில்.

தெரு விளக்குகளுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் யூனிட். இதைக் குறைத்து 1 இலட்சத்து 25 ஆயிரம் யூனிட்டுகள் ஆகக் குறைத்திருக்கிறோம். தெரு விளக்கைப் பொறுத்த வரையில் 50 சதவீதம் மின் வெட்டு.

சினிமாக்களுக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் யூனிட்டை 90 ஆயிரம் யூனிட்டுகள் என்று குறைத்து இருக்கிறோம். $33\frac{3}{4}$ சதவீதம் மின் வெட்டு சினிமாக்களுக்கு. 0·5 சதவீதம் தான் சினிமாக்களுக்கு உபயோகிக்கப்பட்டது, இப்பொழுது 0·4 சதவீதம் தான் சினிமாக்களுக்கு உபயோகிக்கப்படுகிறது.

கடைகளுக்கு 6 இலட்சத்து 60 ஆயிரம் யூனிட் என்று இருந்ததை 5 இலட்சத்து 10 ஆயிரம் யூனிட்டுகள் என்று குறைத்து இருக்கிறோம்.

அத்தியாவசிய சர்வீஸ்களுக்குக் குறைக்கவில்லை.

## இழப்பு.

முன்பு இழப்பு, 225இலட்சம் யூனிட்டாக இருந்தபோது, 38 இலட்சத்து 10 ஆயிரம் யூனிட். அதாவது 17 சதவீதம். இப்பொழுது 32 இலட்சத்து 60 ஆயிரம் யூனிட்டாகக் குறைத்து இருக்கிற காரணத்தால் இழப்பு 14·2 சதவிகிதமாகிறது. இந்த இழப்பு தமிழ்நாட்டிலே 17 சதவிகிதம் ஏற்படுகிறது என்ற காரணத்தாலேதான் மின்சாரப் பற்றுக்குறை வந்தது. இது ஒரு கண்டனக் கணை. நாம் மற்ற மாநிலங்களையும் ஒப்பிட வேண்டும். இந்த இழப்பு 1970—71-ஆம் ஆண்டு கணக்குப்படி அரியானாவில் 27·96 சதவீதம், ஆந்திரப் பிரதேசத்தில் 25·41 சதவீதம். உத்தரப்பிரதேசத்தில் 24·48 சதவீதம். பீகாரில் 22·87 சதவீதம். பஞ்சாபில் 22·37 சதவீதம். ஜம்மு — காஷ்மீரில் 21·49 சதவீதம். நாகாலாந்தில் 20·34 சதவீதம். அஸ்ஸாமில் 17·71 சதவீதம். மத்தியப்பிரதேசத்தில் 14·7 சதவீதம். குஜராத்தில் 14·57 சதவீதம். மைசூரில் 14·69 சதவீதம்.

அகில இந்திய சராசரி இழப்பு 17·31 சதவீதமாகும். நம்முடைய மாநிலத்தினுடைய இழப்பு 17 சதவீதமாகும்.

மற்ற மாநிலங்களைவிடக் குறைவாக இருந்தாலும் ஏன் மைசூரைவிட—குஜராத்தைவிட — ஆந்திரத்தைவிடக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது — என்று பார்த்தால், தமிழ்நாட்டில் மின்கம்பித் தொடர்களின் நீளம் 1 இலட்சத்து 94 ஆயிரம் கி.மீ. மைசூரில் 1 இலட்சத்து 29 ஆயிரம் கி.மீ. மின் கம்பிகளின் நீளம். ஆந்திரப்

பிரதேசத்தில் 97 ஆயிரம் கி.மீ. மின் கம்பிகளின் நீளம். மின் கம்பிகள் நெடுந்தூரத்திற்குப் போகப் போக, இழப்பு கொஞ்சம் அதிகப்படுகிறது.

அது மாத்திரமல்ல; ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 2·21 இலட்சம் தான். மைசூரில் இருக்கிற பம்புசெட்டுகளின் எண் ணிக்கை 1·57 இலட்சம். ஆனால், தமிழ் நாட்டில் 1966–67-ல் 2 இலட்சம் பம்பு செட்டுக்கள். இன் றைக்குத்தமிழக அரசினுடைய பெருமுயற்சியின் காரணமாக இந்த 2 இலட்சம் பம்பு செட்டுகள் 6 இலட்சத்து 24 ஆயிரமாக உயர்ந்து இருக்கின்ற காட்சியினை நாம் காணு கின்றோம். ஆகவே, இந்த இழப்பு, மற்ற மாநிலங்க ளோடு ஒப்பிடுகிற நேரத்தில் நம்முடைய தேவை, நாம் ஏற்படுத்தியிருக்கின்ற வசதிகள், சாதனைக் கூறுகள் இவை களைக் காணுகிற நேரத்திலும் அது அவ்வளவாகப் பொருட் படுத்தக் கூடியதாக இல்லை. மேலும் அந்த இழப்பைக் குறைக்க வேண்டும் என்பதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் செலுத்திய கவனத்தோடு நான் என்னுடைய உள்ளத்தை இணைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதையெல்லாம் மின்சார போர்டு செய்ய வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கின்றேன்.

**Dr. H. V. HANDE** : The Hon. Chief Minister was saying that there was no serious power cut for agriculturists and industries. But actually the position today is that there is a serious lay off in Coimbatore and industrial belts surrounding it and we have also received information that for agricultural pumpsets, there is no electric supply and consequently the farmers are suffering in many places in the State.

### புதிய திட்டங்கள்.

**மாண்புமிகு முதல்வர்** : அவைகளைப் பிறகு சொல் கிறேன். இந்த அரசு வந்த பிறகு மின்சார உற்பத் திக்கான திட்டங்களே நிறைவேற்றப் படவில்லை என்று குறைபாடு. இந்த அரசு வந்த பிறகுதான் 60 மெகாவாட்டுக் கான ஆளியாறு திட்டம், 100 மெகாவாட் அளிக்கும் கோதையாறு திட்டம், 95 மெகாவாட் அளிக்கும் சோலை யாறு திட்டம், 30 மெகாவாட்டுக்கான பேசின்பிரிட்ஜ் நீட் டிப்புத் திட்டம், 230 மெகாவாட்டுக்கான எண்ணூர் திட் டம், மொத்தம் 515 மெகாவாட் வழங்கக்கூடியதாக இந்தத் திட்டங்கள் இந்த அரசினுடைய ஆட்சிக் காலத்திலேதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேலும் ஆரம்ப வேலை நடந்து கொண்டிருக்கும் திட்டங்கள்:—220 மெகா வாட் கொண்ட எண்ணூர் விஸ்தரிப்புத் திட்டம், 35 மெகாவாட்

கொண்ட சுருளியாறு திட்டம், 20 மெகாவாட் கொண்ட சேர்வலாறு திட்டம், 50 மெகாவாட் கொண்ட நெல்லித் துறை திட்டம், 200 மெகாவாட் கொண்ட காடம்பாறை திட்டம்—110 மெகாவாட் கொண்ட குந்தா 4—வது கட்டத் திட்டம் ஆக 635 மெகாவாட் கொண்ட திட்டங்களுக்கும் ஆரம்ப வேலைகளை இன்றைக்கு நாம் நடத்திக் கொண் டிருக்கிறோம். மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட திட்டங்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம் 400 மெகாவாட் கொண்டது. இன்னும் ஒப்புதல் கிடைக்கவில்லை.

மேட்டூர் அனல் மின் நிலையம்—330 மெகாவாட் கொண்டது. சிறிய நீர் மின் திட்டங்கள் 165 மெகா வாட் கொண்டது—இதை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறோம். ஒப்புதலுக்காக இவை காத்துக் கொண் டிருக்கின்ற திட்டங்கள்.

## மத்தியத் திட்டங்கள்.

மத்திய அரசுத்திட்டம் என்கிற பெரிய திட்டம் கல் பாக்கம் அணு மின் நிலையம்—470 மெகாவாட் கொண்ட திட்டமாகும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம்—1000 மெகா வாட் கொண்டதாகும். தூத்துக்குடி அணு மின் நிலையம் 1000 மெகா வாட் கொண்டதாகும். இவை களைப்பற்றி எல்லாம் நாம் மத்திய அரசிடத்திலே வாதாடிப் பெறவில்லை, மத்திய அரசுக்கு இவைகளைப் பற்றியெல்லாம் சரியானபடி எடுத்துச் சொல்லவில்லை என்று டாக்டர் ஹண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும், வேறு சில மாண்புமிகு உறுப்பினர்களும் வேக மாக எடுத்துச் சொன்னார்கள். பல முறையும் இவை களைப் பற்றி நாம் எடுத்துக் கூறி இருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி :** மாண்புமிகு கலைஞர் அவர்கள் தற்போதுள்ள மின்வெட்டைப் பற்றிச் சொன் னார்கள். இன்னும் நான்கு மாதங்களில் நிலைமை மோச மாகத்தான் இருக்கும். ஆகவே இதைத் தடுப்பதற்கு எல்லாக் கட்சிகளையும் சேர்த்து, ஒரு போர்க்கால நட வடிக்கைபோல, நான்-ப்ரடெக்டிவ் பர்ப்பசஸ் அதாவது சினிமா, அலங்காரம், வீட்டு உபயோகம் இவைகளுக்கான மின் சக்தி விநியோகத்தைக் குறைத்து, தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் அதிகப்படியான மின் சக்தியைக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி)** மாண்புமிகு உறுப்பினர் அவரவர்கள் இடத்திலிருந்து பேச வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** No Power is as costly as no Power என்பதாகப் பாபா சொன்னதாக ஆளுநர் அவர்களது இந்த உரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது தெரு விளக்குகளுக்காவது பயன்தரக் கூடிய சமய நல்லூர் பிளாண்ட் ஏன் மூடப்பட்டது ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) :** இப்போதே மணி ஒன்றேமுக்கால் ஆகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் உரையை முடித்தவுடன் ஏதாவது விளக்கம் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கோவையில் இருந்து வந்திருக்கக்கூடிய தந்திகளில் கோவையைச் சுற்றிப் பம்பு செட்டுகளுக்கு 4 மணி நேரம் மின்சார சப்ளை கிடைக்கிறது என்றும், அதற்கு அப்பால் இருக்கிற குக்கிராமங்களில் எல் லாம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கூடக் கிடைக்கவில்லை, எப்போது கிடைக்கிறது என்றும் தெரியாமல் இருக்கிறது என்பதாகும்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் அவர்கள் எசென்சியல் சர்வீசுகளுக்கு 7 இலட்சம் கொடுக்கிறோம். அதில் கட்டுப்பாடு இல்லை என்று சொல்கிறார். ஆனால், ஆஸ்பத்திரி, ஆப்பரேஷன் தியேட் டர்களில் திடீர் திடீர் என்று மின் சப்ளை போய்விடுவது பற்றி எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி) :** இது பாயிண்ட் ஆப் ஆர்டரா ? புகார்கள் வருகின்றன என்றால் அதற்கு ஆதாரங்களைக் காட்ட வேண்டாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது எலெக்ட்ரிசிடி ஃபெய்லூர். அமைச்சர் குறிப்பிட்டது எலெக்ட்ரிசிடி கட். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியவேண்டும்.

**மாண்புமிகு முதல்வர் :** சமயம் வரும்போதெல்லாம் நண்பர் திரு. தங்கமணி அவர்கள் சமயநல்லூரைப்பற்றிப் பேசாமல் இருப்பதில்லை. இப்பொழுதும் சொன்னார்கள். எனக்கும் இப்போது சமயம் வந்தது. நேற்று அவர் சொன்ன ஒரு விஷயத்துக்கு விளக்கமளிக்க விரும்புகிறேன். 225 இலட்சம் யூனிட்டு மின்சாரம் தேவைப்படுகிற நேரத்தில் 1 இலட்சம் யூனிட் உற்பத்தி செய்யக்கூடிய சமயநல்லூர் மின்சார நிலையத்தை மூடலாமா என்றார். இந்த 1 இலட் சம் யூனிட் பெறுவதற்கு நாம் ஆண்டு ஒன்றுக்கு 55 இலட் சம் நஷ்டத்துக்கு நாம் ஆளாக வேண்டியவர்களாக இருந் தோம். அதனால்தான் முன்பு இருந்த அரசாங்கம் இதைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்தது.

அந்தக் குழுவினர் தான் அதைப் பரிசீலனை செய்து அதை விற்றுவிடலாம் என்று தெரிவித்ததன் பேரில் விற்பதற்கு டெண்டர் கோரப்பட்டது. தனிப்பட்டவர்களிடம் விற்காமல் இன்னொரு மாநிலத்திற்காவது அளிக்கக்கூடாதா என்றார்கள். நேற்றையத் தினம் திரு. தங்கமணி அவர்கள் பஞ்சாப் மாநிலம் 42 இலட்சத்திற்கும் அதிகமாக வாங்கிக் கொள்ளத் தயாராய் இருந்தார்கள்; ஏன் அவர்களுக்கு விற்றிருக்கக் கூடாது? என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். அப் போதே மறுத்தேன். மறுத்தவுடன் " நீங்கள் எல்லாம் குற்றமற்றவர்கள். நல்லவர்கள் " என்று கேலிப் பேச்சாகப் சாகப் பேசி நேற்றும் சரி, இன்றும் சரி, முடித்து விட்டார் கள். 9—7—1970-ல் பஞ்சாப் மின்வாரியம் எழுதிய கடிதம் இதுதான்.

" The offer of Rs. 40 lakhs was made on behalf of our Board. However, as a matter of compromise, an agreed figure of Rs. 42 lakhs had been adopted subject to confirmation by the Boards on either side."

என்பதாக முதலில் 40 இலட்சத்திற்குக் கேட்டவர்கள், பிறகு 42 இலட்சத்திற்கு ஒத்துக் கொண்டார்கள். பின்னர் 6—3—1971-இல்

" I regret to say the Board gave a second look to your offer and have decided not to proceed with it further."

என்பதாக எழுதி விட்டார்கள். இது அவர்களது இரண்டா வது கடிதம். இதைவிட இவர்களுக்கு என்ன விளக்கத்தை நான் அளிக்க முடியும் என்று தெரியவில்லை. ஆகவே அதை நான் அந்த அளவோடு விட்டுவிடுகின்றேன்.

Dr. H.V. HANDE : The Hon. Chief Minister said that the report had asked the Government to sell the Samayanallur Plant. It is not so. I shall quote from the report :

" The possibility of utilising the equipment and building after closure should be examined."

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரே ஒரு விஷயம்என்ன வென்றால் 59 இலட்சத்திற்கு விற்றதாகச் சொல்கிறார்கள். ப்ளோர் 'ப்ரைஸ் 1 கோடி என்று வைத்து விற்க முயன்றிருந் தால், . . . . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒருவேளை தங்க மணி அவர்கள் அமைச்சராக இருந்திருந்தால், அப்படி 1

கோடி ப்ளோர் ப்ரைஸ் என்று வைத்து நல்ல விலேக்கு விற்றிருக்கக்கூடும். அவரது வியாபாரத் திறமை எங்களுக்குத் தெரியவில்லே. நாங்கள் புக் வால்யூவைச் சட்டபடி நிர்ணயித்து விற்பனே செய்து விட்டோம். எங்களால் சட்டப் படி நடக்க முடியுமே தவிர, தங்கமணி சொல்வதுபோல் குத்துமதிப்பாக வைத்து வியாபாரம் செய்ய இந்த அமைச்சர்களால் முடியாது.

**மாண்புமிகு முதல்வர் :** நான் மின்சாரப் பற்றுக்குறை ஏன் ஏற்பட்டது என்பதற்கான விளக்கங்களேத் தரும்போது—நமக்கு இந்த நிலேமை ஏற்பபட்டதற்கு மிக முக்கியமான காரணம், தென்மேற்குப் பருவமழை சரிவர இல்லாததுதான் என்பதை உணர வேண்டும் குந்தா, பரம்பிக்குளம்—ஆளியாறு, பைக்காரா ஆகிய நீர் நிலேயங்களில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. எந்தஅளவுக்குக் குறைந்தது என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு குந்தாவில் 87,860 இலட்சம் கன அடி தண்ணீர் இருந்தது. நடப்பு ஆண்டில் 1,550 லட்சம் கன அடியாகக் குறைந்து விட்டது. பரம்பிக்குளம் ஆளியாற்றில் சென்ற ஆண்டு 54,240 இலட்சம் கன அடியாகஇருந்தது நடப்பு ஆண்டு 15.5 இலட்சம் கனஅடியாகிவிட்டது. பைக்காராவில் சென்ற ஆண்டு நீர் அளவு 29,400 லட்சம் கன அடி. நடப்பு ஆண்டில் அங்குள்ள நீரளவு 5,270 லட்சம் கன அடி. ஆக, 1972-ல் இந்த மூன்றுநிலேயங்களிலே நாள் ஒன்றுக்குச் சுமார் 80 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்கமுடிந்தது. 1973-ம் ஆண்டு மார்ச்சில் நாள் ஒன்றுக்கு5 இலட்சம் யூனிட் மட்டும் தான் உற்பத்தி செய்ய இயன்றது. டாக்டர் ஹாண்டே அவர்கள்கேட்டார்கள், மற்றவர்களும் கேட்டார்கள்.

### நீரையே நம்பலாமா ?

இதையே நம்பியிராமல் நாம் அனல் மின்சாரம், அணு மின்சாரம் ஆகியவைகளில் போதியகவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டாமா, அதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டாமா, இரண்டாவது நெய்வேலி சுரங்கத்தைத் துவங்குவதற்கு வற்புறுத்தியிருக்க வேண்டாமா என்று. வேண்டாமா என்று கேட்பதிலிருந்து, இந்த அரசு எதையும் செய்யவில்லேயென்று அவர்கள் சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று அப்போது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் அப்பொழுது பிரதம அமைச்சரக இருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர்கள். அப்பொழுது மத்திய அரசு இந்த அரசுக்கு அளித்த பதில், 'தென் பிராந்தியத்தில் செயல்

படப்போகும் பல மின்சாரத் திட்டங்கள் அளிக்கும் மின் சக்தியே போதுமானது' என்பது. பிறகு இந்த அரசு 1968-ஆம் ஆண்டு நவம்பரில் மத்திய அரசினுடைய திட்டக் குழுவுக்குக் கொடுத்த ஐந்தாண்டுத் திட்ட வரைவில், கல்பாக்கம் அணு மின்சார நிலையம் 200 மெகா வாட்டிலிருந்து 400 மெகாவாட்டாக உயர்த்தப்பட வேண்டும் என்றும், தூத்துக்குடியிலே ஒரு அணு மின்நிலைய மும், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கமும் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த அரசு வலியுறுத்தியுள்ளது. 1968-ஆம் ஆண்டு நவம்பரில் திட்டக் குழுவுக்குக் கொடுத்த ஐந் தாண்டுத் திட்ட வரைவிலே நாம் இதை வலியுறுத்தியிருக் கின்றோம். இந்த வரைவு சட்டப் பேரவையிலேயும் வைக்கப்பட்டதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அதைத் தொடர்ந்து 1969-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆந் தேதி நான், நமது தலைமை யமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில், குறிப்பிட் டேன் ;

"The Development of a second mine cut at Neyveli has been engaging the attention of both the Central and State Governments for some time now. This is another case of a project, the feasibility and need of which has been fully established. I would like to draw your attention to the need to provide for this too in the Fourth Plan."

என்று எழுதினேன். அதற்குப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில் என்ன குறிப்பிட்டார்கள் என்றால்—

"The continuing constraint on our resources makes this doubly difficult. When the time comes to decide on the creation of additional steel capacity, the points made in your letter will naturally be taken into account. On similar consideration, a decision on the second mine cut at Neyveli, as you will appreciate, will also have to wait."

என்று பிரதமர் அவர்கள் எனக்குப் பதில் எழுதினார்கள். அது மாத்திரமல்ல, நான் இன்னும் ஒன்றையும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களுக்கு. இதே அவையில், 1969-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 26-ஆம் நாள், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு, நம்முடைய சட்டமன்றத்திலே விவாதித்து, ஒருதீர் மானத்தை நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்திலே என்ன குறிப்பிட்டோம் ? மத்திய அரசுக்கு அந்தத் தீர் மானத்தை அனுப்பி வைத்தோம்.

"In particular, this House urges that the Government of India should proceed immediately with the implementation of the following Central sector projects, the economic viability and technical feasibility of which have been well established :—

1. Salem Steel Plant ;

2. Sethusamudram Project ;

3. Second mine cut at Neyveli ;

4. Expansion of the installed capacity of the Kalpakkam Atomic Energy Plant.

என்ற இந்தத் தீர்மானத்தை இதே சட்டமன்றப் பேரவையிலே நாம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

அது மாத்திரமல்ல, 1970-ஆம் ஆண்டு தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசியபொழுது, நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். 1972-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், திரு. குமாரமங்கலம், திரு. சுப்பிரமணியம், டாக்டர் கே. எல். ராவ் ஆகியோர்களுக்கு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தி, அரசின் சார்பிலே நான் ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் அளித்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் 'இரண்டாவது நிலக்கரி சுரங்கத்தைக் குறித்துப் பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று பதில் கடிதத்திலேயே தெரிவித்திருக்கிறார்.

மத்திய திட்ட அமைச்சர் திரு. தார் அவர்கள் 1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இங்கே வந்தார்கள். திரு. ஹண்டே அவர்கள் சொன்னார்கள், அக்டோபர் மாதத்தில் முதலமைச்சருக்கு அவருடைய 'பவரை'ப் பற்றித்தான் கவலை இருந்ததே தவிர, இந்தப் 'பவரை'ப் பற்றிக் கவலை இல்லை என்று. அதற்காகத்தான் நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன், திரு. தார் அவர்கள் அக்டோபர் மாதம் இங்கே வந்தபொழுது, அவரிடத்திலே கொடுக்கப்பட்ட அறிக்கையிலே நான் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தேன்.

"In respect of Neyveli, it is found, that the quantity of lignite mined, is not adequate, to utilise the capacity already installed, due to various factors including in particular the adverse ore-overburden ratio. It is learnt, that some immediate steps are under examination, to enable Neyveli Lignite Corporation, to run the plant at least to 400 M.W. capacity. In addition to such

steps, work on opening the second mine cut has to be initiated early, in order to utilise the capacity already created, and also to tide over the perennial power shortage."

என்று அந்த அறிக்கையிலே குறிப்பிட்டு, திரு. தார் அவர்களிடத்திலே அதைப்பற்றி நீண்ட நேரம் நாங்கள் கலந்துரையாடியிருக்கிறோம். மத்திய அரசு ஒன்றை மறந்துவிடக்கூடாது. தொழில் வளர்ச்சியிலே மாநிலங்கள் முன்னேற வேண்டுமென்று திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில், அந்தத் தொழில் வளர்ச்சிக்கு மிகமுக்கியமான மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மத்திய அரசு போதிய அக்கறை செலுத்தவில்லை யென்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். மத்திய அரசைக் கேட்கவில்லை கேட்கவில்லை என்று கூறிவிட்டால் மாத்திரம் போதாது. மாநில அரசு தானாக முன்வந்து இங்கே ஒரு மின்சார உற்பத்திச் சாதனத்தை உருவாக்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறதா என்பதை மாநில அரசைக் குற்றம் சாட்டுகிற நேரத்தில் தொழிலதிபர்களானாலும் அல்லது மாண்புமிகு மாற்றுக் கட்சியினுடைய உறுப்பினர்களானாலும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

இன்றைக்குப் போடப்பட்டிருக்கிற திட்டங்களின்படி 1983—84-லே கூட நம்முடைய மாநிலத்திற்கு 1,500 மெகாவாட் உற்பத்திப் பற்றாக்குறையாக இருக்கும் என்றுதான் கணக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. நாம் போட்டிருக்கிற திட்டங்களையெல்லாம்நிறைவேற்றிவிட்டாலுங்கூட, வளரக்கூடியதொழில் உற்பத்தியில்1983—84-ஆம் ஆண்டு 1,500 மெகாவாட் குறைவானதாகத்தான் நம்முடைய மின் உற்பத்தி இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவேதான், மத்திய அரசு இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்.

**எட்டு ஆண்டுகளா ?**

ஆளுநர் உரையிலே, நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதை இப்போது ஆரம்பித்தாலும் முடிக்க 8 ஆண்டுக் காலம் ஆகும் என்று குறிப்பிட்டதை அம்மையார் அவர்கள் கேலியாகச் சொன்னார்கள். இப்பொழுது ஆரம்பித்தாலே 8 ஆண்டுக்காலம் ஆகும். அதுவரையிலே இந்த மின் வெட்டினால் பாதிக்கப்படுபவர்களுடைய கதி என்ன என்று கேட்டார்கள். இப்பொழுது ஆரம்பித்தாலும் 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று சொன்னதற்குக் காரணம் 1965-ல் இந்த அரசு நினைவூட்டியதை—பக்தவத்சலம் அவர்களுடைய காலத்திலே—அப்பொழுதே ஆரம்பித்திருந்தால்,

இப்பொழுது இந்தக்கஷ்டம் நமக்கு ஏற்பட்டு இருக்காது ; என்பதைச் சொல்லத்தான் கவர்னர் அவர்கள், இப்பொழுது ஆரம்பித்தாலும் 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று சொல்லியிருக்கிறுர். 1764-ல், 65-ல், பிறகு 1967-ல் நாம் நினைவூட்டிய நேரத்திலெல்லாம், பல முறை வற்புறுத்திய நேரத்திலெல்லாம், மத்திய அரசு நெய்வேலியிலே 2-வது சுரங்கத்திற்கு ஒப்புதல் அளித்திருக்குமேயானுல், கொஞ்சம் காத்திருங்கள் என்று சொல்லாமல், பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறுர்கள் என்று கூறுமல், இப்பொழுது இருக்கிற நிதிக் கஷ்டத்திலே இதைப்பற்றி யோசிக்க முடியாதென்று தட்டிக் கழிக்காமல், மத்திய அரசு இப்படிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதியை வழங்கியிருக்குமேயானுல்—இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்காது என்பதற்காகத்தான், நெய்வேலி 2-வது சுரங்கம் உருவாவதற்கு இப்பொழுது தொடங்கினுலும் 8 ஆண்டுக் காலம் ஆகும் என்று ஆளுநருடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆகவே, மின்சாரத்திலே மேலும் வெட்டு வருவதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே நாம் இருக்கிறேம். அதையெப்படி யோசிக்கப் போகிறேம், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கப் போகிறேமா ? என்று திரு. பழனிச்சாமி அவர்கள் கேட்டார்கள். இப்போது அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய அபிப்ராயங்களை இந்த மாமன்றத்திலே பெற்றிருக்கிறேம். பேரவையிலே பெற்றுக் கொண்டிருக்கிறேம். மேலவையிலேயும் அனைத்துக் கட்சித்தலைவர்களுடைய கருத்துக்களைப் பெறுகின்றவாய்ப்பை உடையவர்களாக இருக்கிறேம். இன்னும் எதிர்பாராமல் உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, போர்க்கால வேகத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற சங்கடம் வருமென்றுல், அந்த நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரையும் அலட்சியப்படுத்திவிட்டு இந்த அரசு தன்னுடைய காரியங்களிலே செல்லாது என்பதை மாத்திரம் நான் இந்த அவைக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் எதிர்க்கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்வேன் ; தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வேன். இந்த நெருக்கடியான நிலை நாமாக வரவழைத்துக் கொண்டதல்ல. இயற்கையாக ஏற்பட்டு விட்டது. இப்படிப்பட்ட நிலைமை வருமென்று தெரியாத காரணத்தாலோ என்னவோ மத்திய அரசும் நாம் வேண்டுகோள் விடுத்த நேரத்திலேயெல்லாம் காலதாமதம் செய்து விட்டது. மாநில அரசு தன்னுடைய வேண்டுகோளை வைக்க என்றைக்கும் தவறியதில்லை. சுட்டிக் காட்டவும் தவறியதில்லை. தயங்கியதில்லை ; நிலைமையை விளக்கத் தயங்கியதில்லை. அப்படியிருந்தும் எதிர்பாராத

சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருக்கிற நேரத்திலே அனைவரும், எல்லாக் கட்சிக்காரரர்களும், பொது மக்களும், தொழிலாளர்களும், அனைவரும்கலந்து அரசோடு இந்தக் காரியத்திலே ஒரு தியாகத்திற்குத் தயாராகத்தான் இருக்க வேண்டுமென்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திண்டுக்கல்**

பல்வேறு பிரச்சினைகள் இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் நான் தனித்தனியாகப் பதில் சொல்வதற்கான நேரம் இல்லையென்றே கருதுகிறேன். பொதுவாக, திண்டுக்கல் இடைத் தேர்தலைப் பற்றிக் கடைசியாகப் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்படப் பல மாற்றுக்கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திண்டுக்கல்லிலே யார் வெற்றி பெறுவார்கள், யார் தோற்பார்கள், தேர்தல் முடிவென்ன என்பதைப் பற்றியெல்லாங்கூட இங்கே பேசி முடித்தாகிவிட்டது. நான் அங்கே செல்ல விரும்பவில்லை. (அங்கே என்றால் திண்டுக்கல்லுக்கல்ல.) இங்கே அந்தப் பிரச்சினைக்குச் செல்லவிரும்பவில்லை. திண்டுக்கல் தேர்தலிலே, திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிடும். அங்கே மக்கள் சக்தியே கிடையாது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று பேசப்பட்ட காலம் போய், இப்போது திடீரென்று, திண்டுக்கல்லிலே ஏதோ கள்ள ஓட்டுச்சேர்த்து விட்டார்கள், கள்ள ஓட்டுச் சேர்த்து விட்டார்கள் என்று பத்திரிகைகளிலே வருவதைப் பார்க்கிற நேரத்தில், அங்கிருக்கிற ஒரு மறவர் குலத்துத் தோழனைச் சந்தித்தால், அவர், ஆம், கள்ள ஓட்டுத்தான் சேர்த்து இருக்கிறோம் என்று சொன்னார். அந்தச் சிலேடை எனக்கு முதலிலே புரியவில்லை, பிறகுதான் எனக்குப் புரிந்தது; பிறகு நானே சிரித்துக் கொண்டேன், அதை நான் இந்த அவையிலே விளக்குவது நல்லதல்ல என்கின்ற காரணத்தினால்—ஏதோ 50,000 ஓட்டு, ஒரு இலட்சம் ஓட்டு சேர்க்கப்பட்டுவிட்டது என்றெல்லாம் கூறப்பட்டது.

**திருமதி டி. என். அனந்தநாயகி** : கள்ளர்கள் ஓட்டுக்கும், கள்ள ஓட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டுக்கும் சிலேடை பேசி அந்த இனத்தின் பெருமையைக் குறைக்கக் கூடிய அளவுக்குப் பேசுவது நியாயமல்ல.

**மாண்புமிகு முதல்வர்** : அந்த இனமே என்னை வாரிசாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. நீங்கள் அந்த இனத்தோடு கலகம் மூட்டுகிற முயற்சியில் தோல்வியடைந்துவிடுவீர்கள். 1971-ஆம் ஆண்டு, சுருக்கு முறையில் வாக்காளர் பட்டியலைத்

திருத்தியபின் திண்டுக்கல் தொகுதியில் வாக்காளர்களுடைய கணக்கு 6,31,308 ஆகும். இராசாங்கம் அவர்கள்மறைந்ததும் இன்றைக்கு அதிகாரிகள் சென்று வாக்காளர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பார்களே அந்த முறைப்படி சேர்ந்து உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 5,666 ஆகும் . அன்று இருந்த வாக்காளரின் எண்ணிக்கை 6,31,308. ஆனால், இப் போதிருக்கிற நிலைமை 6,36,974. ஆக 5,666 தான் அதிகம். பிறகு தொகுதிவாரியாக வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள்.

திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பிறகு சேர்க் கக்கோரிய வாக்காளர்கள் 1,180. உசிலம்பட்டிசட்ட மன்றத் தொகுதியில் 988, சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் 3489 ; நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1,574. திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் 2,438.ஆத்தூர் சட்ட மன்றத்தொகுதியில் 1,893,மொத்தம் பிறகுசேர்க்கக்கோரிய வாக்காளர்களின் எண்ணிக்கை 11,562 ஆகும், இதிலே ஆட்சேபம் தெரிவித்து வந்த மனுக்கள் 303. இதுதான் இருக்கின்ற விவரம்.

### என்ன தவறு ?

இந்த நிலையில் 50 ஆயிரம் சேர்த்துவிட்டார் கள், 1 லட்சம் சேர்த்து விட்டார்கள், மத்திய தேர்தல் அதிகாரியே வந்து தேர்தல் நடத்த வேண்டும். பயங்கர ஊழல்கள் நடந்து விட்டன ; பெரிய போராட்டம் நடத்துவோம் ; கிடுகிடு போராட்டம் நடத்துவோம் என் றெல்லாம் சொல்லுவது—உள்ளபடியே தமிழ்நாட்டிலே நாம் வளர்த்து வருகின்ற ஒரு அரசியல் மரபுக்கு நாமே இழுக்குத் தேடுகிற சூழ்நிலையை உண்டாக்குகிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் ஓ.என். சுந்தரம் அவர்கள் பேசும்போது திண்டுக்கல்லில் பெரிய சூது நடந்துவிட்டது என்று சொன்னார்கள். திண்டுக்கல்லில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 73,862. வாக்காளர்களாகச் சேருவ்தற்கு மனுக் கொடுத்தவர்களின் எண்ணிக்கை 1,437. திண்டுக்கல் நகரம் முழுவதும் 15-வது வார்டில் உள்ள வாக் காளர்களின் எண்ணிக்கை 2,158. வாக்காளாராகச் சேர மனுக்கொடுத்தவர்களின் எண்ணிக்கை 23, அதிலே நிராகரிக் கப்பட்டவை 12, புதிதாகச் சேர்க்கப்பட்டது 23-ல் 11தான். 143-பி வார்டில் 5 குடிசைகள். இவைகளில் இருந்து வந்த மனுக்கள் 11. நிராகரிக்கப்பட்டவை 2. 143-சி 1971-ம் ஆண்டின்படி 4 ஓட்டுக்கள். அருகில் உள்ள குடிசைகளில் புதிதாகச் சேர்ந்த ஓட்டு 12. ஆகவே, எந்த ஒரு வீட்டிலும்

20 வாக்காளர்கள் இல்லை. இன்று எனக்கு வந்த கடிதப்படி 4-ஆம் நம்பர் வீடு என்று 4 வீடுகள் இருக்கின்றனவாம். நம்பர் போட்டவர்கள் 4 வீடுகளுக்கும் 4 என்றே போட்டிருக்கிறார்கள். அல்ல 5 வீடுகளாம்; அதிலே 5 வீட்டில் 4 அல்லது 6 பேராக இந்த 20 ஓட்டுக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்திலேயே பார்த்தால் அதிலே ஒரு 11 ஆயிரம், இதிலே ஒரு 5 ஆயிரம் ஆக மொத்தம் 16 ஆயிரந்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது; 2-ஆம் தேதி வரையில் காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆட்சேபம் தெரிவிப்பதற்காக. அதையும் ஒரு வாரம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுத் தேர்தல் அதிகாரி சிந்தித்துக் கொண்டு இருக்கிறாராம். எங்களுக்கு அதைப்பற்றி ஆட்சேபனையில்லை. ஒரு வாரம் அல்ல, இரு வாரங்கள் கூடக் கொடுக்கலாம். நாங்கள் கவலைப்படவில்லை. அதற்குள்ளாக ஏதோ 'சூது நடந்துவிட்டது, சதி நடந்துவிட்டது' என்று ஏன் பேச ஆரம்பிக்க வேண்டும். நாம் பொறுப்புள்ளவர்கள் அல்லவா ?

நாகர்கோயில் நாடாளுமன்றத் தேர்தலில், 1967-ஆம் ஆண்டு பிப்ரவரி பொதுத்தேர்தலில் இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 4,74,210. 1969-ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலின் போது 5,32,089 வாக்காளர்கள். அதிகமாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்கள் 57,879 ஆகும். இப்படிச் சேர்ந்தது யார்? சேர்த்தது யார்? நாங்கள் யாராவது அதைப்பற்றி பேசினோமா? அதைப்பற்றி மூச்சு விட்டோமா? ஏன் திண்டுக்கல் தொகுதியைப் பற்றி இந்த அளவுக்கு ஆரம்பத்திலேயே தவறான கருத்துக்களைப் பரப்ப வேண்டும் ?

அதேபோல்தான் தென்காசிச்சட்டப்பேரவைத்தொகுதிக்கு 1967-ஆம்ஆண்டு பிப்ரவரித் திங்களில் தேர்தல் நடைபெற்ற போது இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 85,611. 1968-ஆம் ஆண்டில் நடைபெற்ற இடைத்தேர்தலின் போது வாக்காளர்கள் 87,057. அதிகமாகக் சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ஏறத் தாழ 1500 ஒரு சட்டசபைத் தொகுதிக்கு. இதைப் போல் தான் திண்டுக்கல் தொகுதியிலும் ஒரு சட்டசபைத் தொகுதிக்கு 2,000 அல்லது 1,000 என்றஅளவுக்கு அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குத் தேர்தல் நடைபெற்றபோதும் 5 அல்லது 6 ஆயிரம்பேர்கள்தான் அதிகமாகச் சேர்க்கப்பட்டார்கள். அவசரமாகத் தேர்தல் அப்பொழுது நடத்தப்பட்ட காரணத்தினால் இந்த நிலைமை. இல்லாவிட்டால் இன்னும் 5 ஆயிரம் அதிகமாகி இருக்கலாம். ஆனால், அவர்கள் எல்லாம் சொன்னார்கள், ஒவ்வொரு முறையும் வாக்குகளைச் சேர்த்து விட்டார்கள் ; உள்ளவாக்குகளை விலக்கிவிட்டார்கள்; மை வைத்துவிட்டார்கள் என்று.

### மை வேடிக்கை !

வேடிக்கை என்னவென்றால் 1971-ஆம் ஆண்டுத்தேர்தல் முடிந்த பிறகு, கூட்டணிக் கட்சிகளைப் பார்த்து, மைவைத்து ஜெயித்து விட்டார்கள் என்று சொன்ன நம்முடைய பழைய காங்கிரஸ் நண்பர்களை மறந்துவிட்டு, தங்கமணியும் மை வைத்து ஜெயித்தார் என்றுதான் பொன்னப்ப நாடார் சொன்னார்—பொன்னப்ப நாடார் என்றால் அவருடைய கட்சி சொன்னது—என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ராமச் சந்திரன் அவர்களும் மைவைத்து ஜெயித்தார் என்றுதான் காங்கிரஸ் கட்சி சொன்னது. நம்முடைய ஹண்டே அவர்கள் சொன்னார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இங்கே சொல்லி விட்டுப் பிறகு அங்கே போய் உட்கார்ந்து கொண்டார்கள். மை வைத்து ஜெயித்து விட்டார்கள் என்று அனந்த நாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது மை வைத்து ஜெயித்தாகக் குற்றம் சாட்டப்பட்ட கட்சியிலேயே அவர்கள் இருக்கின்றார்கள், நான் அதை வரவேற்கின்றேன். ஆகவே, ஒவ்வொரு தேர்தலிலும், அந்த முடிவை ஏற்றுக் கொள்ள முடியாமல் இப்படிப்பட்ட ஒரு தவறான போக்கிலே நாம் ஈடுபடுவது ஜனநாயகத்திற்கு ஒரு நல்ல ஆரோக்கிய மான மார்க்கத்தைப்பெற்றுத் தராது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல.

### பிற குற்றச்சாட்டுகள்

செஞ்சியிலே பெருமாள் நயினாரைப்பற்றிச் சொன்னார்கள். அவர் உர மூட்டைகளைக் கடத்திச் சென்று இன்னொரு இடத்திலே வைத்து விட்ட காரணத்தினால், அந்த மூட்டை கள் கடத்திவைக்கப்பட்ட இடம் போலீசாரால் சீல் வைக்கப் பட்டதென்றும், அவர்மீது இருக்கின்ற வழக்கிற்காக அவர் கைது செய்யப்படாத நிலையில் அவரே வந்து சர ணடைந்து விட்டார் என்றுதான் செய்திகள். மேலும், தகவல்கள் எனக்குக் கிடைத்த பிறகு வேண்டுமானால் அதைப் பற்றிச் சொல்லுகிறேன். வழக்கு இருக்கிற காரணத் தால் விவரமாகச் சொல்ல நான் விரும்பவில்லை.

திரு. சுவாமிதாஸ் அவர்கள்—கன்னியாகுமரி மாவட்டத் தினுடைய மாண்புமிகு உறுப்பினர்—ஒரு பெரிய குற்றச் சாட்டைச் சொன்னார்கள். அங்கே தச்சம் பறம்பு என்ற ஒரு ஊரில் 3½ இலட்சம் ரூபாய் அளவுக்குத் தேவையின்றிச் செலவு செய்துவிட்டார்கள். அது, முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவருடைய ஊர். ஆகவே, செலவு செய்து விட்டார்கள் என்று குறிப்பிட்டார் கள். நிலைமை என்ன வென்றால்—இந்திய நாட்டினுடைய விடுதலை வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்காகத் தமிழ்

நாட்டிலே இருக்கிற 374 ஊராட்சி ஒன்றியங்களும்—அந்த ஊராட்சி ஒன்றியத்திலே உள்ளவர்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து—அதைநல்ல கிராமமாகச்—செம்மையான கிராமமாக—தூய்மையான கிராமமாக—ஆக்குவதற்கு முனையவேண்டுமென்று இந்திய அரசு மாநில அரசின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதற் கேற்பத் தமிழ் நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களி லிருந்தும் 374 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. எப்படி அங்கே தச்சம் பறம்பு என்ற கிராமம் தேர்ந் தெடுக்கப்பட்டதோ அதைப்போலவே கன்னியாகுமரி மாவட்டத்தில், 9 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க வேண்டும், தேந்தெடுக்கப்பட்டிருக்குமென்றே நான் கருது கிறேன். அப்படி அகத்தீசுவரத்திலே, முன்னேற்றக் கழகத் தினுடைய தலைவர் இல்லாவிட்டாலும், அங்கேயும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. அவர் சொன்னார் 3 லட்சம் ரூபாய் திட்டம். 44 ஆயிரம்ரூபாய் செலவாகிவிட்ட தென்று, உண்மையென்னவென்றால் திட்டம் 77 ஆயிரம் ரூபாய் இன்னும் மத்திய அரசிடமிருந்து அதுபற்றிய தாக் கீது எதுவும் வராத காரணத்தால் அந்த வேலையேஆரம்பிக்கப் படவில்லை. எதுவும் செலவு செய்யப்படவில்லை, என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன்.

திரு பொன்னப்ப நாடார் : தச்சம்பறம்பு என்ற கிராமத்தில் 235 பேர்கள்தான் வாக்காளர்களாக இருக்கிறார்கள். அது ஒரு சிறு கிராமமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்த சேர்மன் இருக்கிறார் என்ற காரணத்தி னால்தான் அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டு வந்து இருக்கிறது. 10 ஆயிரம் பேர்களுக்குமேல், இருக்கிற பெரிய கிராமங்கள் எல்லாம் இருக்கிற போது ஏன் இதைத் தேர்ந்தெடுத்தார்கள்?

மாண்புமிகு முதல்வர் : அந்தக் கிராமத்தில் 235 பேர்கள் இருப்பதாக திரு பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், எனக்கு வந்திருக்கிற தகவல் 2,074 பேர்கள். எது சரியென்று பிறகு சரி பார்த்துக்கொள்கிறேன். அங்கே மக்கள் தொகை 2,074 பேர்கள் என்றும் அதிலே 80 சதவீதம் பேர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கின்றனர் என்றும் தகவல் வந்திருக்கிறது. நான் இப்போதே வாதிட விரும்பவில்லை, எது சரி என்று நானும் விசாரிக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் விசாரிக்க வேண்டும். பிறகு கிடைக்கும் தகவலை ஒருவரோடொருவர் பரிமாறிக் கொள்வது நல்லது. 42 ஆயிரம் ரூபாய் செலவாகிவிட்டது என்று சொன்னார்கள். இன்னும் ஒரு பைசாக்கூடச் செலவாக வில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கேரளாவைப் பாருங்கள்

— நம்முடைய நண்பர் தங்கமணி அவர்கள் இங்கே சோசலிசத்திட்டங்கள் எதுவும் நிறைவேறவில்லை, எல்லாத் திட்டங்களையும் கேராளவில்தான் நிறைவேற்றுகிறேம். இங்கே தனியார்களை வளர்க்கிறீர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். பஸ்களைத் தேசிய மயமாக்கிய பொழுது கூட, ஏதோ டி.வி.எஸ். சுக்குக் கொடுத்ததைவிட ஏ.பி.டி.க்கு அதிகமாகக் கொடுத்து விட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். டி.வி.எஸ். கம்பெனியின் பஸ்கள் ''பார்கோ'' இயந்திரங்கள். ஆனால், ஏ.பி.டி.யின் இயந்திரங்கள் உயர்ந்தவைகள், 'பென்ஸ்' வண்டிகள். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னென்று, டி.வி.எஸ்.சுக்குக் கொடுத்த இழப்பீடு 1,25,42,741 ரூபாய்; அதிகமாகக் கொடுத்து விட்டோம் என்று சொல்லக் கூடிய ஏ.பி.டி.க்குக் கொடுத்து இருப்பது 56,82,378 ரூபாய். 346 வண்டிகள் டி.வி.எஸ். இடமிருந்து எடுக்கப்பட்டன. அந்த 346 வண்டிகளில், ''பார்கோ'' வண்டிகள் அதிகம். ஏ.பி.டி. யிடமிருந்து எடுக்கப்பட்ட 112 வண்டிகளில் 'பென்ஸ்' வண்டிகள் பெரும்பான்மையான வண்டிகள். இந்த விளக்கத்தை நான் அவர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ஒரு கோடி 25 இலட்சம் ரூபாயில் பிராவிடன்ட் பண்ட் மற்றவைகள் போக ஒரு கோடிக்கும் கம்மியாகக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு முதல்வர் :** கேரள மாநிலத்திலேதான் பொதுத்துறை வேகமாக வளர்கிறது. தனியார் துறை இல்லை. ஆனால், இங்கேதான் தனியார் துறை வளர்க்கப்படுகிறது என்ற போக்கிலே சில கருத்துக்களைச் சொன்னார்கள். கேரளாவில் பிர்லாவின் தொழிற்சாலை வரவேண்டுமென்று வரவேற்புக் கொடுத்து அழைத்து வந்து அங்கே பிர்லாவின் தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை திரு. கே.டி.கே தங்கமணி அவர்கள்மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகின்றேன். அது மட்டுமல்ல, சில்க் பேக்டரி ஒன்றை நடத்தி வருவதும் தனியார் நிறுவனம்தான். டியூப் லைட் செய்கின்ற டோஷிபா-ஆனந்த்என்றபெயரில் ஒரு தனியார் நிறுவனம் சமீப காலத்தில் தொழில் தொடங்கி நடத்தி வருகிறது என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'பிரிமியர் டயர்ஸ்' என்ற ஒரு குஜராத்தி நிறுவனம் எர்ணுகுளத்தின் அருகில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தியுள்ளது. கேரளத்தில் பல கயிறு தொழிற்சாலைகள் தனியார் துறையில் தான் இப்போதும் உள்ளன. எனவே, கேரளாவில் தனியார்துறை முழுவதையுமே தேசிய மயமாக்கிவிட்டார்கள் என்று கூறுவது பொருத்த முடையதல்ல என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துச்சொன்னேன்.

### ஏன் போய்ச் சேர்ந்தார்கள்?

கே. டி. கே. தங்கமணி அவர்களின் பேச்சிலே பெரும் பகுதி, ஆளுங்கட்சி இரண்டாகப் போய்விட்டது என்ற கவலையை உள்ளடக்கியதாக இருந்தது. மற்றக்கட்சிகள் இரண்டாகப் போனபோது நாங்கள் போய்ச் சேரவில்லை. ஆனால், ஆளுங்கட்சி இரண்டாகப் போனபோது நாங்கள் ஏன் போய்ச் சேர்ந்தோம் தெரியுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். இங்கே ஆளுங் கட்சி இரண்டாக ஆகிவிட்டது ஆகவே போய்ச் சேர்ந்தோம் என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அதிருஷ்டக்காரர். அவர்கள் இங்கே வராவிட்டாலும், அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதற்கு அவருடைய கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் இங்கே வராவிட்டாலும், அவ்வளவு பேருடைய பொறுப்பையும் திரு கே. டி. கே தங்கமணி அவர்கள் எடுத்துக் கொண்டு, எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலாக்கிய குணங்களை, அவருடைய தியாகத்தை, அவருக்கு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்ற சக்தியை, பெருமையை, செல்வாக்கை இங்கே எடுத்துச்சொன்னதற்காக, உள்ளபடியே என்னுடைய பழைய நண்பர் என்ற பெயரால் எம். ஜி. ஆர். அவர்களின் சார்பாக என்னுடைய பணிவன்பான நன்றியைத் திரு, கே. டி. கே தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். எவ்வளவோ அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். காந்திக்குக்கூட இவ்வளவு கூட்டம் வந்ததில்லை என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசியதை நான் பத்திரிகையிலே படித்தேன். என்னென்னவோ நடந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். இந்த இரண்டு, மூன்று மாத காலங்களில் நாடே அல்லோல கல்லோலப்பட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் இல்லையென்று அதை மறுக்கவில்லை. அன்றைக்குப் பேசிய திரு டென்னிஸ் அவர்கள் மிகவும் அழகாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஏறிச் சென்ற ஒரு பஸ்ஸை வழியிலே அ.தி.மு.க உறுப்பினர்கள்—அந்தக் கட்சியைத் சேர்ந்தவர்கள் மறித்தார்கள் என்றும், பிறகு நிறுத்திவிட்டார்கள் என்றும், ஏன் பஸ்ஸை நிறுத்திவிட்டீர்கள் என்று டிரைவரையும், கண்டக்டரையும் கேட்ட போது, நிறுத்தாவிட்டால் அடிப்பார்கள், பஸ்ஸைக் கொளுத்திவிடுவார்கள் என்றும் சொன்னார்கள் என்ற தகவலை நம்முடைய திரு. டென்னிஸ் அவர்களே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

### காமராஜரோடு உறவா?

இதை நான்சொன்னால் ஏதோ ஸ்தாபன காங்கிரசுக்கும், திராவிடமுன்னேற்றக்கழகத்திற்கும் மறைமுகமான ஓர் உறவு இருப்பதாக யாரும் பழிக்கக் கூடும். அதற்காகவே நிரம்ப

அதிகமாகத் தாக்குகிறார்கள். காமராஜர் அவர்களை நான் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, என்னுடைய வீட்டுத் திருமணத்தைத்தவிர வேறு எந்த இடத்திலும் சந்தித்ததும் கிடையாது. பேசியதும் கிடையாது. ஆனால், காமராஜர் கருணாநிதிக்கு அண்ணன்; இது புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுடைய திட்டவட்டமான அறிவிப்பு. எதிலே? ஊழலில். கருணாநிதி ஊழலில் தம்பி, காமராஜர் கருணாநிதிக்கு அண்ணன். வேடிக்கை என்னவென்றால், அவர் உங்களைப் பார்த்து, ஊழல் மன்னர்கள் என்று சொல்கிறார். நீங்கள் எங்களைப் பார்த்து, ஊழல் மன்னர்கள் என்று சொல்கிறீர்கள். இப்படி ஒருவருக்கொருவர் ஊழல் மன்னர்கள்—ஊழல் மன்னர்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு நடந்த வேடிக்கை என்னவென்றால் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கடைசியாக, பன்சிலால் ஒன்றும் நம்பர் ஊழல் மன்னர் என்று சொல்லிவிட்டார். அதை ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரரர்கள் எல்லாம் காதாரக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதை நான் கவனித்தேன்.

## இராஜாஜி சொன்னாரா ?

ஆகவே, இப்படி ஒருவருக்கொருவர் ஊழல் மன்னர்கள்—ஊழல் மன்னர்கள் என்று கூறிக்கொண்டிருப்பது பொருத்தந்தானா? இது எங்கே கொண்டுபோய் விடும்? காமராசரே சொல்லியிருக்கிறார் என்று புத்தகத்திலிருந்து படித்துக் காட்டினேனே! இன்னொருவரைப் பார்த்து ஊழல் பேர்வழி என்று சொல்பவர்தான் சரியான ஊழல் பேர்வழி என்று காமராசரே சொல்லியிருக்கிறாரே? அந்தப் பெருந்தலைவரின் பொன்மொழியை, எதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இதை ஏற்றுக்கொள்ள வேண்டாமா? அவரையும் ஊழல் பேர்வழி என்று சொல்லி, எங்கள் அண்ணாவையும் சேர்த்து எம். ஜி. ஆர். அவர்கள் சொன்னார்கள். இராஜாஜியிடத்தில் நான் கேட்டபொழுது, நீ இந்த ஊழல் ஒழிப்பு இயக்கத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று இராஜாஜி அவர்கள் சொன்னார்களாம். இராஜாஜி அவர்கள் அப்படிச் சொன்னார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், பத்திரிகைகளிலும், இராஜாஜியின் மறைவுக்குப் பிறகு வானொலியிலும் சொன்னார்கள். இராஜாஜி அவர்கள் அப்படிச் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மறுத்துக்கூட இருக்கலாம். ஆனால், திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இராஜாஜி மறந்த பிறகும் அவர்கள் மறைந்த பிறகும் சொன்னார்கள். இதைப் பத்தாண்டுக் காலத்திற்கு முன்பே ஆரம்பித்திருக்க வேண்டுமென்றால், காமராசர் காலத்திலிருந்து, பக்தவத்சலம் காலத்திலிருந்து, அறிஞர் அண்ணா காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் ஊழல் நடந்துகொண்டுதான் இருக்கிறது என்பதை

ஏற்றுக் கொண்டதைப்போல எம். ஜி. ஆர். அவர்கள் பல அறிக்கைகளிலே அதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஊழல்—ஊழல் என்று பேசிக் கொண்டே யிருப்பதிலே எந்தப் பயனும் இல்லை.

### ஏன் கமிஷன் ?

கமிஷன் வை, கமிஷன் வை, கமிஷன் போடு என்று. யாரைப்பார்த்தாலும் கமிஷன் போடு கமிஷன் போடு என்று கேட்டால், நாங்கள் யாரிடத்திலேயிருந்து கமிஷன் வாங்கி னோம்? வாங்கினாலல்லவா கமிஷன் போட. கமிஷன் போடு, கமிஷன் போடு என்றால் என்ன வேடிக்கை? விசாரணைக்குழு போடுவதற்கு மத்திய அரசுக்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொல்லுகிறோம். அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொல்லும் நேரத்தில் . . . —

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இதே மன்றத்தில் தான் நீங்கள் சொன்னீர்கள். சான்றுகள் இருந்தால் சொல்லுங்கள், விவரங்கள் இருந்தால் சொல்லுங்கள், அப்படிச் சொன்னால் நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னீர்கள். ஆகவேதான் முறையாக, சட்டப்படி, விவரங்களையெல்லாம் சேகரித்து, இப்படிக் கமிஷன் போட வேண்டுமென்று மத்திய அரசிடம் கொடுத்தோம். அதுதான் முறை. இல்லாவிட்டால் தெருவிலே நின்று பேசிக்கொண்டிருக்கலாம். முறையாகத் தயாரித்து மத்திய அரசுக்குக் கொடுத்தபிறகு மத்திய அரசைக் கமிஷன் போட வேண்டுமென்று கேட்கிறோம். இன்னமும் அப்படிச் சொல்லிக்கொண்டுதான் இருப்போம்.

**மாண்புமிகு முதல்வர் :** இதற்குப் பலமுறை பதில் சொல்லியாகி விட்டது.

**திருமதி அனந்தநாயகி :** விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறோம். ஆனால், உங்கள் கட்சியிலே உள்ள அங்கத்தினர்கள் சொல்லுவது வேறு, அது வியாபாரிகள் சொல்லும் கமிஷன். அதை இதோடு சொல் வது எப்படி நியாயமாகும் என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு முதல்வர் :** பல விஷயங்கள் உங்களுக்குப் புரியாது. என்ன செய்வது?

விசாரணைக்குழு அமைப்பதற்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொன்னால் அதை—அண்ணா அவர் களுடைய பல பேச்சுக்களை இங்கே எடுத்துப் படித்துக் காட்டிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு ஞாபகப் படுத்துவேன்—இந்தக் கருத்தை எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பிலே எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய உள்துறை

அமைச்சராக இருந்த திரு. சவான் அவர்கள் 'லோக்பால்' என்ற அமைப்பை நிறுவிட எண்ணம் கொண்டு மாநில அமைச்சர்களிடத்தில் கருத்தை யறிந்தார்கள். அப்பொழுது ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த சிங்தேவ் அவர்கள்— சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள், என்ன எழுதினார்கள், சவான் அவர்களுக்கு! அறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தின் முதல்வராக இருந்த எங்கள் தலைவர், என்ன எழுதினார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அண்ணா சொன்னார்கள்,

"Constitutionally the Central Ministers are under the control of the Prime Minister and the State Ministers are under the control of the Chief Minister—The Chief Minister is independent of Prime Minister and Home Minister. So the Chief Minister will be the authority of the State Ministers."

இது அண்ணா சொன்ன கருத்து. அதே நேரத்தில் ஏப்ரல் 10-ஆம் தேதி 1968-ஆம் ஆண்டில் திரு சவான் அவர்களுக்கு ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த சிங்தேவ் அவர்கள் எழுதினார்கள்,

"It may not be keeping with the demands of Constitutional propriety that the observance of the code of conduct by the Chief Minister should be entrusted to the Prime Minister and the Union Home Minister. In order to develop proper democratic practices the State Legislature should be the authority for enforcing the observance of the code of conduct by the Chief Minister in the same way as the Parliament is the authority for ensuring the observance of the code by the Prime Minister."

ஓர் அரசின் முதலமைச்சர் நெறிமுறைகளைப் பின்பற்றுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை, நாட்டின் பிரதமரோ, அல்லது உள்துறை அமைச்சரோ ஏற்றுக்கொள்வது என்பது அரசியலமைப்பின் அடிப்படைக்கு உகந்ததாகாது. அரசியல் நெறிமுறைகள் வழுவாமல், நாட்டின் பிரதமர் செயல்படுகிறாரா, இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு எப்படி நாடாளுமன்றத்திற்கு இருக்கிறதோ, அதைப் போலவே, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நெறிமுறைகள் வழுவாமல் நடக்கிறாரா, இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும், அதிகாரமும் படைத்தது அந்த மாநிலச்சட்டமன்றந்தான். இதுதான் சிறந்த ஜனநாயகப் பண்புகளை வளர்க்க ஏதுவாக இருக்கும் என்று ஒரிசா முதலமைச்சர் சிங்தேவ் அவர்கள் கடிதம் எழுதி திரு சவான் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

பிறகு 23—3—1968-ல் அண்ணா அவர்கள் அமைச்சரவையை கூட்டி அருமை நண்பர் மதியழகன் உள்ளிட்ட

அமைச்சரவையைக் கூட்டி முடிவெடுத்தார்கள். அந்த முடிவை மத்திய அரசுக்கு அனுப்பினார்கள்.

" The Council have examined the suggestion in detail and have decided not to agree to it on various grounds including the ground that the institution of Lokpal as contemplated will imfringe on the State's autonomy guaranteed by the Constitution.'

அது மாத்திரமல்ல. கடிதம் எழுதினார்கள். 2—6—1968-ல் திரு சவானுக்கு அண்ணா அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

" We feel that the setting up of a Lokpal as contemplated by A.R.C. would imfringe on the State's Autonomy as envisaged in the Constitution and as such we would advise against it.'

என்று கடிதமே எழுதினார்கள். நாங்கள் அண்ணா சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கும் மத்திய அரசுக்கு அந்த உரிமை இருக்கிறதா என்கிற கேள்விக் குறியை எழுப்புகின்றோமே அல்லாமல் வேறல்ல என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுவேன்.

நான் தெரிந்துகொள்ளாததா ?

ஆகவே, மத்திய அரசு ஒரு விசாரணைக் குழுவைப் போட வேண்டும், போடவேண்டுமென்று சொல்வது—இன்றைக்குத் திராவிட முன்னேற்றக்கழக அரசு உங்களுக்கு வெறுப்பாக இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். தங்கமணி அவர்களுக்கு இங்கே உட்கார்ந்திருக்கும் நாங்கள் பிடிக்காமல் பின்னால் இருப்பவர்கள் மீது புதிய ஆசை பிறந்திருக்கலாம். 'கருணாநிதி சர்க்கார் ராஜினமா செய்யட்டும்; கழக சர்க்கார் வரட்டும்' என்று அவர் சொல்லுகிறார். இந்த வேலை எல்லாம் நான் தெரிந்து கொள்ளாத வேலை அல்ல. இது எதற்காக நடைபெறுகிற முயற்சி என்பதை நான் புரிந்துகொள்ளாதவன் அல்ல. ஆகவே கருணாநிதி இருப்பதா ? நெடுஞ்செழியன்-இருப்பதா ? அன்பழகனா ? நடராசனா? சத்தியவாணி முத்தா ? மற்றவர்களா ? என்பதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் எங்களுக்குப் பின்னால் இருக்கிற 176 பேரே அன்னியில் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அல்ல.

இவர்கள் இந்தக் கட்சியினுடைய யோசனைகளை—கட்சித் தலைவர்களுடைய யோசனைகளை ஏற்பவர்கள். அதைப் போலவே கட்சியிலே இருக்கின்ற கீழ்மட்டத் தொண்டர்களிலேயிருந்து பொதுக்குழு, செயற்குழு, அங்கேயிருக்கும்

ஜனநாயக முறைப்படி அந்த யோசனைகளைத்தான் நாங்கள் ஏற்பவர்களே தவிர வேறல்ல என்பதையும் திட்டவட்ட மாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெறுப்பின் காரணமாகச் செய்து விடுகிறோம். இதையே ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டு வருங்காலத்திலே இந்தியாவிலே மத்திய அரசில் ஒரு கட்சியும் மாநில அரசுகளில் வேறு கட்சியும் இருந்தால் அந்தக் கட்சியை மாநிலஅரசிலிருந்து துரத் துவதற்கு விரட்டுவதற்கு ஒரு நான்கு எம்.எல்.ஏக்களைப் பிடித்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிடித்து ஒரு புகார் கொடு உடனே 'விசாரணைக் கமிஷன் போடு கிறோம், உடனே ராஜினுமா செய்' என்று கிளர்ச்சி செய்து அந்த அரசை ஒழித்து விடலாம், அழித்து விடலாம் என்ற மனப்பான்மை இன்றைக்கு இருக்கின்ற இந்திரா காந்திக்கு அல்ல—என்றைக்கோ அமைகின்ற மத்திய அரசுக்கு, அது எந்தக்கட்சியாக இருந்தாலும்—அந்தக்கட்சிக்கு ஏற்பட்டால் நிலைமை என்னுகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

"இவைகளைச் சொல்லுகின்ற காரணத்தால் தவறுகள் நடைபெற வேண்டுமென்று நான் அனுமதிப்பவன் அல்ல தவறுகள் நடைபெறுகிறது என்றுல் அதற்குரியவர் யாராக இருந்தாலும், யார் அதைச் செய்தாலும் என் அண்ணன் தம்பியாக இருந்தாலும், பெற்ற பிள்ளையாக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன் என்பதை பலமுறை இங்கே சொல்லி யிருக்கின்றேன். என் உயிரனைய நண்பர்கள்மீதும் அப் படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறேன் என்பதற்குப் பல்வேறு உதாரணங்களைக் காட்டமுடியும்.

## புதிய சட்டம்

அந்த அடிப்படையில்தான் நேற்று முன்தினம் அறிவித் திருக்கிறேன். பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் மீது குற்றங்குறைகள் சொல்லப்பட்டால், புகார்கள் சொல்லப் பட்டால் அதை விசாரிப்பதற்கான ஒரு கமிஷனை மாநில அள வில் நியமிக்க ஒரு சட்டத்தை இந்த அவையில் நாம் நிறை வேற்ற வேண்டும் அதைப்பற்றி அறிவிக்க இருக்கிறேன். என்றுசொன்னேன், அதனுடைய சுருக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு பொதுப்பணி ஆற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டம் என்ற பெயரில், சட்டமுன் வடிவு ஒன்று இன்று சட்ட மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் முதலமைச்சர், அமைச்சர் கள், சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர், மாநகராட்சிகளின் நிலைக் குழு,

அல்லது இதரக் குழுக்களின் தலைவர், நகராட்சிகளின் தலைவர், துணைத் தலைவர், நிலைக் குழு அல்லது இதரக் குழுக்களின் தலைவர், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி மன்றங்களின் தலைவர், துணைத் தலைவர், இதரக் குழுக்களின் தலைவர், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வருவார்கள். இவர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டுகளை இந்தச் சட்டத்தின்கீழ் விசாரிக்கலாம். உயர்நீதி மன்ற நீதிபதித்தகுதியுள்ள நீதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த நீதிபதி முன் குற்றச்சாட்டுகளை யார் வேண்டுமானு லும் சமர்ப்பிக்கலாம். குற்றம் சாட்டுபவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

நீதிபதி விசாரித்துத் தரும் தீர்ப்பின் மீது அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும், லஞ்ச, ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க இந்த அமைப்புப் பயன் படும்.

இந்தச் சட்டம் இந்த அவையில் விவாதிக்கப்படவிருக் கிறது. அதற்கு முன்னுல் பொறுக்குக் குழுவுக்கு விடலாம் என்ற நிலை இருக்கிறது. இதிலே வந்திருக்கிற இவ்வளவு பேரும் இடம் பெறலாமா ? இன்னும் யாரையாவது இணைத்துக் கொள்ளலாமா ? என்பதையெல்லாம் அந்தப் பொறுக்குக் குழு (செலக்ட் கமிட்டி) ஆராய்ந்து விவாதித்துச் சட்டத்தை நிறைவேற்ற இருக்கிருேம்.

## இதே வேலையா ?

ஆகவே, பொழுதுதோறும், பொழுதுதோறும் செய்ய வேண்டிய பல வேலைகளை விட்டுவிட்டு இதே வேலையில் எல்லோரும் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டாமென்று மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதைச் சொல்லுகின்ற காரணத்தால் சிலபேர் கவரப் படுகிருர்கள் என்று தங்கமணி அவர்கள் சொன்னதுபோல், அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது என்று நாம் நம்பத்தயாராக இல்லை. கிரிக்கெட்மாட்ச்பார்த் தோம், எல்லோருந்தான் பார்த்தோம். நானும் பார்த்தேன், நாவலரும் பார்த்தார், மற்ற அமைச்சர்களும் பார்த்தார் கள். இரண்டு, மூன்று நாட்கள்கூடத் தொடர்ந்து பார்த் தேன். அதிலே 11 பேர் ஆடுகிருர்கள். இரண்டுபேர் பாட் செய்கிருர்கள். பார்க்கின்ற ரசிகர்கள் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிருர்கள். அங்கே ஒரே ஒரு ஆள் மாத்திரம் தினந்தோறும் பாவாடை கட்டிக்கொண்டு கையில் தகர டப்பாவை வைத்துக் கொண்டு ஆட்டம் போட்டுக்கொண்டிருக்கிருன். ஐம்பதாயிரம் ரசிகர்களும் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் தூரதிருஷ்டி

கண்ணுடி வைத்துக்கொண்டு பார்ப்பவர்கள் உள்படகொஞ்ச நேரம் மேட்சைப் பார்த்துவிட்டுக் கொஞ்சநேரம் அந்தப்பக்க மும் கண்ணைத் திருப்புகிருர்கள். அவன் எண்ணிக்கொள்வதா? அந்த ஐம்பதாயிரம் பேரும், ஆடுகின்ற சந்திரசேகரையோ, பிரசன்னுவையே, பிளச்சரையே, லூயிசையோ, பட்டோடி யையோ கவனிக்காமல் என்னைத்தான் கவனித்துக்கொண் டிருக்கிருர்கள் என்று அவன் எண்ணிக்கொண்டால் எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனமாக இருக்கக்கூடும் என்பதை மாத்திரம் தெரிவித்து, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்ட திருத்தங்களைத் திரும் பப் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு இந்தஅளவோடு அமைகிறேன். வணக்கம்.

சட்ட மன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பேசியதாவது :

சட்ட மன்றத் தலைவர் அவர்களே!

இன்று இந்த அவையிலே வேறு சில முக்கியமான மசோதாக்கள் விவாதிக்கப்பட இருக்கின்றன. காலையிலே சட்டப்பேரவையில் இரண்டரை மணி நேரம் வரையிலே அந்த மசோதாக்கள் விவாதத்திற்கு உரிய நேரத்தை எடுத்துக் கொண்டிருப்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆகவே, இந்தப் பதில் உரை நீண்டு விடாமல் வெகு விரைவிலேயே நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடையஉரையில், மூதறிஞர்இராஜாஜி அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவித்ததோடு, அவருடைய இழப்பினால் தமிழ்நாடும் இந்தியப் பெருநாடும்,அனைத்துலகத்திலே பல்வேறு நாட்டு அரசியல் வல்லுநர்களும் எந்த அளவுக்கு மனம் உடைந்தார்கள் என்பதனை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அந்த மூதறிஞருக்கு நினைவுச் சின்னங்களை, மண்டபங்களாகக் கட்டுவதிலே மாத்திரம் நம்முடைய பொறுப்பு நின்றுவிடவில்லை என்பதனையும், அவர் மிகப் புனிதமாகப் போற்றி வந்த மதுவிலக்குக் கொள்கையைத் தமிழ்நாட்டிலே மீண்டும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே எடுத்துரைத்து இருக்கிறார்கள். நான் அது பற்றி அடிக்கடி இந்த அரசின் கருத்தை எடுத்துச் சொல்லிவந்து இருக்கின்றேன் என்றாலும்,இராஜாஜி அவர்கள்இந்தியப்பெருநாட்டின் ஒருதேசியச் சொத்து என்கின்ற அளவில் தேசிய அளவிலேயே அவருக்கு இருக்கக்கூடிய நினைவுச் சின்னமாக இந்தியா முழுமைக்கும் மது விலக்குக் கொள்கை அமுல் ஆகின்ற அந்த ஒரு நல்ல நாள் விரைவிலே வரவேண்டும் என்கின்ற ஒரு விழைவினை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர்அவர்களும், பல்வேறு கட்சிகளுடைய தலைவர்களும், உறுப்பினர்களும்,மிகக்கடுமையாகக் கண்டனத்தை, பல குற்றச் சாட்டுக்களை, குறைபாடுகளை இங்கே எடுத்துரைத்திருக்கின்றார்கள். குறிப்பாக நம்முடைய சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு சா. கணேசன் அவர்கள் 'முக்கியமான நேரங்களிலே அமைச்சர்கள் அவைக்கு வருவதில்லை' என்று கூடக் குற்றம் சாட்டி

ணர்கள். நான் அப்போழுதே அவரிடத்திலே கேட்டுக் கொண்டேன். நான் பதில் அளிக்கின்ற நேரத்திலே நீங்கள் அவசியம் இங்கே இருப்பீர்களா என்று கேட்டுக்கொண்டேன். நிச்சயமாக இருப்பேன் என்று அவர்கள் சொன்னார்கள். தவிர்க்க முடியாத சூழ்நிலை என்று கருதுகின்றேன். அவர்கள் இந்த அவைக்கு இன்றைக்கு வரவில்லை. ஆகவே, தவிர்க்க முடியாத சூழ்நிலை யாருக்கும் ஏற்படுகிறது என்ப தற்கு இது எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது. (இறுதி யாக முதல்வர் பேசும் போது இது பற்றி அறிவித்தது வருமாறு: நான் பேச்சை முடித்து உட்கார்ந்த பிறகு தான் கேள்விப்பட்டேன். திரு சா. கணேசன் அவர்கள் வராததைப் பற்றிச் சொன்னேன். அவர்களுடைய பேரக் குழந்தை காலமாகி விட்டதால் வராததாகக் கேள்விப் பட்டேன். ஆகவே, முதலில் நான் தெரிந்து கொள்ளாமல் சொல்லிய சில கருத்துக்களுக்காக வருத்தப்படுகிறேன்.)

இந்த அவை ஜனநாயக மரபை நேர்மையான முறையில், நாகரீகமான வகையில் கடைப்பிடித்து வருகின்ற பெயரினை யும், புகழினையும் நீண்ட நெடுங்காலமாகக் கட்டிக் காத்து வருகின்ற அவையாகும்.



இந்த அவையிலே மிகப் பெரியவர்களெல்லாம் கருத்துக்களை வழங்கி யிருக்கின்றார்கள். நாட்டு மக்களுடைய குரலை எதிரொலித்து இருக்கின் றார்கள். அரசு எப்படி யெப்படிச் செயல்பட வேண்டுமென்று அறி வுரைகளையெல்லாம் வழங்கி யிருக்கின்றார்கள். அவர்களைப் பின்பற்றி இன்றைக்கும் இந்த அவையிலே பெரிய வர்கள்பலரும் வீற்றிருக்கின்றார்கள். வயதிலே இளையவர்களா னலும், நல்ல முதிர்ந்த அனுபவம் உடையவர்களும் இந்த அவையிலே பலர் வீற்றிருக்கின்றார்கள். கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில் ஆர்ப்பாட்டம் இல்லாமல், ஆரவாரம் இல்லாமல், கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற அமைதியான முறை ஒன்று. கருத்துக்களை எடுத்துச் சொல் லும்போது ஆர்ப்பாட்டமும், ஆரவாரமும் இருந்தால்தான் அந்தக் கருத்துக்களுக்கு விளம்பரம் கிடைக்கும். கருத்துக் களுக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, அட்லீஸ்டு, தனக் காவது விளம்பரம் கிடைக்கும் என்று எண்ணுகின்ற மற் றொரு முறை உண்டு. இந்தப் பெருமை மிகுந்த அவையைப் பொறுத்தவரையில் கருத்துக்களுக்கு விளம்பரம் கிடைக்க வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை கொண்ட உறுப் பினர்கள் வீற்றிருக்கின்றீர்கள் என்பதை எண்ணி நான்

மிகுந்த பெருமை அடைகின்றேன். சதங்கை, காலிலே கட்டப்பட்டிருந்தாலும், அதனுடைய சங்கீத நாதம் அனைவராலும் பாராட்டப்படும். கையிலே இருக்கிற தகர டப்பாவிலே கூழாங்கல்லைப் போட்டுத் தலைக்கு மேலே எடுத்து ஆட்டினால், அது உயரத்திலே சத்தம் கேட்டாலும், அந்த நாதத்தை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆகவே, காலிலே இருக்கிற சதங்கையினுடைய நாதம் பெருமைக்குரியதாகவும், தகர டப்பாவிலே போட்டு ஆட்டுகின்ற கூழாங்கல்லினுடைய நாதம் - அதை நாதம் என்று கூடச் சொல்ல மாட்டார்கள்- சத்தம் என்று தான் சொல்வார்கள்; ஆகவே, சத்தத்திற்கும் சங்கீத நாதத்திற்கும் வித்தியாசம் தெரிந்துகொண்டு, கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற அந்த அரிய உள்ளத்தைப் பெற்றிருக்கின்ற பெரியவர்களும், பெரும் உள்ளம் படைத்தவர்களும் வீற்றிருக்கின்ற இந்த அவையில்



ஆளுநர் உரையின்மீது எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்கள், இந்த அரசினுடைய கொள்கைகளைச் சில நேரங்களிலே குறைத்துச் சொல்வதாக இருந்தாலும், அல்லது அவைகளுக்கு மாறுபட்டவைகளாக இருந்தாலும், வேறுபட்டவைகளாக இருந்தாலும், சில நேரங்களிலே முரண்பட்டவைகளாக இருந்தாலும், அவைகளைப் புறக்கணிக்காமல் எண்ணிப்பார்த்துச் சீர்தூக்கி சிந்தித்துச் செயல்படுவதிலே நாங்கள் மெத்த நிதானத்தைக் காட்டுவோம் என்ற உறுதி மொழியினை மாத்திரம் இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(தொடர்ந்து முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசிய போது வெள்ளத்துயர்தடுப்பு, விவசாயிகள் பிரச்சினை, மின்வெட்டு ஏனைய கருத்துக்களை புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டிப் பேசினார்கள்.)

## தமிழரசு

## 16—2—1973 இதழின்

# இலவச இணைப்பு

தமிழ்நாடு அரசு அச்சகம், சென்னை—1.

தமிழரசு

இலவச இணைப்பு